# Union Judiciary

| | |
|---|---|
| **9th book** | அலகு – 2<br>தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள் |
| **11th vol 1** | அலகு-2 அரசு |
| | அலகு – 5 மக்களாட்சி |
| **11th vol II** | அலகு 10<br>பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை |
| | அலகு – 11<br>தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம் |
| **12th vol 1** | அலகு – 4- இந்திய நீதித்துறை |
| | அலகு – 6- இந்தியாவில் நிர்வாக அமைப்பு |

# 9ம் வகுப்பு

# அலகு– 2

# தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள்

**அறிமுகம்:**

- தேர்தல் என்பது தமக்கான பொது சேவகர் ஒருவரை மக்கள் வாக்களித்து தேர்வு செய்யும் முறையாகும்.

**இந்தியாவில் தேர்தல் முறை:**

- இந்திய தேர்தல் முறை, இங்கிலாந்தில் பின்பற்றப்படும் தேர்தல் முறையினைப் பின்பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தியா ஒரு சமத்துவ, மதச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு நாடாகும், மற்றும் உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும். தற்போதைய நவீன இந்தியாவானது ஆகஸ்ட் மாதம் 15ம் நாள் 1947ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

- இந்திய அரசியலமைப்பின் XVம் பகுதியில் காணப்படும் 324 முதல் 329 வரையிலான பிரிவுகளில் கூறப்பட்டுள்ள பின்வரும் விதிமுறைக்கேற்ப நம் நாட்டின் தேர்தல் முறை அமைக்கப்பட்டிருக்கிறது.

    1. நாட்டின் சுதந்திரமான, நியாயமான தேர்தலை உறுதி செய்திட தன்னிச்சையான தேர்தல் ஆணையம் அமைத்திட இந்திய அரசியலமைப்பின் பிரிவு 324 ன் படி வழிவகைச் செய்கிறது. தற்போது தேர்தல் ஆணையமானது ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களை உள்ளடக்கியுள்ளது.

    2. பாராளுமன்ற தேர்தல் சம்மந்தமான வாக்காளர்களின் பட்டியல் தயாரித்தல், தொகுதிகளை வரையறை செய்தல் உட்பட அரசிலமைப்பில் வரையறுக்கப்பட்டப் பிற அனைத்து விவகாரங்களைப் பெறுவதற்கான சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றலாம்.

    > தமிழ்நாட்டில் சோழர்கள் காலத்தில் குடவோலை என்னும் வழக்கப்படி கிராமசபை உறுபினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

    3. மாநில சட்டசபைத் தேர்தல் சம்மந்தமான வாக்காளர்களின் பட்டியல் தயாரித்தல், தொகுதிகளை வரையறை செய்தல் போன்றவற்றை அரசியலமைப்பிற்குட்பட்டு தேவையான மாற்றங்களை மாநில சட்ட சபை சட்டங்களை இயற்றலாம்.

**தேர்தல் நடைமுறை:**

- தேசிய அளவில் அரசாங்கத்தின் தலைவர் பிரதமர் ஆவார். இவர் இந்திய பாராளுமன்றத்தின் கீழவையான மக்களவை (லோக்சபா) உறுப்பினர்கள் மூலம்

தேர்ந்தெடுக்கப்படுகிறார். நம்மை போன்ற மக்களாட்சிப் பிரதிநிதித்துவ நாடுகளில் தேர்தல் முறை முக்கிய பங்கு வகிக்கிறது.

| |
|---|
| இந்தியாவில் ஜனவரி 25ஆம் நாளினை தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடுகிறோம். |

**இந்தியாவில் தேர்தல் வகைகள்:**

- இந்தியாவில் இரண்டு வகையான தேர்தல்கள் நடைபெறுகின்றன. அவை நேரடித் தேர்தல் மற்றும் மறைமுகத் தேர்தல் ஆகும்.

**நேரடித் தேர்தல்:**

- நேரடித் தேர்தலில் வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளைத் தாங்களே நேரடியாக தேர்ந்தெடுக்கிறார்கள். 18 வயது பூர்த்தியடைந்த மக்கள் நேரடித் தேர்தல் முறையில் பங்கு பெற்று தங்களது வாக்குகளைப் பதிவு செய்கின்றனர். நேரடித் தேர்தல் முறைக்குப் பின்வரும் சில எடுத்துக்காட்டுக் காணலாம்.

  1. மக்களவை தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்களை (MP) தேர்ந்தெடுத்தல்.
  2. சட்டமன்றத் தேர்தல்களில் சட்டப்பேரவை உறுப்பினர்களை (MLA) தேர்ந்தெடுத்தல்.
  3. ஊராட்சி ஞேராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**நிறைள்:**

1. நேரடித் தேர்தல் முறை அதிக செலவு கொண்டதாக உள்ளது.
2. எழுத்தறிவற்ற வாக்காளர்கள், பொய்யானப் பரப்புரைகளால் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள். சில நேரங்களில் சாதி, மதம் மற்றும் இன்ன பிற பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் பிரச்சாரங்கள் மற்றும் பொய்யானப் பரப்புரைகளாலும் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.
3. நேரடித் தேர்தல் நடத்துவது மிகப்பெரும் பணியாக இருப்பதால், ஒவ்வொரு வாக்கு மையங்களிலும் சுதந்திரமான, நியாயமான தேர்தல் முறையை உறுதிசெய்வது என்பது தேர்தல் ஆணையத்திற்கு மிக பெரும் சவாலாக உள்ளது.
4. சில அரசியல் கட்சி வேட்பாளர்கள், வாக்காளர்கள் மீது பணம், பொருள் (அ) பணிகள் மூலமாக தங்களது செல்வாக்கைச் செலுத்துவது என்பது ஒரு மற்றொரு சவாலாகும்.
5. தேர்தல் பரப்புரைகளின் போது சில நேரங்களில் வன்முறைகள், பதற்றங்கள், சட்டம் - ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை முறை பாதிக்கப்படுகிறது.

**மறைமுகத் தேர்தல்:**

- மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வாக்களித்துத் தேர்வு செய்யும் முறையே மறைமுகத் தேர்தல் ஆகும். குடியரசுத் தலைவர் தேர்தலில் இத்தகைய முறையானது கடைபிடிக்கப்படுகிறது.

**நிறைகள்:**

1. மறைமுகத் தேர்தல்கள் நடத்த செலவு குறைவானதாகும்.
2. மறைமுக தேர்தல் முறையானது பெரிய நாடுகளுக்கு உகந்தது.

**குறைகள்:**

- வாக்காளர் எண்ணிக்கைக் குறைவாக இருப்பதால் ஊழல், கையூட்டு, குதிரை பேரம் ஆகியவற்றிற்கு வாய்ப்புகள் அதிகம் காணப்படும்.
- மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க நேரடியாக பங்கு பெறாமல், மாறாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகளே இம்முறையில் பங்குபெறுவதால், மக்கள் பிரதிநிதித்துவம் குறைந்த மக்களாட்சி முறையாக காணப்படுகிறது. எனவே, மக்களின் உண்மையான விருப்பத்தை பிரதிபலிக்காமல் இருக்க நேரிடுகிறது.

**இந்திய குடியரசுத் தலைவர் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்?**
இந்திய குடியரசுத் தலைவர் பின்வரும் உறுப்பினர்கள் கொண்ட தேர்தல் குழாம் (Electoral College)மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
அவை.

1. பாராளுமன்றத்தின் இரு அவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.
2. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்

குறிப்பு: பாராளுமன்ற இரு அவைகள் மற்றும் மாநில சட்டமன்றங்களில் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர்கள் இக்குழுவில் அங்கம் இடம் பெறமாட்டார்கள்.

**தேசியக் கட்சிகள்:**

- ஒரு கட்சி குறைந்தது நான்கு மாநிலங்களிலாவது மாநிலக் கட்சி என்ற தகுதியை பெற்றிருக்குமானால் அது 'தேசியக் கட்சி' என்ற தகுதியை பெறுகிறது. அனைத்து அரசியல் கட்சிகளும் இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்தல் வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் அனைத்து அரசியல் கட்சிகளையும் சமமாகப் பாவித்தப் போதிலும், தேசியக் கட்சிகளுக்கும், மாநிலக் கட்சிகளுக்கும் சில சிறப்புச் சலுகைககளை வழங்குகிறது. இக்கட்சிகளுக்கு தனித்தனிச் சின்னங்கள் வழங்கப்படுகிறது. ஒரு கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளர் மட்டுமே அக்கட்சியின் சின்னத்தை உபயோகிக்க முடியும். 2017 நிலவரப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய கட்சிகளின் எண்ணிக்கை ஏழு ஆகும்.

## மாநிலக் கட்சிகள்:

- ஏழு தேசிய கட்சிகளைத் தவிர, நாட்டின் பெரும்பான்மையான முக்கிய கட்சிகளை "மாநிலக் கட்சி"களாக தேர்தல் ஆணையம் வகைப்படுத்தியிருக்கிறது. இக்கட்சிகள் பொதுவாகப் "பிராந்தியக் கட்சிகள்" என்று குறிப்பிடுவர். மக்களவை தேர்தலிலோ அல்லது மாநில சட்டசபைத் தேர்தலிலோ ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இடங்களை வெற்றி பெற்ற அல்லது குறிப்பிட்ட சதவிகித வாக்குகளைப் பெற்றதன் அடிப்படையில் இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு கட்சியை மாநிலக் கட்சியாக அங்கீகாரம் அளிக்கிறது.

## கட்சிகளின் அங்கீகாரம்:

- இந்தியக் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி தேசியக் கட்சி எனும் பங்கு பெற பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

  1. மக்களவை தேர்தலிலோ (அ) மாநில சட்டசபைத் தேர்தலிலோ குறைந்தபட்சம் நான்கு மாநிலங்களில் பதிவான மொத்தச் செல்லத்தகுந்த வாக்குகளில் குறைந்தபட்சம் 6% பெற்றிருக்க வேண்டும்.

  2. மக்களவையில் குறைந்தபட்சம் 2 சதவீத இடங்களில் வெற்றி பெற வேண்டும். மேலும் குறைந்தபட்சம் மூன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

  3. குறைந்தபட்சம் நான்கு மாநிலங்களில் மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

## அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்:

- கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடுகின்றன. பெரும்பாலான மக்களாட்சி நாடுகளில் கட்சிகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் இடையேதான் கடும் போட்டிகள் நிலவுகின்றன.

- கட்சிகள் தங்களைத் தேர்ந்தெடுக்க அவர்களது கொள்கைகளையும், திட்டங்களையும் தேர்தல் தொகுதிகளில் முன்னிறுத்துகின்றனர்.

- நாட்டில் சட்டங்கள் இயற்றுவதில் அரசியல் கட்சிகள் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. முறையாக சட்டங்கள் நாடாளுமன்றங்களிலும், சட்டமன்றங்களிலும் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

- அரசியல் கட்சிகள் அரசாங்கத்தினை அமைத்து, அவற்றை வழிநடத்துகின்றனர்.

- தேர்தலில் தோல்வியடைந்த கட்சிகள் எதிர்கட்சியாகப் பங்களிப்புச் செய்கின்றன. இவை அரசின் குறைகள் மற்றும், தவறான கொள்கைகளை எதிர்த்து பல்வேறுபட்ட பார்வைகளை முன்வைக்கின்றன. விமர்சனம் செய்கின்றன.

- மக்கள் கருத்திற்கு அரசியல் கட்சிகள் வடிவம் கொடுக்கின்றன. மேலும் அவை முக்கிய நிகழ்வுகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றன.

- அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் இருக்கின்றன.

**மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு:**

- மக்களாட்சியில், அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போல் இரு கட்சி ஆட்சி முறையோ அல்லது இந்தியா, பிரேஞ்சு நாடுகளைப்போல் பல கட்சி ஆட்சி முறையோ இருக்கலாம். பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெற்றக் கட்சியாக ஆளும் கட்சியும், எஞ்சிய மக்களின் ஆதரவு பெற்றக் கட்சியாக எதிர் கட்சியும் இருக்கும். மக்களாட்சி முறையிலான அனைத்து அரசாங்கங்களிலும் எதிர்கட்சித் தலைவர் முக்கிய பங்கை வகிக்கிறார். இவர் கேபினட் அமைச்சர் தகுதி பெறுகிறார். இவர் பொது நடவடிக்கைகளை பாதிக்கும் ஆளும் கட்சியின் தவறான கொள்கைகளை எதிர்க்கிறார். பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக இவர் அரசுத் துறைகளின் செயல்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதோடு மக்கள் நலனுக்காகச் செலவிடப்படும் பொதுப் பணத்தை ஆய்வு செய்கிறார். இதே போன்று அவர் மத்தியக் கண்காணிப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பிலும் முக்கியப் பங்கு வகிக்கிறார். மக்களாட்சியில் எதிர்க்கட்சிகள் ஒரு பொறுப்பானப் பங்கினையும் மக்களின் நியாயமானக் கோரிக்கைகள் மற்றும் விருப்பத்தையும் பிரதிபலிக்கின்றது.

**அழுத்தக் குழுக்கள்:**

- ‘அழுத்தக் குழுக்கள்’ என்ற சொல் ஐக்கிய அமெரிக்க நாட்டில் உருவாக்கப்பட்டது. பொது நலன்களைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் தீவிரமாக செயல்படும் குழு அழுத்தக் குழு என்று அழைக்கப்படுகிறது. அரசு மீது அழுத்தம் செலுத்தி அரசின் கொள்கைகளில் மற்றம் கொண்டு வரும்படி நெருக்கடி தருவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

- அழுத்தக் குழுக்கள் ‘நல்க்குழுக்கள்’ அல்லது தனிப்பட்ட நலக்குழுக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. அதே சமயம் இவை அரசியல் கட்சியிலிருந்து வேறுபட்டவை. தேர்தலில் போட்டியிடுவதில்லை. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற விளைவதும் இல்லை.

**இந்தியாவில் அழுத்தக் குழுக்கள்:**

- இந்தியாவில் தற்போது அதிக எண்ணிக்கையிலான அழுத்தக் குழுக்கள் உள்ளன. ஆனால் அவைகள் அமெரிக்கா அல்லது மேற்கத்திய நாடுகளான இங்கிலாந்து, பிரெஞ்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் இருப்பதைப் போல் வளர்ச்சி அடைந்தவையாக காணப்படுவதில்லை.

- இந்தாயிவல் செயல்படும் அழுத்தக் குழுக்களைக் கீழ்க்காணும் வகைகளாக வகைப்படுத்தலாம்.
    1. வணிகக்குழுக்கள்
    2. தொழிற்சங்கங்கள்
    3. விவசாயக் குழுக்கள்
    4. தொழில் முறைக் குழுக்கள்

5. மாணவர் அமைப்புகள்
6. மத அமைப்புகள்
7. பழங்குடி அமைப்புகள்
8. மொழிக் குழுக்கள்
9. கோட்பாட்டு அடிப்படைக் குழுக்கள்
10. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுக்கள்

**அழுத்தக் குழுக்களுக்கான எடுத்துக்காட்டுகள்:**

1. இந்திய வணிகம் மற்றும் தொழிற்துறை சம்மேளத்தின் கூட்டமைப்பு (FICCI)
2. அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC)
3. அகில இந்திய விவசாயிகள் சங்கம் (AIKS)
4. இந்திய மருத்துவச் சங்கம் (IMA)
5. அகில இந்திய மாணவர் சம்மேளனம் (AISF)
6. அகில இந்திய சீக்கிய மாணவர் பேரவை
7. இளம் பதாகா சங்கம் (YBA)
8. தமிழ்ச்சங்கம்
9. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்
10. நர்மதா பச்சாவோ அந்தோலன்

**இந்தியாவில் அழுத்தக் குழுக்களின் செயல்பாடுகள்:**

- அரசின் கொள்கையில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் குறிப்பிட்ட நலன்களைப் பெறச் செயல்படும் நலக் குழுக்கள் அழுத்தக் குழுக்கள் எனப்படும். அவை எந்த அரசியல் கட்சியுடனும் அணி சேருவதில்லை. ஆனால் மறைமுக முடிவுகள் எடுப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு ஆற்றல் மிக்கவை. பிரதிநிதித்துவப்படுத்துதல், அரசியல் பங்கேற்பு, கல்வி, கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை அமலாக்கம் போன்ற பல வகைகளான செயல்பாடுகளை அழுத்தக் குழுக்கள் மேற்கொள்கின்றன.

**அரசியல் பங்கேற்பு:**

- அரசியலின் மற்றொரு முகம் என்று அழுத்தக் குழுக்களைக் கூறலாம். மனுக்கள், பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் போன்ற அரசியல் செயல்பாடுகள் மூலம் மக்கள் ஆதரவைத் திரட்டி தங்கள் செல்வாக்கினை அழுத்தக் குழுக்கள் விரிவுபடுத்துகின்றன. இத்தகைய செயல்பாடுகள் இளைய சமுதாயத்தினரை வெகுவாகக் கவர்ந்திழுக்கின்றன.

**கல்வி:**

- பல அழுத்தக் குழுக்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது, இணையத்தளம் பராமரிப்பு, அரசுப் கொள்கைகள் மீது கருத்துகள் வெளியிடுவது மற்றும் உயர்நிலைக் கல்வியாளர்கள், அறிவியலாளர்கள் மட்டுமல்லாமல் முக்கிய பிரபலங்களிடமிருந்தும் கருத்துகளைத் திரட்டி வல்லுநர்களின் ஆதரவினைப் பெறுவது ஆகிய செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன.

**கொள்கை உருவாக்கம்:**

- அழுத்தக் குழுவினர் கொள்கைகளை உருவாக்குபவர்கள் இல்லை என்ற போதிலும் கொள்கை உருவாக்கச் செயல்முறைகளில் அவர்கள் பங்கேற்பதைத் தடுப்பதில்லை. அரசுக்குத் தகவல் அளிப்பதிலும், ஆலோசனைகளை வழங்குவதிலும் இந்த அழுத்தக் குழுவினர் வலுவான பங்களிப்புச் செய்து வருகின்றனர். கொள்கை உருவாக்கச் செயல்முறைகளில் அவர்கள் தொடர்ந்து ஆலோசனை தருகின்றன.

**மக்கள் குழுவும் பங்கேற்பும்**
**மக்கள் குழு**

- மக்களின் 'வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக மேம்படுத்தும் சமூக ரீதியிலான ஆக்கப்பூர்வ செயல்பாடுகளை நோக்கி மக்கள் குழுவை திரட்டுவது அவசியமே. சில நேரங்களில் நில நடுக்கம், சுனாமி, வெள்ளப்பெருக்கு மற்றும் பிற இயற்கைப் பேரிடர்கள் நிகழும் போது மீட்பு, நிவாரணம் போன்ற அவசரப் பணிகளுக்கு உடனடியாக மக்களைத் திரட்ட நேரிடும்.

**மக்களாட்சியில் பங்கேற்பு:**

- நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் மக்கள் பெருவாரியாகப் பங்கேற்கும்போதே மக்களாட்சி அமைப்பு வெற்றிகரமாக இயங்க முடியும். அதே சமயத்தில் வரி மற்றும் வருவாய் வசூலிக்கும் முறையிலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சுத்தம் சுகாதாரம், உடல் ஆரோக்கியம் மற்றும் போலியோ சொட்டுமருந்து அளித்தல் போன்ற சிறப்புத் திட்டங்களிலும் ஒவ்வொரு குடிமகனும் சிறிய உள்ளூர் குழுக்களும் பங்கு பெறும் போது மட்டுமே மக்களாட்சி வெற்றி பெற முடியும்.

எனவே, மக்களாட்சி அரசாங்கத்தை விட சிறந்த அரசாங்கம் இல்லை என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். சிறந்த சமூகத்தையும் நாட்டையும் உருவாக்க, இந்திய மக்களாகிய நாம் மத்திய மற்றும் மாநில அரசாங்கத்துடன் இணைந்து மனித வாழ்க்கையின் துன்பங்களை ஒழித்திட ஒற்றுமையுடன் போராட வேண்டும்.

## 11th Volume I

### அலகு-2

### அரசு

**அறிமுகம்**

- அரசியல் அறிவியல் என்பது அரசைப் பற்றிய ஓர் முறையான படிப்பாகும். நாம் அனைவரும் ஓர் அரசின் கீழ் வாழ்ந்து வருகிறோம். இந்த உலகம் என்பதே பல்வேறு அரசுகள் அடங்கிய ஓர் வடிவமாகும். அரசு என்ற எண்ணம் அல்லது கருத்தாக்கமானது வரலாற்று ரீதியாக பார்த்தோமேயானால் ஒவ்வொரு பகுதியிலும் அதன் அரசியல், பண்பாடு, மதம் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளால் உருவானதேயாகும். இன்று அரசு என்ற சொல் நவீன அரசையே குறிக்கிறது. நவீன அரசானது, ஆள்வோர் மற்றும் ஆளப்படுவோரை மட்டும் உள்ளடக்கிய நவீன காலத்துக்கு முன்பிருந்த அரசுகளை விட முற்றிலும் மாறுபட்டதாகும். எனவே, எது அரசு? எது அரசு அல்ல? என்பதைப் பற்றிய ஒரு சரியான புரிதல் அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு அவசியம் ஆகிறது.

- ஆம்!நாம் அனைவரும் ஓர் அரசின் கீழ் வாழ்ந்து வருகிறோம். எது அரசு என்ற சரியான விழிப்புணர்வு இல்லாமலேயே அதனுடன் நாம் தொடர்பும் கொண்டுள்ளோம். சாலை வசதிகள், மருத்துவ சேவை, மின்சாரம், குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்றவை நம்மை அரசுடன் இணைப்பவற்றில் சிலவாகும். அரசு நம்மைச் சில செயல்களைச் செய்ய கட்டாயப்படுத்துகிறது. சில செயல்களைச் செய்ய விடாமல் தடுக்கிறது. இதில் ஏதாவது ஒன்றை நாம் மீறுவோமானால் அது தண்டனைக்கு வழிவகுக்கிறது. எனவே, அரசின் சட்டமும், சுதந்திரமும் அதனாலேயே வகுக்கப்பட்ட நிபந்தனைக்கு உட்பட்டது என்றே முடிவு செய்ய வேண்டியுள்ளது. நமது வாழ்வும், வளமும் பாதுகாப்பாக இருப்பதை அரசு உறுதி செய்கிறது. எனவே நாம் அரசை விரும்புகிறோமோ இல்லையோ அது நம்மை அதன் மக்களாக இருப்பதற்கு விரும்புகிறது.

**அரசு என்பதன் பொருள் மற்றும் வரையறை**

- அரசு என்பது உலகளாவிய ஏனைய சமூக அமைப்புகளைவிட, மிகவும் சக்தி வாயந்ததாகும். அரசு இயற்கையாக தோன்றிய அமைப்பாகும். 'மனிதன் ஓர் சமூக விலங்கு என்பதுடன் மனிதர்கள், அரசியல் சார்ந்து இருப்பது அவர்களின் இயல்பான தன்மை என அரிஸ்டாட்டில் கூறுகிறார். மேலும்,'ஒரு மனிதன் அரசு எனும் அமைப்பிற்குள் வாழ்வது, அவன் மனிதத்தன்மையுடன் வாழ்வது, இவை இரண்டும் ஒன்றே' என அரிஸ்டாட்டில் கருதினார். நவீன சொல்லான அரசு (State) என்பது 'ஸ்டேட்டஸ்'(Status) எனும் சொல்லில் இருந்து உருவானதாகும். நிக்கோலோ மாக்கியவல்லி (1469 – 1527) எனும் அறிஞர் முதன் முதலில் அரசு எனும் சொற்பிரயோகத்தைத் தமது படைப்புகளில் பயன்படுத்தினார். முனிதர்கள் வாழ்வியலிற்கான அடிப்படையினை கொண்டுள்ளதனாலேயே அரசு ஒரு இன்றியமையாத அமைப்பாகக் கருதப்படுகிறது. அரசு என்பது மனித சமுதாயத்திற்கு நல்வாழ்வினை ஏற்படுத்தித் தருவதற்காக நீடிக்கிறது. மனிதர்களின் நோக்கங்கள், ஆசைகள் மற்றும் விருப்பங்கள் ஆகியவை அரசு எனும் அமைப்பின் மூலமே செயல் வடிவம் பெறுகின்றன. மனிதர்களுக்கு அத்தியவசியமான அமைப்பாக அரசு

கருதப்பட்டாலும், அரசு என்பதற்கான வரையறை இதுதான் என எந்த இருவேறு சிந்தனையாளர்களும் கருத்தின் அடிப்படையில் ஒத்துப்போவது கிடையாது.

- இந்த கருத்து வேறுபாடு அரசு குறித்த ஆய்வினை மிகவும் ஆக்கப்பூர்வமானதாகவும், ஆர்வமிக்கதாகவும் ஆக்குகிறது. ஊதாரணமாக, அரசியல் அறிவியலில் சமூக ஒப்பந்தக் கோட்பாடு உள்ளது. தாமஸ் ஹாப்ஸ், ஜான் லாக் மற்றும் ஜீன் ஜாக்குவஸ் ரூசோ ஆகிய மூவரும் சமூக ஒப்பந்த சிந்தனையாளர்கள் என அறியப்படுகின்றனர். மனிதர்களை அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்பது இவர்களின் உள்ளார்ந்த கருத்தாகும். ஆனால் அக்கட்டுப்பாட்டின் எல்லையினைக் குறித்து அம்மூவருக்கு இடையே ஒருமித்த கருத்து என்பது காணப்படவில்லை.

| அரசியல் சிந்தனையாளர் | மனித இயல்பு | இயற்கையின் நிலை | சமூக ஒப்பந்தம் |
|---|---|---|---|
| ஹாப்ஸ் | மனிதர்கள் ஒவ்வொருவரும் பிறரிடம் ஓநாய்களைப் போன்று பகைமையுடன் இருக்கக் கூடியவர்கள் | போர்ச்சூழல் | லெவியதான் (ஒற்றை ஆட்சியாளர்) |
| லாக் | மனிதனுக்கு முழுமையான சுதந்திரம் உண்டு | துனி மனிதச் சொத்துக்கள் பாதுகாப்பானதாக இல்லை | பொது நலக் கூட்டமைப்பு |
| ரூசோ | மனிதன் முழுமையான சுதந்திரம் கொண்டவன் ஆனால் அவன் ஒழுக்கக்கேடானவன் | பாதுகாப்பு மற்றும் அறநெறி கிடையாது | அரசு பொது விருப்பத்தின் வழி நடத்தப்படும் |

**அரசு வரையறை**

❖ **உட்ரோவில்சன் (Woodrow Wilson)**

“அரசு எனப்படுவது யாதெனில், ஓர் குறிப்பிட்ட எல்லைக்குள் சட்டத்தின் மாட்சிமையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட மக்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும்”

❖ **அரிஸ்டாட்டில் (Aristotle)**

அரசு எனப்படுவது “குடும்பங்கள் மற்றும் கிராமங்கள் ஒன்றிணைந்து அவற்றின் நோக்கத்திற்காகவும், அவைகளின் மகிழ்ச்சியான, மரியாதைக்குரியதுமான வாழ்க்கை மற்றும் முழுமையான சுய சார்பு கொண்ட வாழ்க்கை முறையினை வாழ உதவும் ஓர் அமைப்பு அரசாகும்” என வரையறுத்தார்.

❖ **ஹாலந்து (Holland)**

அரசு என்பது “பொதுவாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பினை ஆக்கிரமித்து வாழும் மிகப் பெரிய எண்ணிக்கையிலான மனிதர்களின் பெருந்திரள், தம்மிலும் எண்ணிக்கையில் குறைவாக இருக்கும் மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்துதலை நியாயப்படுத்தும் அமைப்பாகும்.

❖ **பர்ஜெஸ் (Burgess)**

அரசினை வரையறுக்கும் போது ‘மனித வர்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கினர் ஒரு

அமைப்பாக இருந்து செயல்படுவதே அரசு' என்கிறார்.

- **சிட்ஜ்விக் (Sidgwick)**

  'அரசு என்பது அரசாங்க வடிவில் தனிமனிதன் அல்லது சங்கங்கள் இணைவதாகும். ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் மீது அவர்கள் ஒன்றிணைந்து தங்களை அரசியல் ரீதியாக அமைத்துக்கொள்வது அரசு ஆகும்'.

- **கார்னர் (Garner)**

  அரசு என்பது "ஓர் மக்கள் கூட்டமானது வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வசித்துக் கொண்டு, அவர்கள் வெளி சக்திகளுக்கு கட்டுப்படாமல் ஒரு முறையான அரசாங்கத்தைப் பெற்று தங்களுக்குள் ஏற்பட்ட இயல்பான கீழ்படிதலை அரசிற்கு செலுத்துதல்" என விளக்குகிறார்.

- **பேராசிரியர் லாஸ்கி (Prof. Laski)**

  "அரசு என்பது ஓர் நிலப்பரப்பில் அமைந்த சமுதாயமாகும். அது அரசாங்கம் மற்றும் குடிமக்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு இடையேயான உறவுகள் மேன்மையான அதிகாரத்தை வலுக்கட்டாயமாக பயன்படுத்துவதன் மூலமாகத் தீர்மானிக்கப்படுவது" என்கிறார்.

**அரசின் முக்கிய கூறுகள்**

- மேற்கூறிய விளக்கங்களிலிருந்து, அரசு சில அடிப்படை கூறுகளைக் கொண்டிருக்க வேண்டுமென நீங்கள் எளிதாக முடிவு செய்யலாம். அரசு என்பது மக்கள் மீது அளப்பரிய ஆதிக்கம் செலுத்தவல்ல அதிகாரத்துவம் கொண்ட அமைப்புகளின் தொகுப்பாகும். எனவே, அனைத்து நவீன அரசுகளும் ஒருபுறம் அரசின் அளப்பிய கேள்விக்கு அப்பாற்பட்ட அதிகாரத்தினையும், மறுபுறம் குடிமக்களின் சுதந்திரம் மற்றும் சலுகைகளையும் தத்தமது அரசமைப்பு சட்டத்தின் வாயிலாக சமன்படுத்துவதைக் மான்டிவீடியோ எனும் நகரில் 1933ல் நடைபெற்ற அரசுகளின் உரிமைகள் மற்றும் கடமைகளின் மீதான மாநாடு, அரசு என்பதனைப் பற்றிய ஓர் அடிப்படை புரிதலை அளித்தது. அரசு என்பது ஓர் நிரந்தர மக்கள்தொகை, ஓர் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு மற்றும் அந்நிலப்பரப்பின் மீது ஆளுமை செலுத்தும் அரசாங்கம் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

- அரசு அதன் மக்களை கட்டுப்படுத்தவல்லது; பிற நாடுகளுடன் பன்னாட்டு உறவுகளையும் நடத்த வல்லதாகும். இதன் விளைவாக, ஓர் அரசினை பிற அரசுகள் அங்கீகரித்தல் என்பது ஒரு அரசின் சட்டப்பூர்வ தன்மைக்கு மிக முக்கியமாகும். இறையாண்மை குறித்து கற்கும்போது நீங்கள் மேலும் இது குறித்து தெரிந்து கொள்வீர்கள்.

**அரசின் முக்கியக் கூறுகள் என்பதை புரிந்து கொள்ள முயற்சிக்கலாம்**

- நமது நாடான இந்தியாவை ஓர் அரசாக சிந்தியுங்கள். இந்தியா தன்னை ஓர் அரசு என தகுதியாக்குவதற்கு எவை எல்லாம் காரணங்கள் என்பதைப் புரிந்து கொள்ள முயலுங்கள். முதலில் இந்தியா ஒரு நன்கு வரையறுக்கப்பட்ட நிலப்பகுதியினைக் கொண்டதாகும். இந்தியாவில் இந்தியர்களான நாம் வசிக்கிறோம். இந்தியர்களான நமக்கு ஓர் அரசாங்கம் இருக்கிறது. இந்தியா உலக அரங்கில் ஒரு தகுந்த நிலையுடன் சுதந்திரமாக உள்ளது. நமது நாடு பிற அரசுகளின் ஆதிக்கத்திற்கு

உட்படாதது. பிற அரசுகளுடனும் இந்தியா ஒப்பந்தம் மேற்கொள்ளலாம். நமது தூதரகங்கள் அனைத்து நாடுகளிலும் உள்ளன. அமெரிக்க ஐக்கிய குடியரசில் உள்ள இந்திய தூதரகம் அமெரிக்காவிலுள்ள இந்தியா என்றே அறியப்படுகிறது. புதுச்சேரியில் உள்ள பிரஞ்சு துணைத் தூதரகம், இந்தியாவில் உள்ள பிரான்சு என்றே அழைக்கப்படுகிறது.

**2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு**

- 1948-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின் படியும் அரசமைப்பின் வழிகாட்டுதலின் படியும் சுதந்திரத்திற்கு பிந்தைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பத்தாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.
- குடைசியாக 2011-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள்தொகை விவரக் கணக்கெடுப்பில் வீடுகளின் பட்டியல், வீடுகளின் எண்ணிக்கை ஆகியவைகளை முதன்மைப்படுத்தி புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டது. ஒரு வீட்டில் வசிப்பவர்களின் எண்ணிக்கை, அதன் தலைவர், அவ்வீட்டின் தரை, சுவர் மற்றும் மேற்கூரை ஆகியவற்றின் தன்மை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டும் கணக்கு எடுக்கப்பட்டது.
- மேலும் குடும்பத்தலைவரின் பெயர், பாலினம், வகுப்பு, வீட்டின் உரிமையாளர், வசிப்பிட அறைகளின் எண்ணிக்கை, திருமணமான தம்பதியர்களின் எண்ணிக்கை போன்றவைகளும் கணக்கெடுக்கப்பட்டது. கணக்கெடுப்பாளர்கள் வீட்டில் அமைந்துள்ள வசதிகள், குடிநீர் கிடைக்கும்முறை, கழிவறை, கழிவுநீர் வெளியேறும் வழி, குளியலறை வசதி, சமையலறை, சமைப்பதற்கு பயன்படுத்தப்படும் எரிபொருட்கள் போன்ற தகவல்களையும் திரட்டியுள்ளனர்.
- குணக்கெடுப்பாளர்கள் மக்களின் வங்கிப் பயன்பாடுகள் மற்றும் வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, கணிப்பொறி, வலைதள இணைப்பு, தொலைபேசி மதிவண்டி, உந்து வண்டி, மகிழுந்து போன்ற சொத்துக்களையும் கணக்கெடுத்தனர்.

| தசாப்தம் (பத்து ஆண்டுகள்) | மொத்த மக்கள்தொகை (பில்லியனில்) | ஆண்டு வளர்ச்சி விகிதம் |
|---|---|---|
| 1901 | 238.4 | -- |
| 1911 | 252.1 | 0.56 |
| 1921 | 261.3 | -0.03 |
| 1931 | 279.0 | 1.04 |
| 1941 | 318.7 | 1.33 |
| 1951 | 361.1 | 1.25 |
| 1961 | 439.1 | 1.96 |
| 1971 | 548.2 | 2.20 |
| 1981 | 683.3 | 2.22 |
| 1991 | 846.4 | 2.14 |
| 2001 | 1028.7 | 1.97 |
| 2011 | 1210.7 | 1.64 |

**மக்கள் தொகை**

- மக்கள்தான் அரசை உருவாக்குகிறார்கள். அரசுக்கு மக்கள் தொகை அவசியமாகும். முற்காலச் சிந்தனையாளர்கள் மக்கள்தொகையின் அளவினை விவாதத்திற்கு உள்ளாக்கினர். தத்துவஞானி பிளாட்டோவின் கூற்றுப்படி ஓர் இலட்சிய அரசில் 5040 குடிமக்கள் வாழ்வது போதுமானது என்று அறுதியிட்டார். அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி

மக்கள் தொகையினை துல்லியமாகக் கூறாமல், மிகக்குறைவாகவோ அல்லது மிக அதிகமாகவோ இருக்கக்கூடாது என்று மட்டும் அறிவுறுத்தினார். அதாவது ஓர் அரசு தன்னிறைவு பெறுவதற்கு ஏற்றவகையிலும், அதே நேரத்தில் திறம்பட ஆட்சி செய்வதற்குத்

| |
|---|
| பிளாட்டோவின் கருத்துப்படி ஒரு இலட்சிய அரசின் மக்கள்தொகை என்பது 5040 ஆகும். இந்த 5040 என்ற எண்ணிக்கையினை ஏன் அவர் தெரிவு செய்தார் தெரியுமா? இதற்கு முக்கியக் காரணம் இந்த 5040 என்ற எண்ணை 1 முதல் 12 வரையிலான எந்த எண்ணாலும் வகுக்கலாம். ஊதாரணமாக, இந்த எண்ணினை 12ஆல் வகுத்தால் மீதம் உள்ளது 2 என்ற எண் மட்டுமே! நெருக்கடியான காலங்களில் மக்களை சிறு சிறு குழுக்களாகப் பிரித்து அவர்களுக்குரிய தனித்தனி அறிவிப்புகள் தருவதற்குவசதியாகவே இந்த 5040 என்ற இந்த மக்கள் தொகை எண்ணிக்கை பிளாட்டோவினால் தேர்வு செய்யப்பட்டது. |

- தகுந்த வகையிலும் மக்கள் தொகை இருக்க வேண்டும் என அரிஸ்டாட்டில் கருதினார். ரூசோ ஓர் இலட்சிய அரசு என்பது 10,000 மக்கள் தொகையுடையதாக இருத்தல் வேண்டும் என்று கூறினார்.

- பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற முற்கால சிந்தனையாளர்கள் சிறிய கிரேக்க நகர அரசுகளான ஏதென்ஸ் மற்றும் ஸ்பார்ட்டாவை மனதில் வைத்துக்கொண்டு மக்கள் தொகை எண்ணிக்கையினை முடிவு செய்தனர். நவீன கால அரசுகள் மக்கள் தொகை எண்ணிக்கையில் வேறுபடுகின்றன. இந்தியாவின் 2011-ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 121.02 கோடி மக்களைக் கொண்டுள்ளது.

**நிலப்பரப்பு**

- நிலப்பரப்பு இல்லாமல் அரசு இருக்கமுடியுமா? நிச்சயமாக இருக்க முடியாது. மக்கள் வசிக்க இருப்பிடம் அதாவது நிலப்பகுதி அவசியமாகிறது. மேலும் மக்கள் தங்களை சமூக மற்றும் அரசியல் அடிப்படையில் தயார்படுத்திக்கொள்ள நிலப்பகுதி தேவைப்படுகிறது. நிலப்பகுதி என்பது அந்நாட்டின் நிலம், நீர், ஆகாயம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகுமட். நவீன அரசுகள் அவற்றின் நிலப்பகுதி அளவில் வேறுபடுகின்றன. குடியுரிமைக்கு நிலப்பகுதி முக்கியமானதாகும். மக்கள் தொகை என்ற கூற்றினைப் போல் நிலப்பகுதி என்பதற்கு குறிப்பிட்ட அளவு என்பது கிடையாது. சிறிய மற்றும் பெரிய நிலப்பகுதிகள் கொண்ட அரசுகள் உள்ளன. 'நிலப்பரப்பின் மீதான இறையான்மை அல்லது அரசின் மேலான தன்மை' என்பது அந்தந்த அரசின் எல்லைப் பகுதிக்குள் சுதந்திரமாகவும், வெளியிலிருந்து எந்த கட்டுப்பாடும் இல்லாமல் இருப்பதும் தான். இதுவே நவீன அரசுமுறை வாழ்வின் அடிப்படைக்கொள்கையாகும் என பேராசிரியர் எலியட் கூறுகிறார்.

,

- இந்திய அரசின் நிலப்பகுதி 32,87,263 சதுர கிலோமீட்டர் ஆகும். இது உலக அளவில் கிட்டத்தட்ட 2.4% நிலப்பரப்பு ஆகும். இந்திய அரசமைப்பின் முதல் உறுப்பு இந்தியாவின் நிலப்பரப்பைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

**அரசாங்கம்**

- அரசாங்கம் என்பது அரசின் செயல்படக்கூடிய ஓர் முகமையாகும். ஆரசாங்கம் என்பது அரசின் அரசியல் அடிப்படையிலான ஒருங்கிணைப்பாகும். பேராசிரியர்

அப்பாதுரை (A. Appadurai) அரசின் விருப்பங்களை உருவாக்கி வெளிப்படுத்தி உடன் நிறைவேற்றும் ஓர் முகமையாக அரசாங்கம் விளங்குகிறது'' என குறிப்பிடுகிறார். சி.எப்.ஸ்ட்ராங் (C.F. Strong) என்பவர்,'' சட்டத்தை இயற்றி அதனை அமல்படுத்த அரசுக்கு மேலான அதிகாரம் தேவைப்படுகிறது'' என்று கூறுகிறார். அரசாங்கம் ஒரு நிலைப்படுத்தப்பட்ட அமைப்பாகும். ஆரசாங்கத்தினை வழி நடத்த ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும், அவர்கள் மாறுவதும் இயல்பென்றாலும் மாறாதது அரசாங்கத்தின் கட்டமைப்பாகும். மக்கள் அவர்களுக்குரிய அதிகார பீடத்திற்கு வருவதற்கு முன்னரும் அரசு இருந்தது. அவர்கள் தங்களின் அதிகாரத்தினின்று விலகி பின்னரும் அரசு இருக்கும்.

**இறையாண்மை**

- இறையாண்மை என்பது ஓர் அரசின் நான்காவது அடிப்படை கூறாகும். இறையாண்மை என்பதன் பொருள் மேலான மற்றும் இறுதியான சட்ட அதிகாரம் என்பதாகும். எந்த சட்ட அதிகாரமும் இறையாண்மையை விட உயர்ந்ததாக இருக்க முடியாது. நவீன அரசுகள் தோன்றும்போது அதனுடன் இறையாண்மை எனும் சொல் இலத்தீன் மொழிச்சொல்லான 'சூப்பரானஸ்' (Superanas) என்பதிலிருந்து பெறப்பட்டது. அதற்கு உயர்ந்த அதிகாரம் என்று பொருளாகும். தொன்தொட்டு வரும் புரிதலின்படி இறையாண்மை என்பது முழுமையானது, நிரந்தரமானது, அனைவருக்குமானது, பிரிக்க முடியாதது, தனித்துவமானது மற்றும் மாற்றித்தர இயலாதது என்பன போன்ற பண்புகளை உள்ளடக்கியுள்ளது.

நிலப்பரப்பின் மீதான இறையாண்மையின் பெயரால் மக்கள் ஒரு அரசின் நிலப்பரப்பிலிருந்து மற்றொரு அரசின் நிலப்பரப்பிற்கு செல்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் ஒரு நாட்டில் இருந்து கொண்டு நீங்கள் இணையத்தைப் பயன்படுத்தி மற்றொரு நாட்டில் உள்ளவருடன் தொடர்பு கொள்ள முடியும்.

- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீன் போடின் (Jean Bodin) (1530-1597) என்பவர் நவீன இறையாண்மைக் கோட்பாட்டின் தந்தையாவார். ஹேரால்டு லாஸ்கியின் (Harold Laki) கருத்துப்படி 'அரசு இறையாண்மை உடையதாக இருப்பதால்தான் பிற மனிதக் கூட்டமைப்புகளிலிருந்து வேறுபடுகிறது'

**சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம்**

- சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம் என்பதன் பொருள் என்ன என்று நாம் ஆராய்வோம். மேலும் அவை ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதையும் காண்போம்.

**சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம் - இவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக உள்ளன?**

- நாம் ஒவ்வொருவரும் ஒரே நேரத்தில் குடும்பம், சமுதாயம், மற்றும் அரசு எனும் அமைப்புகளில் வாழ்கின்றோம். இதற்கென்ன பொருள்? சமுதாயமும், அரசும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளன? அரசு மற்றும் சமுதாயத்துடன் அரசாங்கத்திற்கு என்ன தொடர்பு?

- மனிதர்கள் வேட்டையாடி வாழ்ந்த வரலாற்று ரீதியிலன பண்டைய நிலையிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்து, ஒரு இடத்தில் நிலையாய் குடி கொண்டு வாழும் நிலைக்கு வந்த பின்பு, ஒவ்வொருவரும் பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கினர். குடும்பங்களின் செறிவு சமூகம் எனவும், சமூகங்களின் செறிவு நாம் இன்று காணும் சமுதாயமாகவும் ஆனது. தனிநபர்கள் , தங்கள் உளவியல் தேவைக்காக மற்றவரை சார்ந்து இருந்ததனால் குடும்பம் எனும் அமைப்பில் வாழ்ந்து வருகின்றனர்.

- குடும்பங்கள், தங்கள் பாதுகாப்பிற்காகவே சமூகம் எனம் கட்டமைப்பின் கீழ் வந்தன. இவ்வாறு அமையப்பெற்ற சமூகங்கள், தங்களின் மேம்பட்ட பாதுகாப்பிற்காக சமுதாயம் எனும் அமைப்பினைத் தோற்றுவித்தன. சமுதாயத்தில் வாழ்பவருடைய தேவை அதே சமுதாயத்தின் ஒட்டுமொத்த கூட்டு உற்பத்தி மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. இவ்வாறே தனித்தனியாக ஒவ்வொரு மனிதரும் தத்தமது அன்றாட உணவிற்காக உழைப்பது, பொருள் உற்பத்தியைத் தோற்றுவிக்கும். இதனாலேயே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், அவற்றின் மூல நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு சந்தை மற்றும் வாணிபம் எனும் அமைப்புகள் உருப்பெற்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சந்தைப்படுத்தப்படும்போதும், வர்த்தகம் செய்யப்படும்போதும், பலம் பொருந்திய மனிதர்களின் கட்டுப்பாட்டில் அவை செல்லும் சாத்தியமும் உள்ளது. அவ்வாறு சமுதாயமானது வலியோரின் ஆளுகைக்குள் வருமாயின், அது சமுதாயத்தின் சிதைவிற்கு வழி வகுக்கும்.

- சமுதாயம் சீரழிந்து போகும்போது, அதன் தாக்கம் சமூகக்குழுக்களின் மீதும் ஏற்படும். சமூகங்கள் சிதைவு பெறும்போது குடும்பங்களும் சிதையத்தொடங்கும். குடும்பங்கள் சிதையத்துவங்கினால், ஒவ்வொருவரும் துன்புற நேரிடும். இவ்வாறு ஒரு சரி செய்ய இயலாத சீரழிவைத் தடுக்கும் பொருட்டே, மனிதர்கள் ஒன்றுபட்டு, பகுத்தறிவின் வழிகாட்டுதலின் பேரில் அரசு எனும் மாட்சிமை பொருந்திய வலிமையோடு இருக்கக்கூடிய அமைப்பின் அவசியத்தினை உணர்ந்தனர்.

- மனிதர்கள் ஒருவருக்கொருவர் தம்மை அழித்துக்கொள்வதிலிருந்து அவர்களை காக்கும் நோக்கிலேயே அதிகாரங்கள் குவிக்கப்பட்டு அவ்வதிகாரங்களை நிர்பந்திக்கும் அதிகாரம் கொண்ட ‘அரசு’ எனும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. நவீன அரசுகளில் மனிதர்கள் மீதான இக்கட்டுப்பாடுகள், சட்டத்தின் வழியாக உரிய விதிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. மக்களாட்சியில் இச்சட்டங்கள் சட்டமன்றத்தால் இயற்றப்படும். இயற்றப்பட்ட சட்டங்கள், செயலாட்சி துறை மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டும், நீதிமன்றத்தால் இச்சட்டங்களின் சட்டப்பூர்வத்தன்மை மற்றும் நீதி பரிபாலனத்தன்மை ஆகியன ஆய்வு செய்யப்பட்டும் வருகின்றன. சட்டமியற்றுதல், இயற்றிய சட்டத்தை அமலாக்குதல் மற்றும் அதற்கு விளக்கமளித்தல் ஆகியன அரசாங்கத்தின் பணிகளாகும். ‘அதிகாரப் பிரிவினை’ என்ற தலைப்பின்கீழ் நீங்கள் மேலும் இது குறித்து அறியலாம்.

| **அரசு** | **சமுதாயம்** |
|---|---|
| சமுதாயம் தோன்றிய பின்னரே அரசு என்ற அமைப்பு தோன்றியது. | சமுதாயமானது அரசு தோன்றுவதற்கு முன்னரே தோன்றியது. |
| அரசின் எல்லை வரையறுக்கப்பட்டது. | சமுதாயத்தின் பரப்பெல்லை பரந்ததாகும். |
| அரசுக்கு ஒரு நிலையான நிலப்பரப்பு உண்டு. | சமுதாயத்திற்கு என நிலையான நிலப்பரப்பு எதுவும் இல்லை. |
| அரசு என்பது அரசியல் சார்ந்த | சமுதாயம் என்பது ஓர் சமூக அமைப்பாகும். |

| | |
|---|---|
| அமைப்பாகும். | |
| அரசிற்கு சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் உள்ளது. | சமுதாயத்திற்கு அத்தகைய அதிகாரங்கள் எதுவும் இல்லை. |

- அரசு மற்றும் சமுதாயத்தின் உறுப்பினராகும் தன்மை என்பது ஒன்றேயாகும். ஆனால் அவை இரண்டும் தத்தமது நோக்கங்களில் மாறுபடுகின்றன. அரசு என்பது ஒரு மிகப்பெரிய ஆனால் ஒரே ஒரு நோக்கத்திற்காக உள்ளது. ஆனால் சமுதாயம், எண்ணிலடங்காத நோக்கங்களுக்கானதாகும். ஆவற்றில் சில பெரிய நோக்கங்கள் மற்றும் சில சமயம் சிறிய நோக்கங்கள் உள்ளன. சமுதாயத்தின் நோக்கங்கள் ஆழ்ந்ததாகவும், பரந்ததாகவும் காணப்படுகின்றன.

- அரசு என்பது சட்டம் சார்ந்த ஒற்றை அமைப்பாகும். ஆனால் சமுதாயம் என்பது பல அமைப்புகளை உள்ளடக்கியதாகும். அரசு மக்களின் மீது தன் அதிகார வலிமையை பயன்படுத்தி அவர்களை கீழ்ப்படிய வைக்கிறது. ஆனால் மக்களின் மனமுவந்த செயல்பாட்டையே ஊக்குவிக்கிறது. சமுதாயத்தின் பல்வேறு தேவைகளே அது இசைவான வழியில் செயல்படும் முறையை தேவையானதாக்குகிறது. சமுதாயத்தில் பல்வேறு அமைப்புகள் இருப்பதால், ஒருவர் தான் கட்டாயப்படுத்தப்படுவதாக கருதினால் அதிலிருந்து விடுபட்டு வேறு அமைப்பில் தம்மை இணைத்துக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது. நிர்பந்தத்தின் மூலமாக அமைப்புகள் செயல்பட முடியாது. இதன் வாயிலாக, வலியுறுத்தும் அதிகாரமற்ற அரசும், மக்களை அவர்களின் சுய விருப்பத்துடன் தன்னகத்தே வைத்துக் கொள்ளும் தூண்டல் இல்லாத சமுதாயமும் வீழ்ச்சியடையும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

**அரசு மற்றும் அரசாங்கம்**

- பேச்சு வழக்கில் அரசும், அரசாங்கமும் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மையில் அரசு என்பதும் அரசாங்கம் என்பதும் வெவ்வேறானவை ஆகும். பின்வரும் அட்டவணையிலிருந்து அரசிற்கும், அரசாங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறியலாம்.

| அரசு | அரசாங்கம் |
|---|---|
| அரசு என்பது மக்கள்தொகை, நிலப்பரப்பு, அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய நான்கு கூறுகளைக் கொண்டதாகும். | அரசாங்கம் என்பது அரசின் நான்கு கூறுகளில் ஒன்றாகும். |
| அரசு மூல அதிகாரங்களை பெற்றதாகும். | அரசாங்கத்தின் அதிகாரங்கள் அரசிடமிருந்து பெற்றவையாகும். |
| அரசு என்பது நிரந்தரமானது என்பதுடன் என்றென்றைக்கும் நீடித்திருப்பதாகும். | அரசாங்கம் என்பது தற்காலிகமானதாகும். மக்கள் விருப்பத்தின் பேரில் அரசாங்கங்கள் மாற்றப்படலாம். |
| அரசு என்பது காண முடியாததும், புலனாகாததும் ஆகும். | அரசாங்கம் என்பது உறுதியானது மற்றும் காணக்கூடியது. |

**நவீன அரசு**

- நவீனத்துவம் என்பதனை வரலாற்று அடிப்படையில் பார்த்தால் மரபுகளை கேள்விக்குட்படுத்தி அதன் மூலம் காலம் தொட்டு வந்த நம்பிக்கைகளை, பழக்கங்களை, சமூக பண்பாட்டு நெறிமுறைகளை நிராகரிக்கும் காலகட்டம்

நவீனத்துவமாகும். துனி மனிதத்துவத்திற்கு முன்னுரிமை, சமத்துவம், சுதந்திரம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அறிவியல் மனப்பாங்கினை வளர்த்தல் போன்றவற்றிற்கு நவீனத்துவம் அடித்தளமிட்டது. நவீனத்துவம் மக்களை விவசாயம் சார்ந்த நிலையிலிருந்து தொழில்மயம், நகரமயம், மதச்சார்பின்மை நோக்கி வழி நடத்தியது. இந்த அறிவார்ந்த நகர்வானது சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம் போன்றவற்றை பற்றிய புரிதல் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஊதாரணமாக, இந்திய சமுதாயத்தை சீர்திருத்த இராஜாராம் மோகன்ராய் மேற்கொண்ட முயற்சிகள் போன்றவை இந்திய சிந்தனையாளர்கள் மீது மேற்கத்திய நவீனத்துவத்தின் தாக்கம் நேரடியாக இருந்ததற்கு சான்றாகும்.

- அரசியல் அறிவியல் பாடத்தில் நவீனத்துவமானது அரசு, சுதந்திரம், சமத்துவம், நீதி முதலிய கருத்தாக்கங்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. ஊதாரணமாக தொன்றுதொட்டு புரிந்து கொள்ளப்பட்ட அரசியல் சொற்களான தேச பக்தர்கள், புரட்சி, உரிமைகள், சலுகைகள், இறையாண்மை ஆகியவை அவற்றின் வரலாற்று பின்னணிக்கு மாற்றாகப் புரிந்து கொள்ளப்பட்டது. இதே போன்று கிரேக்க நகர அரசின் காலத்தில் அரசு என்பது முற்றிலும் வேறுவிதமாக புரிந்து கொள்ளப்பட்டது. இதற்கு முற்றிலும் மாறுபட்ட நவீன அரசு மேற்கத்திய ஐரோப்பாவில் புது வடிவம் பெற்ற அரசியல் நிறுவனமாக இடைக்காலத்தில் தோன்றியது. நவீன அரசின் அறிவுப் பூர்வமான அடித்தளம் பெரும்பாலும் 1648ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட “வெஸ்ட் பாலியா உடன்படிக்கை”(Treaty of Westphalia)யின் விளைவு என்றே கூறப்படுகிறது.

- நவீன அரசின் சிந்தனை 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய காலனிமயமாக்கம் மூலம் உலகின் பல்வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்கு பின் சுதந்திரம் பெற்ற காலனி நாடுகள் இன்றளவும் காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய (Post-Colonial States)அரசுகள் என அறியப்படுகின்றன. இவ்வாறு சுதந்திரம் பெற்ற தெற்காசிய நாடுகள் காலனியாதிக்க காலத்திற்குப் பிந்தைய அரசுகள் என்னும் குடையின் கீழ் வருகின்றன. இவ்வாறு உலகெங்கிலும் உள்ள காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய அரசுகளை ஒன்றோடொன்று ஒப்பீடு செய்யலாம். இவ்வாறான ஒப்பீடுகள் அவ்வரசுகளின் ஆட்சி முறைமைகளின் சாதக பாதகங்களை அறிந்து கொள்ள உதவும். அதன் மூலம் அவ்வரசுகளின் ஆட்சி முறைமைகளை மேம்படுத்த இயலும்.

**நவீன அரசுகளின் பணிகள்**

- நவீன அரசு என்பது வளர்சசியடைந்த அரசு ஆகும். அது தனது மக்களை பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் வைத்துக் கொள்ள முயல வேண்டும். அரசு தனது எல்லைகளின் பாதகாப்பினை உறுதி செய்ய வேண்டும். தனது எல்லைக்குள் வெளிநாட்டவர் எவரும் உட்புகாத வண்ணம் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். சந்தையின் தேவைகளனைத்தும் நன்கு கட்டமைக்கப்பட்ட பேரியல் பொருளாதார கட்டமைப்பு மூலம் சமுதாயத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும். ‘முதலில் மக்கள் நன்மை’ என்பதே அரசின் தாரக மந்திரமாக இருக்க வேண்டும். நவீன அரசின்ஆளுகை கொள்கை என்பது அதன் செயல்கள் மக்களின் நலநன பேணுவதாக இருக்கிறதா என்பதாகும். இவ்வாறு அத்தியாவசிய சேவைகளை செய்துதரும் அமைப்பாக நவீன அரசு இயங்குகிறது. நவீன அரசு கீழ்க்காணும் மூன்று முக்கிய செயல்பாடுகளை மையமாக கொண்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

**இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு பணிகள்**

- அரசுகள் இன்றைய உலகளாவிய சூழலில் ‘இடர்காப்பு’ என்பதனை பன்மடங்கான நிலைப்பாடுகளில் பொருள் கொள்கின்றன. மனித இடர்காப்பு போன்ற சொற்கள் குடிமக்களின் நலனே முதன்மையானது என்பதையே குறிக்கிறது. தத்துவஞானி இம்மானுவேல் காண்ட் அவர்களின் ‘‘நிரந்தர அமைதி’’ எனும் சிந்தனையின்படி உலக நாடுகள் ஒன்றிணைந்து ‘பன்னாட்டு சங்கம்’ எனவும் பின்னாளில் ‘ஐக்கிய நாடுகள் சபை’ எனவும் ஒன்றிணைந்து இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு முதலியவற்றை விவாதித்து உலக அமைதியை பேணுகின்றன.

**பொருளாதார பணிகள்**

- அரசியல் முறைமையின் பொருளாதார செயல்பாடுகளில் தலையிட வேண்டிய கடமையில் நவீன அரசுகள் உள்ளன. மக்கள் தங்களின் திறனை உணர்ந்து மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக அரசு அவர்களுக்கு ஆதரவு தர வேண்டும். செயல்திறன் குறித்த அமெரிக்க அறிஞர் மார்த்தா நூசுபாம்(Martha Nussbaum) அவர்களின் கருத்து மற்றும் நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை அமர்த்தியா சென்(Amartya Sen)அவர்களின் செயல் திறன் அணுகுமுறை குறித்த சிந்தனைகளை அறிய முயற்சிக்கவும். நலிவுற்ற பிரிவினர் மற்றும் நுகர்வோரின் நலன்களை பாதுகாத்தல், லாபம் ஈட்ட இயலாத துறைகளில் முதலீடு செய்வது போன்றவை நவீன அரசின் பொருளாதார பணிகளாக கருதப்படுகிறது.

**அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்**

- ‘கருவறையிலிருந்து கல்லறை வரை’ நவீன அரசு அதன் குடிமக்களை கவனித்துக் கொள்ள வேண்டும். உணவு. சுத்தமான குடிநீர், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியன அரசின் முதன்மையான பொறுப்புகளாகும். இந்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கங்களின் பல்வேறு நலத்திட்டங்கள் இந்த திசையில் இருப்பதை நீங்கள் காணலாம். தமிழக அரசாங்கத்தின் மதிய உணவு திட்டம் மற்றும் அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் ஆகியவை நாட்டின் பிற பகுதிகளில் பின்பற்றப்படுவது இதற்கு தக்கதொரு சான்றாகும். நவீன அரசு மக்களின் நலனைப் பேணுவதால் ‘‘மக்கள் நல அரசு’’ எனும் மற்றுமொரு கருத்தாக்கம் தோன்றியது.

**மக்கள் நல அரசு என்ற கருத்தாக்கம் (Concept Welfare State)**

- இந்திய அரசமைப்பின் ‘அரசு வழிகாட்டி நெறிமுறைகள்’, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மக்கள் நல அரசு பற்றிய சிந்தனையை பிரதிபலிப்பதை கவனித்து இருக்கிறீர்களா? குடிமை உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த அம்சங்கள் அரசமைப்பின் அடிப்படை உரிமைகளில் வைக்கப்பட்டுள்ளபோது, சமூக, பொருளாதார மேம்பாட்டினை வலியுறுத்தும் வழிமுறைகள் நான்காம் பகுதியில் ‘அரசு வழிகாட்டி நெறிமுறைகள்’ எனும் தலைப்பின் கீழ் அமைந்துள்ளது எதனால் என்று அறிவீர்களா? அதன் காரணமென்ன? அரசமைப்பில் உள்ள அடிப்படை உரிமையின் பகுதியாக பொருளாதார உரிமைகள் ஏன் இல்லை?

- குறைந்தபட்ச மக்கள்தொகை மற்றும் அதே நேரத்தில் வளங்கள் மிகுதியாக இருப்பது. மக்கள் நல அரசு மாதிரியின் (Welfare State Model) வெற்றியை தீர்மானிக்கும் முக்கிய காரணமாகும். ஸ்கேண்டிநேவியா நாடுகள் மக்கள் நல அரசிற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. இந்தியாவின் அரசமைப்பு ஓர் நல அரசினை நிறுவ முயல்கிறபோதிலும், வளங்கள் போதாமை, அதே சமயம் பெருகும் மக்கள்தொகை ஆகியவை மக்கள் நல அரசின் இலக்குகளை எட்ட தடையாக உள்ளது.

- ‘மக்கள் நல அரசு என்ற கருத்தாக்கம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்டதாகும். மக்கள் நல அரசில், அரசாங்கத்தினுடைய முதன்மை சிந்தனை என்பது மனித வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்காற்ற வேண்டும் என்பதாகும்.

- குடிமக்களின் நல்வாழ்விற்கான பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டினை பேணுதல் நல அரசின் பங்காகும். குடிமக்களின் பொருளாதார மற்றும் சமூக நலன் பின்வருவனவற்றின் அடிப்படையிலானதாகும்.

1. வாய்ப்புகளில் சமத்துவம் எனும் கொள்கை
2. பொருளாதார வளங்களை சமமாக வழங்குவதற்கான கொள்கை
3. குறைந்தபட்ச நல் வாழ்க்கையை தங்களால் ஏற்படுத்திக்கொள்ள இயலாதவர்களுக்கு, அவ்வாறான வாழ்க்கையினை ஏற்படுத்தித் தருதல் ஆகியனவாகும். சுதந்திரத்திற்கு முன்பு இந்தியா ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் ஒரு காலனித்துவ அரசாக இருந்தது. இந்தியர்கள் ஆங்கிலேய முடியாட்சியின் கீழ் இருந்தனர். நம் நாடு சுதந்திரம் அடைந்ததும், நாம் நமது அரசமைப்பினை உருவாக்கினோம். நமது அரசமைப்பானது மேற்கத்திய மக்கள் நல அரசின் சிந்தனைகளை உள்வாங்கியதாகும்.

### மேன்மை அரசு என்ற கருத்தாக்கம் (Concept of Soft state)

- நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் குன்னர் மிர்டால் (Gunner Myrdal) மேற்கத்திய அரசுகளுடன் ஆசிய அரசுகளை ஒப்பிடும்போது, ஆசிய அரசுகளில் நிலவும் சமுதாய ஒழுங்கீனங்கள் ஆசிய அரசுகளை மென்மை அரசுகளாக ஆக்குவதை கண்டறிந்தார். சமூக ஒழுங்கீனம், ஊழல் மற்றும் மிகப் பலவீனமான சட்ட அமலாக்கம் ஆகியன மென்மை அரசின் முக்கிய தன்மைகளாகும்.

- முழு வளர்ச்சி பெறாத ஆளுமை திறன்கள் கொண்ட காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய நாடுகள் ‘மென்மை அரசுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. தரநிலைகளை கடைபிடிக்காமை, ஒழுக்கத்தை பராமரிக்க இயலாமை போன்றவை நமது நாட்டினை மேன்மை அரசாக மாற்றி விடுகிறது. தனது மக்களாட்சி பண்புகளை மென்மேலும் மேம்படுத்திக்கொள்ள ஒரு மென்மை அரசால் இயலவே இயலாது.

### மிகை மேம்பாட்டு அரசு என்ற கருத்தாக்கம் (Concept of Over Developed State)

- தெற்காசிய அரசுகள் பெரும்பாலும் நவீன மக்களாட்சி தத்துவத்தின்படி இயங்கும் அரசுகளாகும். ஆனால், அவை வளர்ச்சியில் மேற்கத்திய நாடுகளை விட பின்தங்கி இருப்பதன் காரணம் யாது? இந்நாடுகளின் ஆளுகை அமைப்புகளான நாடாளுமன்றம், அதிகாரவர்க்கம், திட்டமிடும் துறைகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டு நிலவியல் சூழலுக்கேற்ப காலனியாதிக்க காலத்திலேயே மாற்றப்பட்டு செயல்பட்டுக்

கொண்டிருந்தாலும் வளர்ச்சி என்பது மிக மந்தமாகவே இருப்பதை காண முடிகிறது. வளர்ச்சி வேகம் மிக மெதுவாகவே இந்நாடுகளில் இருப்பதற்கான காரணம் என்ன? இதனை எடுத்துக்காட்டி ஹம்சா ஆலாவி (Hamza Alavi) பாகிஸ்தான் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளின் ஆளுகைத்தன்மை நெருக்கடியினை விளக்குகிறார். குாலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய நாடுகளின் செயல்படாத தன்மையினை விளக்கும்பொருட்டு மிகை மேம்பாட்டு அரசு எனும் கருத்தாக்கம் பயன்படுகிறது. காலனியாதிக்கக் காலத்தின் போதும், அதற்கு பின்னரும் தொடரும் அதிகாரவர்க்க ஆளுகைக்கட்டமைப்பு மூலமாக 'மிகை மேம்பாட்டு அரசு' புரிந்துகொள்ளப்படுகிறது.

- காலனியாதிக்க கால அடிமைத்தளையில் இருந்து இந்நாடுகள் விடுபட்டாலும், புதிதாக பெறப்பட்ட அரசியல் சுதந்திரத்தின் தாக்கத்தினை அந்நாடுகளில் உள்ள நிர்வாகக் கட்டமைப்புகள் எந்த வகையிலும் உள்வாங்கவில்லை. ஐரோப்பிய காலனியாதிக்க சக்திகள் இரட்டை வேடமிட்டு, தங்கள் நாட்டு ஆரோக்கிய அரசியலினை தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள காலனியாதிக்க நாடுகளுக்கு வழங்கவில்லை. அவர்களின் நாடுகளில் அரசுகள் என்பவை குடிமக்களின் அரசியல் வாழ்வு, சுதந்திரம் மற்றும் பொருளாதார சுதந்திரம் போன்ற உரிமைகளை நிலைநாட்டி மக்களுக்கு அதீத சுதந்திரம் வழங்கிய அமைப்பாகக் கருதப்பட்டன. மக்கள் அரசினை தங்கள் 'செல்ல பிராணி' போன்று கருதினர். ஆனால், அதே ஐரோப்பியர்கள் அதற்கு நேர் எதிராக, தங்களின் காலனியாதிக்க நாடுகளில் அரசமைப்புகள் கொடூரமானதாக இருக்குமாறு வடிவமைத்தனர். அதிகாரக் குவிப்பு என்பது பெரும் அளவில் காலனியாதிக்க அரசின் வசம் இருந்தது. இதனால் காலனியாதிக்கம் செய்யப்பட்ட நாடுகளில் இருந்து மிக எளிதாக செல்வங்களை சுரண்டி அவர்கள் தங்கள் நாட்டிற்கு கொண்டு செல்ல முடிந்தது. காலனியாதிக்க நாடுகளில் அவர்கள் உருவாக்கி வைத்திருந்த அதிகாரவர்க்கம் இதற்கு மிக சிறப்பாக உதவி புரிந்தது. நாட்டைச் சுரண்ட உதவிய இவ்வகை அமைப்புகளை நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும், பெரும் மரபாகவே கருதி பிந்தைய ஆட்சியாளர்கள் தொடர்ந்தனர். அதிகாரவர்க்கமும் தன்னை பெரிய அளவில் உருமாற்றமும் செய்து கொள்ளவில்லை.

- சமுதாயம் மற்றும் அதன் பொருளாதாரம் நவீனமயமாக்கப்படாத நிலையில் அவற்றை கட்டுப்படுத்தும் மாட்சிமை பெற்ற அமைப்பான அரசு மட்டும் நவீனமாக்கப்பட்டால், அது அரசையும் அதன் அங்கமான சமுதாயத்தினையும் ஒன்றோடொன்று தொடர்பில்லாத இருவேறு கூறுகளாக ஆக்கிவிடும். இது அரசு இயந்திரத்திற்கும், மக்களுக்கும் ஒரு பெரிய இடைவெளியினை ஏற்படுத்திவிடும். இவ்வகையான பிரதிநிதித்துவ மக்களாட்சியில், மக்களுக்கு எது நன்மை பயக்கும் என்பது மக்களால் தீர்மானிக்கப்படமாட்டாது. அதற்குமாறாக செல்வாக்கு மிக்க ஒரு சிலரால் மட்டுமே தீர்மானிக்கப்படும். வங்கதேசம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நிலவும் இத்தகைய தன்மையினை 'இராணுவ அதிகாரவர்க்க சிறுகுழுவாட்சி' எனும் சொற்றொடர் மூலம் ஹம்சா ஆலாவி விளக்குகிறார். 'இராணுவ அதிகாரவர்க்கத்தின் சிறுகுழுவாட்சி' என்பது இந்தியாவின் உரிமங்கள் ஆட்சியை (Licence Raj) ஒத்துள்ளதாகும். காலனியாதிக்க கால அனுபவத்தில் இருந்து இந்தியாவில் தொடரும் அதிகாரக்குவிப்பு குறித்த கவலைகள் தொடர்ந்து மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு வருவதை காணலாம்.

## காலனியாதிக்க காலத்துக்கு பிந்தைய அரசு என்ற கருத்தாக்கம் (Concept of post colonial state)

- காலனியாதிக்கம் இருந்த நாடுகளில் காவல் துறையினருக்கு மக்கள் அஞ்சுவது போல், அதே நாட்டினை தனது காலனியாதிக்கத்தில் வைத்திருந்த மேற்கத்திய நாடுகளில் மக்கள் அவர்களது காவல் துறையினரைக் கண்டு அஞ்சுவதில்லை. ஏன்?என அறிக. காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த நம் நாட்டில் தற்போது அரசாங்க ஊழியருக்கு மக்களிடையே அதீத செல்வாக்கு மற்றும் மரியாதை நிலவுவதைக் காண்க. ஆனால் மேற்கத்திய நாடுகளில் அரசாங்க ஊழியர்கள் சாமானிய மனிதர்களுக்கு சமமாகவே நடத்தப்படுவதை அறிக. அதே நேரத்தில், காலனியாதிக்கத்தினால் அந்நாடுகளுக்கு நன்மைகள் ஏதேனும் ஏற்பட்டனவா?

- இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் காலனியாதிக்கத்தின் பிடியிலிருந்து விடுபட்டு உருவான புதிய தேசிய அரசுகள் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகள் என அழைக்கப்படுகின்றன. மேம்பாட்டு அரசுகள் எனவும் காலனியாதிக்திற்குப் பிந்தைய அரசுகள் எனவும் இவை அழைக்கப்படுகின்றன. அரசின் கட்டமைப்பை பொறுத்தவரை காலனியாதிக்கத்திற்கு பிந்தைய அரசுகளில் காலனியாதிக்க கால அரசுகளின் இயல்புகள் அப்படியே உள்ளன. ஆனால் தற்பொழுது அரசின் கட்டமைப்புகளுடைய குறிக்கோள்கள் காலத்திற்கு ஏற்றாற்போல் மாறிவிட்டதைக் காணலாம். பொதுவாக, காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் அதிக அளவிலான வறுமை, அரசியல் நிலையற்றதன்மை, மற்றும் ஆளுகையில் திறனின்மை போன்றவை காணப்படுகிறது. நவீன அரசுக்கும், மரபுசார் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ள சமுதாயத்திற்கும் உள்ள முரண்பாடுகளே இதற்கு காரணம் எனலாம்.

- உலகின் புதிய பகுதிகளுக்குள் நுழைந்த கலனியாதிக்கச் சக்திகள், அங்கே நிலவிய பாரம்பரிய மரபுகள் மற்றும் பண்பாட்டினை அழித்ததுடன் தங்கள் மரபுகளையும் பண்பாட்டினையும் தொடர்ந்து திணித்தவாறு இருந்தனர். இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட மரபுகள் மற்றும் பண்பாடுகளுடன் மாற்றத்திற்கு உள்ளான மக்கள். தங்கள் நாடு விடுதலை அடைந்தவுடன், காலனியாதிக்க அடையாளங்களை துறந்து தங்களுக்கென சுய அடையாளங்களை ஏற்படுத்தும் உடனடி கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர். அதனால்ஏற்பட்ட முரண்பாடுகளைக் களைந்து அவர்கள் தன்னம்பிக்கையுடன் தங்களின் புதிய தேசிய அடையாளத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. இது காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் இடைவெளி ஏற்பட ஒரு முக்கிய காரணமானது. இன்றளவும் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் ஆள்வோர் அன்னிச்சையாக நடந்து கொள்வதைக் காணலாம்.

# அலகு– 5

# மக்களாட்சி

**மக்களாட்சியின் வரையறை மற்றும் வகைகள்**

- மக்களாட்சி என்ற சொல், கிரேக்க சொற்களான ''டெமோஸ்'' மற்றும் ''கிரேட்டோஸ்'' என்ற இரு சொற்களில் இருந்து உருவானது. கிரேக்க மொழியில் டெமோஸ் என்றால் மக்கள் என்றும் ''கிரேட்டோஸ்'' என்றால் ஆட்சி என்றும் பொருள்படும். இவ்விரு வார்த்தைகளின் இணைப்பிலிருந்து தான் மக்களாட்சி என்ற சொல் பிறந்தது. இதற்கு மக்களின் ஆட்சி அல்லது மக்களால் ஆளப்படுகின்ற ஆட்சி என்பது பொருள்.

- இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து மக்களாட்சி என்பது பெரிதும் விவாதிக்கப்படுகிற ஒரு முக்கியமான கருத்தாக இருந்து வருகிறது. இருபத்தியோராம் நூற்றாண்டில் இதன் முக்கியத்தவம் மேலும் அதிகரித்துள்ளது. இதன் பொருளானது சமூக, அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, கால இடைவெளிகளில் பல அறிஞர்கள், ஆட்சியாளர்கள் மற்றும் தத்துவஞானிகளால் வெவ்வேறு விதமாக விளக்கம் கூறப்பட்டு வந்துள்ளது. சக்தி வாய்ந்த கருத்தாக்கங்களான உரிமைகள், சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் மற்றும் அனைத்து மதங்களையும் மக்களாட்சியானது தன்னகத்தே கொண்டுள்ளது. இறையாண்மையுள்ள மக்களாட்சியில் இவை அனைத்துமே மக்களுக்கு கிடைக்க பெறும். மக்களாட்சியின் தொடக்கம் பண்டைய கிரேக்கத்தில் இருந்தாலும் தற்போதைய நவீன கால மக்களாட்சி முறையானது பிரிட்டனில் இருந்தே தொடங்கி வந்துள்ளது.

- ஒரு நாட்டின் சமூக அமைப்பின் வகைமுறை அல்லது தேசியத்தின் அடிப்படையில் அங்கு மக்களாட்சி அமைகிறது. மக்களாட்சியின் வகையையும், அதன் செயல்பாட்டையும் ஒரு நாட்டின் சமூக அமைப்பு முறையே தீர்மானிக்கிறது. சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை உருவாக்க மக்களாட்சி அவசியமாகிறது. மேலும் அரசியல் மற்றும் பிற அமைப்புகள் மூலமாக சமத்துவ சமுதாயத்தை நிலைநாட்ட இது உதவுகிறது.

| மக்களாட்சி: தத்துவவாதிகளின் வரையறை |
|---|
| **சாக்ரடீஸ் (Socrates)**<br>மக்களாட்சி என்பது ஒரு மகிழ்ச்சியான அரசாங்க வகையாகும். இவ்வகை அரசில் எவ்வளவு குழப்பங்கள் இருந்தாலும் எந்த வித பாகுபாடுமின்றி அனைவரும் சமமாக நடத்தப்படுவதற்கும் அதன் மூலம் சமத்துவ சமுதாயத்திற்குமான வழி உள்ளது. |
| **பிளாட்டோ (Plato)**<br>ஓர் அரசின் மகிமையே அதன் மக்களாட்சியில் உள்ள சுதந்திரம்தான். எனவே மக்களாட்சியானது இயற்கையாகவே அரசில் சுதந்திரம் இருக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது. |
| **அரிஸ்டாட்டில் (Aristotle)**<br>ஓர் மக்களாட்சி அரசமைப்பின் அடித்தளமே சுதந்திரம்தான். மக்கள் இதை விரும்பக் காரணமே, இந்த அரசமைப்பில்தான் அனைவருக்கும் சமமான அளவில் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கும். |

- தற்காலத்தில் மக்களாட்சி, மக்களால் மிகவும் விரும்பக்கூடிய ஒரு அரசாங்க முறையாகத் திகழ்கிறது. மேலும் உலக மக்களால் உயர்ந்த அரசியல் கருத்தாக்கமாக இது உருவாகி உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்து மக்களாட்சி முறையானது பல்வேறு நாடுகளில் பரவத் தொடங்கியது. பேச்சு சுதந்திரத்திற்கு ஒரு முக்கியமான கருவியாக மக்களாட்சி முறை உள்ளது.

**மக்களாட்சியின் பண்புகள்**

- அ) மக்களாட்சி என்பது தனிமனித சுதந்திரத்தை காப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் உள்ள ஓர் ஆட்சி முறையாகும்.

- ஆ) தனிமனித உரிமைகள், மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளை உள்ளடக்கிய பெரும்பான்மையோரின் ஆட்சி என்ற கொள்கை அடிப்படையில் மக்களாட்சி அமைந்துள்ளது.

- இ) மக்களாட்சியானது ஆட்சி அதிகாரத்தை வட்டார மற்றும் உள்ளூர் அளவில் மக்களுக்கருகே கொண்டு செல்கிறது. இது, ஒட்டு மொத்த அதிகாரமும் மத்தியிலே குவிக்கப்பட்டிருக்கும் முந்தைய அரசு முறைக்கு எதிரானது. இதன் முக்கிய அம்சமே, மக்களுக்கு தாங்கள் தேர்ந்தெடுத்த அரசிடம் கேள்வி கேட்கும் உரிமை உள்ளது என்பது மற்றும் மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு மக்கள் எளிதாக அணுகக் கூடிய அளவிலும், அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுப்பதும் அரசின் கடமை என்பதும் ஆகும்.

ஈ) மக்களாட்சியின் தலையாய பணியே

1. சட்டத்தின் முன் அனைவரும் சமம்,
2. அனைவருக்கும் சமமான சட்ட பாதுகாப்பு
3. பேச்சுரிமை
4. மத சுதந்திரம்
5. அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கவும் அவற்றை சமுதாயத்தில் ஏற்பாடு செய்யவுமான உரிமை போன்றவைகளும் மற்றும் மனிதனின் அடிப்படை உரிமைகளை காப்பதுமேயாகும்.

உ) மக்களாட்சியில் மட்டுமே சுதந்திரமான மற்றும் நேர்மையான அனைத்து குடிமக்களும் பங்கேற்கும் வகையில் தேர்தல் நடைபெறும்.

ஊ) மக்களாட்சியானது, அரசாங்கங்கள் சட்டத்தின் ஆட்சிபடி செயல்படுவதை உறுதிசெய்கிறது. மேலும் அனைத்து குடிமக்களும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுவதையும், அவர்களது உரிமைகள் அரசமைப்பு சட்டங்களினால் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்கிறது.

எ) மக்களாட்சி என்பது பல்வேறு அரசியல் முறைகளைக் கொண்ட ஒன்றாகும். மக்களாட்சி முறையானது ஒவ்வொரு நாட்டின் அரசியல், சமூக மற்றும் பண்பாட்டு வாழ்வினைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

ஏ) அரசியல் அமைப்பில் குடிமக்களின் பங்கேற்பை மக்களாட்சி உறுதி செய்கிறது மேலும் அவர்களின் உரிமைகளையும், மற்றும் சுதந்திரங்களையும் பாதுகாக்கிறது.

ஐ) அரசியல் சார்ந்த அமைப்புகளில் குடிமக்கள் பங்கேற்பதையும் அவர்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் மக்களாட்சி உறுதிசெய்கிறது. உயர்ந்த விழுமியங்களான சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு மற்றும் ஒருமித்த கருத்துக்கள் ஆகியவை மக்களாட்சி நிலைபெற்ற சமுதாயங்களில் காணப்படுகின்றன.

ஒ) நம் தேசத்தந்தை மகாத்மா காந்தியின் வார்த்தைகளில் கூறினால்,''சகிப்பின்மையே கூட ஒரு வகையான வன்முறைதான், உண்மையான மக்களாட்சி மலர இதுவே மிகப்பெரிய தடையாகும்''.

ஓ) மக்களாட்சி முறை அரசாங்கத்தில் அதிகார மற்றும் குடிமை பொறுப்புகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடமே உள்ளது.

- மக்களாட்சி முறை என்பது மக்களால் நடத்தப்படும் ஆட்சி என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. நேரடி மக்களாட்சி அல்லது பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை மூலமாக சட்டமியற்றுதல், கொள்கை உருவாக்கம் மற்றும் அரசின் செயல்பாடுகளில் அனைத்து குடிமக்களின் பங்கேற்பை இது உறுதிசெய்கிறது. மேலும் அனைத்து குடிமக்களும் தங்களது கருத்தை சுதந்திரமாக வெளிபடுத்தும் வாய்ப்பையும் இது வழங்குகிறது. மக்களாட்சி என்பது பொதுவாக மக்களால் நடத்தப்படும் அரசாங்கம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கத்தில் இறையாண்மையானது ஒட்டுமொத்த மக்களிடம் உள்ளது. இது மக்களால் நேரடியாகவோ அல்லது இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் மூலமாகவோ செயல்படுத்தப்படுகிறது.

**மக்களாட்சியின் வகைகள்**
**(Types of Democracy)**

மக்களாட்சி அதன் செயல்பாட்டையும் நோக்கங்களையும் பொறுத்து பல்வேறு விதங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அ) அரசியல் மக்களாட்சி (Political Democracy)
ஆ) சமூக மக்களாட்சி (Social Democracy)
இ) தொழில்சார் மக்களாட்சி (Industrial Democracy)
ஈ) பொருளாதார மக்களாட்சி (Economic Democracy)
உ) முற்றதிகார மக்களாட்சி (Totalitarian Democracy)
ஊ) தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி (Radical Democracy)
எ) பொது வாக்கெடுப்பு முறை மக்களாட்சி (Plebiscitary Democracy)

**அ) அரசியல் மக்களாட்சி**

- அரசியல் மக்களாட்சியில் அரசாங்கத்தில் குடிமக்கள் தங்களின் பங்கேற்பின் மூலமாக பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்கு பதில்சொல்ல கடமைப்பட்டவர் ஆவர். மக்களின் நேரடி ஈடுபாட்டின் மூலமோ அல்லது அவர்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இயற்றும் சட்டங்களின் மூலமோ மக்களாட்சி செயல்படுகிறது. இது மக்களின் துவக்கமுறை (Popular Initiative) என்று அறியப்படுகிறது. இதை போலவே ஒரு

சட்ட முன்வரைவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உருவாக்கும் போது அதற்கு மக்கள் தங்கள் வாக்கின் மூலமாக ஒப்புதல் அளிக்கின்றனர். இது பொது மக்கள் வாக்கெடுப்பு (Referendum) என்று அறியப்படுகிறது.

- இதில் இரண்டாவது வகை மக்களாட்சி முறை, பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை எனப்படும். இதில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை குறிப்பிட்ட சில காலத்திற்கு தேர்ந்தெடுக்கிறார்கள். இப்பிரதிநிதிகள் மக்களின் சார்பாக கொள்கைகளை தீர்மானிக்கிறார்கள். இந்த பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையே உலகின் பிரதான மக்களாட்சி முறையாக பல்வேறு நாடுகளில் உள்ளது. அதே சமயத்தில் நேரடி மக்களாட்சி முறையானது கூட்டாட்சி குடியரசான சுவிட்சர்லாந்து நாட்டில் மட்டுமே நடைமுறையில் உள்ளது.

**ஆ) சமூக மக்களாட்சி**

- சமூக, பொருளாதார கொள்கைகளுக்கு ஊக்கம் அளிக்கும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கருத்தகளின் ஒன்றிணைந்த சேர்க்கையாக இது உள்ளது. இம் மக்களாட்சி முறையானது பொருளாதாரத்தையும், மக்களின் பங்களிப்பையும் வலுப்படுத்தி சமூக நீதியையும், சமூக சமத்துவத்தையும் மேம்படுத்துகிறது. சமூக மக்களாட்சியானது பாலினம், பண்பாடு, நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் விழுமியங்களில் சமூக சமத்துவத்தை நிலை நாட்டுவதை அடிப்படைக் கொள்கையாக கொண்டுள்ளது. புகழ்பெற்ற பிரெஞ்சு சிந்தனையாளர் அலெக்ஸ் டி டக்வில்லி (Alexis De′ Tocquville) அமெரிக்காவின் அரசியல் முறையை சிறந்த மக்களாட்சி முறைகளுள் ஒன்று என்று புகழ்கிறார். இது பிரபுத்துவ முறைக்கு எதிரானது என்கிறார். அனைவருக்குமான சுதந்திரம் மற்றும் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளே மனித உரிமைகளுடனான வாழ்விற்கு அடிப்படை என்று சமூக மக்களாட்சி வலியுறுத்துகிறது. மேலும் ஒவ்வொரு தனிமனிதனையும் அவர்களின் உழைப்பின் மூலம் வாழ்வில் வெற்றிபெற அவனை இயன்றவனாக்குகிறது.

- சமத்துவவளர்ச்சியே சுதந்திரத்திற்கும், சுதந்திரத்தின் வளர்ச்சியே ஒரு நாட்டின் சிறந்த மக்களாட்சிக்கும் அடிப்படை என்று சமூக மக்களாட்சி வலியுறுத்தகிறது.

**இ) தொழில்சார் மக்களாட்சி**

- தொழில்சார் மக்களாட்சி என்பது தொழிற்சாலைகளில் மக்களாட்சி கொள்கைகளின் அடிப்படையில் தொழிலாளர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் மேம்படுத்தி அவர்களைப் பொறுப்புடன் செயலாற்ற வைக்கும் முறையாக இம் மக்களாட்சி முறை உள்ளது.

- முடிவுகள் எடுப்பதில் நிர்வாகத்துடன் தொழிலாளர்கள் இணைந்து செயல்படுவதை இம்மக்களாட்சி முறை ஊக்குவிக்கிறது. மேலும் இது தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்துக்கிடையே ஒரு இணக்கமான சூழல் ஏற்படவும், அதன் மூலம் பணியாளர்களின் திறன் மேம்படவும் உதவுகிறது. இதனால் நிர்வாகத்தின் நோக்கமே தொழிலாளர்களின் நோக்கமாக மாறி அதிக உற்பத்திக்கு வழிவகுக்கிறது.

- இந்த மக்களாட்சி முறையானது சமுதாய மற்றும் தனிமனித தேவைகளை நிறைவேற்றி, அவற்றின் ஒட்டுமொத்த நலனிற்கு பயன் விளைவிப்பதாக உள்ளது. மேலும் இது தொழிலாளர்களைத் தொழிலின் பங்குதாரர்களாக ஆக்குவதன் மூலம்

அவர்களை ஆற்றலுறச் செய்கிறது. நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களின் இணைந்த செயல்பாட்டின் மூலமாகவே சமுதாய வளர்ச்சி மற்றும் நாட்டின் வளர்ச்சி சாத்தியப்படும், உற்பத்தி பெருகும் என்று இம்மக்களாட்சி முறை வலியுறுத்துகிறது. சிறந்த உற்பத்தி மற்றும் இணக்கமான சுழலின் வழியே இந்த மக்களாட்சி முறை நாட்டின் மேம்பாடு. வளர்ச்சி மற்றும் அமைதிக்கு வழிவகுக்கிறது.

**ஈ) பொருளாதார மக்களாட்சி**

- பொருளாதார மக்களாட்சி என்பது பல்வேறு வகுப்புகளுக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்தவும் அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி, சமூக மற்றும் பொருளாதார வேறுபாடுகளையும் ஏழை – பணக்காரன் என்ற இடைவெளியை குறைப்பதுடன் பொருளாதார உற்பத்தி பெருக மக்களாட்சி முறையில் தகுந்த சூழலை ஏற்படுத்துவதும் பொருளாதார மக்களாட்சியின் அடிப்படைப் பண்புகளாகும்.

- ''பணியிடத்தில் மக்களாட்சி'' மற்றும் ''தொழிலாளர்கள் நிறுவனத்தை தங்களது உடைமையாகக் கருதுதல்'' போன்றவை சமத்துவத்தை ஊக்குவித்து வளத்தை மக்களாட்சி முறையில் மேம்படுத்த உதவுகிறது. பொருளாதார சுதந்திரத்தின் மூலமாக, மனிதனின் கண்ணியமான வாழ்விற்கு சமுதாயத்தையும் மற்றும் பொருளாதாரத்தையும் சரியான விகிதத்தில் இணைப்பதே சாத்தியமான வழியாகும் என்று பொருளாதார மக்களாட்சி கூறுகிறது. பொருளாதார உரிமைகளும், சமூக சமத்துவமும் இந்த மக்களாட்சி முறையின் அடிப்படையாக உள்ளது.

**உ) முற்றதிகார மக்களாட்சி**

- முற்றதிகார மக்களாட்சி முறையில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த பின் வேறு எந்த முடிவையும் எடுக்கும் அதிகாரமற்றவர்கள் ஆவர். மக்கள் பிரதிநிதிகளே நாட்டின் அனைத்து முடிவுகளையும் மக்கள் பிரதிநிதிகள் தேர்தல்கள் மூலம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் அவர்கள் வாக்களித்த மக்களை விட மேம்பட்டவர்களாகவே உள்ளனர். மக்களாட்சி முறையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இருந்தாலும் சர்வாதிகார முறையிலேயே ஆட்சி புரிகின்றனர். மக்களின் விருப்பங்களை விட ஆட்சியாளர்களின் கொள்கைகளும் ஆளும் கட்சியின் சித்தாந்தமுமே உயர்வாக இந்த மக்களாட்சி முறையில் காணப்படுகிறது. மக்களின் நலன் என்ற பெயரில் மக்களின் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்து விடுவதும், பேச்சு மற்றும் எழுத்து சுதந்திரத்தை பறித்து ஒட்டுமொத்த மக்களையும் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் இதன் பண்புகள் ஆகும். முற்றதிகார மக்களாட்சி என்பது நாட்டின் பொருளாதாரத்தின் மேல் முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. மேலும் அதன் மூலம் இது மக்களையும் கட்டுப்படுத்துகிறது.

**ஊ) தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி**
**(Radical Democracy)**

- இந்த மக்களாட்சி முறையை புகழ்பெற்ற இந்திய அரசியல் சிந்தனையாளர் எம்.என்.ராய் அவர்கள் சிறந்த மக்களாட்சி முறை என்று பரிந்துரைத்தார். இந்த முறையில் மட்டுமே உண்மையான மக்களாட்சி மலரும் என்று நம்பினார். இந்த மக்களாட்சி முறையில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள் மக்களுக்கு நேரடியாக பதிலளிக்க கடமைப்பட்டவர்கள் ஆவர். தீவிர முன்னேற்றவாத மக்களாட்சியானது மனித நேயத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமியற்றுபவர்களை விட மக்களே அரசியல் அதிகாரத்தின் உண்மையான தலைவர்கள் என்று இது கூறுகிறது.

- மக்களிடமே அதிகாரம் உள்ளது. மக்களே நாட்டின் மன்னர்கள் ஆவர். ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசு ஆகும். அவைகளின் ஒன்றிணைப்பில் அரசும் மற்றும் அரசாங்கமும் உருவாகின்றன. இந்த கிராம குடியரசுகளே மத்திய மாநில அரசுகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

- மக்கள் பங்களிப்புடன் கூடிய உண்மையான மக்களாட்சியை தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி நிலைநாட்டுகிறது இதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அதிகாரிகளும் மக்களுக்கு பொறுப்புடையவர்களாக உள்ளனர். தேவைப்பட்டால் அரசாங்கத்தை மாற்றும் அதிகாரம் மக்களிடம் உள்ளது.

### ஏ) பொது வாக்கெடுப்பு முறை மக்களாட்சி
### (Plebiscitary Democracy)

- பொது வாக்கெடுப்பு முறை மக்களாட்சியில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை அல்லது கட்சியை தேர்ந்தெடுத்தல், பொதுவான பிரச்சனைகளில் முடிவெடுத்தல், புதிய அரசியல் அமைப்பைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் மாகாண சுய நிர்ணயம் போன்றவற்றில் பொது வாக்கெடுப்பின் மூலம் தங்களது நிலைப்பாட்டினை தெரிவிக்கின்றனர்.

- மக்கள் விரும்பினால் ஒரு சட்ட முன்வரைவை கொண்டுவருவதற்கும், கொள்கை உருவாக்குவதற்கும் உரிமை இந்த மக்களாட்சி முறையில் உள்ளது. ஒரு குறிப்பிட்ட அளவு ஆதாரவை மக்கள் தாங்கள் கையெழுத்திட்ட மனு மூலம் தெரிவித்து தாங்கள் விரும்பிய மாற்றங்களை செய்ய அரசுக்கு பரிந்துரைக்கலாம்.

- மேலும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி சரியாக செயல்படாதபோது அல்லது மக்கள் விருப்பத்திற்கு மாறாக செயல்படும் போது, மக்கள் ஒரு குறிப்பிட்ட அளவு கையெழுத்துக்களை அவருக்கு எதிராக சேகரித்து அதன் மூலம் அவரை திரும்ப அழைக்கலாம்.

### G.D. கோவார்டு கோல்
### (G.D. Howard Cole)

மக்களாட்சி என்பது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தளத்தில் வாழும் ஓர் நிதர்சனம் / மெய்மையாகும்

### தாமஸ் ஜெ.ஃபரசன்
### (Thomas Jefferson)

1.மக்களாட்சி என்பது மக்களால் நடத்தப்படும் அரசாங்கம், குறிப்பாக பெரும்பான்மை மக்களால் ஆகும்.

2. மக்களாட்சி அரசாங்கத்தில் மேலான அதிகாரம் மக்களிடம் இருக்கும். இந்த அதிகாரத்தை மக்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க பயன்படுத்துவர். இங்கு தேர்தல்கள் சீரான இடைவெளியிலும் மற்றும் சுதந்திரமாகவும் நடைபெறும்.

## மக்களாட்சி கோட்பாடுகள் (Theories of Democracy)

- ஒரு கருத்தாக்கத்தின் மேம்பாட்டினை வரலாற்று ரீதியாகவும் மற்றும் பல்வேறு நிலைகளில் அதன் வளர்ச்சியையும் விளக்குவதே கோட்பாடு எனப்படும். ஒரு கோட்பாடானது அதன் முக்கியத்துவம் மற்றும் உபயோகித்தலுக்காக பல்வேறு நாடுகளில் பல்வேறு பண்பாடுகளில் சோதித்தறியப்படுகிறது. ஒன்றுக்கொன்று தர்க்கரீதியாக பிணைக்கப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் கோட்பாடானது அமைத்துள்ளது. மக்களாட்சி என்ற ஒரு கோட்பாடு பல்வேறு வரலாற்று காலகட்டங்களில் பல்வேறு நாகரீகங்களில் பல்வேறுவிதமாக உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது.

- மக்காட்சியின் தொன்மை கோட்பாடானது பண்டைய கிரேக்கத்தில் தோன்றியது ஆகும். கிரேக்கத்தின் புகழ்பெற்ற நகர அரசுகள் யாவும் நேரடியான தேர்தல், பொதுக்கொள்கை மீதான விவாதங்கள், மற்றும் பொதுமக்களே முடிவெடுக்கும் முறை போன்ற மக்களாட்சி விழுமியங்களைக் கொண்டிருந்தன. கிரேக்கப் பண்பாடு, நாகரிகம் மற்றும் மொழியானது ஐரோப்பா, வட மற்றும் தென் அமெரிக்கா நாடுகளில் மெல்ல பரவத் தொடங்கிய போது இந்த மக்களாட்சியும் ஒரு ஆட்சி முறையாக அங்கெல்லாம் பரவியது.

- மக்களாட்சி கோட்பாடுகள் அதன் நோக்கம் மற்றும் விளைவுகளை பொறுத்து பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

## மக்களாட்சியின் தொன்மைக் கோட்பாடு (Classical Democracy)

- பண்டைய கிரேக்கத்தில் நேரடியான மக்களாட்சி முறையாக தொன்மை மக்களாட்சி முறை உருவானது. இந்த மக்களாட்சி முறையானது ஏதென்ஸ் நகரத்தில் தான் முதன் முதலில் கிமு 800 மற்றும் கிமு 500 க்கும்.

- கிரேக்க மக்களாட்சி முறையானது மெல்ல பிரதிநிதித்துவ மக்களாட்சியாக வளர தொடங்கியவுடன் அதன் முக்கியத்தவமும் அதன் தற்காலத்தைய பொருத்தமும் அதிகரித்தன. பின்பு பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை அறிவொளி காலகட்டங்களில் ஒரு பிரதான ஆட்சி முறையாக பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பரவத்தொடங்கியது. அமெரிக்க புரட்சி (1775 - 1783) மற்றும் பிரெஞ்சு புரட்சி (1789 - 1799) காலங்களில் மக்களாட்சியானது அனைத்து தரப்பு மக்களின் பெரும் கோரிக்கையாக உருவெடுத்தது.

- தற்காலத்தில் மக்களாட்சி என்பது பல்வேறு மக்களாலும், பண்பாடு மற்றும் நாடு, மொழி ஆகியவற்றைக் கடந்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஆட்சி முறையாக மாறிவிட்டது. ஒவ்வொரு நாட்டிலும் அவற்றின் பண்பாடு, மரபுகள் மற்றும் விழுமியங்கள் அந்நாட்டின் மக்களாட்சி முறையில் எதிரொலிக்கின்றன. அவை மக்களாட்சி முறையை செழுமைப்படுத்தியுள்ளன.

- இடையே உருவானது. ஏதென்ஸ் நகரின் நேரடி மக்களாட்சி முறையில் நகர அரசின் (City State) குடிமக்கள் அனைவரும் சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் ஆவர். அவர்கள் சட்டமியற்றுதலிலும், முடிவுகள் எடுப்பதிலும் நேரடியாக பங்கேற்றனர். குடியுரிமை பெற்ற குடிமக்கள் குறைவான எண்ணிக்கையில் இருந்ததால், அவர்கள் நகரின்

பிரதான இடத்தில் கூடுவதற்கும், கூடி விவாதிப்பதற்கும் எளிதாக இருந்தது. அனைத்து குடிமக்களும் தங்களது கருத்தகளை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், விவாதிக்கவும், மற்றும் வாக்களிக்கவும் முழு உரிமை இருந்தது. இதுவே தொன்மை மக்காட்சி என அழைக்கப்படுகிறது.

- மக்கள் தொகை மெல்ல அதிகரிக்க தொடங்கியவுடன் நேரடியாக கூடுவதும் விவாதிப்பதும் கடினமானது. எனவே மக்கள் பிரதிநிதிக்ள மூலம் அரசாங்கத்தை நடத்தும் முறை உருவானது. இதில் சட்டமன்றம், மக்கள் நீதிமன்றம், நீர்வாக சபை என மக்களாட்சியின் மூன்று தூண்களும் பின்பு உருவாகின. தொன்மை மக்களாட்சி வெற்றிகரமாக இயங்க இரண்டு நிபந்தனைகள் உள்ளன.

அ) குடிமக்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தல் வேண்டும். அப்போது தான் அவர்கள் விவாதங்களில் பங்கு பெறவும் முக்கிய பிரச்சனைகளில் வாக்களிக்கவும் இயலும்.

ஆ) அனைத்து குடிமக்களையும் அரசியலில் ஈடுபடவைக்கும் அளவிற்கு தொன்மை மக்களாட்சியின் பொருளாதாரம் இருத்தல் வேண்டும்.

**தொன்மை மக்களாட்சியின் விதிகளாக கீழ்க்கண்டவைகள் உள்ளன.**

அ) அரசியலின் முதன்மை கருத்தியல்களாக மக்களிடையே சமத்துவம், சுதந்திரம், சட்டம் மற்றும் நீதிக்குரிய மதிப்பு ஆகியவை இருத்தல்.

- ஆ) அனைவருக்கும் பொதுவான மற்றும் அனைவரையும் சமமாக நடத்தும் நீதி அமைப்பு சமுகத்தின் எல்லா தளங்களிலும் இருத்தல், எளிதானதாக மற்றும் அனைவருக்குமான சுதந்திர அரசியல் வாழ்க்கை முறையும் இருப்பதாகும்.

- தொன்மை மக்களாட்சியின் சிறப்பியல்பே அரசின் அனைத்து நிலைகளிலும் மக்களின் பங்களிப்பு இருப்பதே ஆகும். மேலும் உரிமைகள் மற்றும் சலுகைகளை தொன்மை மக்களாட்சியானது அனைத்து குடிமக்களுக்கும் சமமாக வழங்குகிறது.

**பாதுகாக்கும் மக்களாட்சி (Protective Democracy)**

- தொன்மை மக்களாட்சி மெல்ல வளர்ந்து பின்பு பாதுகாக்கும் மக்களாட்சியாக மாறியது. உரிமைகளைப் பாதுகாக்கும் மக்களாட்சி முழற அரசாக இது இருப்பதால் இந்த மக்களாட்சி முறையானது ‘பாதுகாக்கும் மக்களாட்சி’ என்றழைக்கப்படுகிறது. இந்த முறை மூலம் தனிமனிதரகள் தங்களது உரிமையையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துக்கொள்கிறார்கள். பதினேழு மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய இந்த பாதுகாக்கும் மக்களாட்சி, உரிமைகளை அடிப்படையாக கொண்டது. இது நாட்டு மக்களின் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைக் காப்பதற்கான வழிமுறைகளை கொண்டுள்ளது. பிரிட்டனின் புகழ்பெற்ற அரசியல் சிந்தனையாளரான ஜான் லாக் (1631 - 1704) இந்த மக்களாட்சி முறையை பரிந்துரைப்பவர்களின் முதன்மையானவர் ஆவார். இயற்கை உரிமைகளான வாழ்வதற்கான உரிமை, சுதந்திர உரிமை மற்றும் சொத்துரிமை எந்த அளவுக்கு ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கிறதோ அந்த அளவிற்கு தான் அவர்களின் சுதந்திரமும், வாக்குரிமையும் இருக்கும் என்று லாக் கூறுகிறார்.

- ஜெரமி பெந்தம் (1748 - 1832), ஜேம்ஸ் மில் (1773 - 1836) மற்றும் ஜான் பயன்பாட்டுவாத சிந்தனையாளர்கள் பாதுகாக்கும் மக்களாட்சி முறையை ஆதரிக்கின்றனர். மக்களாட்சியின் அடிப்படை அம்சங்களான தனிமனித சுதந்திரம் மற்றும் உரிமைகளை பாதுகாத்தலே பயன்பாட்டு வாதத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். உரிமைகளை பாதுகாத்தலே மக்களாட்சியைப் பாதுகாத்தல் ஆகும்.

- ஜெரமி பெந்தம், ஜேம்ஸ் மில் மற்றும் ஜான் ஸ்டுவாரட் மில் போன்றோர் மக்களாட்சி மட்டுமே ஒரு மனிதனின் அனைத்து உரிமைகளையும் உறுதியளித்து அவனை பாதுகாப்பதுடன் முன்னேற்றும் என்கிறார்கள். உரிமைகளை அடிப்படையாக கொண்ட பாதுகாக்கும் மக்களாட்சியானது தாராளவாத மக்களாட்சியின் ஓர் அம்சமாகும் என்று இம்மூவரும் கூறுகின்றனர்.

**பாதுகாக்கும் மக்களாட்சியின் அடிப்படை அம்சங்கள்**

- பாதுகாக்கும் மக்களாட்சியானது மக்கள் இறையாண்மையில் நம்பிக்கை கொண்டுள்ளது.
- மக்கள் இறையாண்மை மற்றும் பிரதிநிதித்துவ மக்களாட்சி இரண்டுமே சட்டப்பூர்வமானவை ஆகும்.
- குடிமக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளைக் காப்பதே ஓர் அரசின் அடிப்படைக் கடமையாகும்.
- அதிகாரத்துவம் மக்களுக்குப் பொறுப்புடையதாக உள்ளது. இதை நிறுவ அவ்வப்போது தேர்தல்கள் நடைபெறும்.
- நீதி, நிர்வாகம் மற்றும் சட்டமன்ற அதிகாரங்களை அதிகாரப் பிரிவினை செய்தல் மூலமே உரிமைகள், சுதந்திரம் போன்றவற்றைக் காப்பதும், சலுகைகளை அனைவருக்கும் சமமாக அளிப்பதும் சாத்தியமாகும்.
- உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட பாதுகாக்கும் மக்களாட்சி அரசமைப்புவாதத்தைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. அரசமைப்பு வாதத்தில் ஆள்பவர் மற்றும் ஆளப்படுவோர் அனைவரும் அரசமைப்பு வகுத்த விதிகளுக்கும், கொள்கைகளுக்கும் கட்டுப்பட்டவர்கள் ஆவர். அரசமைப்பு மட்டுமே அதிகாரத்தின் ஊற்றாகக் கருதப்படும். இதுவே உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் உத்திரவாதமளிக்கிறது. அரசமைப்பில் தனிமனித உரிமைகள், சங்கங்களின் உரிமைகள், உரிமை மீறல்கள், சுதந்திரத்தின் மீதான அத்துமீறல்கள் என அனைத்தையும் கையாள்வதற்கு சட்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் நிர்வாக அமைப்புகளில் பாதுகாக்கும் மக்களாட்சியை நிலைநாட்டுகிறது. இது அரசுக்கும் குடிமை சமூகத்துக்கும் இடையே உள்ள வேறுபாட்டை தெளிவாக காட்டுகிறது.

**மக்களாட்சியின் மார்க்சிய கோட்பாடு**

- மார்க்சிய கோட்பாடானது மக்களாட்சியை சமூகத்தில் உள்ள வர்க்க அமைப்பின் பின்னணியில் காண்கிறது. இந்த வர்க்க பிரிவினையானது தொழிற்புரட்சி காலத்தில் தோன்றியதாகும். சமூகம் இரு வர்க்கங்களாக பிரிந்திருந்தது. அவை முதலாளிகள் அல்லது உரிமையாளர்கள் வர்க்கம் என்றும் தொழிலாளிகள் அல்லது பாட்டாளிகள் வர்க்கம் என்றும் அழைக்கப்பட்டன. மார்க்சின் மக்களாட்சிக் கோட்பாடானது எப்போதுமே முதலாளித்துவத்தின் மேலாதிக்கத்திற்கு சவால் விடும் வகையிலும், பாட்டாளி வர்க்கம் சுரண்டப்படுவதற்கு எதிரான வகையிலும் தனது அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. மார்க்சின் கோட்பாடு தேர்தல் தொடர்பான

உரிமைகளை வலியுறுத்தவில்லை. மாறாக பொருளாதார உரிமைகளையே வலியுறுத்தி சமதர்ம மக்களாட்சி உருவாக வேண்டும் என்கிறது.

- மார்க்சிய மக்களாட்சி, முதலாளித்துவத்தின் வீழ்ச்சியையும் அதன் பின் புரட்சியின் மூலம் சமூக மாற்றத்திற்கும் அறைகூவல் விடுக்கிறது. சமதர்ம சித்தாந்தத்தின் மூலமே அரசியல் அதிகாரம் சாத்தியம் என்றும் இது நாட்டில் வளத்தையும், உற்பத்தி மீதான உரிமையையும் சரிசமமாக மக்களுக்கு பிரித்தளிப்பதன் அடிப்படையில் மட்டுமே நிகழும் என்றும் கூறுகிறது. வர்க்க வேறுபாடுகள, சிறப்பு சலுகைகள் போன்றவற்றை நீக்குவதன் மூலமே சுதந்திரம், சமூக நிலை மற்றும் மக்களாட்சி போன்றவை சாத்தியப்படும் என்று மார்க்சிய மக்களாட்சிவாதிகள் வாதிடுகின்றனர்.

- சமதர்ம சிந்தனையாளர்கள் அனைவருக்குமான கல்வி மூலம் மக்கள் தங்களை தாங்களே ஆள கற்றுக்கொள்வர் என்கின்றனர். மார்க்சின் கோட்பாடு தாராளவாத மக்களாட்சியைப் போலியானது என்று விமர்சிக்கின்றது. அது ஆளும் வர்க்கத்துக்கு ஆதரவாக இருப்பதாக கூறுகிறது. பொருளாதார ஏற்ற தாழ்வே வர்க்க பிரிவினைக்கு அடிப்படை என்றும் உற்பத்தி மற்றும் அதன விநியோகம் மீதான உரிமையே வர்க்க பிரிவினையை ஏற்படுத்துகிறது என்றும் மார்க்சிய கோட்பாடு கூறுகிறது.

- ஐரோப்பாவில் உள்ள மார்க்சிய மக்களாட்சிவாதிகள் தேர்தல் மூலமான மக்களாட்சியின் வலிமையான ஆட்சியை ஆதரிக்கின்றனர். அதுவே சமதர்ம சமுதாயத்தை அடைய அமைதியான மற்றும் சட்டபூர்வ வழியாகும். கீழ்கண்ட மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்களாட்சியில் சமதர்மம் மலர முடியும் என்கின்றனர்.

அ) மார்க்சிய மக்களாட்சிவாதிகள் அரசை மக்களுக்கு எதிராக குற்றமிழைக்கின்ற ஒரு நிறுவனமாக பார்க்கின்றனர். நாட்டின் இராணுவத்துக்கு பதிலாக குடிமக்கள் அடங்கிய குடிமக்களின் படை ஏற்படுத்தப்படுதல்.

ஆ) அரசை நடத்துவோர் தேர்ந்தெடுக்கப்படுதல் மற்றும் அவர்கள் செயல்படாத நிலையில் அவர்களைத் திரும்ப அழைத்தல்.

இ) அரசியல் சார்புடைய காவல்துறை முழுவதுமாக நீக்கப்படல்.
ஈ) முடியாட்சியை அகற்றுதல்.

| மக்களாட்சியே சமதர்மத்திற்கான பாதை ஆகும். |
|---|
| **கார்ல் மார்க்ஸ் (Karl Marx)**<br><br>மக்களாட்சியே சமதர்மத்திற்கான பாதை ஆகும்.<br><br>**ஆப்ரகாம் லிங்கன் (Abraham Lincoln)**<br>மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காகவே மக்களாலான அரசாங்க முறை ஆகும்.<br><br>**மகாத்மா காந்தி (Mahatma Gandhi)**<br>எளியோருக்கும் வலியோருக்கும் சமவாய்ப்பு வழங்குதல் மக்களாட்சியில் மட்டுமே நடைபெறும் என்பதே என் கருத்து. இது வன்முறையற்ற வழியில் மட்டுமே சாத்தியப்பட வேண்டும். |

## மக்களாட்சியின் உயர்ந்தோர் குழாம் கோட்பாடு:
## (Elitist Theory)

- மக்களாட்சியில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் உயர் அடுக்கில் உள்ளோரின் பங்கு தவிர்க்க முடியாதது. பல நூற்றாண்டுகளாக உயர் அடுக்கில் இருப்போர் முக்கிய வளங்களை தங்கள் கட்டுக்குள் வைத்துள்ளனர். ஒரு ஆட்சியின் முக்கிய முடிவுகளை எடுக்கின்றனர். தொழில் சார்ந்த அல்லது விவசாயம் சார்ந்த சமூகத்தில் சொத்துக்களின் மீதான உரிமையும் உற்பத்தி மீதான, அதிகாரமும் முக்கிய காரணிகள் ஆகும். இச்சமூகங்களில் உயர் அடுக்கில் உள்ளோர் நிலப்பிரபுக்களாகவும் தொழிற்சாலை முதலாளிகளாகவும் உள்ளனர். பின்னர் அவர்கள் ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றி ஆளத் தொடங்கிவிடுகின்றனர்.

- உயர்ந்தோர் குழாம் மக்களாட்சி கோட்பாட்டாளர்களுள் வில்பிரெடோ பரோட்டோ (1848-1923) கெய்டன் மோஸ்கா (1857-1941) மற்றும் ராபர்ட் மைக்கேல் (1876-1936) ஆகிய மூவரும் முக்கியமானவர்கள் ஆவர். பரேட்டோமக்களை ஆளும் உயர்ந்தோர் மற்றும் ஆளாத உயர்ந்தோர் என்று இரண்டாக பிரிக்கிறார். ஆளும் உயர்ந்தோரிடம் ஆட்சி அதிகாரம் உள்ளது. அவர்கள் தங்களது அதிகாரத்தை கல்வி, சமூக நிலை அரசியல் பதவி தொடர்புகள் மற்றும் செல்வம் மூலம் அடைகின்றனர். இவர்களுடைய பண்புகளை பரேட்டோ உளவியல் ரீதியாக இரண்டாக பிரிக்கிறார் (அ) நரிகள்: தந்திரத்தின் மூலம் மக்களை ஏமாற்றி ஆள்வர், சூழ்ச்சியின் மூலமாக மக்களின் ஆதரவை பெறுவர். (ஆ) சிங்கங்கள்: மேலாதிக்கம் பலவந்தப்படுத்துதல் மற்றும், வன்முறை மூலமாக ஆட்சி அதிகாரத்தை அடைவர்.

- மக்களாட்சி மற்றும் சமதர்மம் முதலிய சமத்துவ கருத்துக்களை விமர்சித்து அதற்கெதிராக உயர்குடியின வாதம் வளர்ந்தது. ஆனால் ராபர்ட் மைக்கேல் (Robert Michels) எனும் சிந்தனையாளர் மக்களாட்சி பற்றி மாறுபட்ட கருத்தினைக் கொண்டுள்ளார். மக்களாட்சி முறையில் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு நிர்வாகத்தில் மக்களின் அல்லது மக்கள் பிரதிநிதிகளின் பங்கு இருக்கும்படி இருந்தாலும் அவர்களுள் சிறு குழுவினரே அனைவரின் சார்பாகவும் முடிவுகள் எடுத்துக் கொள்கைகளை உருவாக்கி நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதை சிறுகுழு ஆட்சியின் இரும்புச்சட்டம் (Iron of Law of Oligarchy) என்று இவர் கூறுகிறார்.

- **ஜோசப் அலாய்ஸ் சம்பீட்டர்** (Joseph Alois Schumpeter) (1883-1950) என்பவர் உயர்குடி மக்களின் ஆட்சி என்ற கருத்தியலை முன் வைக்கிறார். மக்களாட்சி என்பது ஒரு சிறந்த அரசியல் முறையாகும் இதில் சுதந்திரமான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது. நிர்வாக மற்றும் சட்ட முடிவுகள் இந்த அதிகாரத்தின் மூலம் அரசின் அனைத்து தரப்பு மக்களுக்காகவும் அவர்களால் எடுக்கப்படுகிறது. இந்த உயர்ந்தோர் குழாம் கோட்பாடானது ஓரளவுக்கு மார்க்சிய மக்களாட்சி கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது. பொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பெரிய நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்துகிறது என்ற மார்க்சிய கோட்பாட்டுடன் ஒத்து போகின்ற அதே வேளையில் மக்களாட்சியின் மார்க்சின் அதிகாரவர்க்க கருத்துக்களை இது மறுதலிக்கிறது. உயர்ந்தோர் குழாம் கோட்பாடானது ஓரளவுக்கு மார்க்சிய மக்களாட்சி கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது. பொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பெரிய நிறுவனங்கள் ஆதிக்கத் செலுத்துகிறது என்ற மார்க்சிய கோட்பாட்டுடன் ஒத்து போகின்ற அதே வேளையில் மக்களாட்சியின் மார்க்சின் அதிகாரவர்க்க கருத்துக்களை இது

மறுதலிக்கிறது. உயர்ந்தோர் குழாம் கோட்பாடானது தனிமனிதர்கள் மற்றும் குழுக்களுடன் ஒன்றிணைந்து இயங்கி அவர்களின் கருத்து வேறுபாடுகளைக் களைந்து அவர்களின் நோக்கம் நிறைவேற வழிவகை செய்கிறது.

## மக்களாட்சியின் பன்மைவாத கோட்பாடு
## (Pluralist Theory of Democracy)

- பன்மைத்தன்மை என்பது அனைத்தையும் உள்வாங்குகிற, வேறுபட்டவைகளையும் உள்ளடக்கமாக கொண்ட ஒரு கருத்தாக்கம் ஆகும். இது சிறுபான்மையினரின் விருப்பங்கள் மற்றும் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிறது. எனவே இது தாராளவாத மக்களாட்சியின் அடிப்படைப் பண்புகளை கொண்டுள்ளதாக கூறலாம். இது அதிகாரமானது, அரசு மற்றும் குடிமைச்சமூகத்திடமிருந்து தள்ளி இருக்க வேண்டும் என்றும், பொருளாதாரம், அரசியல் முதலானவை அதிகாரத்திடமிருந்து பிரித்துவைக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. மக்களாட்சி நடைமுறைகளுக்காக சில அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. குறிப்பாக சட்டமன்றத்திற்கு இரு அவைகள், ஆட்சி அமைப்பிற்கு கூட்டாட்சி முறை என சிலவற்றை இந்த கோட்பாடு பரிந்துரைக்கிறது. பன்மைவாத மக்களாட்சியில் சமூகத்தின் பல்வேறு வகையான குழுக்களும் பங்கேற்று தங்கள் உரிமைகளை பாதுகாத்திட இயலும். இந்த முறையிலான மக்களாட்சியில் சமூகத்தின் பல்வேறு வகையான குழுக்களிடம் அதிகாரமானது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

- அனைத்துக் குழுக்களையும் சமநிலைக்கு ஆற்றலுறச்செய்து அவர்களுக்குள்ளே ஒரு ஆரோக்கியமான சமநிலை போட்டியை இடம்பெறச்செய்கிறது. இதன் மூலம் சமூகத்தின் அனைத்து பிரிவுகளும் பயன்பெறுகின்றன.

- மக்களாட்சியில் சீரான கால இடைவெளியில் தேர்தல்கள் நடைபெற வேண்டும். அதில் கட்சிகள், குழுக்கள் மற்றும் தனிமனிதர்களிடையே அரசியல் போட்டியை பன்மைவாத மக்களாட்சி முறை ஊக்குவிக்கிறது. பயன்பாட்டுவாத சிந்தனை முறையானது பன்மை மக்களாட்சியை தீவிரமாக ஆதரிக்கிறது. ஜேம்ஸ் மேடிசன், (James Madison) ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) மற்றும் டி டாக்வில் (Tocqueville) போன்ற பயன்பாட்டுவாத சிந்தனையாளர்கள் தேர்தல்களின் மூலமே மாறுபட்ட மற்றும் பல்வேறுவிதமான மக்களின் விருப்பங்கள் வெளிப்படும் என்கின்றனர். இது சமூகத்தில் சிறுபான்மையினருக்கு தங்கள் உரிமைகளையும் அதிகாரத்தில் தங்கள் உரிமைகளையும் அதிகாரத்தில் தங்கள் பங்கினையும் கேட்டுப்பெறும் சக்தியை அளிக்கிறது.

- பல்வேறு சிறுபான்மையினரும் இணைந்து பணியாற்றக்கூடிய, ஆளக்கூடிய குழுவாட்சி (Polyarchy) என்னும் ஒரு அரசியல் கட்டமைப்பை ஏற்படுத்துகிறது.

- ராபர்ட் டால் (Robort Dhal) எனும் அறிஞர் மக்களாட்சியின் சாராம்சமே குழுவாட்சி (Polyarchy) எனப்படும் பல்வேறு சிறுபான்மை சமூகத்தினரும் இணைந்து பணியாற்றும் அரசியல் அமைப்பில் தான் சிறப்பாக வெளிப்படும் என்கிறார். இந்த முறையில் அரசாங்கத்தின் அதிகாரம் மற்றும் அதிகார வரம்பில் அனைத்து மாறுபட்ட குழுக்களும் சுதந்திரமாக செயல்பட முடியும் என்கிறார். இந்த முறையில் அரசாங்கத்தின் அதிகாரம் மற்றும் அதிகார வரம்பில் அனைத்து மாறுபட்ட குழுக்களும் சுதந்திரமாக செயல்பட முடியும் என்கிறார். இந்த அமைப்பின் சிறப்பான செயல்பாட்டிற்கு முக்கிய நிபந்தனைகளாக சட்ட செயல்முறைகள்,

கொள்கைகள்,அரசியல் நடவடிக்கைகளுக்கான சட்டப்படியான ஒருமித்த வாய்ப்பு ஆகியன இருத்தல் வேண்டும்.

**ராபர்ட் டாலின்** கோட்பாட்டில் பின்பு ஒரு திருத்தம் செய்யப்பட்டது. அமெரிக்காவில் மக்களாட்சி செயல்படும் விதத்தை சிறப்பாக விவரிப்பதற்காக உருவக்குலைந்த குழுவாட்சி என்ற கோட்பாட்டினை முன்னிறுத்த அந்த திருத்தத்தை ராபர்ட் டால் செய்தார்

## மக்களாட்சியின் ஆழ்விவாதக் கோட்பாடு (Deliberative Theory of Democracy)

- மக்களாட்சியின் நோக்கமே ஆழ்ந்த பொது விவாதங்கள், பரப்புரைகள், மற்றும் வாத பிரதிவாதங்கள் வழியே பொதுமக்களின் நலன் காக்கப்படுவதாகும். இதையே இம்மக்களாட்சி முறை வலியுறுத்துகிறது. பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் விவாதங்கள் ஆகியவை கிராம அளவில் வெகுகாலமாகவே உறுதியாக உள்ளன. அரசாங்கத்தின் செயல்பாட்டை கீழ்மட்டத்தில் பஞ்சாயத்து அமைப்புகள் வலுப்படுத்துகின்றன. ஜேம்ஸ் மில்லரின் கூற்றுப்படி ஆழ் விவாத கோட்பாடானது பங்கேற்பாளர்களின் பொதுவிவாதம், அதன் மூலம் அனைவரின் கருத்தையும் உள்ளடக்கிய முடிவுகள் என்ற அம்சங்களை கொண்டுள்ளது. இதன் சிறப்பம்சமேமக்கள் பொறுமையாக மாற்றுக்கருத்தை கேட்பதும், அதன் அடிப்படையில் தங்களது கருத்தில் மாற்றங்கள் கொண்டுவருவதும் தான். பொதுவிருப்பமும், பொது கருத்துமே ஆழ் விவாத கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட மக்களாட்சியின் முக்கிய பண்புகளாகும். செல்வாக்கின் அடிப்படையில் இல்லாமல் கருத்துக்களை விவாதித்து ஏற்பதன் மூலமே முடிவுகள் எட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. உரிமைகளின் அடிப்படையிலான அணுகுமுறையே வளர்ச்சிக்கு வித்திடும். குழுக்களிடையே விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் கருத்துமோதல் வரும்போது அவற்றை மக்களாட்சி நெறி முறையில் ஏற்கத்தக்க வகையில் தீர்வைக் காண இம்முறை ஏதுவாகிறது.

- இந்த மக்களாட்சி முறையானது மாறக்கூடிய தன்மையை அடிப்படையாக கொண்டது. இது ஆழ்ந்து ஆராய்தலையும், விவாதத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. இது வாக்களித்தலை மட்டுமே அடிப்படையாக கொண்டுள்ள பண்டைய மக்களாட்சி முறையிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. இதன் ஆழமான விவாதங்களே சட்டமியற்றும் முறைக்கு சரியான அடிப்படையாகும்.

- இந்த மக்களாட்சி முறையானது பிரதிநிதித்துவ மக்களாட்சி மற்றும் நேரடியான மக்களாட்சியுடன் இணக்கமாக உள்ளது. நீதி கோட்பாடுகளின் புகழ் பெற்ற சிந்தனையாளர்களான ரால்ஸ் (Rawls) மற்றும் ஹேபர்மாஸ் (Habermas) இருவரும் அரசியல் தேர்வானது முறையாக சட்டப்படியாக இருத்தல் வேண்டும் என்றும், ஒரு தெளிவான இலக்கை நோக்கிய சுதந்திரமான விவாதம் சமமான மற்றும் பகுத்தறியும் நபர்களிடையே நடந்து அதன் அடிப்படையில் அரசியல் தேர்வுகள் இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

- அதிகாரத்தை பயன்படுத்த பொறுப்பாக்கப்பட்டுள்ள இறையாண்மையுள்ள அமைப்பில் அனைவருக்கும் முழுமையான மற்றும் சமமான உறுப்பினர் பதவி அளிக்கப்படும். அந்த அமைப்பு ஒட்டுமொத்த உறுப்பினர்களின் பொது விருப்பத்தின் அடிப்படையில் செயல்படும். இந்த முறையில் ஆழ் விவாதக் கோட்பாட்டை அடிப்படையாக கொண்ட மக்களாட்சியானது செயல்படுகிறது.

**நேபாள நாட்டில் ஏப்ரல் புரட்சியும், மக்களாட்சியும்**

- ஏப்ரல் மாதம் 2006-ஆம் ஆண்டு ஏழு கட்சி கூட்டணி என்ற மக்களாட்சியை ஆதரிக்கின்ற தலைவர்கள் நேபாள தலைநகரான காட்மாண்டுவை சுற்றி ஏழு இடங்களில் எதிர்ப்பு கூட்டங்களை நடத்த மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். அதை ஏற்று கூடிய லட்சக்கணக்கான நேபாள நாட்டு மக்கள் எதேச்சாதிகார முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வரவும், முழுமையான மக்களாட்சியை கொண்டுவரவும் நேபாள நாட்டுமுடியரசுடன் போராடத் தொடங்கினர். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இருந்த இந்த போராட்டம் அரசர் கியானேந்திராவை (King Gyanendra) பதவி விலக வைத்து மக்களாட்சி வழி வகுத்தது.

**நவீன மற்றும் சமகால மக்களாட்சி**
**(Modern and Contemporary Democracy)**

- நவீன மற்றும் சமகால மக்களாட்சியானது 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கு ஐரோப்பாவில் தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றியது. அதனுடன் கூடவே தொழிலாளர்கள் எழுச்சியும் சமூக மாற்றமும் தோன்றின.

**நவீன மற்றும் சமகால மக்களாட்சியின் சிறப்பம்சங்கள்**

  - எழுதப்பட்ட அரசமைப்பு. மக்களின் அன்றாட வாழ்வின் தேவைக்கேற்றார்போல் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் இதை வைத்திருத்தல் வேண்டும்.
  - ஒவ்வொரு தனி மனிதனுக்கும், சமூக குழுக்களுக்கும், குறிப்பாக எளியோர் மற்றும் மத சிறுபான்மையினோருக்கான அரசமைப்பு உத்திரவாதமளிக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள்.
  - அரசின் பல்வேறு அமைப்புக்களுக்கிடையேயான அதிகார பிரிவினை.
  - அரசாங்கம் (நிர்வாகம் அதிகாரம்) நாடாளுமன்றம் (சட்ட அதிகாரம்) மற்றும் நீதி அமைப்புகள் (நீதி அதிகாரம்).
  - கருத்து, பேச்சு, எழுத்து மற்றும் பத்திரிகை சுதந்திரம்.
  - மத சுதந்திரம்.
  - அனைவருக்கும் சமமான மற்றும் பொதுவான வாக்குரிமை (ஒருவருக்கு ஒரு ஓட்டு) மற்றும் வயது வந்தோர் வாக்குரிமை.

- மக்களாட்சியின் முக்கிய அம்சமாக ''பெரும்பான்மையினரின் ஆட்சி'' கூறப்பட்ட போதிலும் அந்த நடைமுறையானது நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தல் மூலமே சாத்தியப்படுகிறது. மேலும் உரிமைகளுக்கு தரப்படும் முக்கியத்துவம் அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் முதலான சுதந்திரங்கள் பிரதிநிதித்துவ மக்களாட்சியில் இன்றியமையாதவை ஆகும். மேலும் மக்கள் அரசியல் பரப்புரைகள், தேர்தல் அறிக்கைகள் மூலம் வேட்பாளர் யார் என்று அறிகிறார்கள், அதனடிப்படையில் தங்கள் வாக்குகளை முடிவு செய்கிறார்கள்.

- மக்களாட்சி முறையானது ஒரு கட்சி ஆட்சி முறையில் இருந்து பல கட்சி ஆட்சி முறை வரை பல்வேறு நாடுகளில் செயல்பட்டுவருகிறது. பல நாடுகளில் அனைவருக்கும் சமமான வாக்குரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் மக்களாட்சி செயல்படுகிறது. ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி என்ற

சொற்பதத்தை மக்கள் தாராளவாத மக்களாட்சியாகவே உணர்கிறார்கள். இதன் சிறப்பம்சமே அரசியல் பன்முகத்தன்மை, சட்டத்தின் முன் அனைவரும் சமம், குடிமைச் சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆகியவைகளாகும். பேச்சு சுதந்திரமே நவீன மக்களாட்சியின் அடிப்படைத் தேவையாகும்.

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து அரசாங்கங்களுமே மக்களின் பேச்சு சுதந்திரத்தின் மூலம் பொறுப்புடையதாக்கப்படுகின்றன. தற்போது எளிதாக கிடைக்கின்ற தகவல்களால் மக்களும், அரசாங்கமும் சிறந்த முடிவுகளை எடுக்க முடிகின்றது.

**மக்களாட்சி கீழ்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது**

- அதிகாரப் போட்டி நிறைந்த அரசியல் அமைப்பு
- பொதுவாழ்வில் பங்கேற்கும் உரிமை
- சட்டத்தின் ஆட்சி

**தற்கால மக்களாட்சியின் வகைகள்:**

**பிரதிநிதித்துவ மக்களாட்சி**
**(Representative Democracy)**

- பிரதிநிதித்துவ மக்களாட்சியில் தகுதிவாய்ந்த அனைத்து குடிமக்களும் வாக்களித்தலின் மூலம் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வொரு தொகுதிக்கும் பிரதிநிதிகளை அந்தந்த தொகுதி மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வொரு தொகுதியும் மக்கள் தொகையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கும். சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனித்தனியே சித்தாந்தங்கள், கொள்கைகள் மற்றும் திட்டங்களை கொண்டுள்ளன. அவற்றை சீர்தூக்கி ஆராய்ந்து மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர். வெற்றி வாய்ப்பு, மக்களிடம் உள்ள செல்வாக்கு போன்றவற்றின் அடிப்படையில் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்கின்றன.

- தேர்தலின் போது கட்சிகள் தங்கள் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை தேர்தல் அறிக்கையாக வெளியிடுகின்றன. இந்தியா போன்ற மிகப்பெரிய மக்களாட்சி நாட்டில், தேசிய மற்றும் பிராந்திய கட்சிகள் தங்கள் எதிர்காலத் திட்டங்கள், அதை அடையும் வழிகள் என அனைத்தையும் தேர்தல் அறிக்கையாக தயாரித்து அதன் மூலம் மக்களின் நம்பிக்கையை வெல்ல முற்படுகின்றன. எந்த ஒரு குடிமகனும், கட்சி சார்பின்றி தேர்தல்களில் போட்டியிட விரும்பினால் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கவும் அனுமதி உண்டு. பிரதிநிதித்துவ மக்களாட்சி அமைப்பில் அரசியல் கட்சிகளின் பங்கு முக்கியமானது. அரசியல் கட்சிகள் அவ்வப்போது நடத்தும் பொதுக்கூட்டங்கள், அரசின் கொள்கைகளை விமர்சித்தோ ஆதரித்தோ வெளியிடும் அறிக்கைகள், முதலியவற்றின் வழியே மக்களை விழிப்புணர்வடையச் செய்கின்றனர். எனவே இதன் மூலம் அரசியல் கட்சிகள் மக்கள் தங்கள் தேவையை அறியச்செய்கின்றன. மேலும் அதனுடன் முக்கிய பிரச்சனைகளில் ஒரு பொதுக்கருத்தையும் உருவாக்குகின்றன. மக்கள் பிரதிநிதிகள் அரசமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். இப்பிரதிநிதிகள் மக்கள் நலனுக்கான தங்களது பொறுப்பையும், கடமையையும் செய்வதற்கு அரசமைப்பால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை, தாராளவாத மக்களாட்சி முறையுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. தாராளவாத மக்களாட்சி முறையானது அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பாவில் தோன்றி பின்பு பல மூன்றாம் உலக நாடுகளில் பரவி தற்போது முன்னாள் சோவியத் ரஷ்ய நாடுகளிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் காலுன்றியுள்ளது. தாராளவாத மக்களாட்சி அரசானது அதிபர் முறை மக்களாட்சி அல்லது நாடாளுமன்ற முறை மக்களாட்சி என இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் சில வேறுபாடுகளும் உள்ளன. பிரதிநிதித்துவ மக்களாட்சியானது ஒன்றுக்கொன்று தொடர்புடைய எண்ணிலடங்கா கொள்கைகளால் பிரதிநிதித்துவ மக்களாட்சியானது ஒன்றுக்கொன்று தொடர்புடைய எண்ணிலடங்கா கொள்கைகளால் ஆனது.

**அவற்றுள் சில:**

- ஒரே சீரான இடைவெளியில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறும் தேர்தல், வயதுவந்தோர் வாக்குரிமை மற்றும் வாக்களித்தலின் ரகசியம் காக்கப்படுதல் அடிப்படையில் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் எனும் ஒரு சுயேச்சையான அமைப்பு.
- மக்கள் தேர்ந்தெடுப்பதற்கு வசதியாக பல கட்சிகள் போட்டியிடும் தேர்தல்.
- சுதந்திரமான நீதிமன்றத்தின் மேற்பார்வையில் இயங்கும் தேர்தல் சட்டங்கள்.
- பேச்சு மற்றும் கூட்டங்கள் கூடுவதற்கான சுதந்திரம்.
- தேர்தலில் ஒரு வேட்பாளராக பங்கேற்கும் சுதந்திரம்.

**மக்களாட்சியை அளவிடுதல் மற்றும் மதிப்பிடுதல்**

- மக்களாட்சி என்பது மக்கள் தங்களது ஒப்புதலையோ அல்லது ஒப்புதலின்மையையோ காட்டுவதற்கான ஒரு சரியான முறையான வழியாகும். இந்திய அரசமைப்பின் வரைவுக் குழு தலைவர் முனைவர் பி.ஆர்.அம்பேத்கர் இதை வலியுறுத்திக் கூறுகிறார். ‘‘அரசியலில் நமக்கு சமத்துவம் இருக்கும். ஆனால் சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் சமத்துவமற்ற தன்மையே நிலவும்’’ என்றார். அரசியலில் ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒவ்வொரு வாக்கிற்கும் ஒரே மதிப்பு என்ற விதியை தன்மையே நிலவும்’’ என்றார். அரசியலில் ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒவ்வொரு வாக்கிற்கும் ஒரே மதிப்பு என்ற விதியை அங்கீகரிக்கிறோம். ஆனால் நம் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பின் காரணமாக நம்முடைய சமூக பொருளாதார வாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே மதிப்பு என்ற விதிமுறையை தொடர்ந்து மறுத்தே வருகிறோம். மக்களாட்சியை மதிப்பிடுதல் மற்றும் அளவிடுதல் என்பது அதன் தரம் மற்றும் அளவின் அடிப்படையில் நிகழ்கிறது. தர நிலையை பகுப்பாய்வு செய்வதன் மூலம் சிறப்பான மக்களாட்சி நடைமுறைக்கான மாற்றம் எவ்வாறு உள்ளது என்று அறிய முடிகிறது.

- மக்களாட்சியின் தர நிலையினை மக்கள் பங்கெடுக்கும் ஆர்ப்பாட்டங்கள், கண்டன கூட்டங்கள், பிரச்சாரங்கள், மக்கள் கருத்து சுதந்திரத்தினை பயன்படுத்தும் விதம் மற்றும் அரசமைப்பு மக்களுக்கு கொடுத்திருக்கும் உரிமைகள் இவற்றின் மூலம் அறியவாம். சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகள் சமூக மாற்றத்திற்கான குறிப்பாக சாதி, மத, பாலின மற்றும் பண்பாட்டு கண்ணோட்டங்களில் முன்னோக்கி செல்ல வேண்டியதை வலியுறுத்துகின்றன. வளர்ச்சிக்கான பொருளாதார முறையானது மாறிக்கொண்டேயிருக்கிறது. இதில் கொள்கைகள் வகுப்பதன் மூலம் ஏற்றத்தாழ்வுகளை களைவதற்காக மக்களாட்சி இம் மாறிவரும் பொருளாதார

முறையுடன் நேரடி தொடர்பில் உள்ளது. மனித வள மேம்பாட்டுக் குறியீடு மற்றும் தனி நபர் வருமானத்தின் மூலம் மக்களாட்சியானது மதிப்பிடப்படுகிறது. கீழ்கண்ட அடிப்படை காரணிகள் மக்களாட்சியை அளவிடவும் மதிப்பிடவும் உதவுகின்றன.

**1.இறையாண்மை:** ஒரு ஆட்சியானது எந்த அளவிற்கு மற்ற நாடுகளின் குறுக்கீடு இல்லாமல் தன் நாட்டின் உள் விவகாரங்கள் மற்றும் வெளியுறவு கொள்கைகளை கையாள முடிகிறதோ அதுவே அதன் இறையாண்மை எனப்படும்.

**2. ஆட்சி அதிகாரம்:** நாட்டின் எல்லைக்குள் எந்த அளவிற்கு மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் செல்லுபடியாகுமோ அந்த எல்லைகள் ஆட்சி அதிகாரத்துக்குட்பட்டவை எனப்படும்.

**3. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம்:** இரகசிய வாக்கெடுப்பு முறை தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கையில் ஆட்சி அதிகாரம் இருப்பதை இது குறிக்கிறது.

**4. வயது வந்தோர் வாக்குரிமை:** தேர்தல்களில் ஒரு குறிப்பிட்ட வயதை கடந்த அனைத்து குடிமக்களுக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்களிக்க கொடுக்கப்பட்டிருக்கும் உரிமை.

**5. மொத்த வாக்குப்பதிவு:** தேர்தல் நாளன்று வாக்களித்த மக்களின் வாக்கு சதவீதத்தை குறிக்கிறது.

**6. முறைப்படுத்தப்பட்ட தேர்தல்கள்:** தேர்தல் ஒரு சீரான இடைவெளியில் (5 ஆண்டுக்கு ஒரு முறை) குறிப்பிட்ட அட்டவணையில் அரசமைப்பு கூறியுள்ளபடி நடத்துதல்.

**7. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள்:** அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் வாக்கு எண்ணிக்கையை பார்வையிட நியாயமான வாய்ப்புகளை வழங்குதல். மேலும் வாக்காளர்கள் எந்த வித பயமும், பாரபட்சமுமின்றி தங்கள் வாக்கை பதிவு செய்தல்.

**8. ஊடகங்களை அணுகுதல் மற்றும் பரப்புரை:** அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கும் ஊடகங்கள் மற்றும் பொதுவெளியில் பரப்புரை செய்ய அவர்களின் வாக்கு விகிதத்திற்கு எற்றார் போல் வாய்ப்பு வழங்குதல்.

**9. சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்தல்:** அரசமைப்பில் கூறியுள்ளபடியும் நீதிமன்றங்களின் விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதலின் படியும் சட்டத்தை ஆட்சியாளர்கள் செயல்படுத்துதல்.

**10. சட்டமன்ற அதிகாரம்:** நாடாளுமன்ற அமைப்பின் மூலமாக சட்டமன்றமானது செயலாட்சித்துறை மீது ஏற்படுத்தும் கட்டுப்பாடு சட்டமன்ற அதிகாரம் எனப்படும்.

**11. சுதந்திரமான நீதித்துறை:** நீதித்துறையானது செயலாட்சி துறை மற்றும் எந்த ஒரு வெளிப்புற குறுக்கீடும் இல்லாமல் சுதந்திரமாக செயல்படுதலை இது குறிக்கிறது.

**12. எதிர்க் கட்சிகளின் பங்கு:** எதிர்க் கட்சிகள், ஆளும் கட்சியின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்தும், விமர்சித்தும் அது அரசமைப்பு வகுத்த பாதையை விட்டு விலகாமல ஆட்சி புரிய வைத்து நாடாளுமன்ற மக்களாட்சியைக் காப்பதை இது குறிக்கிறது.

**13. நீதிப் புனராய்வு:** சட்டமன்றம் இயற்றும் சட்டங்களையும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும், அரசமைப்பு விதிகளின் அடிப்படையில் சீராய்வு செய்யவும், அவை மற்ற அமைப்புகளால் எந்த அளவிற்கு மதிக்கப்படுகிறது என்பதை கண்காணிக்கவும் உள்ள நீதிமன்ற அதிகாரம்.

**14. கட்சி பலம்:** கட்சிகள் நிறுவனமயமாக்கப்பட்டு அவற்றின் அதிகாரம் மற்றும் பணிகள் பரவலாக்கப்பட்டு அவை அனைவருக்குமான கட்சிகளாக இருப்பதே அவற்றின் பலத்தை தீர்மானிக்கிறது.

**15. கட்சியின் சித்தாந்தம்:** அரசியல் கட்சிகள் நன்கு வரையறுக்கப்பட்ட நிலையான மற்றும் ஒத்திசைவான கட்சி சித்தாந்தங்களை வகுத்துள்ளன.

**16 கட்சி முறை அமைப்பு:** சட்டமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை.

**17. பத்திரிகை சுதந்திரம்:** பத்திரிகைகள் சுதந்திரமாகவும், பயமின்றியும் தங்களது பல்வேறு வகையான அரசியல் பல்வேறு வகையான அரசியல் கருத்துக்களையும், விமர்சனங்களையும் மக்களிடம் கொண்டு செல்ல எந்த அளவிற்கு முடிகிறதோ அதுவே பத்திரிகை சுதந்திரமாகும்.

**18. சுதந்திரமான குடிமைச்சமூகம்:** குடிமைச் சமூகமானது அரசுக்கு எதிரான அரசியல் தலைவர்களுக்கு எதிரான தங்களது கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை எந்த வித அச்சுறுத்தலுமின்றி வெளிப்படுத்தும் சூழல்.

**19. குடிமைச்சுதந்திரம்:** அரசமைப்பில் பேணப்பட்டுள்ள அடிப்படை மற்றும் மனித உரிமைகள் அனைத்து குடிமக்களுக்கும் வழங்கப்படுதல்.

**20. சொத்துரிமை:**அரசமைப்பில் பாதுகாப்பளிக்கப்பட்டிருக்கும் சொத்து உரிமைகள்.

**21. மத சுதந்திரம்:** மதங்களிடையே நல்லிணக்கத்தை பேணுவதற்கும் அரசியல் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் மதச்சார்பின்மையை நிலைநாட்டவும் மத சுதந்திரமானது அரசமைப்பால் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ளது.

**22. வளங்கள் மீதான அனைவருக்குமான வாய்ப்பு:** வளங்கள் சரிசமமாக அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு பொருளாதார சமநிலையை வருவாய். கல்வி மற்றும் சுகாதாரத்தின் மூலம் ஏற்படுத்துதல். இது அரசியலில் அனைவரும் பங்கேற்பதற்கான ஒரு சிறந்த யுத்தியாகும்.

**23. இயற்கைச் செல்வங்கள் மற்றும் பொதுச்சொத்துக்கள் மீதான அனைவருக்குமான வாய்ப்பு:** இயற்கை செல்வங்கள் மற்றும் பொதுச் சொத்துக்கள் மீது அனைவருக்கும் சரிசமமான வாய்ப்பு மற்றும் அதை எளிதில் பயன்படுத்தும் வழிகள் இருப்பின் அது அனைவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் மற்றும் சமூக விடுதலைக்கு வித்திடும்.

**24. பாலின சமத்துவம்:** சட்டமன்றம், சமூக அமைப்புகள் மற்றும் அரசின் பல்வேறு பதவிகளில் பெண்ணுக்கும், ஆணுக்கும் இணையான பிரதிநிதித்துவம் மற்றும் அவர்களை கண்ணியமாக நடத்துதல்.

- **25. ஏழை எளியோரின் சமூக பொருளாதார நிலை மேம்பட அரசியல் சமத்தவம்:** சாதி, இன, பழங்குடியினர் மற்றும் மத சிறுபான்மையினருக்கு அரசமைப்பில் சமஉரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் அவர்கள் தங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை எட்டவும் அரசின் நிர்வான அதிகாரத்தில் பங்கேற்கவும் ஏதுவாகிறது. மேலும் சட்டமன்றத்தில் அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை பெறவும், ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்பதையும் அவர்கள் தங்களின் அரசியல் பங்கேற்பின் மூலம் பெறுகின்றனர்.

**இந்திய மக்களாட்சியின் சாதனைகள்:**

- இந்தியாவையும், இந்திய அரசமைப்பையும் உருவாக்கிய நம் முன்னோர்கள் ஒரு வலிமையான மக்களாட்சிக்கு அடித்தளத்தை இட்டுச் சென்றுள்ளனர். இது நம் இந்தியாவை சிறந்த ஒரு நாடாகத் திகழச்செய்கின்றது. நமது மக்களாட்சியின் அடித்தளமானது நம் அரசமைப்பின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார மாற்றத்திற்கு வலு சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. நம் அரசமைப்பின் முகவுரையானது அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள், வழிகாட்டு நெறிமுறைகள், நாடாளுமன்ற மக்களாட்சி முறை மற்றும் சட்ட திருத்த நடைமுறைகள், நீதிப் புனராய்வு மற்றும் அரசமைப்பின் அடிப்படை அம்சக்கோட்பாடுகள் என அரசு செயல்பட வேண்டிய விதத்தை காட்டும் ஒரு வழிகாட்டியாக உள்ளது.

**அரசியல் தளம் (Political Front):**

- சுதந்திர இந்தியாவின் முதல் பொது தேர்தல் 1951ம் ஆண்டு நடந்த போது, களத்தில் 54 அரசியல் கட்சிகள் இருந்தன. சமீபத்தில் நடந்து முடிந்த 2014ம் ஆண்டு பொது தேர்தலின் போது அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 264 ஆக கூடி இருந்தது. இதிலிருந்து அரசியல் நடைமுறை விரிவாகவும் ஆழமாகவும் மாறிவருவது புலனாகிறது.

- சுதந்திர இந்தியாவில் 1951ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத்தேர்தலில் 17.30 கோடி இந்திய மக்கள் வாக்களிக்கும் உரிமை பெற்று இருந்தனர். இவர்களில் 44.87 சதவிகிதத்தினரே வாக்களித்தனர். நாட்டின் 16வது பொதுத்தேர்தல் 2014 ஆம் ஆண்டு நடந்த போது வாக்காளர்களின் எண்ணிக்கை 81.40 கோடியாக அதிகரித்திருந்தது. இதில் 66.4 சதவிகிதத்தினர் வாக்களித்தனர். இவர்களில் 67.9 சதவீதத்தினர் ஆண்கள் மற்றும் 65.6 சதவீத்தினர் பெண்கள். இந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையும் 8251 ஆக அதிகரித்திருந்தது.

- 2004ஆம் ஆண்டு முதல் வாக்குகள், மின்னணு வாக்குபதிவு இயந்திரத்தின் மூலமாக பதிவு செய்யப்படுகின்றன. இந்த இயந்திரங்கள், இந்தியாவிலேயே தயார் செய்யப்படுகின்றன. இவற்றின் துல்லியம், மற்றும் ரகசியம் காக்கப்படுதல் ஆகியவை வெற்றிகரமாக சோதித்தறியப்பட்டுள்ளது.

- நம் தேர்தல் முறையானது அதிக வாக்குகளை எண்ணிக்கை அடிப்படையில் பெற்றவர் வெற்றி பெற்றவர் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பிரதிநிதி பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறார். சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் தேர்தல் நடைபெறும். இதன் மூலம் வாக்களர்கள் தங்களின் நாடாளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கின்றனர்.

- நம் நாட்டில் 1989-ஆம் ஆண்டிலிருந்து 18 வயது பூர்த்தியான அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது மக்களாட்சி எனும் மகுடத்தில் மேலும் ஒரு சிறகாகும்.

- உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடான இந்தியா, தனது அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்து, மாநிலங்களின் பல்வேறு கோரிக்கைகளையும் ஏற்று கூட்டாட்சி தத்துவத்துடன் ஒரு வெற்றிகரமான அரசாக திகழ்கிறது.

- இந்திய அரசமைப்பின் 73-வது மற்றும் 74 வது சட்டத் திருத்தம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கும், பெண்களுக்கும் உள்ளாட்சி அரசாங்க அமைப்புகளான கிராம ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் உறுப்பினர்களாகவும், தலைவர்களாகவும் போட்டியிட இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியது.

- இந்திய மக்களாட்சி முறையானது இளமைத் துடிப்போடு உள்ள உத்வேகமான ஒரு மக்களாட்சியாகும். இந்திய ராணுவம் கூட அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரத்தின் மீது எவ்வித செல்வாக்கையும் செலுத்த முடியாது. அதேசமயத்தில் ராணுவ அமைப்புக்கு முழு அதிகாரமும், உரிய மரியாதையும் அளிக்கப்படுகிறது.

**சமூகதளம் (Social Front):**

- மக்களாட்சி முறையானது அரசியல் அதிகாரத்தில் மிக முக்கிய மாற்றத்தைக் கொண்டுவந்தது. மக்களாட்சி முறையினால், அரசியல் அதிகாரமானது மத்திய மற்றும் உயர் வர்க்கம் மற்றும் நகர சமூகத்திடமிருந்து மெல்ல விலகி அது தற்போது சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களிடம் உள்ளது. சுதந்திரத்திற்குப்பின் அரசமைப்பின் மூலமாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு போலவே பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் அரசு பதவிகளிலும், சட்டமன்றங்களிலும் இடஒதுகீட்டை பெற்றுள்ளனர்.

- இந்தியாவின் பத்திரிகை சுதந்திரம் மற்றும் சுதந்திரமான நீதித்துறையானது இந்திய சமூகம் தொடர்ந்து சட்டத்தின் ஆட்சியின் படி செயல்பட வழிவகை செய்கிறது.

- இந்தியர்களின் சராசரி ஆயுட்காலமானது 36 வருடங்கள் என்று 1951 ஆம் ஆண்டில் இருந்தது, இது 2014-ஆம் ஆண்டு கிட்டதட்ட இரட்டிப்பாகி 66 வருடங்கள் என்று உயர்ந்துள்ளது. இதற்கு காரணமாக மருத்துவத்துறையில் இந்தியாவின் வளர்ச்சி, அனைவரையும் சென்றடைய கூடிய வகையில் அரசின் சுகாதார திட்டங்கள், தொற்றுநோய்கள் மற்றுும் கொள்ளைநோய்கள் ஒழிப்புக்கான மருந்துகள் மற்றும் அதற்கான திட்டமிடல் போன்றவற்றை கூறலாம்.

- இதை போலவே சின்னம்மை மற்றும் இளம்பிள்ளை வாதம் ஆகிய நோய்களும் முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டன. கல்வித்துறையிலும் மாபெரும் வளர்ச்சியை இந்தியா கண்டுள்ளது. 1950 – 51 ல் வெறும் 27 பல்கலைக்கழகங்களும் 578 கல்லூரிகளும் இருந்த இந்தியாவில், 2014-ஆம் ஆண்டு கணக்கின்படி சுமார் 712 பல்கலைக்கழகங்களும் 36,671 கல்லூரிகளுமாக பெருகி வளர்ந்து உள்ளன. இதை

போலவே, எழுத்தறிவு விகிதமும் 1951-ல் 18.3 சதவிகிதத்திலிருந்து 2011-ல் 73 சதவிகிதமாக கிட்டத்தட்ட நான்கு மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது.

## பொருளாதார தளம் : (Economic Front):

- இது பாதுகாப்பு விவாகரங்கள், அரசமைப்பு சட்டப்படியான மக்களாட்சி ஆளுகை, சமூகம் மற்றும் நாட்டின் பொருளாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

- இந்தியா தன் பொருளாதாரம், ராணுவம் மற்றும் அணு ஆற்றலின் காரணமாக ஆசியாவில் ஒரு வட்டார சக்தியாகவும், தெற்கு ஆசியாவில் ஒரு வல்லரசாகவும் உருவாகியுள்ளது.

- இதன்படி 1991 ஆம் ஆண்டு வரை நாட்டின் வளர்ச்சிக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமிடல், வேலை வாய்ப்பிற்கு பெரிய அளவில் பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்துதல், இளைஞர்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப கல்வி என்றிருந்த நிலையில் 1991 ஆம் ஆண்டு தாராளமயம் மற்றும் சந்தை சார்ந்த மாதிரியிலான உலகமயமாதல் என்ற பொருளாதாரத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. இது கட்டமைப்பு, சீரமைப்பு செயல்திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு பிறகு நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அயல் நாட்டவரின் பங்களிப்பு அதிகரித்தது. இதன் மூலம் புதிய தொழில்முறை நடுத்தர வர்க்கம் என்ற பிரிவு உண்டாக்கியது. கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்தில் தொழில் நுட்ப புதுமைகள் மிகப்பெரும் வளர்ச்சியை கொண்டு வந்தன. மேலும் நகரங்களிலும், கிராமங்களிலும் உள்கட்டமைப்பு மற்றும் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இதன் மூலம் மின்னனு தொழில்நுட்ப இந்தியா என்ற வளர்ந்த நிலை நோக்கி இந்தியா நகரத் தொடங்கியுள்ளது. வங்கித் துறை சீர்திருத்தங்களும் பெரிய சமூக மாற்றங்களை சாத்தியப்படுத்தியுள்ளன.

- இந்தியாவின் ஒட்டு மொத்த தேசிய வருவாயானது 1950 – 51 ல் ரூபாய் 2.92 லட்சம் கோடியாக இருந்து 2014 – 2015-ல் கிட்டத்தட்ட 35 மடங்கு வளர்ந்து ரூபாய் 105.28 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அதை போலவே, தனி நபர் வருமானமும் 1950 – 51 ல் ரூபாய் 274 ஆக இருந்து, 2014 – 2015 ஆம் ஆண்டு ரூபாய் 88,533 ஆக உயர்ந்துள்ளது.

- இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 1950 – 51 ஆம் ஆண்டுகளில் 50.8 கோடி டன்களாக இருந்தது. அது 2014 – 15ஆம் ஆண்டுகளில் 264.77 கோடி டன்களாக கிட்டத்தட்ட ஐந்து மடங்கு உயர்ந்துள்ளது. உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்துள்ளது. இந்திய விவசாயத் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியே இதன் முக்கிய காரணமாகும்.

### இந்திய மக்களாட்சியின் சவால்கள்

- இந்திய மக்களாட்சியில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மற்றும் ஒட்டு மொத்த சமூகத்திற்குமான சவால்கள் உள்ளன. குறிப்பாக அனைவருக்குமான கல்வித் திட்டம் சரியாக செயலாக்கப்படாததால் இன்று இந்தியாவின் மிக முக்கிய பிரச்சினையாக எழுத்தறிவின்மை உள்ளது. வறுமை, மதவாதம், மத

அடிப்படைவாதம், பாலினப் பாகுபாடு, பெண்களுக்கெதிரான வன்முறை, அரசியல் வன்முறை, சீர்திருத்தங்கள் செய்யப்படாமலே இயங்கி கொண்டிருக்கும் நீதித்துறை மற்றும் நிர்வாகத் துறை, குடிமைச் சமூகத்தின் குறைவான பங்களிப்பு, அரசியலில் அதிகரித்து வரும் குற்றவாளிகளின் எண்ணிக்கை, அதிகரித்து வரும் பொருளாதார குற்றங்கள், வளர்ச்சித் திட்டங்களில் மாநிலங்களுக்கிடையே பாகுபாடு காட்டும் மத்திய அரசு மற்றும் அனைவரையும் சரிசமமாக சென்றடையாத வளர்ச்சி போன்ற பிரச்சனைகள் இந்தியாவில் தலையாய பிரச்சனைகளாக உள்ளன. மேலும் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்பு, பணிபுரிவதற்கான சுதந்திரம் மற்றும் கட்டுப்பாடுகளும் - சம நிலைகளும் (Checks and Balances) போன்ற இந்திய மக்களாட்சியின் அடிப்படை கட்டமைப்புகள் தான் தற்கால மற்றும் எதிர்கால சவால்களாக இந்தியாவிற்கு உள்ளன.

**அமைப்பெதிர் வாதம் (Anarchy):**

- தற்போது நடைமுறையில் இருக்கும் சமூக மற்றும் அரசியல் அமைப்புக்கு எதிரான சிந்தனை.

**பிரபுக்கள் ஆட்சி (Aristocracy):**

- சலுகைகளை கொண்டுள்ள சில முன்னுரிமை வர்க்கத்தினரால் ஆளப்படுகின்ற அல்லது ஒப்படைக்கப்பட்டுள்ள ஆட்சி.

**அதிகாரத்துவம் (Authority):**

- அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, நன்கறிந்த நடைமுறையின் வாயிலாக பெறப்படும் அதிகாரத்தை செயல்படுத்தும் உரிமை மற்றும் ஒரு குறிப்பிட்ட பதவியின் செல்வாக்கு.

**முதலாளித்துவம் (Capitalism):**

- இது ஒரு சித்தாந்தம். மேலும் உற்பத்தி, பொருள்கள் விநியோகம், லாபத்தை மட்டுமே அடிப்படையாக கொண்ட வணிகம் இவற்றை அடிப்படையாக கொண்ட ஒரு பொருளாதார முறையாகும். இதில் தனிநபர் உடைமை முக்கிய அங்கம் வகிக்கிறது.

**சாதியவாதம் (Cateism):**

- ஓர படிநிலை அலகில் கட்டமைக்கப்பட்டுள்ள சமூக அமைப்பு. இதன் ஒவ்வொரு படியிலும் சமத்துவமின்மை நிலவுகிறது. இது இந்திய சமூகத்தின் அனைத்து இடங்களிலுமே ஒரு மனிதனின் நிலையை தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

**குடிமைச் சமூகம் (Civil Society):**

- குடிமைச் சமூகம் என்பது சுயேச்சையான குழுக்கள் மற்றும் சங்கங்கள் தங்களுக்கென்று ஒரு தனியான தளத்தில் ஆட்சி அதிகாரத்திலிருந்து விலகியே இருக்கும் ஒன்றாகும்.

### பொது மக்கள் - ராணுவ உறவு (Civil – Military Relationship):

- குடிமைச் சமூகத்திற்கும் மற்றும் அதைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ராணுவ அமைப்பிற்கும் இடையே உள்ள உறவை படிப்பதற்கும் மற்றும் புரிந்து கொள்ளவும் உருவாகியுள்ள ஒரு பாடம்.

### வகுப்புவாதம் (Communalism):

- இது ஒரு அரசியல் சித்தாந்தம். பல்வேறு மதம், இனம் மற்றும் மொழியினருக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள், பதற்றங்கள் மற்றும் அதன் விளைவாக தோன்றும் வன்முறைகளுடன் தொடர்புடையது.

### ஊழல் (Corruption):

- ஊழல் என்பது சட்டத்துக்கு புறம்பான வழியில் ஒருவருக்கு ஆதரவாக செயல்படுவது. மேலும் தனி நபரின் இலாபத்திற்காக பொறுப்புகளை சரிவர செயல்படாமல் இருத்தல்.

### ஆழ்விவாத மக்களாட்சி (Deliberative Democracy):

- ஆழ்ந்த விவாதங்களின் தேவையை வலியுறுத்துகிற ஒரு மக்களாட்சி முறை. இது விவாதங்களின் வழியே பொது விருப்பத்தை வரையறுக்கிறது.

### சர்வாதிகாரம் (Dictatorship):

- தனி ஒருவரால் ஆளப்படுகின்ற ஆட்சி தன்னிச்சையான மற்றும் தடைகளற்ற முறையில் அதிகாரத்தை பயன்படுத்துதல்.

### நீதி(Justice):

- ஒவ்வொரு மனிதனுக்கும் அவரவர்க்கேற்றவாறு தண்டனைகள் மற்றும் வெகுமதிகளை நியாயமான பகிர்மானத்தின் அடிப்படையில் வழங்குதல்.

### உயர்ந்தோர்குழாம் (Elite):

- அதிகாரம், செல்வம் மற்றும் கௌரவம் போன்றவற்றை கொண்டிருக்கும் ஒரு சிறுபான்மையினர் குழு.

### பாலின பாகுபாடு (Gender Discrimination):

- ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே அவர்களின் வேறுபட்ட சமூக நிலை மற்றும் சமூகத்தில் அவர்களின் பங்கின் அடிப்படையில் பாகுபாடு காட்டுதல்.

## கடைநிலை மக்களாட்சி (Grass-root Democracy):

- கடைநிலை மக்களாட்சி என்பது கீழ்நிலையில் மக்களின் சமூக பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்கான முடிவுகளை மக்களின் பங்களிப்போடு சுய அரசாங்கத்தின் வழியே அவர்கள் மூலமே எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

## நீதித்துறை (Judiciary):

- இது அரசாங்கத்தின் ஒரு பிரிவாகும். இது சட்டத்தின் அடிப்படையில் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் சட்டத்தின் பொருளை விளக்குவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அமைப்பாகும்.

## முடியாட்சி (Monarchy):

- இந்த அரசாட்சி முறையில் அரசின் தலைமைப் பொறுப்பானது பரம்பரையாகவோ அல்லது அரசு குடும்பத்தினருள் ஒருவரிடமோ இருக்கும். முடியாட்சி முழுமையானது அல்லது அரசமைப்பின்படி ஆகும்.

## பஞ்சாயத்து ராஜ் (Panchayati Raj):

- மக்களாட்சி அமைப்பின் கடைநிலையில் அரசமைப்பின்படி செயல்படும் ஓர் அமைப்பு. இதில் மக்கள் தங்களது அரசாங்கத்தை ஏற்படுத்துவர். இதில் மக்கள் பங்கேற்று ஒரு சுய உள்ளாட்சி அரசாங்கத்தை உருவாக்கி அதன் மூலம் தங்கள் அரசியல் நடைமுறைகளையும், தங்கள் தேவைகளுக்கான முடிவுகளையும் எடுக்கின்றனர்.

## அரசியல் வன்முறை (Political Violence):

- அரசியல் அமைப்பில் உள்ளோர் தங்களின் அரசியல் குறிக்கோளை அடைவதற்காக வன் செயல்களில் ஈடுபடுகின்றனர். மேலும், மக்களில் ஒரு சிறு பிரிவினர், அரசு தங்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது என்று நம்புவதால் வன்முறையை அரசியல் ஆதாயத்திற்காக கையிலெடுக்கின்றனர்.

## குழுவாட்சி(Polyarchy):

- ஒரு குழுவால் ஆளப்படுகின்ற ஆட்சி. இசைவினால் உருவான ஒரு எல்லைக்குள் விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ இருக்கின்ற நபர்கள் தங்களுக்குள் எந்த மோதலுமின்றியும் ஒருவர் மேல் ஒருவர் மேலாதிக்கம் செய்யாமலும் ஆட்சி செய்தல்.

## மத அடிப்படைவாதம் (Religious Fundamentalism):

- ஒரு இயக்கம் அல்லது ஒரு சிந்தனை முறை. இது மதத்தின் அடிப்படையில் சில கொள்கைகள் அவசியம் என்றும் அதனை மாற்றமுடியாத உண்மை என்றும் கூறுகிறது.

### குடியரசு (Republic):

- இது அரசியல் அதிகாரமானது மக்களின் கருத்திசைவிலிருந்து உருவாகிறது என்ற கொள்கையின் படி உள்ளது. முடியாட்சி மற்றும் பரம்பரை விதிகளை இது புறந்தள்ளுகிறது.

### உரிமை (Right):

- உரிமை எனும் கருத்தாக்கமானது தனி மனித அதிகாரம், தனித்துவம், சுதந்திரம் மற்றும் மனிதர்களுக்கிடையேயான சமத்துவம் போன்ற கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறது. மேலும் தகுந்த காரணங்கள் இருந்தாலன்றி மனிதர்களுக்கிடையில் பாகுபாடு காட்டுதல் கூடாது என்கிறது.

### விடுதலை(Freedom):

1. **ஒரு மனிதன் தான் விரும்பும் வகையில் சிந்திக்கவும், செயல்படவுமான** திறன், விடுதலை என்பது குறுக்கிடாமை அல்லது தனி மனித சுய வளர்ச்சி.
2. கொடுங்கோல் மன்னனின் எதேச்சாதிகாரத்திலிருந்து விடுதலை பெற்று குடிமக்கள் அரசின் செயல்பாடுகளில் பங்கேற்று தங்களை தாங்களே நிர்வகித்து கொள்ளும் மக்களின் உரிமை.

சுதந்திரம் (Liberty): ஒரு குறிப்பிட்ட வகையில் செயல்பட அதிகார அமைப்பு அளிக்கும் உரிமை.

### சமத்துவம் (Equality):

- ஒரே மாதிரியாக இல்லாமல் அனைவருக்கும் சரியான முறையில் பகிர்ந்தளித்தல். சமத்துவம் என்பது உரிமைகள், வாய்ப்புகள் மற்றும் விளைவுகள் அனைத்திலும் இருத்தல் வேண்டும்.

### சகோதரத்துவம் (Fraternity):

- சகோதரத்துவம் என்பது மனிதர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் அனுதாபம், மற்றும் தோழமை கொண்டு செயல்படுதல்.

### இறையாண்மை (Sovereignty):

- அறுதியான மற்றும் இறுதியான அதிகாரம். இறையாண்மை என்பது அரசிடம் உள்ள உச்ச சட்ட அதிகாரம் அல்லது எதிர்க்க முடியாத அரசியல் அதிகாரம்.

### சமதர்மம் (Socialism):

- சமதர்மம் என்பது ஒரு சித்தாந்தம். இதன்படி சொத்தானது தனி நபரின் உடைமையாக இல்லாமல் பொதுச் சொத்தாக இருக்கும். ஒரு பொருளாதார அமைப்பில் சமத்துவத்தை நிலை நாட்டுவதற்காக இது உருவானது. இதில்

அரசுக்கும், சமூகத்துக்குமான உறவை தீர்மானிப்பது அரசியலின் படிநிலைகள் ஆகும்.

**மதச் சார்பின்மை (Secularism):**

- அரசானது எந்த ஒரு மதத்திற்கும் ஆதரவளிக்காமல் இருத்தல். அனைத்து மதங்களையும் சமமாக நடத்துதல்.

**அரசு (The state):**

நிலம், மக்கள், அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய இந்நான்கையும் ஒருங்கே கொண்ட ஒரு அரசியல் நிறுவனம்.

# $11^{TH}$அரசியல் அறிவியல்
# Vol – II

## அலகு 10
## பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை

**அறிமுகம்:**

இந்த அலகு உலகின் பல்வேறு நாடுகளில் பின்பற்றப்படும் கட்சி முறைகளின் பொருள் மற்றும் அதன் பரிணாம வளர்ச்சியினை பற்றி கவனம் செலுத்துகிறது. நவீன மக்களாட்சியில் கட்சி முறைகளின் தோற்றத்தை ஆராய்வதுடன், அரசியல் கட்சிகளின் இயல்பு, பண்புகள், வகைகள் மற்றும் குறிப்பாக மக்களாட்சியில் அதன் செயல்பாடுகளை விளக்க முயல்கிறது. இந்த பொது மின்னணியில் இருந்து குறிப்பாக தமிழ்நாட்டை கவனத்தில் கொண்டு, தேசிய மற்றும் மாநில அளவில் உள்ள கட்சி முறைகளின் பரிணாம வளர்ச்சியை பற்றி கவனம் செலுத்துகிறது. மேலும் இந்த அலகில் பொதுக்கருத்தின் பொருள், அதன் முக்கியத்துவம் மற்றும் ஓர் மக்களாட்சியின் திறன்மிக்க செயல்பாட்டில் அதன் பங்கினை பற்றி விளக்குகிறது.

**பொதுக்கருத்தினை வரையறுத்தல்:**

பொதுக்கருத்து ஓர் உளவியல் மற்றும் சமூகத்தில் உள்ள அனைவரின் நம்பிக்கைக்கும், இசைவான தனிநபரின் நடத்தை சார்ந்த சமூக செயல்முறையாகும். சுருக்கமாக, இது மக்களின் கூட்டு பார்வை.

அவர்களுடைய அணுகுமுறை மற்றம் கருத்துக்கள் ஆகும்.

இது அரசாங்கம், அரசியல் குறித்த முன்னுரிமைகள் சார்ந்த மக்களின் கூட்டு விருப்பமாகும். மக்களாட்சி என்பது அனைவரின் ஒன்றிணைந்த தனிகருத்துகளும், பொதுக்கருத்துகளும், தனி நபர்க் கருத்துகளை விட முக்கியமத்துவம் வாய்ந்தது என்ற கூற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒன்றிணைந்த குழுக்கள், அரசாங்க தலைவர்கள், ஊடக உயர்குடியினர் ஆகியோர் பொதுக்கருத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தவும், கட்டுப்படுத்தவும் முடியும் என்று வேறு சிலர் கூறுகின்றனர்.

பொதுமக்களின் கருத்துகளின் மீத ஊடகங்களின் தாக்கம் உள்ளது. உண்மையில், மக்களாட்சி அதன் அதிகாரத்துவத்தை மக்களிடமிருந்து பெறுகின்றது. பொதுக்கருத்து என்பது ஒரு தனிநபரின் கருத்து அல்ல. அந்நபர் மிகவும் மதிக்கப்படும் நபராகவும் இருக்கலாம். இது ஒரு தனிப்பட்ட கருத்தும் அல்ல. அவர் எத்தகைய நிபுணர்த்துவத்தைப் பெற்றிருப்பினும். பொதுக்கருத்து என்பது ஒரு பொது விவகாரத்தில் ஒன்றோ அல்லது பல பிரிவு மக்களோ ஒருங்கிணைந்த, ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும். இது உண்மையில் பொதுக்கருத்தாகும்.

**பொதுக்கருத்தின் பங்கு:**

மக்களாட்சி வெற்றிகரமாக செயல்படுவதற்கு பொதுக்கருத்து என்பது ஓர் அத்தியாவசிய கூறாகும். அங்கே குடிமக்களின்

**பொதுக்கருத்து:**
மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான மது தண்டவதேயின் கட்டுரையை கவனமாக படித்து கேள்விகளுக்க பதிலளிக்க.

**தேசத்துடனான காந்தியின் உரையாடல்:**

மகாத்மா காந்திக்க தண்டியாத்திரை என்பது வன்முறையற்ற ஒரு போராட்ட ஆயுதம் மட்டும் அல்ல. அது செல்லும் வழியிலுள்ள மக்களுடன் பேசுவதற்கும், தொடர்பு கொள்வதற்குமான ஒருவழி முறையாக இருந்தது.

லாகூரில் ரவரி ஆற்றின் கரையில் 1929 ஆம் ஆண்டு டிசம்பர் 31ல் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் 44-வது மாநாட்டில் முழு சுதந்திரத்திற்கான கோரிக்கை விடுக்கப்பட்டு சுதந்திரத்திற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநட்டிற்கு ஜவஹர்லால் நேரு தலைமை தாங்கினார். மாநாட்டில் மகாத்மா காந்தி தீர்மானத்தை நிறைவேற்றும்பொழுது மறக்க முடியாத ஒரு சொற்பொழிவாற்றினார். காந்தி வெறுமனே அந்த உரையை வழங்குவதுடன் இல்லாமல், மார்ச் 12, 1930 அன்று சபர்மதி ஆசிரமத்திலிருந்து புகழ்பெற்ற தண்டி யாத்திரையை துவக்கினார். ஏப்ரல் 6, 1930 அன்று குஜராத்தின் கடலோர கிராமமான தண்டியில் உப்பு சத்தியாகிரகப் போராட்டம் உச்ச நிலையை அடைந்தது.

காந்திக்கு தண்டி யாத்திரை மீதும், உப்பு சத்தியாகிரகத்தின் மீதும் ஒரு தெளிவான எண்ணமும், செயல்திட்டமும் இருந்தது. அவர் அந்த யாத்திரை கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என்பதற்காக அதிக எண்ணிக்கையையும் விரும்பவில்லை. அதேசமயம் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாத சிறிய எண்ணிக்கையையும் ஆதரிக்கவில்லை. இதனால் வல்லபாய் பட்டேலின் மாபெரும் எண்ணிக்கையிலான பேரணி டில்லியை நோக்கி அணிவகுக்கும் பரிந்துரையை நிராகரித்தார். அதே சமயம் இணை அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற நேருவின் அன்பான கருத்தையும் அவர் ஏற்கவில்லை. மாறாக 78 அர்பணிப்ப நிறைந்த ஒழுக்கமான சத்தியாகிரகிகளுடன் சபர்மதியிலிருந்து தண்டி கிராமத்திற்கு உப்பு சத்தியாகிரகத்தை நடத்துவதற்கான யாத்திரையை முன்மொழிந்தார்.

காந்தி சத்தியாகிரகத்தின் சின்னமாக உப்பைத் தேர்ந்தெடுத்தார். ஏனென்றால் அது நாட்டின் உணவு நுகர்வில் மிகவும் பொதுவான அளவில் இருந்தது. செல்வந்தர்களுக்கு உப்பு சுவைக்கு தேவைப்பட்டது. பரம ஏழை உப்பைத் தண்ணீரில் கலந்து கொள்வதன் மூலம் அவர்களது உலர்ந்த ரொட்டியை அந்த உப்புநீர் கலவையில் நனைத்து உணவாக்கிக் கொள்ள முடியும். இது செலவந்தர்களின் சுவையான காரக்குழம்பிற்கு மாற்றாக ஏழைகளுக்கு இருந்தது.

தண்டியாத்திரையின் போது சில உற்சாகமிகு அபிமானிகள் காந்திக்கும் அவரது சக சத்தியாகிரககிகளுக்கும் அதிக எண்ணிக்கையில் பழம், பால் போன்றவைகளை கொண்டு வந்தனர். இருப்பினும் காந்தி தங்கள் யாத்திரையில் ஏழைகளுக்காக போராடுவதற்கான உன்னதமான நோக்கில் ஈடுபட்டுள்ளவர்கள் இத்தகைய ஆரம்பர விருந்தோம்பலில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக்கொள்ளக்கூடாது என்ற அடிப்படையில் அற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். காந்தி தண்டியாத்திரையை அநீதிக்கு எதிரான வன்முறையற்ற ஒரு போராட்ட ஆயுதமாக மட்டுமல்லாமல், அணிவகுப்பு வழியிலான மக்களுடன் உரையாடலுக்கும் தொடர்புக்குமான வழியாகவும் பார்த்தார். தண்டிக்கு செல்லும் வழியில், காந்தி மற்றும் அவருடன் வந்த சத்தியாகிரகிகள் பல்வேறு கிராமங்களில் இரவில் ஓய்வெடுத்தனர். சத்தியாகிரகிகள், கிராமங்களில் வசிப்பவர்கள் உடன் வந்த பத்திரிக்கையாளர்கள், ஆகியோருடன் சத்தியாகிரகத்தின் பின்னணி மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல

பிரச்சனைகள் பற்றி பேசுவதற்கு இந்த இடைப்பட்ட காலத்தை அவர் பயன்படுத்தினார். அவர் இந்த தண்டியாத்திரையை விழிப்புணர்வு மேற்கொள்ளும் முறையாக பார்த்தார். யாத்திரை நடந்த 25 நாட்களில் மக்களுடன் இந்த வகையான உரையாடலை நிகழ்த்திக் கொண்டிருந்தார். யாத்திரையினால் ஈர்க்கப்பட்ட பத்திரிகையாளர்கள் ஒவ்வொரு நாளும் விரிவான அறிக்கையை அனுப்பினர். இவை பத்திரிகைகள் மற்றும் இதழ்களில் வெளியிடப்பட்டன. இவ்வாறு தண்டி யாத்திரையில் காந்தி பேசியது தேசத்துடனான உரையாடலாக மாறியது.

கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்படுகிறது. மக்களின் கருத்துகளைப் புறக்கணித்து எந்த ஒரு அரசாங்கமும் நிலைத்திருக்க முடியாது.

**ஓர் உண்மையான பொதுக்கருத்தை உருவாக்குவதற்குத் தடையாக இருப்பவை:**

மக்களின் கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளின் உண்மையான பிரதிபலிப்பாக பொதுக்கருத்து இருக்க வேண்டும். இருப்பினும் உண்மையான பொதுக்கருத்திற்கு சில தடைகள் உள்ளன.

**சுயநல விருப்பங்கள் (தேசத்தை விட மேலானது எனது நலன்):**

மக்கள் தங்களின் சுயநலத்தினை முன்னுறுத்தி தங்கள் நாட்டினுடைய விவகாரங்களைக் காட்டிலும் தனிப்பட்ட விவகாரங்களில் முன்னேற்றத்தை காண்பதற்கு நகரச் செய்கிறது. ஒற்றுமை, அர்ப்பணிப்பு, ஒருமைப்பாடு மற்றும் தேசத்தின் முன்னேற்றம் தொடர்பான முக்கிய பிரச்சனைகளை மக்கள் உணருமாறு செய்ய வேண்டும்.

**எழுத்தறிவின்மை**: கல்வியறிவு உடைய பொறுப்புள்ள பொது மக்கள், பயமோ அல்லது தயவோ இல்லாமல் தங்கள் உரிமையைக் கையாள்வதன் மூலம் நல்ல குடிமக்களை உருவாக்குகின்றனர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்வியறிவற்ற மக்கள் பெரும்பாலும் கட்சித் தொண்டர்களால் தவறாக வழிநடத்தப்பட்டு உணர்வுகள், ஆதாயங்கள் மற்றும் வாக்குவன்மை (பேச்சாற்றல்) ஆகியவற்றால் ஏமாற்றப்படுகிறார்கள். ஓர் தரமான பொதுக்கருத்து என்பது அறிவும் கருத்துச் சுதந்திரம் இருக்கும் சூழலில் தான் உருவாக முடியும்.

வறுமை: எந்தவொரு நாட்டிலும் ஏழைகள் அரசியல் தலைவர்களின் பொய்யான வாக்குறுதியால் எளிதில் கவரப்பட்டு, தங்களது வாக்குகளை அவர்களுக்கு அளித்துவிடுகின்றனர். வறுமையை ஒழிப்பதன் மூலம் மட்டுமே ஓர் தரமான குறிக்கோளுடைய பொதுக்கருத்து என்பது சாத்தியமாகும்.

**இனவாத மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடு:**
சாதி, சமயம் மற்றும் மதம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாட்டைத் தூண்டும் விவாதங்கள் மக்களிடையே பிளவுகளை உருவாக்குகின்றன. அவை பெரும்பாலும் அரசியல் கட்சிகளால் தங்களின் நன்மைக்காக கையாளப்படுகின்றன. நாட்டில் பயனுள்ள வகையில் செயலாற்றிக் கொண்டிருக்கும் மக்களாட்சியை சமூக நல்லிணக்கமின்மை சீரழிக்கின்றது.

**பேச்சு மற்றும் ஊடக சுதந்திரம்:**

நடுநிலையான, குறிக்கோள்மிக்க மற்றும் சுதந்திரமிக்க ஊடகமும், தனிமனித பேச்சுரிமைக்கு மதிப்பளிக்கின்ற சட்டமன்றமும் ஆரோக்கியமான கருத்துக்களை

உருவாக்குவதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்களின் சுதந்திரத்தை மதித்து செய்தி அறிக்கைகளை பொறுப்புடன் வெளியிடுகின்ற ஊடகங்கள் பொதுமக்களின் கருத்தை முதிர்வுடன் உருவாக்குவதற்கான முக்கியமான அடிப்படை ஆகும்.

**அரசியல் கட்சிகளின் வரையறை:**

அரசியல் கட்சிகள் மக்களாட்சி முறை அமைப்புக்கு இன்றியமையாத கருவியாகுமட். அவைகள் திட்டவட்டமான லட்சியங்கள் மற்றும் செயல்திட்டத்துடன் உருவாக்கப்படுகின்றன. அவை பொது மக்களிடம், சமுதாயம் மற்றும் அரசுக்கு உள்ள பிரச்சனைகளைப் பற்றி விழிப்பூட்டுவதுடன் மாற்றுத் திட்டங்களையும் பிரிந்துரைக்கின்றன. பரப்புரையின் மூலம் மக்கள் அரசியல் பிரச்சினைகளை அறியும்படி செய்வதுடன் தங்களின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களுக்கான ஆதரவையும் பெறுகின்றன.

சட்டமன்றங்களில் வாக்காளர்களின் பிரதிநிதிகளாக ஒருங்கிணைக்கப்பட்ட கருத்துகளை எடுத்துரைக்கின்றனர். நாடாளுமன்ற மக்களாட்சியில் சட்டமன்றத்தில் பெரும்பான்மை இடங்களை வென்ற கட்சி அல்லது கட்சிகளின் கூட்டணி அமைச்சரவையை உருவாக்குகிறது. (எ.கா) இங்கிலாந்து, இந்தியா, குடியரசுத்தலைவர் முறை மக்களாட்சி நாடுகளில் தலைமை நிர்வாகிகள் (அதிபர்) கட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் (எ.கா. அமெரிக்கா, பிரான்ஸ்), எந்தவொரு முறைமையிலும் அரசியல் கட்சிகள் அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இடையில் பாலமாக செயல்படுகின்றனர். மக்களாட்சியில் பொதுக்கருத்துக்கள் அரசியல் கட்சிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பல்வேறு செயல்பாடுகளின் பட்டியல் பின்வருமாறு உள்ளன.**

- கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடும்
- கட்சிகள் வேறுபட்ட கொள்கைகளையும் திட்டங்களையும் முன்வைக்கும்.
- கட்சிகள் நாட்டிற்கான சட்டங்களை உருவாக்குகின்றன.
- கட்சிகள் அரசாங்கத்தை அமைத்து செயல்படுகின்றன.
- எதிர்க்கட்சிகளாகவும் கட்சிகள் பங்கு வகிக்கின்றன.
- கட்சிகள் பொதுக்கருத்துகளை வடிவமைக்கின்றன.
- அரசாங்கத்தின் நலத் திட்டங்களை மக்கள் பெறுவதற்கு கட்சிகள் உதவுகின்றன.

ஒரு மாதத்திற்கு செய்தித்தாள்களைப் படித்து, அரசியல் கட்சிகளின் பல்வேறு செயல்பாடுகள் தொடர்பான செய்திகளை சேகரிக்கவும்.

பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு இடையே தொடர்ச்சியான போட்டி உள்ளதுடன் இந்த போட்டி மக்களாட்சியினை முதிர்ந்த செயல்பாட்டை உறுதி செய்கிறது.

**அரசியல் கட்சிகளின் பணிகள்:**

ஒரு மக்களாட்சியில் அரசியல் கட்சிகள், அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஒரு ஒருங்கிணைந்த இணைப்பாக செயல்படுகின்றன.

அரசியல் கட்சிகள் மக்களை அரசியல் முன்முயற்சிகள் மற்றும் பொது அனுபவங்களை நோக்கி நகர்த்தும் அடித்தளமாக செயல்படுகின்றன. அரசியல் கட்சிகள் வாக்குகளை அணிதிரட்டும் நோக்கத்துடன் மக்களின் அரசியல் சிந்தனை மற்றும் கருத்துக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அரசியல் பொருளாதார மற்றும் சமூக செயல்பாட்டிற்கான ஓர் தளத்தை வழங்குவதன் மூலம் எதிர்கால மாநில மற்றும் தேசிய தலைமைகளுக்கு பயிற்சிக் களமாக செயல்படுகின்றன. நீண்ட காலமாக அவர்கள் கட்சிக்குள்ளேயும், எதிர்க்கட்சிகளிலிருந்தும் கடுமையான விவாதம் மற்றும் வினா எழுப்புவதன் மூலம் தங்களின் நடவடிக்கைகளுக்குத் கட்சித்தலைவர்கள் பொறுப்புணர்வுடன் இருக்கிறார்கள். இவ்வாறு மக்களுக்கு பலதரப்பட்ட வேட்பாளர்களையும், கொள்கைகளையும், தேசத்தில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கான அணுகுமுறைகளையும் கட்சிகள் வழங்கியுள்ளன.


மக்களாட்சியில் அவர்களுடைய நம்பிக்கையானது மாற்றம் மற்றும் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான அறிவை வலுவூட்டுகின்றது. இதன்மூலம் மக்களில் பெரும்பான்மையினர் அவர்களின் ஆட்சி வழிவகையில் தாங்கள் விரும்பும் ஓர் மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர்.

**கட்சி முறை:**

கட்சி முறை என்பது அரசாங்கங்களை நடத்துவதற்கும், நிலைநிறுத்துவதற்கும் உதவுகிறத. மேலும் அவை மக்களாட்சியின் திறன் வாய்ந்த செயல்பாட்டிற்கும் தேவையானதாக இருக்கின்றன. கட்சிமுறை என்பது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான கட்டுப்பாடுகள் மற்றும் அதிகாரச் சமநிலையை வழங்கும் முறையாகும். பொது மக்களிடையே ஆதரவைக் பெறுவதன் முலம் கட்சிக்குள்ளேயே தலைமைத்துவத்திற்கும். கலந்துரையாடலுக்கும் ஓர் கட்டமைப்பினை அந்தந்த கட்சிகளின் குறிக்கோள் மற்றும் செயல்திட்டப்படி வழங்குவதன் மூலம் அது நிலையான மற்றும் நல் ஆட்சிக்கு உதவும்.

| |
|---|
| ஓர் அரசியல் கட்சி என்பது மக்களின் ஒன்றிணைந்த ஒரு குழுவாக தேர்தலில் போட்டியிட்டு அரசாங்கத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது. அவர்கள் சமுதாயத்திற்கான கூட்டு நலனை ஊக்குவிப்பதற்கான சில கொள்கைகளையும், திட்டங்களையும் ஒப்புக்கொள்கிறார்கள். (சின்னங்கள் அல்லது பல்வேறு அரசியல் கட்சிகளின் கொடி) ஓர் அரசியல் கட்சியின் மூன்று கூறுகள் - தலைவர் - செயல் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் |

**கட்சி முறைகளின் வகைகள்:**




பல்வேறு வகையான கட்சி முறைகள் உலகெங்கிலும் உள்ள பல்வேறு பகுதிகளிலும் நடைமுறையில் உள்ள குறிப்பிட்ட கூறுகளை பொறுத்து பரிணாமவளர்ச்சியல் உருவாகியுள்ளன. ஓர் மக்களாட்சியின் தரமானது எப்படி அரசாங்கம் அதன் மக்களை பிரதிநிதித்துவம் செய்கிறது. எப்படி அரசாங்கம் அதன் மக்களுக்கு பொறுப்புடன் இருக்கிறது. எப்படி மனித உரிமைகள் மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் சமூக நிலையிலும், வாய்ப்புக்களிலும் சமத்துவத்தை உறுதி செய்வதுடன், அரசியல் பங்கேற்பில் மக்களுக்கு சமமான வாய்ப்புகளையும் ஏற்படுத்துகிறது. பல விதமான கட்சி

முறைகள் இந்த சிக்கல்களை பல்வேறு வழிகளில் அணுகுவதன் மூலமாக பின்பற்றப்படும் மக்களாட்சியின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது.

**ஒரு கட்சி முறை:**

ஒரு கட்சி முறையில் ஓர் அரசியல் கட்சி அரசாங்கத்தை உருவாக்கும் உரிமையை பெறுகிறது. இது எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத அரசமைப்பிலிருந்து பெரும்பாலும் பெறப்படுகிறது. ஒரு கட்சி முறையின் கீழ் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறைவான பங்கேற்பு மற்றும் பலவீனமான பொறுப்புகடைமை உள்ளது. (எ.கா) சிங்கப்பூர், (வடகொரியா), கொரிய தொழிலாளர் கட்சி, வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி (வியட்நாம்), கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சி (கியூபா), கம்யூனிஸ்ட் கட்சி (சீனா). ஒரு கட்சி முறையானது மக்களாட்சியிலான வெளிப்பாடுகளுக்கு போதுமான வாய்ப்புகளை வழங்காததுடன் மாற்றத்திற்கான பரவலான வரையெல்லையையும் வழங்கவில்லை. உதாரணத்திற்கு 1920-களில் தேசியவாத இராணுவத்தை ஆதரித்து பாசிச இயக்கங்கள் ஹிட்லரின் தலைமையில் ஜெர்மனியிலும், முசோலினியின் கீழ் இந்தாலியிலும், ஜெனரல் பிராங்கோவின் கீழ் ஸ்பெயினிலும் அதிகாரத்தை கைப்பற்றியதுடன் அரசியல் கட்சிகள் உருவாவதைத் தடைசெய்தன.

**இரு கட்சி முறை:**

இரு கட்சி முறையில், இரண்டு அரசியல் கட்சிகள் வேறுபட்ட நலன்களுடன், பெரும்பான்மையை பெற்று அரசாங்கத்தை அமைப்பதற்கான சம வாய்ப்பைக் கொண்டுள்ளன. இருகட்சி முறையில் பெரும்பான்மை பெறும் கட்சி ஆளும் கட்சியாகவும் சிறுபான்மை கட்சி, எதிர்க்காட்சியாகவும் உருவாக்குகின்றன. இரு கட்சி முறையில் அரசியல் தலைவர்களிடம் மிக அதிக பொறுப்புணர்வும், அதிக அரசியல் பங்கேற்பும் உள்ளது. எதிர் கட்சிகள் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பின் முலமாக தங்களை நீக்கும் அச்சுறுத்தல் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக இருப்பதனால் ஆட்சியில் இருப்பவர்கள் அதிக அளவிலான பொறுப்பான நடத்தை மற்றும் செயல்பாட்டினை மேற்கொள்கின்றனர்.

அரசியல் சூழ்நிலை பெரிதும் துருவப்படுத்தப்படுவதால், ஓர் கட்சி அதிகாரத்தை இழந்தபின் தேசிய நலன்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய கடுமையான மாற்றங்கள் ஏற்படலாம். இருகட்சி முறையின் எடுத்துக்காட்டாக அமெரிக்கா (மக்காட்சிவாதிகள் / குடியரசுவாதிகள்) மற்றும் இங்கிலாந்து – (பழமைவாதிகள் மற்றும் தாராளவாதிகள்).

எவ்வாறாயினும், எந்தவொரு நாட்டிலும், கட்சிகளின் எண்ணிக்கையில் எந்த அரசமைப்ப சார்ந்த கட்டுப்பாடும் இல்லை. அரசமைப்ப நடைமுறைகள் மற்றும் மக்களின் அரசியல் முதிர்ச்சியே இரு கட்சி முறையின் தோற்றத்திற்கு வழிவகுக்கிறது.

**பல கட்சி முறை:**

பல கட்சி முறையில், பல அரசியல் கட்சிகள் இருப்பதுடன் பெரும்பான்மை பெற்ற கட்சி அல்லது பெரும்பான்மை பெறாத ஒரே நோக்கமுடைய பல கட்சிகளுடனான கூட்டணியின் மூலமாகவும் மக்கள் ஆரதவை வென்றெடுத்து அரசாங்கத்தை உருவாக்குகின்றன. இந்த முறையில் அரசியல் வென்றெடுத்து அரசாங்கத்தை உருவாக்குகின்றன. இந்த முறையில் அரசியல் தலைவர்கள் தொடர்ந்து தங்கள் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களால் உற்றுநோக்கப்படுவதுடன் அரசியல் சமநிலையையும் நிலை நாட்டுகின்றனர். வென்றெடுத்து அரசாங்கத்தை உருவாக்குகின்றன. இந்த முறையில் அரசியல் தலைவர்கள் தொடர்ந்து தங்கள் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களால் உற்றுநோக்கப்படுவதுடன் அரசியல்

சமநிலையையும் நிலை நாட்டுகின்றனர். அவர்கள் மக்களுக்கு அதிக பொறுப்பு உள்ளவர்களாகின்றனர். பல கட்சிமுறை வாக்காளர்களுக்கு அரசியல் பங்கேற்பில் பல்வேறு வழிகளையும், பெரிய அளவிலான தேசிய மேம்பாட்டிற்குரிய அரசியல் மாற்றங்களைக் கொண்டு வரும் திறமையையும் வழங்குகிறது.

பிரான்ஸ் மற்றும் இத்தாலியில் உள்ள விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை பல கட்சி முறையிலும் கூட்டணி அமைச்சரவைகளிலும் முடிவடைகிறது. கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, சுவீடன் ஆகிய நாடுகள் பல கட்சி முறையீலான நாடுகளின் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு:**

மக்களாட்சியின் தரம் மற்றும் செயல்திறனை உறுதி செய்கின்ற விதமாக அரசியல் கட்சிகளின் இருப்பு இருக்கின்றன. அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற கூட்டாட்சிகளில் உள்ள பன்முக பண்பாடு மற்றும் பன்மை சமூகங்களில் அமைதி ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை சமூக – பொருளாதார மேம்பாட்டிற்காக பராமரிப்பது அவசியம் ஆகின்றது. ஒரு கட்சி முறையில் விரைந்து முடிவெடுக்கவும், ஒத்திசைவு நடவடிக்கைகளுக்கு அதிக நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கும் போது இந்த முடிவுகள் பரந்துபட்ட மக்களின் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தாது. இதனால் அரசாங்கத்திற்கு எதிரான அதிக எதிர்ப்பையும் பேதங்களையும் அது உருவாக்கும்.

கட்சியின் கட்மைப்பு மற்றும் தலைமையின் இயல்பு காரணமாக இரு கட்சி முறைமையில், பொதுவாக பொது கொள்கைகளிலும்,முடிவுகளிலும், ஒத்துழைப்புக்கு மாறாக அரசியல் துருவப்படுத்தப்படுகிறது. பலகட்சி முறையில் கூட்டணி கட்சிகளிடையே கவனமாக கருத்தில் கொண்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அதன் செயல்திறன் உள்ளது. மேலும் விவாதங்களினால் பரஸ்பர அடிப்படையிலான ஒருமித்த கருத்தை அடைவதன் மூலமும் பெரும்பாலும் பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன. எனவே அரசியல் கட்சிகள் மக்களுடைய உரிமைகளையும், சுதந்திரங்களையும் காப்பாற்ற வேண்டியது முக்கியமான ஒரு மக்களாட்சியின் உந்து சக்திகள் ஆகும். பயனுள்ள குடியுரிமை பயிற்சி மற்றும் அதிக குடிமக்கள் பங்கேற்பு மூலம் மக்களாட்சி நாடுகளில் உள்ள இளைஞர்கள் அரசியல் கட்சிகளின் பெரிய பங்கினை வகிக்க முடியும். இதனால் உலக நாடுகளில் முதிர்ச்சியடைந்த மற்றும் பரந்த மக்களாட்சி மயமாக்கலை வளர்க்க முடியும்.

**மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு:**

- அரசியல் கட்சிகள் என்றால் என்ன?
- அரசியல் கட்சியின் பொதுப்பதவிகளுக்காக வேட்பாளர்களை தேர்ந்தெடுத்து தேர்தலில் நிறுத்துகின்றன.
- அவை கட்சியின் பெயரில் அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, ஒரு தரப்படுத்த முயற்சி செய்கின்றன.
- பல அரசியல் அறிஞர்கள் கட்சிகள் மக்களாட்சிக்கு அவசியம் என்று நம்புகிறார்கள்.
- அரசியல் கட்சி என்பது மக்களது இறையாண்மை மற்றும் பெரும்பான்மை ஆட்சியின் பிரதான கருவியாக ஒரு சிலரால் கருதப்படுகிறது.
- அரசியல் கட்சிகள் ஒழுங்காக வேலை செய்யும் பொழுது, மக்களின் இறையாண்மைக்கான அவசியமான கருவிகளாக அவை இருக்கலாம்.

**நவீன கட்சி முறை**
**அங்கிலாந்தில் கட்சி முறை**

இங்கிலாந்தில் முடியாட்சியின் நிலை மற்றும் அதன் பங்கினை பற்றிய பிரச்சனைகள், கருத்துக்கள் துருவப்படுத்தப்படுவது இரண்டு கட்சிகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. அவையாவன:

1. டோரீஸ் அல்லது பழமைவாதிகள்
2. விக்ஸ் அல்லது தாராளவாதிகள்

30 ஆம் நூற்றாண்டில் தொழிலாளர் கட்சி தாராளவாதிகளை விட பெரிய சக்தியாக மாறியது.

**ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கட்சி முறை:**

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் நிறுவனத் தலைவர், அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றுக்கு இடையேயான பிரிவினைவாத

**இருகட்சி முறை:**

- உலகம் முழுவதும் அரிதானது ஆகும்.
- தேசிய மற்றும் உள்ளாட்சி அளவில் சமமான நிலையில் உள்ளது.
- தேர்தல் அமைப்பு (முறைமை)
- வெற்றி பெற்றவர் அனைத்தையும் எடுத்துக் கொள்வர்.
- வீணாக்கப்பட்ட வாக்கு
- முன்னுரிமை அடிப்படையிலான அமைப்பு
- தேர்தலுக்கு முன் பரந்த கூட்டணிகள் அமைக்கப்படுகின்றன.
- வாக்காளர்களின் கருத்து
- மூன்றாவது கட்சியினருக்கு வாக்குச் சீட்டில் இடம்பெறுவது கடினமாக உள்ளது.



மோதல்களைத் துடைத்தெறிய விரும்பினர். இரப்பினும் அமெரிக்க சுதந்திரத்திற்குப் பின்னர், ஜார்ஜ் வாஷிங்டனின் பதவிக்காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட அமெரிக்க தேசத்தில் முதலில் உருவான கட்சிகளில் வலுவான தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கும் கூட்டாட்சிக் கட்சியும், மாநில தன்னாட்சி உரிமையை ஆதரிக்கும் கட்சியாக குடியரசுக் கட்சியும் இருந்தன. 1828-ல் மக்களாட்சியிலான குடியரசுக் கட்சி என்ற பெயர் மக்களாட்சிக் கட்சியாக மாற்றப்பட்டது. இது அரசின் உரிமைகளை வென்றது. 1854-ல் குடியரசுக் கட்சி கொத்தடிமை முறைக்கு எதிராக தனது போராட்டக் களத்தை அமைத்துக் கொண்டதுடன் அமெரிக்க குடியரசுத் தலைவராக ஆபிரகாம் லிங்கன் பதவிவகித்ததால் அதிக முன்னுரிமையைப் பெற்றது. அமெரிக்காவில் இரு கட்சி முறை என தீர்வு காணப்பட்டதிலிருந்து, குடியரசு கட்சி மற்றும் மக்களாட்சிக் கட்சிகள் அமெரிக்க அரசியல் களத்தில் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. இருப்பினும் மூன்றாவது கட்சி வேட்பாளர்கள் அவ்வப்போது வெளிப்பட்டு மறைந்தனர்.

**ஐரோப்பாவில் கட்சி முறை:**





பிரெஞ்சு புரட்சிக்குப் பின்னர் (1789), ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி சக்திகள் பலம் பெற்று அரசியல் கட்சிகள் தோன்றின. ஐரோப்பிய கண்டத்தில் அரசியல் கட்சிகள், பழமைவாதிகள், தாராளவாதிகள் மற்றும் கிறிஸ்துவ மக்களாட்சிவாதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். 19 ஆம் நூற்றாண்டில் சமதர்ம இயக்கங்கள் பிரபலமடைந்து சமூக மக்களாட்சி அல்லது தொழிலாளர் கட்சிகள் உருவாயின. அவை பிரபலமடைந்து தொழிற்சங்க ஆதரவைப் பெற்றன. சோவியத் ரஷ்யாவில், போல்ஷிவிக் கட்சி 1917-ல் நடந்த பொதுவுடைமைப் புரட்சியினை நடத்தி சோவியத் யூனியன் என்ற பிரபலமான சோவியத் சோசலிச குடியரசுகளை உருவாக்கியது. COMINTERN (கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல்) அமைப்பு பிற நாடுகளில் பொதுவுடைமைப் கட்சிகளை ஆதரிப்பதன் மூலம் உலக பொது உடமைப் புரட்சியை ஊக்குவிக்கும் பணியைக் மேற்கொள்ள நிறுவப்பட்டது. பனிப்போர் முடிவுக்கு பின் பொதுவுடைமைப் கட்சி ரஷ்யாவில் அதன் புகழை இழந்தது. புரட்சியை ஊக்குவிக்கும் பணியைக் மேற்கொள்ள நிறுவப்பட்டது.

பனிப்போர் முடிவுக்கு பின் பொதுவுடைமைப் கட்சி ரஷ்யாவில் அதன் புகழை இழந்தது. இருப்பினும், சில பொது உடமைக் கட்சிகள் இன்னும் மக்களாட்சி அரசுகளுக்குள் அரசாங்கக் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துகின்றன. பொதுவுடைமைப் கட்சிகள் இன்றும் தொடர்ந்து சீனா மற்றும் வட கொரியாவில் எதேச்சதிகார அரசாங்கங்களை கட்டுப்படுத்துகின்றன.

மக்களாட்சி அரசியல் முறைமைகள் தங்கள் குடிமக்களின் அடிப்படையான சமூக – பொருளாதார விழுமியங்களை பிரதிபலிப்பதாகவும், பெரும்பாலும் பரிவும்

எதிர்செயலுமாக இருக்கின்றன. எப்போதும் மதிப்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்வதுடன் அவை அரசியல் கட்சிகளின் மாறுபட்ட நோக்கங்கள் மூலம் மக்களின் அரசியல் கருத்துக்களில் பிரதிபலிக்கின்றன. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தாக்கத்தை ஏற்படுத்திய பாதிக்கும் சமூக பொருளாதார காரணிகள் தேசியவாத மற்றும் குறுகிய மனப்பான்மை கொண்ட கட்சிகளின் எழுச்சி மூலம் பிரதிபலிக்கப்பட்டன. அவை புலம்பெயர்ந்தோருக்கு எதிராக அவர்களின் உணர்வுகளுக்காக குரல் கொடுத்தல் மற்றும் அகதிகளின் வருகை என்பதனை ஐரோப்பிய கலாச்சாரம், பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தலாக பார்த்தனர்.

**தென்னாப்பிரிக்காவின் கட்சி முறை:**




ஆப்பிரிக்க நாடுகளில், அரசியல் கட்சிகள் முதலில் காலனித்துவத்துக்கு எதிராக போராடுவதற்காக உருவாக்கப்பட்டது. காலனித்துவத்திலிருந்து விடுதலை அடைந்த ஆப்பிரிக்க நாடுகளில், அரசியல் கட்சிகள் இராணுவவாதத்திற்கு எதிராக கடுமையாக போராடுகின்றன.

**தென்னாப்பிரிக்காவின் அரசமைப்பு:**

- 18 வயதில் அனைவருக்கும் வாக்குரிமை

- பொதுவான வாக்காளர் பட்டியல்
- வழக்கமான தேர்தல்
- பொறுப்புணர்வு, பதிலுடைத்தல் மற்றும் வெளிப்படையான அரசாங்கத்தை உறுதிப்படுத்த பல கட்சி முறை மக்களாட்சி அவசியம்

**இந்தியாவில் கட்சி முறை:**
ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான சுதந்திர போராட்டத்தினாலும், தேசியவாதத்தின் எழுச்சியினாலும் இந்தியாவில் கட்சி முறைகள் வெளிப்பட்டன. இந்திய அரசியல் இன்று பல கட்சி முறையை கொண்டதாக இருப்பினும் இந்திய வரலாற்றில் நீண்ட காலமாக, ஒரே கட்சி அரசியல் அரங்கில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. இந்திய தேசிய காங்கிரசு (INC) 1885 ஆம் ஆண்டில் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O. Hume) என்பவரால் நிறுவப்பட்டது.

இது சட்டமன்ற மற்றும் அரசியல் பிரிவுகளில் இந்தியர்களின் அரசியல் பங்கேற்பிற்கான அடித்தளமாக இருந்தது. இது படிப்படியாக பல்வேறு நிலைகளில் அரசியல் சீர்திருத்தங்களைக் கோரியது. ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1921 – 23) பின்னர், இந்திய தேசிய காங்கிரசு (INC) முழுமையான அரசியல் சுதந்திரத்தை கோரியது.

20-ஆம் நூற்றாண்டில், வகுப்புவாதத்தை செயல்திட்டமாக கொண்ட கட்சிகள், அதாவது 1906 ஆம் ஆண்டு இந்தியாவில் முஸ்லிம் லீக் மற்றும் 1916-இல் இந்து மகாசபை போன்ற கட்சிகள் உருவாகின. சென்னை மாகாணத்தில், தென்னிந்திய சுதந்திரவாதச் கூட்டமைப்பு (நீதிக்கட்சி) பிராமணரல்லாதோரின் (திராவிடர்கள்) நலன்களை பிரதிபலிக்க உருவாக்கப்பட்டது. எனினும் இந்திய தேசிய காங்கிரசில் நகர்ப்புற, உயர்குடி சாதியினர், பெரும்பாலும் மேற்கத்திய கல்வி கற்றவர்களை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் ஆங்கிலேய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு தளத்தை வழங்கியது. படிப்படியாக இந்திய தேசிய காங்கிரசு இந்தியாவின் அரசியல் கட்சியின் முறையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கினை வகித்தது. 1905-இல் வங்கப் பிரிவினைக்குப் பிறகு, இந்திய தேசிய காங்கிரசில் மிதவாதிகள் (மனுக்களின் கொள்கை) மற்றும் தீவிரவாதிகள் (ஆக்கிரமிப்பு உத்தி) என பிரிவினை எற்பட்டது.

1906 ஆம் ஆண்டில் முஸ்லிம் லீக்கின் உருவாக்கம் முரண்பாடான அரசியல் பேரம் பேசும் வெளிப்படையான காலமாக உருவானதோடு, இந்திய கட்சி முறையின் உண்மையான தொடக்கத்தை பிரதிபலித்தது.

அரசியல் அரங்கில் மகாத்மா காந்தியின் வருகையை தொடர்ந்து, அவரின் அகிம்சையின் மீதான தார்மீக – நெறிமுறைக் கவனமுடன் கூடிய, அரசியல் லட்சியங்கள் மற்றும் வழி முறைகளில் இந்திய தேசிய காங்கிரசு (INC) என்பது அனைத்து பிரிவுகளையும் சேர்ந்த ஏழை விவசாயிகள் மற்றும் பின்தங்கிய பிரிவினர்களையும், பிரதிநிதித்துவப்படுத்தியது சித்தரஞ்சன் தாஸ் 1922-இல் தொடங்கிய சுயராஜ்ய கட்சி, 1934-இல் ஆச்சார்யா நரேந்திர தேவ் தொடங்கிய காங்கிரசு சோசலிஸிட் கட்சி மற்றும் 1920-இல் எம்.என். ராயின் (M.N. Roy) முயற்சியால் தொடங்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகள் இதர முக்கிய அரசியல் கட்சிகள் ஆகும். அரசியல் பரப்புரைகளில் ஈடுபடும் பல அரசியல் கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடாமல் இருந்தன. இத்தகையவை அழுத்த குழுக்களாகச் செயல்பட்டன.

1977-ஆம் ஆண்டு வரை பொதுவுடைமை கட்சி, சோசலிஸ்ட் கட்சிகள் மற்றும் வலதுசாரி ஜனசங்கம் ஆகியவை தேசிய அளவில் குறிப்பிடத்தக்க எதிர்கட்சிகளாக இருந்தன. 1977

வரை, எந்த ஒரு கட்சியும் தேசிய அளவில் இந்திய தேசிய காங்கிரசுக்கு மாற்றாக வர இயலவில்லை. எனவே, ஜெயப்பிரகாஷ் நாராயணனின் தலைமையின் கீழ் பல தேசிய கட்சிகள், ஓர் பெரிய தேசிய அளவிலான மாற்றுக் கட்சியை உருவாக்க இணைந்தன. 1977-ஆம் ஆண்டில் ஜனதா கட்சி மத்தியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. 1980-க்குப் பிறகு, இந்த கட்சிகள் ஒன்றியிருக்கும் திறனையும், ஒற்றுமையையும் இழந்து விட்டன. பாரதீய ஜனதா கட்சி என்ற புதிய பெயருடன் ஜனசங்கம் புத்துயிர் பெற்றது. இதற்கிடையில் கன்ஷிராமின் பகுஜன் மாஜ் கட்சி சமூக நீதியை பிரதான திட்டமாக கொண்ட ஒரு தேசியக் கட்சியாக உருவாகியது. கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் திரிபுரா போன்ற சில மாநிலங்களில் பொதுவுடைமை கட்சி (மார்க்சிஸ்ட்) மிகவும் சக்திவாய்ந்ததாக ஆனது.

1990-களில் இந்திய அரசியல் கூட்டணி அரசாங்கங்களுக்கான காலமாக இருந்தது. இந்திய அரசியல் முறைமை என்பது சமகால இந்தியாவில் காணப்பட்ட பலதரப்பட்ட பண்பாட்டு சமூக உறவு, பன்முகத்தன்மை, அதிக போட்டித்திறனோடு அதிக அளவில் மக்களாட்சி மயமாக்கப்பட்ட பிரதிநிதித்துவம் பெற்றது. பழைய கட்சிகள் வழக்கற்று செயலற்றதாகவும் மாறிவிட்டன. மேலும் புதிய கட்சிகள் மாறிவரும் சவால்களை எதிர்கொள்ள முயற்சித்தன.

1990-களில் இருந்து கூட்டாட்சி அரசியல் முறையை நாம் காண்பதுடன் பிராந்தியக் கட்சிகள் பெரிய செல்வாக்கைப் பெற்றுள்ளதையும் மத்திய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக பிரதேச உணர்வுகளை பிரதிநிதிப்படுத்துவதையும் நாம் காண்கிறோம். தற்போதைய காலத்தில், பிராந்திய அளவிலான கூட்டணிகள் கூட்டாட்சி அரசியலுக்கு ஆதரவாகப் குரல் கொடுக்கும் போக்கு இருப்பதைக் காணலாம். இதற்கு காரணமாக அரசியலில் பிரதேசமயமாக்கலும், குறிப்பிட்ட பகுதிகளில் அதிக ஆதரவைக் கொண்டிருக்கும் கட்சிகளும் உள்ளன.

**மண்டலக் கட்சிகள்:**

பஞ்சாப்பில் சிரோமணி அகாலி தளம், உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாதிக் கட்சி, ஆந்திர பிரதேசத்தில் தெலுங்கு தேசம் கட்சி, பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தளம், மேற்கு வங்காளத்தில் அகில இந்திய திரிணாமூல் காங்கிரசு, தெலுங்கானாவில் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி, அசாமில் அசாம் கண பரிசத், மகாராஷ்டிராவில் சிவசேனா, ஜம்மு காஷ்மீரில் தேசிய மாநாட்டுக்கட்சி, மக்கள் ஜனநாயக கட்சி, தமிழகத்தில் திராவிட முன்னேற்ற கழகம் மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை முக்கிய பிராந்தியக் கட்சிகளாக உள்ளன.

வாக்காளர்களிடையே அரசியல் விழிப்புணர்வு அதிகரிக்கையில், பிரதேச, சமூக மற்றும் மத அடையாளங்களுடன் அதிக அணி திரட்டலும் உள்ளது. அரசியல் குழுக்களின் அமைப்பில் பார்க்கும்போது ஒரு பிராந்தியத்திற்கும் இன்னொன்றிற்கும் இடையில் உள்ள அரசியல் மற்றும் சமூக குழுக்களின் பண்புகள் போன்றவற்றில் பரந்த வேறுபாடு உள்ளது.

| 2009 தேர்தலில் நாடாளுமன்றத்தில் இடங்களை பெற்ற கட்சிகள் | 2014 தேர்தலில் நாடாளுமன்றத்தில் இடங்களை பெற்ற கட்சிகள் |
|---|---|
| இந்திய தேசிய காங்கிரசு | பாரதிய ஜனதா கட்சி |
| பாரதிய ஜனதா கட்சி | இந்திய தேசிய காங்கிரசு |
| இந்திய பொதுவுடைமை கட்சி (மார்க்சிஸ்ட்) | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| சமாஜ்வாதி கட்சி | அகில இந்திய திரிணாமுல் காங்கிரசு |

| | |
|---|---|
| பகுஜன் சமாஜ் கட்சி | பிஜு ஜனதா தளம் |
| திராவிட முன்னேற்றக் கழகம் | சிவசேனா |
| சிவசேனா | தெலுங்கு தேசம் கட்சி |
| ராஷ்டிரிய ஜனதாதளம் | தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி |
| அகில இந்திய திரிணாமுல் காங்கிரசு | யுவஜன ஸ்ரமிக ருது காங்கிரசு கட்சி |
| அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | தேசியவாத காங்கிரசு கட்சி |

**தமிழ்நாட்டில் கட்சி முறை:**

தமிழ்நாட்டில், பெரும்பாலான இந்திய மாநிலங்களைப் போலவே தொடக்கத்தில் சுதந்திர போராட்ட காலத்தில் காங்கிரசு கட்சி ஆதிக்கம் செலுத்தியது. இருப்பினும் சாதி அடுக்குமுறையில் சிக்கல்கள் மற்றும் அதிகரிக்கும் வடக்கு, தெற்கு பிரிவினையின் எழுச்சி ஆகியவை மாநிலத்தில் காங்கிரசினுடைய புகழைக் குலைத்தன. திராவிரட இயக்கம் பெரியார். ஈ.வே. ராமசாமியின் கீழ் தமிழ்நாட்டில் புத்துயிர் பெற்ற திராவிட உரிமைகள் சுயமரியாதை, கண்ணியம் ஆகியற்றின் வலியுறுத்தல் மற்றும் வடக்கு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பிராமணர் ஆதிக்கத்திறன் எதிரான சமூக கொண்டு ஆகியவற்றினால் பிரபலமடைந்தது.

தமிழ்நாட்டில் கட்சி அமைப்பு முறையானது சுதந்திர இந்தியாவின் அரசியலில் மாநில கட்சிகளின் ஒப்புயர்வற்ற நிலைக்கு முன் மாதிரியாக உள்ளது. இந்த மேம்பாட்டிற்கு மிகவும் தெளிவான சமூக – பொருளாதார, பண்பாடு மற்றும் வரலாற்று காரணங்கள் உள்ளன. காலனித்துவ காலம் மூலம் பகுத்தறிவு மற்றும் சமூக நீதி இயக்கங்களின் நீண்ட வரலாறு மற்றும் 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து திராவிட சிந்தனையை அணி திரட்டுதல் போன்றவை தமிழக அரசியலின் தலைமையையும், மாநில அரசியலில் அரசியல் கட்சி முறையின் எதிர்காலத்தையும் தீர்மானித்தது எனலாம்.

**மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு:**

ஓர் மக்களாட்சியின் திறன்மிக்க செயல்பாட்டிற்கு, முரண்பாடான விருப்பங்களைப் பிரதிபலிப்பு செய்யும் அரசியல் கட்சிகளின் இருப்பது கட்டாயமாகும். பல்வேறு விருப்பங்களையும், கொள்கைகளையும் பிரிந்துரைக்கையில் பெரும்பாலான அரசியல் கட்சிகள், வலதுசாரி (பழமைவாதம், பாரம்பரியம் மற்றும் முதலாளித்துவம்) அல்லது இடதுசாரி சிந்தனையை (சமத்துவ – சார்பு, தாராளவாதம் மற்றும் தொழிலாளர் நலனை) பின்பற்றுகின்றன. மக்களாட்சிக்கான லட்சியத்தை அடைவதற்கு அரசியல் கட்சிகள் அவசியமானவை என்பது உண்மையே என்றாலும், மக்களாட்சி கோட்பாடற்ற, தனிப்பட்ட கட்சிகளின் வளர்ச்சி மற்றும் சர்வாதிகார தலைமையின் கீழ் தனிப்பட்ட கட்சிகளின் எழுச்சி என்பது மக்களாட்சிக்கு ஒரு முக்கியமான சவால் ஆகும். இந்தியா போன்ற பல பன்முக பண்பாடு, மொழி, மத மற்றும் பொருளாதார வேற்றுமை கொண்ட நாடுகளில், நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் மக்களின் பல்வேறுபட்ட நலன்களை அரசியல் கட்சிகள் மட்டுமே பிரதிபலிக்கின்றன. இத்தகைய முதிர்ச்சியடைந்த, மதச்சார்பற்ற நிலைப்பாட்டை மேற்கொள்வது இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகளுக்குப் பொருத்தமானது. இல்லையெனில், இந்தியாவின் மதிப்புயர்வான ஒற்றுமை மற்றும் நிலைத்தன்மையை பாதுக்காக்க முடியாது. நாட்டின் நலனிற்காக பொறுப்புணர்வு மற்றும் கொள்கை ரீதியான கட்சிகள், மக்களாட்சி அமைப்புகளின் நிலைதன்மைக்காக தங்கள் கடமையையும், செயல்பாட்டையும் கையாளுவதில் முதிர்ச்சி மற்றும் பொறுப்புணர்வை காட்டுகின்றன.

**மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு:**
கட்சி முறை மற்றும் மக்களாட்சி ஆகியவற்றிற்கு இடையிலான உறவு, மக்களாட்சியில் எதிர்காட்சிகளின் பங்கு பற்றிய விவாதம் இல்லாமல் முழுமையடையாது. நாட்டில் ஓர் சக்தி வாய்ந்த எதிர்கட்சி அல்லது கட்சிகள் இல்லாமல் மக்களாட்சிக்கு எந்த அர்த்தமும் இல்லை. மக்களாட்சியின் தன்மை ஆளும் கட்சியின் வலிமையினால் மட்டுமே நிர்ணயிக்கப்படுவது அல்ல. எதிர்க்கட்சியின் பங்கு மற்றும் அதன் செயல்பாட்டிலும் உள்ளது.

உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் அசைமச்சர் பதவிக்கான தகுதியையும், சலுகைகளையும் பெறுகிறார். ஓர் பலவீனமான எதிர்க்கட்சி பொறுப்புணர்வற்ற அரசாங்கத்திற்கு அல்லது பெரும்பான்மையின் கொடுங்கோண்மைக்கு வழிவிடுகிறது.

அழுத்தக்குழுக்கள் அல்லது தன்னலக்குழுக்கள் ஆகியவை முக்கியப் பிரச்சனைகள் மற்றும் நிகழ்வுகளில் ஓர் முக்கியப் பங்க வகிக்கின்றன. இவை பொதுவான அரசியல் மற்றும் சமூக நலன்களைக் கொண்ட குழுக்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவை வெளியிலிருந்து வரும் முடிவுகளின் மீது செல்வாக்கு செலுத்துகின்றன. அழுத்தக் குழுக்கள் குறிப்பிட்ட நலன்களுக்காக தன்னார்வ உறுப்பினர்கள் மூலம் ஆதரவு திரட்டுகின்றன அரசியல் கட்சிகள் போலன்றி, அழுத்தக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுவதில்லை.

அழுத்தக்குழுக்கள் அல்லது தன்னலக்குழுக்கள் ஆகியவை முக்கியப் பிரச்சனைகள் மற்றும் நிகழ்வுகளில் ஓர் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவை பொதுவான அரசியல் மற்றும் சமூக நலன்களைக் கொண்ட குழுக்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவை வெளியிலிருந்து வரும் முடிவுகளின் மீது செல்வாக்கு அழுத்தக்குழுக்கள் பல பொதுக் கொள்கை சிக்கல்களால் பல்வேறு வழிமுறைகளை பின்பற்றி அரசாங்கத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே அவை அழுத்தக் குழுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. தொழில் சார்ந்த அழுத்தக் குழுக்கள் என்பவை வணிக நலன்களை, தொழிற் சங்கங்கள், விவசாயிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், மருத்துவர்கள், பண்பாட்டு குழுக்கள் மற்றும் நிறுவன குழுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம். மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கிடையிலான தொடர்பு மற்றும் தொடர்புக்கான ஆதாரமாக செயல்படுவதன் மூலம் இந்திய அரசியல் முறைமையில் அழுத்தக் குழுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்கள் பொதுமக்களின் சமூக, பொருளாதார சிக்கல்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு, அரசாங்கத்தின் நிர்வாகக் கொள்கைகள் மீது செல்வாக்கு செலுத்துகிறார்கள்.

**தேர்தலியல்:**
தேர்தல் பற்றிய ஆய்வு மற்றும் புள்ளிவிவர பகுப்பாய்வே தேர்தலியல் ஆகும். பொது கருத்துக் கணிப்புகள், தேர்தலியலில் ஓர் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. தேர்தலுக்கு முந்தைய கருத்து கணிப்புகள், தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் மற்றும் தேர்தல் முடிவுகள் ஆகியவை இதில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. கருத்துக்கணிப்புகள் மற்றும் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் ஆகியவை தேர்தல்களில் வாக்காளர் விருப்பத்தின் முக்கிய குறியீடாக இருக்கின்றன.

இரண்டுக்கும் இடையோன பிரதான வேறுபாடு, வாக்காளர் வாக்களிக்கும் முன் நடத்தப்படும் கருத்துக்கணிப்பு மற்றும் வாக்குப்பதிவு நடைபெறுகையில் வாக்காளர் வாக்களித்த பின் வாக்குச்சாவடிக்கு வெளியே நடத்தப்படும் கருத்துக்கணிப்பு என்பதாகும். தேர்தலுக்குப் பின் வெளிவரும் கருத்துக்கணிப்பு முடிவுகள் தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்புகளை விட நம்பகமானதாகக் கருதப்படுகிறது.

கருத்துக்கணிப்புகளின் முடிவு உண்மையில் தேர்தல் முடிவுகளை ஒத்திருக்கலாம் அல்லது தவறாகலாம். இருப்பினும், அவை உறுதியற்ற யாருக்கு வாக்களிப்பது என்பதனை தீர்மானிக்காத வாக்காளர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருப்பதுடன் அனைத்து கட்சிகளுக்கும் வாக்களிப்பு நடைமுறைகளிள் சமநிலையை உருவாக்குவதற்கு முக்கியமானதாக இருக்கிறது.

**அரசியல் கட்சி:** தன் உறுப்பினர்களை, பொது அலுவலகத்திற்கு தேர்ந்தெடுப்பதன் மூலம் அரசியல் அதிகாரத்தை பெறும் ஓர் அமைப்பு.

**ஒரு கட்சி முறை:** அரசமைப்பை அடிப்படையாக கொண்டு அரசாங்கம் அமைக்கும் உரிமையை பெற்ற ஓர் அரசியல் கட்சி அல்லது அரசியல் அதிகாரத்தின் மீது தனிப்பட்ட கட்டுப்பாடைக் கொண்டிருக்கும் ஒரே ஒரு அரசியல் கட்சி.

**இரு கட்சி முறை:** இந்த அமைப்பில் இரண்டு கட்சிகள் மட்டுமே அரசியலில் இருக்கும். இவற்றுள் ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் இருக்கும். இந்த முறையில் பெரும்பான்மையை பெறுவதற்கு மிகுந்த வாய்ப்பு உள்ளது. மற்ற கட்சிகள் மிக சிறிய கட்சிகளாகவோ அல்லது நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் இயங்கும் கட்சிகளாகவோ இருக்கும்.

**பலகட்சி முறை:** பல அரசியல் கட்சிகள் அரசாங்க பதவிகளை தனித்தனியாகவோ அல்லது கூட்டணியிலோ கட்டுப்படுத்தும் திறனைக் கொண்டுள்ள ஒரு அமைப்பு.

**வாக்குச்சீட்டு:** வேட்பாளின் பெயர், சின்னம், போன்ற விவகரங்களைக் கொண்ட துண்டுச் சீட்டு.

**இடைத்தேர்தல்:** இரண்டு சட்டமன்ற பொதுத்தேர்தல்களுக்கிடையே ஒரு சட்டமன்ற தொகுதி காலியானாலோ அந்த சட்டமன்ற உறுப்பினர் ராஜினாமா செய்தாலோ, வேறு கட்சிக்கு மாறுவதினால் பதவி நீக்கம் செய்யப்பட்டாலோ அல்லது இறந்து விட்டாலோ அந்த தொகுதியில் நடைபெறும் தேர்தல் இடைத்தேர்தல் எனப்படும். 2010-ம் ஆண்டிலிருந்து இதுவரை 21 இடைத்தேர்தல்கள் நடந்துள்ளன.

**தேர்தல்:** தகுதி வாய்ந்த நபர்களை ஆட்சி அதிகாரத்திற்கு வாக்கெடுப்பின் மூலம் மக்கள் தேர்ந்தெடுக்கும் முறை.

**தேர்தல் ஆணையம்:**

தேர்தல் ஆணையம் தன்னாட்சி பெற்ற ஒரு அமைப்பு மாநில சட்டப்பேரவைகள், மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தவும், மேற்பார்வையிடவும் உருவாக்கப்பட்டுள்ள அமைப்பு

**வாக்குச் சீட்டு பெட்டி**: வாக்குச் சாவடியில் உள்ள வாக்குப் பெட்டியில் அல்லது வாக்களிப்புத் தாள் வாக்காளரால் குறியிட்டு முடிக்கப்பட்ட பிறகு செருகப்படும். வாக்குப்பதிவு துவங்குவதற்கு முன் வாக்குப் பெட்டகம் முத்திரையிடப்பட்டு, எண்ணிக்கை துவங்கும் வரை திறக்கப்படாது.

**கூட்டணி அரசாங்கம்:** தேர்தல் முடிவுகளில் எந்த ஒரு கட்சிக்கும் அறுதிபெரும்பான்மை கிடைக்கவில்லையெனில் ஒன்றிக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒன்றினைந்து அமைக்கும் அரசாகும்.

**தேர்தலியல்** : தேர்தல் அதன் முடிவுகள், அத தொர்பான புள்ளி விவரங்கள் பற்றிய படிப்பு.

**தேர்தல் முறைமை**: தேர்தல்களைப் பற்றிய அனைத்து விதிகளுக்கான பொது பெயர். அதாவது வாக்களிப்பு முறை, எல்லைகள், வாக்காளர்களின் பதிவு, வேட்பாளர், பிரச்சார செலவு, ஒளிபரப்பு முதலியன.

**பெரும்பான்மை அரசாங்கம்** : சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத்தில் ஐம்பது சதவிகித இடங்களுக்கு மேல்கொண்டு அமைக்கும் அரசாங்கம்.

**மக்களாட்சி:** மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சியாகும்.

# 11th அரசியல் அறிவியல்
## அலகு– 11

## தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம்

**வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவத்தின் பொருள் மற்றும் தன்மை**
**வாக்குரிமை மற்றும் தேர்தல் என்றால் என்ன?**

இது பொதுத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான ஒரு உரிமையாகும். “வாக்குரிமை“ எனும் சொல், “சுதந்திரம்“ என்று பொருள் படக்கூடிய “பிராங்க்“ என்ற ஆங்கிலோ – பிரெஞ்சு கலவைச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.

| |
|---|
| இந்திய அரசமைப்பின் பகுதி XV, உறுப்புகள் 324 – 329 தேர்தலைப் பற்றியதாகும். |

தேர்தல் என்பது தங்களின் சார்பாக யாரேனும் ஒருவரை அரசியல் தலைவராகவோ அல்லது பிரதிநிதியாகவோ அரசாங்கத்தில் பங்குபெற தேர்ந்தெடுப்பதற்காக வாக்களிக்கும் நடைமுறையாகும்.

பிரதிநிதித்துவம் என்பது பிறருக்காக பேசும் நடவடிக்கை அல்லது பிறருக்காக செயல்படுதல் அல்லது பிரதிநிதித்துவம் பெறும் நிலையாகும்.

| |
|---|
| மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என இந்திய அரசமைப்பின் உறுப்பு 326 விளக்குகிறது. |

**கற்றலின் நோக்கங்கள்:**

- தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம் பற்றி மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தல்.
- “தேர்தலியல்“ என்னும் சொல்லை விளக்குதல்.
- தேர்தலில் பல்வேறு முறைகளை மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தல்.
- இந்திய தேர்தல் ஆணையத்தைப் பற்றி விழிப்புணர்வு பெறுதல்.
- கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் முக்கியத்துவத்தினை அறிதல்.
- சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்களின் தேவையை பற்றி அறிவுறுத்துதல்.
- அரசியலில் இளைஞர்களின் பங்கை வெளிக்கொணர்தல்

இந்திய அரசமைப்பில் “தேர்தல்கள்“ என்னும் தலைப்பிலான பகுதி XV மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நமது அரசமைப்பினை உருவாக்கியவர்கள் இதில் உள்ள அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இதை அரசமைப்பின் ஓர் பகுதியாக இணைத்தனர். இம்முக்கிய காரணத்தினால் தான் “தேர்தல்“ என்னும் கருப்பொருளுக்கு நமது நாட்டில் அரசமைப்பிலான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னரே “தேர்தல்கள்“ என்பவை பண்டைய ஏதென்ஸ். ரோமாபுரி ஆகியவற்றிலும் போப் ஆண்டவர் மற்றும் ரோமானியப் பேரரசர்கள் தேர்வு ஆகியவற்றிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்கால தேர்தல்களின் தோற்றம் என்பது 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் படிப்படியாக எழுச்சி கண்ட பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் மூலமாகவும், பின்னர் வட அமெரிக்காவிலும் தோன்றியது. பிரதிநிதித்துவ மக்களாட்சியில் தேர்தல்கள் மிகவும் முக்கியமானவையாகும். உங்களது குரல் ஒங்கி ஒலிப்பதற்கு தேர்தலில் வாக்களிப்பதே சிறந்த வழியாகும். சட்டங்களின் மூலமாக அரசியல் கட்சிகள் மக்களை வாக்களிக்க விடாமல் செய்யும் போது தேர்தல்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன என்பது உண்மையாகும். தேர்தல்கள் மற்றும் பிரதிநிதித்துவம் ஆகியவை அரசாங்கத்தை உருவாக்குவதன் அடிப்படையாகும்.

**மக்களாட்சியின் வாக்காளர் முறைமை:**

ஓர் மக்களாட்சியின் வாக்காளர் முறைமையின் மிகவும் அடிப்படையான இயல்புகளைப் பற்றி நாம் கற்றுக்கொள்வோம். ஓர் மக்களாட்சியின் வாக்காளர் முறைமை என்பது பின்வருமாறு உள்ளதாகும்.




மக்களாட்சியின் வாக்காளர் முறைமையின் இயல்புகள்

**தேர்தல்கள் ஏன் நமக்கு தேவைப்படுகின்றன?**

தேர்தல்கள் இல்லாத ஓர் மக்களாட்சியை நாம் கற்பனை செய்து பார்ப்போம். தேர்தல்களே இல்லாத மக்களாட்சி என்பது ஒருவேளை சாத்தியமாவதற்கு மக்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் ஒன்று கூடி அனைத்து முடிவுகளையும் எடுக்க வேண்டும். ஓர் மிகப்பெரிய சமூகத்தில் இது சாத்தியமாகாது. மேலும் அனைத்து விவகாரங்களிலும் முடிவெடுப்பதற்கான நேரமும், அறிவுத்திறனும் அனைவருக்கும் இருப்பது சாத்தியமில்லை. இப்பிரச்சனைகளை மக்கள் தீர்ப்பதாக நாம் கருதுவோம் எனில் அங்கு தேர்தல்கள் தேவைப்படாது. அதனை நாம் மக்களாட்சி என அழைக்கலாமா?

மக்கள் தங்களின் பிரதிநிதிகளை விரும்புகின்றனரா? இல்லையா? என நாம் எவ்வாறு அறிந்து கொள்ளலாம்? மக்களின் விருப்பங்களுக்குத் தகுந்தவாறு பிரதிநிதிகள் ஆட்சி

செய்கிறார்களா என்பதனை நாம் எவ்வாறு உறுதிப்படுத்தலாம்? மக்கள் விரும்பாத பிரதிநிதிகள் பதவியில் இருக்கிறார்களா என்பதனை நாம் எவ்வாறு உறுதிப்படுத்தலாம்? இதற்காக குறிப்பிட்ட இடைவெளிகளில் மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும், விருப்பப்படி அவர்களை மாற்றுவதற்கும் தகுந்த வழிமுறைகள் தேவைப்படுகின்றன. அதுவே தேர்தலாகும் ஆகவே தற்காலத்தில் எவ்வகையான பிரதிநிதித்துவ அரசாங்கத்திற்கும் தேர்தல் அடிப்படையானதாகும். ஆகையால் பெரும்பாலான மக்களாட்சிகளில் மக்கள் தங்களின் பிரதிநிதிகள் மூலமாகவே ஆட்சி செய்கின்றனர்.

**ஓர் தேர்தலில் வாக்காளர் பல்வேறு தேர்வுகளை மேற்கொள்கிறார். அவையாவன:**

- தங்களுக்கான சட்டங்களை உருவாக்குபவரை தேர்வு செய்வர்.
- அரசாங்கத்தை அமைத்து பெரும்பான்மை முடிவுகளை எடுப்போரைத் தேர்வு செய்வர்.
- அரசாங்கம் மற்றும் சட்டமியற்றுதலில் வழிகாட்டக் கூடிய கொள்கைகளைக் கொண்ட கட்சியைத் தேர்வு செய்வர்.

**எது தேர்தலை மக்களாட்சியிலானதாக ஆக்குகிறது?**

- அனைவருக்கும் தேர்வு செய்யும் வாய்ப்பு இருக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு வாக்கு மற்றும் ஒவ்வொரு வாக்கிற்கும் சமமமான மதிப்பு என்பது இதன் பொருளாகும்.
- அரசியல் கட்சிகளால் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் சுதந்திரமாகத் தேர்தலில் போட்டியிடுவதுடன் வாக்காளர்களுக்குத் தகுந்தவாறு உண்மையான தேர்வுகளுக்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.
- அத்தேர்வுகள் தகுந்த இடைவெளிகளில் வழங்கப்பட வேண்டும். ஒருசில ஆண்டுகளுக்கு ஒருமுறை தகுந்த இடைவெளியில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.
- மக்களால் விரும்பப்படும் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- மக்கள் தங்களின் விருப்பங்களுக்குத் தகுந்தவாறு தேர்ந்தெடுக்கும் வகையில் சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் என்பது ஓர் முறையான முடிவாக்கக நடைமுறையாகும். அதில் மக்கள் பொதுப்பதவி வகிப்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்தலின் மூலமாக சட்டமன்றங்களில் உள்ள பதவிகள் மட்டுமல்லாமல் ஆட்சித்துறை, நீத்துறை மற்றும் வட்டார, உள்ளாட்சி அரசாங்கங்களில் உள்ள பதவிகளும் நிரப்பப்படுகின்றன.

| |
|---|
| தேர்தல்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் மற்றும் முடிவுகளை கற்றறியும் கல்வியே தேர்தலியல் ஆகும். |

**பிரதிநிதித்துவத்தின் வகைகள் / தொகுதிகளுக்கான இடஒதுக்கீடு:**

**தேர்தல் முறைமை – பன்மைத்துவம் / பெரும்பான்மை முறைமைகள்:**

பன்மைத்துவம் / பெரும்பான்மை முறைமைகளின் கொள்கைகள் மிகவும் எளிமையானவையாகும். மக்கள் வாக்களித்தபிறகு வாக்குகள் எண்ணப்பட்டு அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் அல்லது கட்சிகள் வெற்றி பெற்றவையாக அவிக்கப்படுகின்றன. இருப்பினும் இதன் நடைமுறைகள் மாறுபடுகின்றனது. ஆகையால்

ஐந்து வகையான பன்மைத்துவ / பெரும்பான்மை முறைமைகளை அடையாளப்படுத்தலாம்.

1. முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP)
2. தொகுதி வாக்கு (BV)
3. கட்சித் தொகுதி வாக்கு (PBV)
4. மாற்று வாக்கு (AV)
5. இரு சுற்று முறை (TRS)

**முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP):**

முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் என்பது பன்மைத்துவம் / பெரும்பான்மை முறையின் எளிமையான வடிவமாகும். இது ஓர் உறுப்பினர் தொகுதிகள் மற்றும் வேட்பாளரை மையப்படுத்துவதுடன் வாக்களித்தலும் பயன்படுத்தப்படுகிறது. எப்.பி.டி.பி. முறைகள் அடிப்படையில் இங்கிலாந்தில் காணப்பட்டன. அது தவிர இங்கிலாந்தின் வரலாற்று அடிப்படையிலான ஆதிக்கத்தில் இருந்த நாடுகளிலும் காணப்படுகின்றன. இங்கிலாந்து தவிர அமெரிக்கா, கரீபிய நாடுகள், வங்கதேசம், மியான்மர், இந்தியா, மலேசியா, நேபாளம் மற்றும் தெற்கு பசிபிக் பகுதியில் உள்ள சில நாடுகளிலும் இம்முறை காணப்படுகிறது.

FPTP (எப்.பி.டி.பி) என்பது பன்மைவாத / பெரும்பான்மைவாத வாக்காளர் முறையில் எளிமையான வடிவமாகும். இதில் ஒரு வேட்பாளர் செல்லத் தகுந்த வாக்குகளில் பிற வேட்பாளர்களை விட அதிக வாக்குகளை பெற்றிருந்தாலே வெற்றி பெற்றவர் ஆவார். அறுதிப் பெரும்பான்மை பெற வேண்டிய அவசியமில்லை. இந்த முறை ஒரு உறுப்பின் தொகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. இதில் வாக்காளர்கள் கட்சிக்காக அல்லாமல் வேட்பாளருக்காக வாக்களிக்கின்றோம்.

**தொகுதி வாக்கு (BV)**

தொகுதி வாக்கு என்பது அரசியல் கட்சிகளே இல்லாத அல்லது பலவீனமாக உள்ள நாடுகளில் காணப்படுவதாகும். கேமன் தீவுகள், பாக்லாந்து தீவுகள், கர்ன்சே, குவைத், லாவோஸ், லெபனான், மாலத்தீவுகள், பாலஸ்தீனம், சிரிய அரபுக் குடியரசு ஆகியவை தொகுதிவாக்கு முறையிலான வாக்காளர் முறைமைகளைப் பின்பற்றுகின்றன.

தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் திறனை வாக்காளர்கள் தக்கவைத்துக் கொள்வதால் தொகுதிவாக்கு முறை பாராட்டப்படுகிறது. அத்துடன் தகுந்த முறையில் நில அமைப்பின் அமைக்கப்பட்ட மாவட்டங்களும் அனுமதிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் எப்.பி.டி.பியுடன் ஒப்பிடுகையில் அரசியல் கட்சிகளின் பங்கு அதிகரிப்பதுடன் அதிக இணக்கம் மற்றும் அமைப்பு ரீதியான கட்சிகளை வலுப்படுத்துவதாக உள்ளது.
அதிக இணக்கம் மற்றும் அமைப்பு ரீதியான கட்சிகளை வலுப்படுத்துவதாக உள்ளது.

தொகுதி வாக்கு என்பது ஓர் பன்மைத்துவ / பெரும்பான்மை முறைமையில் பல் உறுப்பினர் மாவட்டங்களில் பயன்படுத்தப்படுவதாகும். இதில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களுக்குத் தகுந்த வாக்குகள் வாக்காளர்களுக்கு இருக்கும். அதிகபட்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் வெற்றி பெறுகிறார். பொதுவாக கட்சிகளைக் காட்டிலும் வேட்பாளருக்காக மக்கள்

வாக்களித்தாலும் பெரும்பாலான முறைமைகளில் மக்கள் தங்களின் விருப்பத்திற்குத் தக்கவாறு வாக்களிக்கின்றனர்.

**கட்சித் தொகுதி வாக்கு (PBV)**

பி.பி.வி. என்பது பயன்படுத்துவதற்கு எளிதானதாகும். இது வலுவான கட்சி வேட்பாளர்களில் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் பெரும் வகையில் கலவையாக அமைந்துள்ளது. இது சமநிலையிலான இன அடிப்படை பிரதிநிதித்துவத்திற்கும் உதவுகிறது. டிஜிபௌடி, சிங்கப்பூர், செனகல், துனீசியா போன்ற நாடுகள் பி.பி.வி. முறையைப் பயன்படுத்துகின்றன.

**மாற்று வாக்கு (AV):**

இம்முறையில் வாக்காளர்கள் தங்களின் முதல் விருப்பத்தேர்வை விட வேட்பாளர்களுக்கு இடையே முன்னுரிமை அளிக்கின்றனர். இதனால் இது “முன்னுரிமை வாக்கு“ எனவும் அழைக்கப்படுகிறது. மாற்றுவாக்கு முறை ஆஸ்திரேலியா, பிஜி, பாப்புவா கினியா ஆகிய நாடுகளில் பின்பற்றப்படுகிறது. பல வேட்பாளர்கள் மொத்தமாகப் பெற்ற வாக்குகளை மாற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த விருப்பமும் இணைக்கப்பட்டு பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது.

இருசுற்று முறை என்பது ஓர் பன்மைத்துவ / பெரும்பான்மை முறையாகும். இதில் முதல் சுற்றில் எக்கட்சி அல்லது வேட்பாளருக்கும் அறுதிப்பெரும்பான்மை (50 சதவீதத்திற்கு மேல் ஒரு சதவீதமேனும் பெற்றிருத்தல்) பெறாத நிலையில் இரண்டாவது சுற்று தேர்தல் நடைபெறும். இரு சுற்று முறை எப்போது பெரும்பான்மை, பன்மைத்துவ வடிவம் எடுக்குமெனில், ஒருவேளை இரண்டாம் சுற்றில் இரண்டு வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடும் நிலையில் அதிக வாக்குகள் பெற்று வெற்றிபெறுபவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதில் அவர்கள் அறுதிப்பெரும்பான்மை பெற்றிருந்தாலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

**இரு சுற்று முறை (டி.ஆர்.எஸ்):**

இரு சுற்று முறையின் முக்கிய இயல்பே அதன் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஒரே தேர்தலாக அல்லாமல் ஒரு வாரம் அல்லது பதினைந்து நாட்கள் இடைவெளியில் இரு சுற்றுகளாக நடைபெறுகிறது. இது தேசிய சட்டமன்ற உறுப்பினர் தேர்விற்கும், குடியரசுத் தலைவருக்கான நேரடி தேர்தலுக்கும் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. இம்முறை மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ, கபோன், மாலி மௌரிடானியா, ஹைதி,ஈரான், வியட்நாம், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகிறது.

**சிறுபான்மையினர் பிரதிநிதித்துவத்தின் பல்வேறு முறைகள்:**
**அரசியலில் போட்டி இருப்பது நன்மையானதா?**

தேர்தல்கள் என்பவை அரசியல் போட்டி தொடர்பானவையாகும். இப்போட்டி பல்வேறு வடிவங்களை எடுக்கிறது. இதில் அரசியல் கட்சிகளுக்கு இடையேயான போட்டி மிகவும் வெளிப்படையான வடிவமாகும். தொகுதி அளவில் பல்வேறு வேட்பாளர்களுக்கு இடையேயான போட்டி எனும் அளவில் உள்ளது. போட்டிகள் இல்லையெனில் தேர்தல்கள் அர்த்தமற்றவையாகின்றன. தேர்தலில் ஏற்படும் போட்டியால் ஒவ்வொரு பகுதியிலும்

ஒற்றுமையின்மை மற்றும் பிரிவினைவாத உணர்வுகள் தோன்றினாலும், சீரான தேர்தல் போட்டிகள் அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கிறது. மக்கள் எழுப்ப விரும்பும் பிரச்சனைகளைத் தாங்கள் எழுப்பினால், தாங்கள் பிரபலமடைவதுடன் வரக்கூடிய தேர்தலில் தங்களின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகும் என்பதை அரசியல் தலைவர்கள் அறிவர். இருப்பினும் தங்களது பணியின் மூலமாக வாக்காளர்களை திருப்திபடுத்தவில்லையெனில் மீண்டும் அவர்களால் வெற்றிபெற இயலாது.

**நமது தேர்தல் முறை என்ன?**

இந்திய தேர்தல்கள் மக்களாட்சி முறையிலானது என நாம் கூறலாமா? இக்கேள்விக்கு பதில் கூறுவதற்கு நாம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக்காலமும் முடிவுக்கு வருகிறது. பின்னர் மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவை கலைக்கப்படுகிறது. அனைத்து தொகுதிகளுக்கும் ஒரே நேரத்திலோ, அதாவது ஒரே நாளிலோ அல்லது ஒரு சில நாட்களிலோ தேர்தல் நடைபெறுகிறது. இதுவே பொதுத்தேர்தல் எனப்படுகிறது. சில நேரங்களில் ஒரு தொகுதியில் உள்ள உறுப்பினரின் மரணம் அல்லது பதவி விலகலால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப தேர்தல் நடைபெறுகிறது. இது இடைத்தேர்தல் என அழைக்கப்படுகிறது.

**தேர்தலுக்கான தொகுதிகள்:**

நீங்கள் தமிழக மக்கள் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இதனை எவ்வாறு செய்கிறார்கள் என நீங்கள் வியந்திருக்கலாம். தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மக்கள் ஒவ்வொருவரும் வாக்களித்து தேர்ந்தெடுக்கிறார்களா நமது நாட்டில் இடம் சார்ந்த பிரதிநிதித்துவ முறையை நாம் பின்பற்றுகிறோம். தேர்தலுக்காக நம் நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளை நாம் தேர்தலுக்கான தொகுதிகள் என அழைக்கிறோம். ஓர் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வாக்களித்து தங்களுக்காக ஓர் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

மக்களவைத் தேர்தலுக்காக நமது நாடு 543 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி நாடாளுமன்ற உறுப்பினர் என அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு வாக்கிற்கும் சமதிப்பு என்பது மக்களாட்சியிலான தேர்தலின் இயல்புகளில் ஒன்றாகும். இதனால் தான் ஒவ்வொரு தொகுதியும் கிட்டத்தட்ட சமமான மக்கள் தொகை உள்ளதாக இருக்க வேண்டும் என அரசமைப்பு கூறுகிறது. அதேபோல ஒவ்வொரு மாநிலமும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்நிலையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி சட்டப்பேரவை உறுப்பினர் அல்லது எம்.எல்ஏ. (M.L.A) என அழைக்கப்படுகின்றார். அதே கொள்கை பஞ்சாயத்து மற்றும் நகர்புற உள்ளாட்சி தேர்தல்களில் பின்பற்றப்படுகிறது. ஒவ்வொரு கிராமம் அல்லது நகரமும் தொகுதிகளைப் போன்று வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வார்டும் கிராமம் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கிறது. சில சமயங்களில் இத்தொகுதிகள் ஓர் இடமாகக் கருதப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் அவையில் ஓர் இடத்தின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

**தனித்தொகுதி:**

ஓர் குடிமகனுக்கு தனது பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்கும், தான் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் உள்ள உரிமையை அரசமைப்பு வழங்குகிறது. வெளிப்படையான தேர்தல் போட்டியில் சில நலிந்த பிரிவினருக்கு மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கு வாய்ப்புகள் சிறப்பாக அமைவதில்லை. அவர்களுக்கு பிறருக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வளங்கள், கல்வியறிவு மற்றும் போட்டியிடுவதற்குத் தேவையான தொடர்புகள் இருப்பதில்லை. இவ்வாறு இருப்பின் நமது மக்கள் தொகையில் குறிப்பிடத்தகுந்த பிரிவினருக்கு நமது நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் அனைவருக்கும் இடமில்லாத நிலை ஏற்படுகிறது. இது நமது மக்களாட்சியை பிரதிநிதித்துவம் வழங்காததாகவும்,குறைந்த மக்களாட்சித் தன்மையுடையதாகவும் மாற்றுகிது.

மேற்கூறியவற்றால் நமது அரசமைப்பினை உருவாக்கியவர்கள் நலிந்த பிரிவினருக்கு சிறப்பு அமைப்பாக தனித்தொகுதிகளைப் பற்றி சிந்தித்தனர். சில தொகுதிகள் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வகை இட ஒதுக்கீடு முறை பின்னர் பிற நலிந்த பிரிவினருக்கும் மாவட்ட மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**வரையறை:**

மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைக்கான தொகுதிகள் வரையறுக்கப்படுகின்றன. தொகுதிகளை வரையறை செய்யும் போது அதன் புவியமைப்பு, இயற்கையான இயல்புகள், நிர்வாக அமைப்புகளின் எல்லைகள், தகவல் தொடர்பு மற்றும் பொதுமக்களின் வசதி ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**தொகுதி வரையறை சட்டங்கள்**

முதல் வரையறை ஆணையச் சட்டம், 1952. இரண்டாவது வரையறை ஆணையச் சட்டம், 1963.

மூன்றாவது வரையறை சட்டம், 19073.
நான்காவது வரையறை சட்டம், 2002.

**வாக்காளர் பட்டியல்:**

தொகுதிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கையாக யார் வாக்களிக்கலாம். யாரெல்லாம் வாக்களிக்க முடியாது என்பதனை முடிவு செய்ய வேண்டும். இம்முடிவினை யாரேனும் எடுப்பதற்கு கடைசி நாள் வரை காத்திருக்க இயலாது. ஆகவே மக்களாட்சி தேர்தலில் தகுதிவாய்ந்த வாக்காளர்களின் பட்டியல் தேர்தலுக்கு நெடுநாள் முன்னரே தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்படுகிறது. இதுவே அதிகாரப்பூர்வமாக "வாக்காளர் பட்டியல்" என அழைக்கப்படுகிறது.

பஞ்சாயத்துகளைப் போன்று மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் இருக்க வேண்டாமா?

எவ்வகையான வேறுபாடுகளையும் தாண்டி தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான சமவாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே


மக்களாட்சியிலான தேர்தலின் முதல் நிபந்தனையாகும். நமத நாட்டில் பதினெட்டு வயது நிரம்பிய குடிமக்கள் அனைவரும் தேர்தலில் வாக்களிக்கலாம். ஒருவரின் சாதி, மதம் மற்றும் பாலின பாகுபாடின்றி அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை உள்ளது.

அனைத்து குடிமக்களின் பெயர்களையும் கேட்டுப் பெறுவது, அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது ஓர் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இடம் பெயர்ந்தோர் மற்றும் இறந்த வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படுகின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வாக்காளர் பட்டியல் திருத்தியமைக்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாக்காளர்கள் இதனை தாங்கள் வாக்களிக்கச் செல்லும் போது எடுத்துச் செல்ல வேண்டும். இருப்பினும் வாக்காளர் அடையாள அட்டை என்பது கட்டாய ஆவணமல்ல. இதனைத் தவிர ஆதார் அட்டை, குடிமை வழங்கல் அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றின் அசல் சான்று ஆகியவற்றினை வாக்களிப்பதற்கான ஆவணமாக காட்டலாம்.

**இந்தியாவில் தேர்தல் நடைமுறை:**

- தொகுதிகளை மறுவரையறை செய்தல்
- தேர்தல் அறிவிப்பு
- வேட்பு மனுவினை தாக்கல் செய்தல் மற்றும் திரும்பப் பெறுதலைப் பற்றிய தேர்தல். ஆணைத்தின் அறிவிப்பு
- போட்டியிட விரும்பும் வேட்பாளர் வேட்புமனு தாக்கல் செய்தல்
- வேட்பு மனுக்களை சரிபார்த்து ஏற்றல் அல்லது நிராகரித்தல்
- தேர்தல் பரப்புரை
- வாக்களித்தல் நடைமுறை
- வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவுகளை அறிவித்தல்

**இந்தியாவில் நடக்கும் தேர்தல்கள் பற்றிய அம்சங்கள்.**



**வேட்பாளர்கள் நியமனம்:**
ஓர் மக்களாட்சி அடிப்படையிலான தேர்தலில் உண்மையான விருப்பத் தேர்வை மேற்கொள்ள மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். எவரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு எவ்விதத் தடையும் இல்லாத சூழலில் இது நிகழும். இதனையே நமது அமைப்பும் வழங்குகிறது. வாக்காளராக இருப்பதற்காக தகுதியுடைய எவரும் தேர்தலில் வேட்பாளராகலாம். தேர்தலில் 'வேட்பாளராகலாம். தேர்தலில் வாக்களிப்பதற்கான குறைந்தபட்ச வயது பதினெட்டு எனில், வேட்பாளராவதற்கான குறைந்தபட்ச வயது இருபத்து ஐந்து என்பதே இதிலுள்ள ஒரே வித்தியாசமாகும்.அரசியல் கட்சிகள் வேட்பாளரை நியமிக்கும் போது அவர் கட்சியின் சின்னம் மற்றும் ஆதரவினைப் பெறுகிறார். கட்சியின் வேட்பாளர் நியமனத்தினை "கட்சியின் நியமனச்சீட்டு" என அழைக்கின்றனர்.

வேட்பு மனு தாக்கல் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் பிணைத்தொகையாகக் குறிப்பிட்ட தொகையினை செலுத்த வேண்டும். உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி கீழ்க்கண்ட முழு விவரங்களைக் கொண்ட சட்டப்பூர்வ பிரகடனத்தினை ஒவ்வொரு வேட்பாளரும் மேற்கொள்ள வேண்டும்.

- வேட்பாளருக்கு எதிராக நிலுவையில் உள்ள கடுமையான குற்றவியல் வழக்குகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் விவரங்களைத் தருதல்.
- வேட்பாளர்கள் தங்களுடைய அல்லது தங்களது குடும்பத்தாருடைய சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விளக்கங்கள் தருதல்.
- வேட்பாளரின் கல்வித் தகுதிகள்.

இத்தகவல்கள் மக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும். இவ்வாறு வேட்பாளர்களால் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் வாக்காளர்கள் தங்களின் முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

**தேர்தல் பரப்புரை:3**

தேர்தலின் முக்கிய நோக்கமே மக்கள் தங்களுக்கு விருப்பமான பிரதிநிதிகள், அரசாங்கம் மற்றும் கொள்கைகளை தேர்த்தெடுப்பதற்கான வாய்ப்பளிப்பதாகும். ஆகவே யார் சிறந்த பிரதிநிதியாக இருப்பர், எக்கட்சி சிறந்த அரசாங்கத்தை அமைக்கும் அல்லது எது சிறந்த கொள்கை ஆகியவற்றினைப் பற்றிய சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விவாதம் அவசியமாகும். இதுவே தேர்தல் பரப்புரையின் போது நிகழ்கிறது.

நமது நாட்டில் இத்தகைய பரப்புரைகள் இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் நடக்கும் நாள் வரை இரு வாரகாலத்திற்கு நடைபெறுகிறது. இக்கால கட்டத்தில் வேட்பாளர்கள் வாக்காளர்களிடம் சென்று வாக்கு சேகரித்தல், அரசியல் தலைவர்கள் தேர்தல் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுதல் மற்றும் அரசியல் கட்சிகள் தங்களின் ஆதரவாளர்களைத் திரட்டுதல் ஆகியவை நிகழும். இக்கால கட்டத்தில் தான் நாளேடுகள், சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் தேர்தல் தொடர்பான செய்திகள் மற்றும் விவாதங்கள் இடம் பெறுகின்றன. தேர்தல் பரப்புரை என்பது இந்த இரு வாரங்களுடன் நிறைவு பெறுவதில்லை. அரசியல் கட்சிகள் தேர்தல்கள் நடைபெறுவதற்கு பல மாதங்களுக்கு முன்பிருந்தே தங்களை தயார் செய்கின்றன.

தேர்தல் பரப்புரையின் போது அரசியல் கட்சிகள் முக்கியப் பிரச்சனைகளின் மீது பொது மக்களின் கவனத்தைத் திருப்புகின்றன. அவர்கள் மக்களிடம் அப்பிரச்சனைகளைப் பற்றி பேசுவதன் மூலம் அவர்களை ஈர்த்து அதனடிப்படையில் தங்கள் கட்சிக்கு

வாக்களிக்குமாறு செய்வர். ஓர் மக்களாட்சியில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் விரும்பும் வகையில் தேர்தல் பரப்புரையை சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும். இருப்பினும் சில நேரங்களில் ஒவ்வொரு அரசியல் கட்சியும், வேட்பாளரும் போட்டியிடுவதற்க ஏற்ற நியாயமான மற்றும் சமமான வாய்ப்பினை உறுதி செய்யும் வகையில் பரப்புரைகளை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்.

நமது தேர்தல் சட்டங்களின் படி ஓர் கட்சி அல்லது வேட்பாளர் கீழ்க்கண்டவற்றினை செய்ய முடியாது

- வாக்காளர்களுக்கு கையூட்டு அளித்தல் அல்லது அச்சுறுத்துதல்
- சாதி மற்றும் மதத்தின் பெயரால் வாக்களிக்கும்படி வேண்டுதல்
- தேர்தல் பரப்புரைகளுக்கு அரசாங்கத்தின் வளங்களை பயன்படுத்துதல்.

இவ்வாறு ஒருவேளை அவர்கள் செய்யும்போது, அவர்கள் தேர்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னரும் நீதிமன்றம் அத்தேர்தலை நிராகரித்து உத்தரவிடலாம். சட்டங்களுடன் மேலும் கூடுதலாக, நமது நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் தேர்தல் பரப்புரைகளுக்கான நன்னடத்தை விதிமுறைகளை ஏற்றுக் கொண்டுள்ளன.

அதன்படி கீழ்க்கண்டவற்றினை ஓர் கட்சி அல்லது வேட்பாளர் செய்ய முடியாது.

- தேர்தல் பரப்புரைக்காக மதவழிபாட்டுத் தலங்களைப் பயன்படுத்துதல்.

- தேர்தலுக்காக அரசு வாகனங்கள், விமானங்கள் மற்றும் அரசு அலுவலர்களைப் பயன்படுத்துதல்.

- தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் அமைச்சர்கள் எவ்வகைத் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுதல், முக்கிய கொள்கை முடிவுகளை எடுத்தல், பொது சேவை வசதிகளுக்கான வாக்குறுதி அறிவித்தல் போன்றவற்றினை செய்ய கூடாது.

**சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள்:**

சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் நடைமுறையை உறுதிப்படுத்துவதே ஓர் அரசியல் முறைமையின் உண்மையான சோதனையாகும். நாம் மக்களாட்சியை நடைமுறைப்படுத்த விரும்பினால் அதற்கு தேர்தல் முறையானது நடுநிலையாகவும், வெளிப்படையானதாகவும் இருத்தல் முக்கியமானதாகும். வாக்காளர்களின் விருப்பங்கள் தேர்தல் முடிவுகளின் மூலம் சட்டபூர்வமாக வெளிப்படுவதற்குத் தேர்தல் முஜற அனுமதிக்க வேண்டும், இந்தியாவில் நடைபெறம் தேர்தல்கள் அடிப்படையில் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுகின்றன. தேர்தலில் வெற்றிபெறும் கட்சி ஆட்சி அமைக்கிறது. இதற்கு எதிர்க்கட்சிகளை விட இக்கட்சியினை மக்கள் தேர்ந்தெடுத்ததே அதற்குக் காரணமாகும். ஒவ்வொரு தொகுதியிலும் இது உண்மையாக இருக்காது. ஒரு சில வேட்பாளர்கள் பண பலம் மற்றும் நியாயமற்ற வழிமுறைகளின் மூலமாக வெற்றி பெறுகின்றனர். இருப்பினும் பொதுமக்களின் விருப்பத்தை பிரதிபலிப்பதாகவே ஒட்டுமொத்த பொதுத்தேர்தல் முடிவுகள் இதுவரை இருந்துள்ளன. இருப்பினும் மேலும் ஆழமான வினாக்கள் எழுப்பப்படின், அக்கட்சி வேறு மாதிரியாக உள்ளது. உண்மையான அறிவுத்திறன் அடிப்படையில் மக்களின் முன்னுரிமைகள் உள்ளனவா? வாக்காளர்கள் உண்மையாகவே தேர்த்தெடுக்கும் வாய்ப்புகளைப் பெறுகின்றனரா? தேர்தல் என்பது

உண்மையில் அனைவருக்கும் சமமான களமாக உள்ளதா? ஓர் சாதாரண குடிமகன் தேர்தலில் தான் வெற்றி பெறுவோம் என நம்பலாமா?

**இவ்வகையான வினாக்கள் இந்திய தேர்தல்களில் உள்ள குறைபாடுகளையும், சவால்களையும் நமது கவனத்திற்கு கொண்டு வருகின்றன. அவையாவன:**

- அதிக பணபலமுள்ள வேட்பாளர்கள் மற்றும் கட்சிகள் தங்களின் வெற்றியைப் பற்றி உறுதியற்ற நிலையில் இருப்பினும் சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சைகளை விட மிகப்பெரிய மற்றும் நியாயமற்ற சாதகமான நிலையில் இருப்பர்.
- குற்றப்பின்னணி கொண்ட வேட்பாளர்கள் தேர்தல் போட்டியில் பிறரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு பெரிய கட்சிகளின் சார்பாகப் போட்டியிடும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.
- சில குடும்பங்கள் அரசில் கட்சிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனால் அக்கட்சியின் சார்பாகப் போட்டியிடும் வாயப்புகள் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

இந்தியாவின் முதலாவது பொதுத் தேர்தல்கள் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியவை.

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் 1951 – 52ம் ஆண்டில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்று முதலாவது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டது. மொத்தமுள்ள 489 மக்களவை இடங்களில் காங்கிரஸ் கட்சி 364 இடங்களில் வெற்றி பெற்றது. இது மொத்த வாக்குப்பதிவில் 45 சதவீதமாகும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாமிடம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவியேற்றார். இத்தேர்தலில் 67.6 சதவீத வாக்குப்பதிவு நடைபெற்றது. 54 கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன. ஏறத்தாழ நான்கு மாதங்கள் தேர்தல் நடைபெற்றது. அக்டோபர் 25, 1951, முதல் பிப்ரவரி 21, 1952 வரை இத்தேர்தல்கள் நடந்தன. 26 இந்திய மாநிலங்கள் மற்றும் 401 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

- சாதாரண குடிமக்களுக்குத் தேர்தல்கள் குறைவான வாய்ப்புகளையே வழங்குகிறது. ஏனெனில் பெரும்பான்மையான கட்சிகள் ஏறத்தாழ ஒரே மாதிரியான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்டுள்ளன.
- பெரிய கட்சிகளை ஒப்பிடுகையில் சிறிய கட்சிகளும், சுயேட்சை வேட்பாளர்களும் பெரும் பின்னடைவைச் சந்திக்கின்றனர்.

இத்தகைய சவால்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல் பல வலுவான மக்களாட்சிகளிலும் காணப்படுகின்றன. இவ்வாறான ஆழமான பிரச்சனைகள் பற்றி மக்களாட்சியின் மீது நம்பிக்கையுள்ளவர்கள் கவனம் செலுத்துகின்றனர். இதனால் தான் குடிமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்கள் நமது தேர்தல் முறைமையில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ள கோரிக்கை வைக்கின்றன. ஓர் மக்களாட்சியில், தேர்தல் நடைமுறை என்பது யுக்தி அடிப்படையில் பங்காற்றுகிறது. ஓர் சாதாரண மனிதனுக்கு தனது பிரதிநிதியாக நாடாளுமன்றத்திற்குச் சென்று தனது சுதந்திரம் மற்றும் சொத்துக்களை கட்டுப்படுத்தக்கூடிய வகையிலான சட்டங்களை இயற்றுவரைப் பற்றிய முழுமையான தகவல்களை அறிந்து கொள்ளும் அடிப்படையான உரிமை உள்ளது.

மக்களாட்சியில் தகவல்களைப் பெறும் உரிமை என்பது முழுவதுமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அது மக்களாட்சி எனும் கருத்தாக்கத்திலிருந்து வெளிப்படகூடிய இயற்கை உரிமையாகும்.

இந்திய அரசமைப்பின் உறுப்ப 19(1) (அ) பேச்சு மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரத்திற்கான உரிமையினை வழங்குகிறது. வாக்காளர்களின் பேச்சு மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரமானது வாக்களித்தலின் மூலமாக வெளிப்படுகிறது. அதாவது வாக்காளர்கள் தங்கள் வாக்கினை செலுத்துவதன் மூலமாக தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர். இதற்காக தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளரைப் பற்றிய தகவல்கள் அவசியமாகும். பொதுமக்கள் தங்களின் பிரதிநிதியாக சட்டத்தினை மீறுபவர்களை சட்டத்தினை உருவாக்குபவர்களாக தேர்ந்தெடுப்பதற்கு முன் சிந்தித்து செயல்பட வேண்டும்.

**இந்திய தேர்தல் ஆணையம்:**


இந்திய அரசமைப்பின் உறுப்பு 324 ஓர் தேர்தல் ஆணையத்தினை அமைப்பதை பற்றி விளக்குகிறது. இது சுதந்திரமாகவும், நடுநிலையாகவும், ஒழுங்கான முறையிலும் தேர்தல்களை நடத்துகிறது. இவ்வாணையமானது நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களை மேற்பார்வையிட்டு, வழிகாட்டுவதுடன் தேர்தலையும் நடத்துகிறது.

**தேர்தல் ஆணையம் - ஓர் சுதந்திரமான அமைப்பு:**

இந்திய தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டதன் நோக்கமே ஓர் நிரந்தரமான மற்றும் சுதந்திரமான தேர்தல் அமைப்பு அவசியம் என்பதுடன் ஆட்சியாளர்கள் மற்றும் ஆளுங்கட்சியின் அரசியல் அழுத்தத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாகத் தேர்தலை நடத்துவதற்காகும். அத்துடன் நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத்தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களை நடத்தும் பொறுப்பும் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு:**

| |
|---|
| 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 16வது மக்களவைத் தேர்தலில் 9,30,000 வாக்குச் சாவடிகளில் 553 மில்லியன் வாக்காளர்களுக்கு மேல் வாக்களித்தனர். இந்தியாவிலுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையானது அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் மேற்கு ஐரோப்பாவின் கூட்டு மக்கள் தொகையினை விட அதிகமாகும். இந்தியாவில் 30 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக ஒரு கட்சி பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. |



## தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் விவரங்கள்:

| தேர்தலின் எண்ணிக்கை | சபையின் பதவிக்காலம் | தேர்தல் தேதிகள் |
|---|---|---|
| 1. | 1952 – 1957 | 1952 ஜனவரி 2, 5, 8, 9, 11, 12, 16, 21 மற்றும் 25 (9 நாட்கள்) |
| 2. | 1957 -1962 | 1957 மார்ச் 1, 4. 6, 8 மற்றும் 11 (5 நாட்கள்) |
| 3. | 1962 - 1967 | 1962 பிப்ரவரி 17, 19, 21 மற்றும் 24 (4 நாட்கள்) |
| 4. | 1967 – 1971 | 1967 பிப்ரவரி 5, 16 மற்றும் 21 (3 நாட்கள்) |
| 5. | 1971 – 1976 | 1971 மார்ச் 1, 4 மற்றும் 7 (3 நாட்கள்) |
| 6. | 1997 – 1980 | 1977 ஜீன் 12 மற்றும் 14 (2 நாட்கள் |
| 7. | 1980 – 1984 | 1980 மே 20 மற்றும் 31 (2 நாட்கள்) |
| 8. | 1985 – 1986 | 1984 டிசம்பர் 24 (1 நாள் மட்டும்) |
| 9. | 1989 – 1991 | 1969 ஜனவரி 21 (1 நாள் மட்டும்) |
| 10. | 1991 - 1996 | 1991 ஜூன் 16 (1 நாள் மட்டும்) |
| 11. | 1996 – 2001 | 1996 ஏப்ரல் 27 மற்றும் மே 2 (2 நாட்கள்) |
| 12. | 2001 – 2006 | 2001 மே 10 (1 நாள் மட்டும்) |
| 13. | 2006 – 2011 | 2006 (மே 8 (1 நாள் மட்டும்) |
| 14. | 2011 – 2016 | 2011 ஏப்ரல் 13 (1 நாள் மட்டும்) |
| 15. | 2016 – தற்போது வரை | 2016 மே 16 (1 நாள் மட்டும்) |

## இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்:

- வாக்காளர் பட்டியல் தயாரித்தல்
- வாக்காளர் பட்டியலை திருத்துதல்
- தொகுதிக்கான இடங்களை ஒதுக்கீடு செய்தல்
- தேர்தல் நடத்துதல்.
- தேர்தலை மேற்பார்வையிட்டு வழிகாட்டுவதுடன் அது தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கட்டுப்படுத்துதல்
- வழிகாட்டுவதுடன் அது தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கட்டுப்படுத்துதல்
- அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்
- கட்சிகளுக்கான சின்னங்களை ஒதுக்கீடு செய்தல்
- சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தலை உறுதி செய்தல்.
- தேர்தல் விவகாரங்கள் தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் குடியரசுத் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட மாநில ஆளுநர்களுக்குத் தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்குதல்.
- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியிழப்பினை முடிவு செய்தல்.

- இந்திய குடியரசுத் தலைவர் அல்லது மாநில ஆளுநரால் பரிசீலனைக்கு அனுப்பப்படும் மனுக்கள் மற்றும் பிரச்சனைகளைத் தீர்த்தல்
- ஓர் அரசியல் கட்சியில் பிளவு ஏற்பட்டால் எழும் தேர்தல் சின்னம் தொடர்பான சச்சரவுகளில் முடிவெடுத்தல்.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களின் உச்சவரம்பினை இறுதி செய்யும் அதிகாரம்.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்துக்கள் தொடர்பான ஆவணப் பத்திரங்களை கேட்டுப் பெறும் பணி.

| |
|---|
| அரசியலைத் தூய்மைப்படுத்துவதற்கான உச்சநீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு<br>ஜீலை 11, 2013 ல் உச்சநீதிமன்றம் வெளியிட்ட ஓர் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பில் சிறை அல்லது காவல் துறையினரின் விசாரணையில் இருக்கும் ஒருவர் சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது என தீர்ப்பளித்துள்ளது. ஒரு நாள் முன்னதாக, ஜுலை 10, 2013-ல் அதே அமர்வு வழங்கிய தீர்ப்பில் தங்களின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பின், நாடாளுமன்ற, சட்டப்பேரவை அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் குற்றங்களுக்கான தண்டனை பற்றிய தீர்ப்ப வழங்கப்பட்டவுடன் அப்பொதுப் பதவிகளை வகிப்பதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவர்.<br>இப்பிரிவு நாடாளுமன்ற மற்றும் சட்மன்ற உறுப்பினர்கள் தம்மீது குற்றம் நிருபிக்கப்பட்டு தண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டால் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 8(4) ஐ இந்த அமர்வு நிராகரிப்பு. |

- தேர்தல் செலவினக் கணக்கினை ஓர் வேட்பாளர் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கவில்லையெனில் அவரை தகுதியிழப்பு செய்யும் அதிகாரமும், கடமையும்.
- தேர்தல் முடிந்த பின்னர் முறைப்படி அவை அமைக்கப்பட்தற்கான அறிவிப்பினை வெளியிடுதல்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி (CEO) :**

ஓர் மாநிலம் / ஒன்றிய பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி அம்மாநில / ஒன்றியப் பிரதேசத்தின் தேர்தல் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரத்துடன் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டில் செயல்படுகிறார். இந்தியத் தேர்தல் ஆணையமே ஓர் மாநிலம் / ஒன்றியப் பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரியை நியமிக்கிறது. அந்நியமனத்தின் போது மாநில / ஒன்றியப் பிரதேச அரசாங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னரே தேர்தல் ஆணையம் இறுதி முடிவெடுத்து செயல்படுத்துகிறது.

**மாவட்ட தேர்தல் அதிகாரி (DEO)**

தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட தேர்தல் அதிகாரி செயல்படுவதுடன் மாவட்டத்தின் தேர்தல் பணிகளை மேற்பார்வையிடுகிறார். மாநில அரசாங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னர் ஓர் மாநில

அரசு அதிகாரியை மாவட்ட தேர்தல் அதிகாரியாக நியமிக்கவோ அல்லது பதவியளிக்கவோ தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு.

**தேர்தல் நடத்தும் அலுவலர் (RO):**

ஓர் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அக்குறிப்பிட்ட நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தொகுதியில் தேர்தலை நடத்தும் பொறுப்பு உள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்ட மாநில / ஒன்றிய பிரதேச அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்து ஒவ்வொரு நடாளுமன்ற / சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலரை நியமிக்கிறது. அவர் அரசாங்க அதிகாரியாகவோ அல்லது உள்ளாட்சி அதிகாரியாகவோ இருக்கலாம். மேலும் கூடுதலாக அவருக்கு தேர்தல் பணிகளில் உதவுவதற்கு ஒன்று அல்லது இரண்டு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொரு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளிலும் நியமிக்கப்படுவதுடன் தேர்தல் நடத்தும் அலுவலரின் பணிகளை செயல்படுத்துவதில் பேருதவியாக இருப்பர்.

**வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) :**

ஓர் நாடாளுமன்ற / சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பணி வாக்காளர் பதிவு அலுவலருடையதாகும். இந்திய தேர்தல் ஆணையம் மாநில / ஒன்றியப் பிரதேச அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்த பின்னர் வாக்காளர் பதிவு அலுவலரை நியமிக்கிறது. இவர் அரசாங்க அல்லது உள்ளாட்சி அதிகாரியாக இருக்கலாம். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் இவருக்கு உதவி செய்வதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படுகின்றனர்.


**வாக்குச் சாவடி தலைமை அலுவலர் (PO)**

வாக்குச் சாவடி தலைமை அலுவலர் பிற வாக்குப்பதிவு அலுவலர்களின் உதவியுடன் வாக்குச் சாவடியில் தேர்தலை நடத்துகிறார். மாவட்ட தேர்தல் அதிகாரியே வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களை நியமிக்கிறார். ஒன்றியப் பிரதேசங்களைப் பொறுத்தவரை அந்தியமனங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் (RO) மேற்கொள்கிறார்.

**தேர்தல் பார்வையாளர்கள் (EO):**

இந்திய தேர்தல் ஆணையம் அரசாங்க அதிகாரிகளைத் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கிறது. (பொதுப்பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் செலவினைப் பார்வையாளர்கள்). இவர்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்குத் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் தேர்தல் ஆணையத்தால் தங்களுக்கு தரப்பட்ட பணிகளை நிறைவேற்றுகின்றனர். இவர்கள் ஆணையத்திற்கு நேரடி பொறுப்பாகின்றனர்.

**தேர்தல் சீர்திருத்தங்கள், கட்சித்தாவல் தடைச்சட்டம்:**




**குழுக்கள்**

**மேற்கண்ட குழுக்கள் மற்றும் ஆணையங்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் நமது தேர்தல் முறைமையில் அவ்வப்போது பல்வேறு சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.**

- 61வது அரசமைப்புச் சட்டத்திருத்தம், 1988-ன் மூலமாக வாக்களிக்கும் வயது இருபத்தி ஒன்றிலிருந்து பதினெட்டு ஆக குறைக்கப்பட்டது.
- வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தியமைத்தல் போன்ற தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அயற்பணியில் சென்று தேர்தல் ஆணையத்தின் கீழ் பணிபுரிதல்.
- ஓர் தொகுதியில் வேட்பாளர்களை முன்மொழியும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையில் பத்து சதவீதம் அல்லது பத்து வாக்காளர்கள் இதில் எது குறைவானதோ அதனை அதிகரித்தல்.
- 1989-ம் ஆண்டு முன்னணு வாக்குப்பதிவு எந்திரம் தேர்தலில் பயன்படுத்தப்படும் வகையில் அம்சங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- 1989-ம் ஆண்டு வாக்குச்சாவடியைக் கைப்பற்றுவதனைத் தடுப்பதற்கு தேர்தலை ஒத்திவைக்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டது.
- அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை என வகைப்படுத்தி வேட்பாளர்களை பட்டியலிடுதல்
- வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு 48 மணிநேரம் முன்பிருந்து அப்பகுதியில் மதுபான விற்பனையினைத் தடைசெய்தல்.
- தேர்தலில் போட்டியிடும் ஓர் வேட்பாளர் எதிர்பாராமல் மரணமடைந்தால் சம்பந்தப்பட்ட சம்பந்தப்பட்ட கட்சிக்கு மாற்று வேட்பாளரை பிரிந்துரைப்பதற்கான வாய்ப்புடன் ஏழு நாட்கள் அவகாசம்.

- தேர்தல் தினத்தன்று பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு ஊதியத்துடனான விடுமுறை ஆயுதங்கள் தடை.

- 1998-இல் ஓர் அம்சம் எற்படுத்தப்பட்டு அதன மூலமாக உள்ளாட்சி அதிகாரிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பணியாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவன ஊழியர்கள், அரசு நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோர் தேர்தல் தினத்தன்று பணியில் ஈடுபடுத்தப்பட பணிக்கப்பட்டனர்.

- 1999-இல் வாக்காளர்களில் ஓர் பிரிவினர் தபால் வாக்கினைப் (Postal Ballot) பயன்படுத்தி வாக்களிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

- 2003-இல் இராணுவத்தில் பணிபுரிபவர்கள் தங்களின் சார்பாக பதிலி வாக்கு (Proxy vote) அளிக்கும் முறை கொண்டு வரப்பட்டு இராணுவச் சட்டத்திற்கு இசைவான வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- 2003-இல் தேர்தல் ஆணையம் வேட்பாளர்களின் முந்தைய குற்ற சம்பவங்கள் மற்றும் சொத்துக்கள் பற்றிய விவரங்களை பிரகடனப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

- 2003-இல் மாநிலங்களதைத் தேர்தல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வேட்பாளரின் வசிப்பிடம் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. மேலும் வெளிப்படையான வாக்கெடுப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

- 2003-இல் வேட்பாளரின் தேர்தல் செலவுக் கணக்கில் பயணச் செலவினங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

- அரசாங்கமே இலவசமாக வாக்காளர் பட்டியலை வழங்குதல்

- 2009-இல் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புகளை நடத்தி முடிவுகளை அறிவிப்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

- 209-இல் தேர்தலின் போது தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை தகுதியிழப்பு செய்வதுடன் மூன்று மாத காலத்திற்குள் குற்றம் சாட்டப்பட்டவரின் மீதான விவரங்களை குறிப்பிட்ட அதிகாரி சமர்ப்பிக்க வேண்டும்.

- தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- பிணைத்தொகை அதிகரிக்கப்பட்டது.

- மாவட்டத்தினுள் மேல் முறையீட்டு அதிகாரிகளை நியமித்தல்

- 2010-இல் வெளிநாடு வாழ் இந்தியக் குடிமக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

- 2011-இல் தேர்தல் செலவினங்களுக்குக்கான உச்சசவரம்பு அதிகாரிக்கப்பட்டது.

**கட்சித் தாவல் தடைச்சட்டம்:**

52வது அரசமைப்புச் சட்டதிருத்தம், 1985-ன் மூலமாக ஒரு சட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு மாறும் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினரைத் தகுதியிழப்ப செய்யும் நடைமுறை கொண்டு வரப்பட்டது. இதற்காக இந்திய அரசமைப்பில் பத்தாவது அட்டவணை இணைக்கப்பட்டது. இச்சட்டமே “கட்சித் தாவல் தடைச் சட்டம்“ என அழைக்கப்படுகிறது. பின்னர் 91வது அரசமைப்புச் சட்டதிருத்தம், 2003ன் மூலமாக ஓர் சிறுதிருத்தம் செய்யப்பட்டது. அதாவது கட்சி பிளவுறும் சூழலில் கட்சித் தாவலின் அடிப்படைகள் பொருந்தாது என்பதாகும்.

**இச்சட்டத்தின் அம்சங்கள்**
**தகுதியிழப்பு:**

எக்கட்சியினைச் சார்ந்தவராக இருப்பினும் அவையின் ஓர் உறுப்பினர் தனது விருப்பத்தின் அடிப்படையில் உறுப்பினர் பதவியை விட்டு விலகுதல் அல்லது தான் சார்ந்த கட்சியின் வழிகாட்டுதலுக்கு எதிராக வாக்களித்தல் அல்லது வாக்களிப்பிலிருந்து கட்சியின் முன் அனுமதியின்றி விலகியிருத்தல் ஆகியவற்றால் தகுதியிழப்பு செய்யப்படலாம்.

ஓர் சுயேட்சை வேட்பாளர் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மற்றொரு அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவையிலிருந்து அவர் தகுதியிழப்பு செய்யப்படுவார்.

ஓர் நியமன உறுப்பினர் தான் பதவியேற்ற நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் ஏதேனும் அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

**விதிவிலக்குகள்:**

ஓர் கட்சி மற்றொரு கட்சியுடன் இணைக்கப்படும் போது கட்சித்தாவலின் அடிப்படையில் ஓர் உறுப்பினரின் மீது நடவடிக்கை எடுப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. சபையை வழிநடத்தும் பொறுப்பிற்கு ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தனது கட்சி உறுப்பினர் பொறுப்பிலிருந்து சுயவிருப்பத்தின் அடிப்படையில் வெளியேறினாலும் அப்பதவியிலிருந்து விடுபட்ட நிலையில் மீண்டும் கட்சியில் சேரலாம் என்பது மற்றொரு விதிவிலக்காகும்.

**தீர்மானிக்கும் அதிகாரம்:**

அவையை நடத்தும் பொறுப்பில் உள்ளவரே கட்சித் தாவல் தொடர்பான தகுதியிழப்பு பிரச்சனைகளை இறுதி செய்வார்.

**விதியை உருவாக்கும் அதிகாரம்:**

இந்திய அரசமைப்பின் பத்தாவது அட்டவணையில் உள்ள அம்சங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வரும் விதிமுறைகளை உருவாக்கும் அதிகாரம் அவையை நடத்துபவருக்கே உள்ளது. அத்தகைய விதிகள் 30 நாட்களுக்குள் அவையில் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவற்றினை குறிப்பிட்ட அவை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். மேலும் ஓர் உறுப்பினர் தனது விருப்பத்தின் அடிப்படையில் அவ்விதிகளை

மீறுவது என்பதனை அவையின் மரபுகளை மீறிய செயலாகக் கருத நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அவையை நடத்துபவருக்கு உள்ளது.

**சட்டத்தினைத் திறனாய்வு செய்தல்:**

1. பதவிகள் அல்லது பொருள் சார்ந்த ஆதாயங்களுக்காக அரசியலில் கட்சித்தாவலை மேற்கொள்ளும் செயல்களைத் தடுக்கும் வகையில் அரசமைப்பின் பத்தாவது அட்டவணை வடிவமைக்கப்பட்டுள்ளது.
2. கொள்கையற்ற மற்றும் அறநெறிக்குப் புறம்பான வகையில் மேற்கொள்ளும் கட்சித்தாவல்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக இந்திய நாடாளுமன்ற மக்களாட்சியின் மாண்பினை இது வலுப்படுத்துகிறது.
3. சட்டமன்ற உறுப்பினர்களின் கட்சிமாறும் மனப்பாங்கினைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசியல் கட்டமைப்பினை உறுதியாக வலுப்படுத்துகிறது.
4. கட்சிகளை இணைப்பதன் மூலம் சட்டமன்றத்தில் உள்ள கட்சிகளை மறுசீரமைப்பு செய்ய வாய்ப்பு ஏற்படுத்துகிறது.
5. தற்போதுள்ள அரசியல் கட்சிகளுக்கு அரசமைப்பு அடிப்படையில் தெளிவாக அங்கீகாரம் வழங்குகிறது.

**மாநிலங்களவைத் தேர்தலைப் பற்றி நாம் அறிந்து கொள்வோமா?**

நமது மாநிலங்களவைத் தேர்தலில் மாற்றித்தரக்கூடிய வாக்கு முறை பின்பற்றப்படுகிறது. மாநிலங்களவையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறிப்பிட்ட ஒதுக்கீடு உள்ளது. மாநிலங்களவையின் உறுப்பினர்கள் மாநில சட்டப்பேரவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்டப்பேரவை உறுப்பினர்களே வாக்காளர்களாவர். ஒவ்வொரு வாக்காளரும் தங்களுக்கு விருப்பமான வேட்பாளரை வரிசைப்படுத்த வேண்டும். வெற்றி பெறுவதற்கு ஒவ்வொரு வேட்பாளரும் குறிப்பிட்ட அளவிலான வாக்குகளைப் பெற வேண்டும். இதற்கென வகுக்கப்பட்ட விதிமுறை பின்வருமாறு:

$$\left[\frac{\text{பதிவான மொத்த வாக்குகள்}}{\text{தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த வேட்பாளர்கள்} + 1}\right] + 1$$

உதாரணமாக தமிழகத்தின் 200 சட்டப்பேரவை உறுப்பினர்களால் 4 மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனில் அவர்கள் (200 / 4 + 1 = 40 + 1) 41 வாக்குகளைப் பெற வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் போது ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற முதல் முன்னுரிமை வாக்குகள் (First Preference votes) எண்ணப்படுகின்றன. இவ்வாறு முதல் முன்னுரிமை வாக்குகள் எண்ணப்பட்ட பின்னரும் சில வேட்பாளர்கள் குறிப்பிட்ட அளவிலான வாக்குகளைப் பெறவில்லையெனில் குறைவான முதல் முன்னுரிமை வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் பெற்ற வாக்குகளில், அதாவது வாக்குச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது முன்னுரிமை வேட்பாளருக்கு அந்த வாக்குகள் மாற்றப்படுகின்றன. இந்நடைமுறை ஓர் வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படும் வரை தொடர்கிறது.

**தேர்தலில் முதலில் நிலையை கடந்தவரே வெற்றி பெற்றவர் என்ற முறையை இந்தியா பின்பற்றியது?**

இதற்கான பதிலை சிந்திப்பது மிகவும் தேர்தல் முறையை நீங்கள் படிக்கும் போது அம்முறை எவ்வளவு கடினமானது என்றும், அது சிறிய நாடுகளில் சாத்தியமாகுமே தவிர இந்தியாவைப் போன்ற துணைக்கண்ட நாடுகளில் செயல்படுத்துவது மிகவும் கடினமான பணியாகும். ஆனால் முதலில் நிலையைக் கடத்தல் முறை (FPTP) என்பது மிகவும் பிரபலமாகவும், வெற்றிகரமாகவும் இருப்பதற்கு அதன் எளிமையே காரணமாகும்.

இத்தேர்தல் முறை முழுவதையும் புரிந்துகொள்வதற்கு மிகவும் எளிமையாகவும், தேர்தல் மற்றும் அரசியலைப் பற்றி தெரியாத பொதுவான வாக்காளர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது. தேர்தலின் போது வாக்காளர்களுக்கு தெளிவான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன தேர்தலின் போது வாக்காளர்கள் ஓர் வேட்பாளர் அல்லது கட்சியை அங்கீகரிக்க வேண்டும் அப்போதைய அரசியலின் தன்மைக்குத் தக்கவாறு வாக்காளர்கள் கட்சி அல்லது வேட்பாளருக்கோ அல்லது இரண்டிற்கும் சமமாகவோ முக்கியத்துவம் தரலாம்.

அல்லது இரண்டிற்கும் சமமாகவோ முக்கியத்துவம் தரலாம்.

முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் என்னும் முறையானது கட்சிகளுக்கிடையே தேர்வு செய்யும் முறையாக இல்லாமல் குறிப்பிட்ட வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் முறையாகும். ஆனால் பிற தேர்தல் முறைகளில் குறிப்பாக விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் வாக்காளர்கள் ஓர் ஆட்சியைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் பிரதிநிதிகளும் கட்சியின் பட்டியலில் இருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் விளைவாக, ஓர் குறிப்பிட்ட பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய மற்றும் பொறுப்பான ஓர் பிரதிநிதி இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆனால் முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் முறையைப் போன்றே தொகுதி அடிப்படையிலான முறையிலும் வாக்காளர்களுக்குத் தங்களின் பிரதிநிதி யார் என தெரிவதுடன் அவர்கள் வாக்காளர்களுக்குப் பதில் சொல்ல கடமையும், பொறுப்பும் கொண்டுள்ளனர். முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் முறையில் பொதுவாக தனிப்பெரும் கட்சிக்கு அல்லது கூட்டணிக்கு சில இடங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. இது அவர்களின் பங்கான வாக்குகளை விட அதிகமாக இருக்கும்.

இங்ஙனம் இம்முறையானது நிலையான அரசாங்கத்தை உருவாக்க வகை செய்வதுடன் நாடாளுமன்ற அரசாங்கம் அமைதியாகவும். திறம்பட செயலாற்றவும் வாய்ப்பளிக்கிறது. முதலில் நிலையை கடந்து செல்லுதல் (சூீவீ) முறையானது ஓர் பகுதியில் உள்ள சமூகக் குழுக்களைச் சேர்ந்த வாக்காளர்களை ஒன்றிணைத்து வெற்றி பெற வைக்கிறது. ஆகவே முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP) முறையானது எளியதாகவும், சாதாரண வாக்காளர்களுக்கு அறிமுகமானதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள். அரசின் நிதியுதவி என்றால் என்ன?**

- அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் என்னும் கருத்தாக்கமே ஊழலைக் குறைப்பதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இதில் தனிநபர் நிதியளிப்புகளுக்கு மாற்றாக அரசாங்கமே தேர்தல்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது.

- அரசியல் கட்சிகளின் நிதியில் வெளிப்படைத் தன்மையை எட்டுவதற்குச் சிறந்த வழியாக அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் பரித்துரைக்கப்படுகின்றன.

அரசின் நிதியுதவி என்பது இயற்கையானதாகவும், மக்களாட்சிக்காக செய்யும் செலவினமாகவும் நம்பப்படுகிறது.

வெளிப்படையாக வாக்களிக்கும் முறை என்பது கைகளை உயர்த்துவதன் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையாகும்.
ரகசிய வாக்கெடுப்பு முறையில் ஓர் வாக்காளர் தனது வாக்கினைப் பிறர் அறியாதவாறு வாக்குப்பெட்டி எந்திரத்தில் அளிக்கிறார்.

- இதன் மூலமாக புதிய மற்றும் வளரும் கட்சிகளுக்கு ஆதரவளிக்கப்படுவதுடன் தேர்தல்களும் நேர்மையான முறையில் நடக்கின்றன.

- கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு தனியார் நிதியுதவி இருக்குமெனில் சமுதாயத்தில் உள்ள பொருளாதார சமத்துவமின்மை என்பது அரசாங்கத்தில் அரசியல் சமத்துவமின்மையாக உருமாறுகிறது.

**அரசின் நிதியுதவியுடனான தேர்தல் குறித்த இந்திரஜித் குப்தா குழு, 1998:**

அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் பற்றி ஆராய்வதற்காக இரந்திரஜித் குப்தா தலைமையிலான குழு 1998-ல் நியமிக்கப்பட்டது. அக்குழுவானது அரசியல் கட்சிகளுக்கு அரசின் நிதியுதவியுடனான தேர்தல்களை நடத்துவதற்கான அரசமைப்பு அம்சங்கள், சட்டக் கூறுகள், பொது விருப்பம் போன்றவற்றினை கொள்கை அடிப்படையில் ஆராயும் அதிகார வரம்பினைக் கொண்டிருந்தது. இதன் மூலம் குறைவான நிதி ஆதாரங்களைக் கொண்ட கட்சியுடன் தேர்தலில் போட்டியிடும் சூழலை நிறுவுவதாகும்.

**இரண்டு கூடுதல் வரையறைகள்:**

1. அரசின் தேர்தல் நிதி சுயேட்ச்சை வேட்பாளர்களுக்கு வழங்கப்படமாட்டது. வாக்காளர்கள் மத்தியில் பிரபலமாக இருப்பதுடன் தங்களுக்கென தேர்தல் ஆணையத்தால் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ள தேசிய அல்லது மாநிலக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு மட்டுமே அரசின் தேர்தல் நிதியுதவி வழங்கப்படும்.
2. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் வேட்பாளர்களுக்கு சில வகையினங்களில் மட்டுமே குறுகிய காலத்திற்கு நிதியுதவி வழங்கப்படும்.

மேலும் இக்குழு தனியாக தேர்தல் நிதியை உருவாக்க பரிந்துரைத்தது. இதற்கு மத்திய அரசின் சார்பாக வருடத்திற்கு 600 கோடி ரூபாயும், அனைத்து மாநில அரசுகளும் அதற்கு நிகரான பங்களிப்பினை ஒட்டு மொத்தமாக மேற்கொள்ள வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது. மேலும் இக்குழுவின் பரிந்துரையில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் அரசிடமிருந்து தேர்தல் நிதியைப் பெறும் தகுதியுள்ளவர்களாவதற்கு கடந்த நிதியாண்டில் வருமான வரி செலுத்தியிருக்க வேண்டியது அவசியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரசியலில் இளைஞர்களின் பங்கு:**

தேர்தலில் வெற்றி பெற நினைக்கும் அனைத்து அரசியல் தலைவர்களும் சிந்திக்கக் கூடியதாக இத்தலைப்பு உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் வாக்காளர் பட்டியலில் பன்மடங்கிலான முதல் தலைமுறை வாக்காளர்கள் சேர்க்கப்படுகின்றனர். இந்த இளைய சமுதாயத்தினரின் வாக்கு என்பது தேர்தல் முடிவுகளை பெருமளவில் மாற்றியமைக்கிறது.

இன்றைய இளைய தலைமுறையினருக்கு நமது தேசத்தினை மாற்றும் வலிமை உள்ளதுடன் அது நிகழும் என்பதும் நிதர்சனமாகும். ஆகவே மாற்றம் முன்னேற்றம் மற்றும் புதுமையைப் புகுத்தல் ஆகியவை இளைஞர்கள் தங்களின் தோளில் சுமக்கும் பொறுப்பாகும்.

**இளைஞர்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்?**

- பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையில் தேர்தல்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இத்தேர்தல் நடைமுறையில் பங்குபெறும் இளைஞர்கள் அவர்கள் ஆதரவினை வழங்குவதன் மூலம் அரசியல் மற்றும் கொள்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி பாராட்டுக்குரியவர்கள் ஆகின்றனர்.
- "ஒரு நபர் ஒரு வாக்கு" என்ற அடிப்படையில் வாக்களிப்பதன் மூலமாக ஒவ்வொரு குடிமகனும் சமவாய்ப்புடன் தேர்தலில் பங்கேற்கின்றனர். வாக்களிப்பதன் மூலமாக இளைஞர்களும் பிறரைப் போன்றே அரசியல் செல்வாக்கு மற்றும் அழுத்தத்தைக் தரும் திறனைப் பெறுகின்றனர்.

- தேர்தல்களில் அனைவரும் பங்கேற்பதன் மூலமாக "மக்கள் விருப்பம்" பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

- இைஞர்கள் ஆரம்பத்திலிருந்தே தேர்தலில் வாக்களிக்கும் பழக்கத்தை கடைபிடிப்பதன் மூலம் அதிக வாக்குப்பதிவினை உறுதி செய்யலாம்.

- இளைஞர்கள் மற்றும் வயதான வாக்காளர்களின் அரசியல் விருப்பங்கள் மாறுபடுகின்றன. இளைஞர்கள் தேர்தலில் வாக்களிக்கவில்லை என்றால் அவர்களின் தனிப்பட்ட விருப்பங்கள், கொள்கையை உருவாக்குபவர்களால் புறந்தள்ளப்படுகிறது.

**நோட்டா என்றால் என்ன?**
**மேற்கண்டவர்களுள் எவருமில்லை**

- தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்களரின் உரிமை.
- நமது அரசியல் முறைமையைத் தூய்மைப்படுத்தும் நோக்கில் உச்சநீதிமன்றம் கூறியது என்னவெனில் தேர்தலில் போட்டியிடும் அனைத்து பேட்பாளர்களையும் நிராகரிக்கும் உரிமை வாக்காளர்களுக்கு உள்ளது என்பதாகும். இதனால் உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையத்திற்கு வழிகாட்டும் வகையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் "மேற்கொண்ட எவருமில்லை" (NOTA) எனும் வாய்ப்பினை வாக்காளர்களுக்கு வழங்கும்படி உத்தரவிட்டது.

"நோட்டா" அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்புவரை எதிர்மறை வாக்கினை செலுத்த விரும்பும் வாக்காளர்களுக்கு தனி வாக்குச் சீட்டு தரப்படுவதுடன் ஓர் பதிவேட்டில் அவர்களின் பெயரும் பதிவு செய்யப்படும்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் 1961-ன் பிரிவு 49(0) கூறுவது என்னவெனில் ஓர் வாக்காளர் தனது வாக்காளர் வரிசை எண்ணை 17A படிவத்தில் பதிவு செய்த பின்னர் எதிர்மறை வாக்கினைச் செலுத்தலாம்.

“நோட்டாவைப் போன்று முன்னரே வேறோரு அம்சம் இருந்ததை நீங்கள் அறிவீர்களா? அது “எதிர்மறை வாக்களித்தல்“ (Negative Voting) என அழைக்கப்படுகிறது.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் தரப்பட்டுள்ள வேட்பாளர்கள் பட்டியலின் இறுதியில் நோட்டா வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

மேற்கண்டவர்களுள் எவருமில்லை (None of the above – NOTA) - தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்களரின் உரிமை.

**நோட்டாவை அனுமதிக்கும் நாடுகளை அறிவீர்களா?**

கொலம்பியா, உக்ரைன், பிரேசில், வங்கதேசம், பின்லாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், சிலி, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் நோட்டாவைப் பின்பற்றின. சில சமயங்களில் அமெரிக்காவும் இதனை அனுமதித்தது. 1975-ம் ஆண்டு முதல் டெக்சாஸ் மாகாணம் இந்த அம்சங்களைப் பின்பற்றி வருகிறது.

# 12ம் வகுப்பு தொகுதி 1
# அலகு– 4- இந்திய நீதித்துறை

**இந்திய உச்ச நீதிமன்றம்:**
”உச்ச நீதிமன்றம், அனைத்து இந்திய நீதிமன்றமாகும். கட்சி அட்சியலில் இருந்தும், அரசியல் கோட்பாடுகளில் இருந்தும் உறுதியாக தனித்து நிற்கும். அது அரசுகள் மாறுவதைக் குறித்து அக்கறை கொள்வதில்லை. நீதிமன்றமானது, அந்த நேரத்தில் நடைமுறையில் இருக்கும் சட்டத்தின்படி, நிற்கிறது. அனைவரின் மீதும் பரிவு, நன்மதிப்பு கொண்டுள்ளது. எனினும் அது யாருடனும் அணி சேர்வது இல்லை”.

நீதித்துறையானது அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளில் ஒன்றாகும். மற்ற இரண்டு சட்டமன்றமாகவும், ஆட்சித்துறையாகவும் இருக்கின்றன. நீதித்துறையானது சட்டங்களுக்கு விளக்கம் அளிப்பதையும், அரசமைப்பை பாதுகாப்பதையும் பணியாகக் கொண்டிருக்கிறது. அது நீதித்துறை நிர்வாகத்தை உறுதிப்படுத்துகின்றது. தனி மனித உரிமைகள், முன்னுரிமைகள் ஆகியவற்றின் மீது அரசு மற்றும் தனிமனிதர்களால் மேற்கொள்ளப்படும் மீறல்களில் இருந்து பாதுகாப்பு அளிப்பதை உறுதிப்படுத்துகிறது. சுதந்திரமான மற்றும்

**திருக்குறள்:**

**1. பிணையாக திருக்குறள் ஒப்புவித்தல்:**

கைகலப்பில் ஈடுபட்ட மூன்று கல்லூரி மாணவர்களுக்கு பிணையாக 100 திருக்குறள்களை தொடர்ந்து 10 நாட்கள் அப்பகுதியிலுள்ள குறிப்பிட்ட தமிழாரசிரியர் முன்பு ஒப்புவிக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்து தமிழ்நாடு நீதிமன்றம் பிப்ரவரி 2019 அன்று உத்தரவிட்டது.

ஒரு நபர் மீது தாக்குதல் நடத்தியதாக மூன்று கல்லூரி மாணவர்களுக்கு மேட்டுபாளையம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது, அவர்கள் சார்பில் பிணைக் கோரப்பட்டது. பிணையின் நிபந்தனையாக அப்பகுதி அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் முன்பு தினமும் 100 திருக்குறள்கள் ஒப்புவிக்க வேண்டுமென்று நீதிபதி கூறினார்.
இவ்வாறு தொடர்ந்து 10 நாட்கள் திருக்குறள் ஒப்புவித்தப் பின்பு இறுதி நாளில் அந்த மாணாக்கர்களுக்கு சான்றிதழ் வழக்கும்படியும் நீதிபதி அப்போது உத்தரவிட்டார்.

**2. திருக்குறளை ஆழமாகக் கற்பதற்கு வழிவகுத்த மதுரை உயர் நீதிமன்ற கிளை:**

சென்னை உயர் நீதிமன்றத்தில் மதுரை கிளை வழங்கிய தீர்ப்புகளில் தமிழக பள்ளிகளில் திருக்குறளை ஆழமாகக் கற்க வழிவகுத்து அளித்தத் தீர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மதுரைகிளை கடந்த 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறைக்கு அளித்த உத்தரவில் பள்ளிப் பாடத்திட்டத்தில் திருக்குறளின் 133 அதிகாரங்களில் 108 அதிகாரங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. இதன்மூலம் 2017 – 18 கல்வியாண்டிலிருந்து மாணவர்கள் 1050 திருக்குறள்களையும் கற்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஆணைப் பிறப்பிப்பதற்கு மதுரைகிளையின் உத்தரவு வழிவகுத்தது. 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்கள் முன்கூடிய திருக்குறள் பாக்கள் அனைத்தையும் கற்பதுடன் அதன் பொருளினையும் தெளிவாகப் புரிந்து கொள்வதை உத்தரவாதம் செய்யும்படியும் அது கூறியது. இதன்மூலம் தற்போது பள்ளிக் கல்வி மாணவர்கள் திருக்குறள் பாக்களை கற்று ஆழமாகப் புரிந்து வருகிறார்கள்.

தமிழில் பண்டைய இலக்கியங்களில் உலகின் 60 –க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட இலக்கியம் திருக்குறள் ஒன்றேயாகும்.

பாகுபாடற்ற நீதித்துறையை உருவாக்குவது ஒரு நாகரிக அரசு செயல்படுவதற்கு மன் நிபந்தனையாகும். இந்தியா போன்ற கூட்டாட்சி அரசு முறை கொண்ட நாடுகளில் கூட்டாட்சியின் பாதுகாவலனாகவும், மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே எழும் அதிகார வரம்பு கருத்துவேறுபாடுகளுக்குத் தீர்வ காண்பதனாலும் நீதித்துறை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

**இந்திய நீதித்துறையின் பரிணாம வளர்ச்சி:**
**பண்டைய இந்தியாவில் நீதிமுறையமைப்பு:**

இந்தியா பல்வேறு இனங்கள், பண்பாடுகள், மொழிகள் மற்றும் அரசியல், சமூக அமைப்புகளை கொண்ட ஒரு துணைக்கண்டமாக இருக்கிறது. இந்தியாவின் பண்டைய காலத்திலும் மற்றும் இடைக்காலத்திலும் அரசு எந்த ஒரு ஆட்சித்துறையிலிருந்தும் நீதித்துறை பணிகளைப் பிரித்து வைக்கப்படவில்லை. வேதகாலத்தின் போது (குலபா (அ) குலபாடோ), குடும்பத் தலைவனின் அதிகாரமானது மன்னர் வழி குறுக்கீடுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தது. அதேபோல் கிராமா, தோபா, வைசியா, ஜனம் மற்றும் கனம் போன்ற குலவகைப்பட்ட மற்றும் இனக்குழு அமைப்புகளும் தன்னாட்சி பெற்றுத் திகழ்ந்தன. பண்டைய இந்திய முடியாட்சிகளில் நீதித்துறை அதிகாரத்தில் அரசரே உயர்நிலையில் இருந்தார். அரசர் நினைத்ததே சட்டமாக இருந்தது. வழக்குகளில் அவர் வார்த்தையே உயர்ந்த நீதியாகவும் இறுதித் தீர்ப்பாகவும் இருந்தது.

எனினும், கிராமப்புறங்களில் பெரும்பாலான வழக்குகள் சாதி அமைப்புகள் அல்லது உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளின் சட்டத்திட்டங்களின் மூலமாகவே தீர்க்கப்பட்டு வந்தன. தேசத் துரோகம் போன்ற மிகத் தீவிரமான வழக்குகள் மட்டும் அரசவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு முறையான சட்ட அமைப்பு அல்லது நீதித்துறை வழி முறை இருந்ததில்லை. பெரும்பான்மையான நேரங்களில் குற்றம் சாட்டப்பட்டவர், தான் குற்றமற்றவர் என்பதை ஆதாரங்கள், சாட்சியங்கள் மூலமாக நிரூபிக்க வேண்டும். அல்லது தீக்குளித்தல், தண்ணீரில் மூழ்குதல், விஷம் அருந்துதல் போன்ற கடும் சோதனைகளுக்கு தன்னை ஆட்படுத்திக் கொள்ளுதல் மூலமாக தாம் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டும். தண்டனைகள் (தண்டனை முறை) மிகவும் கடுமையாக இருந்தது. மேலும். காட்டுமிராண்டித்தனம் கொண்டதாக இருந்தது. இதற்கு பரிகாரம் என்பது வழக்கத்தில் இல்லை. கசையடி, பிரம்படி, முழங்கால்களைத் துண்டித்தல், கழுமரத்தில் ஏற்றுதல், அடிமைப்படுத்துதல், சொத்துக்களை பறிமுதல் செய்தல். நாடு கடத்துதல், தலையை துண்டித்தல், யானை மூலம் தலையை இடரச்செய்தல் மற்றும் மிதிக்கச் செய்தல் போன்ற தண்டனைகள் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டன. அரசுகள் பிராமணர்களின் தாக்கத்தின் கீழ் வந்த பின்னர், ஸ்மிருதிகள் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு, தண்டனைகள் வழங்கப்பட்டன.

அக்காலத்தில் மனுஸ்மிருதி, நாரதர் ஸ்மிருதி, யக்ஞவாக்கியர் ஸ்மிருதி போன்றவை இருந்தன. அவற்றுள் “மனுஸ்மிருதி” அடிப்படையாக இருந்தது. இந்த ஸ்மிருதிகள் பொதுவாக வர்ணம். சாதிபடிநிலைச் சமூக அமைப்பை உயர்த்திப் பிடிப்பதாக இருந்தன. ”சட்டத்தின் முன் அனைவரும் சமம்” என்ற கருத்து இருந்ததில்லை. பிராமணர்கள் பெரும்பாலும் தண்டனைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தனர். எந்தவிதத்திலும் பிராமணர்கள், அவர்கள் கொடிய குற்றங்களை செய்துவிட்டாலும் உடல் ரீதியான துன்புறுத்தல், உறுப்பு நீக்கம் செய்தல், கழுமரத்தில் ஏற்றுவது, மரணதண்டனை ஆகியவற்றில் இருந்து விதிவிலக்கு செய்யப்பட்டிருந்தார்கள். மற்றொருபுறம் ஒடுக்கப்பட்ட சாதியினரை கடுமையான துன்பங்களுக்கும் மற்றும் உச்சபட்ச தண்டனைகளுக்கும்

உள்ளாக்கப்பட்டனர். சாதி அடிப்படையிலான தொழில்களை மாற்றிக் கொள்வது என்பது மிகக் கொடிய குற்றமாக (Varna Sangraha) கருதப்பட்டது.

அர்த்தசாஸ்திரம் குற்றங்கள் நிகழ்வதை கட்டுப்படுத்துவது என்ற பெயரில் அளவுக்கு அதிகமான தண்டனைகளைப் பரிந்துரைத்தன. குற்றவாளிகள் மீது அபராதங்கள் விதிப்பது, சொத்துக்களை பறிமுதல் செய்வது முதன்மையான அரசு வருமானமாக இருந்தன. ஸ்மிருதிகள் பெண்களை கீழ்நிலை மனிதர்களாகவே நடத்தியது. வாரிசுரிமை விவகாரங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டுடன் தீர்ப்பளித்தனர். சூத்திரர்களும், பஞ்சமர்களும் நியாயமான விசாரணைக்கும், நியாயமான தண்டனைகளுக்கும் தகுதி இல்லாதவர்கள் ஆனார்கள். வர்த்தகத் தகராறுகள் பெரும்பாலும் வணிகக் குழு மூலம் தீர்க்கப்பட்டன. அதைப்போலவே ஒவ்வொரு கைவினைக் கலைஞர்கள் குழுவும் தங்களுடைய சொந்த பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள கைவினைஞர்கள் சங்கத்தைத் தமக்குள் வைத்து கொண்டனர். பல்லவர், பாண்டிய, சோழர்கால மகாசபைகள் நீதி விசாரணை நடைமுறைகளிலிருந்து பிராமணர்களைப் பாதுகாத்தன. மகாசபையின் வாரியம் (தர்ம வாரியங்கள், நியாய வாரியம்) மகாசபைகளுக்குள் எழும்பிரச்சனைகளை தீர்த்து வைத்தன. உள்ளூர் அமைப்புகளான ஊர், ஊரார், நகரத்தார் போன்றவை அவர்களுக்கு உரிய நீதித்துறை ஏற்பாடுகளைக் கொண்டிருந்தனர்.

அசோகப் பேரரசு போன்ற புத்த பேரரசுகள் பெரும்பாலும் ஸ்மிருதி முறைகளை புறம்தள்ளின. நீதி வழக்குகளில் சமூகக் குழுக்களுக்கிடையே ஓரளவுக்குச் சமமாக நடத்தப்பட்டன. அசோகர் கொடிய தண்டனைகளை நீக்கினார். மேலும், அவர் தனது அதிகாரிகளிடம் கைதிகளிடத்தில் மிகவும் மனிதாபிமானம் உடையவர்களாகவும், கருணை உள்ளவர்களாகவும் இருக்கும்படி அறிவுறுத்தினார். சிலப்பதிகாரத்தில் கோவலன் தூக்கிலிடப்படும் சம்பவமானது நீதித்துறை செயல் முறையிலுள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது. நீதித்துறையில் உயர் அதிகாரிகள் அறநெறியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இலக்கியங்கள் வலியுறுத்தினாலும், நீதி வழக்கு விசாரணைகளில் வரம்பு மீறி நடந்து தண்டனையில் இருந்து விதிவிலக்கு கொடுப்பதோ அல்லது அநீதியான தண்டனைகளை வழங்கியிருப்பதையோ நாம் அடிக்கடி கண்டிருக்கிறோம். பண்டைய இந்தியாவில் சட்டத்தின் ஆட்சி அங்கு இருந்தது இல்லை, ஆனால் அதிகாரம் கொண்டோரின் ஆட்சியையே நாம் காண்கிறோம்.

| **கடும் சோதனைகள்:** | | |
|---|---|---|
| **தராசு முறை:** ஒரு தராசில் ஒரு பக்கம் ஒரு பனை ஓலை கட்டு வைத்துவிட்டு இன்னொரு பக்கம் குற்றம் சாட்டப்பட்டவர் அமரும்படியாக செய்யப்பட்டு தராசு சமமாக இருக்கும்படி வேண்டிக் கொள்ளுப்படுகிறார்கள். வேண்டுதலுக்கு பிறகும் அவர் இருக்கும் தராசின் பகுதி கீழே வந்து விட்டால் அவர் குற்றம் செய்தவர் என்று அறிவிப்பார்கள். | **நெருப்பு சோதனை:** குற்றம் சாட்டப்பட்டவர் தீயின் நடுவே நடந்து வர செய்யப்படுவார். அந்த நபர் எந்த தீ காயமும் அடையவில்லை என்றால் மட்டுமே அவர் குற்றமற்றவராக கருதப்படுவார். | **தண்ணீர் முறை:** தெய்வ சிலையை சுத்தப் படுத்துவதற்கு உள்ள நீரை, குற்றம் கூறினால் குற்றம் சாட்டப்பட்டவர் அதை குடிக்கும்படி செய்யப்படுவார். அதனை தொடர்ந்து வரும் 14 நாட்களுக்குள் குடிக்கும் வரை அவருக்கு எந்த கேடான பாதிப்பும் ஏற்படவில்லை என்றால் அவர் குற்றமற்றவர் என கருதப்படுவார் |
| **நஞ்சு அருந்தும் சோதனை:** இம்முறையில் குற்றம் | **குலுக்கல் சோதனை**: குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு | **அரிசி தானிய சோதனை**: இம்முறையில் குற்றம் |

| | | |
|---|---|---|
| சாட்டப்பட்டவர்களுக்கு நஞ்சு அருந்தும்படியாக செய்யப்படுவார். அந்த நபருக்கு எந்த தீய விளைவும் ஏற்படவில்லை என்றால் அவர் குற்றமற்றவர் என கருதப்படுவார் | தொகுப்பில் இருந்து ஒன்றை எடுத்து தரும்படி கேட்டுக் கொள்ளப்படுவார். அதில் அவருக்கு "தர்ம கட்டு" வந்திருந்தால் அவர் குற்றமற்றவராக கருதப்படுவார். | சாட்டப்பட்டவர் உமி நீக்கப்படாத நெல் தானியத்தை மென்று சாப்பிடும் படியாக செய்யப்படுவார். அவருடைய வாயில் இரத்தக்கறை காணப்பட்டால் அவர் குற்றம் செய்தவர் என்று அறிவிக்கப்படுவார். |
| **ஊற்றுநீர் சோதனை முறை:** இங்கு குற்றம் சாட்டப்பட்டவர் நஞ்சு போன்ற நீரை குடிக்கும்படியாக செய்யப்படுவார். அவர் உளறினால் அவர் குற்றம் செய்தவராவார் அல்லது குற்றத்தை அந்த நபர் ஒத்துக் கொண்டவராவார். | | |

இடைக்கால இந்தியாவில், முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஒருவித தனித்தன்மை கொண்ட சூழ்நிலையை எதிர்கொண்டனர். அங்கே அவர்கள் ஆட்சியின் கீழ் வாழ்ந்த மக்கள் பெரும்பான்மையானோர் முஸ்லீமல்லாதவர்கள். முஸ்லீம் மற்றும் முஸ்லீம் நலன்கள் சார்ந்த வழக்குகளில் இஸ்லாமிய சட்டங்களை பயன்படுத்தினர். அதேநேரம், முஸ்லீம் அல்லாதவர்களின் சமூக-மத விவகாரங்களில் தலையிடா கொள்கைக்கு முன்னுரிமை அளித்தனர். அங்கெல்லாம் கிராமப்புற பாரம்பரிய விசாரணை முறையை ஏற்றனர். முஸ்லீம் ஆட்சியாளர்கள் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை மிகவும் சரியாக வேறுபடுத்திக் காட்டியிருந்தனர். ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட முறைகளைக் கையாண்டனர். எனினும், இறைப்பழி போன்ற வழக்குகளில் மிகவும் கொடிய தண்டனைகளை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்தனர்.

**இடை காலத்தில் இந்தியாவில் நீதித்துறை அமைப்பு:**

இடைக்கால இந்தியாவில் பேரரசை நிர்வகிக்கும் சுல்தான் / சுல்தானா ஆகியோரே நீதி நிர்வாகத்தை நிர்வகிக்கும் உச்சபட்ச அதிகாரம் கொண்டவர்கள் ஆவர். அவர்கள் கீழ்க்கண்ட தகுதி நிலைகளில் இருந்து நீதி நிர்வாகத்தை நடத்தினர். அவற்றின் பெயர்கள் பின்வருமாறு:

- ❖ திவான்-இ-குவாசா (நடுவர்)
- ❖ திவான்-இ-மசலிம் (அதிகாரத்துவத்தின் தலைவர்) மற்றும்
- ❖ திவான்-இ-ரியாசத் (தலைமை தளபதி).

இடைக்கால இந்தியாவில் நிர்வாக அமைப்புமுறைகளே நீதித்துறை அமைப்புகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. நீதிமன்றங்களின் அதிகார வரம்பானது தலைநகரம், மண்டலம், மாவட்டம், பர்கானா (வட்டம்) மற்றும் கிராமம் என நிலப்பரப்பு அடிப்படையில் தெளிவாக பிரிக்கப்பட்டிருந்தது. பொதுவாக, சுல்தானத்தின் தலைநகரில் கீழ்க்கண்ட ஆறு வகையான நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு இருந்தன.

- ❖ மன்னர் நீதிமன்றம்
- ❖ மேல்முறையீட்டு உச்ச நீதிமன்றம் (திவான்-அல்-மசாலிம்)
- ❖ குடிமையியல் வழக்குக்கு உள்ள நீதிமன்றம் (திவான்-இ-ரிசாலட்)
- ❖ மாநிலத் தலைமை நீதிபதி நீதிமன்றம் (சத்ரே ஜகான் நீதிமன்றம்)
- ❖ தலைமை நீதிபதி நீதிமன்றம்
- ❖ தேசத்துரோக வழக்குகள் நீதிமன்றம் (திவான்-இ-ரியாசட்)

மன்னர் நீதிமன்றம் சுல்தானால் தலைமையேற்று நடத்தப்பட்டது. இந்த நீதிமன்றம் அசல் அதிகாரவரம்பு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் என இரண்டும் கொண்ட அமைப்பாகச் செயல்பட்டது. நீதி நிர்வாகத்தைப் பொருத்தவரை இதுவே உச்சபட்ச மேல்முறையீட்டுத் தீர்ப்பாகும். முப்தி (சட்டவல்லுனர்) எனப்படும் சட்டவல்லுனர்கள் சுல்தானுக்கு உதவியளித்தனர்.

திவான்-அல்-மசாலிம் மற்றும் திவான்-இ-ரிசாலட் நீதிமன்றங்கள் முறையே தேச துரோக வழக்குகள் மற்றும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் உச்ச நீதிமன்றங்களாகும்.

இந்த நீதிமன்றங்கள் அலுவலக ரீதியாக சுல்தானால் தலைமை தாங்கி நடத்தப்பட வேண்டும் எனினும், அவர் அதிகமாக குற்றவியல் நீதி விசாரணைகளின்போது மட்டுமே கலந்து கொண்டார். சுல்தான் இல்லாதபோது குவாசி-உல்-குசாட் எனும் அரசின் நீதிமன்ற தலைமை அலுவலர் தலைமை தாங்கி நடத்துவார். ஆனால், பின்னர் சத்ரே ஜகான் எனும் அலுவலர் பதவி உருவாக்கப்பட்டு நீதித்துறையின் உண்மையான தலைமை அலுவலராக செயல்பட்டார். இந்த சத்ரே ஜகான் நீதிமன்றமும் மற்றும் தலைமை நீதிபதி நீதிமன்றமும் பின்னர் அலாவுதீன் கில்ஜி ஆட்சியில் இணைக்கப்படும்வரை நீண்டகாலமாகத் தனித்தே இயங்கின. தலைமை நீதிபதியின் நீதிமன்றம் குடிமையியல் மற்றும் குற்ற வழக்குகளைக் கையாண்டது. தலைமை நீதிபதியின் கீழ் திறமையான, நேர்மையான மதிக்கப்பட்ட உதவி நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். முப்தி, பண்டிட், மொக்டாசிப் (அரசு வழக்கறிஞர் தரப்பு) தாத்பாக் (நிர்வாக அலுவலர்) போன்ற அலுவலர்கள் தலைமை நீதிபதியின் நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்டிருந்த அலுவலர்கள் ஆவர். திவான்-இ-ரியாசத் பெரும் தேச துரோக வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம் ஆகும்.

**நவீன இந்தியாவில் நீதித்துறை அமைப்பு:**

கிழக்கிந்திய கம்பெனி 1600 ஆண்டு முதலாம் ராணி எலிசபெத்தின் சாசன சட்டத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது. கிழக்கந்திய கம்பெனி வர்த்தகம் மேற்கொள்ளத் தேவையான ஒழுங்கு முறைகள் மற்றும் அங்கீகாரத்தை அரசு அளித்தது. மதராஸ் நிர்வாகத்தைப் பொருத்தவரை 1661-ஆம் ஆண்டு சாசன சட்டம் ஒரு ஆளுநர் அவருடன் தலா ஒரு குடியேற்றப்பகுதிக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒரு குழுநியமிக்க வழி வகுத்தது. இக்குழுவே வழக்குகளை விசாரித்தது. கிழக்கிந்திய கம்பெனி குறிப்பாக மதராஸ் பகுதியில் ஒரு ஆளுகை சக்தியாக உருவானது. இங்கு ஏற்கெனவே இயங்கிய உள்ளூர் நீதி நிர்வாக முறையைப் பின்பற்றும் வகையில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இங்கிலாந்து சட்டத்தின்படி ஆளுநரும் அவருடைய ஆட்சிகுழுவும் குடிமையியல், குற்ற வழக்குகளைத் தீர்மானிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டன. எனினும் உள்நாட்டு வழக்குகளில் உள்ளூர் பாரம்பரிய முறைகளே பின்பற்றப்பட்டன. இங்கிலாந்து அரசால் விசாரிக்கப்பட்ட முதல் வழக்கு அசென்டினா வழக்கு ஆகும்.

1665-ஆம் ஆண்டு இந்த வழக்கு நடந்தது. அப்போது, பாக்ஸ் க்ராப்ட் ஆளுநராக இருந்தார். 1678-ஆம் ஆண்டு ஸ்டிரெய்ன்ஷாம் மாஸ்டர் என்பவர் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டது. மதராஸ் நீதிமுறை அமைப்பு மறுசீரமைப்பு செய்யப்படுவதற்குக் காரணமானது. ஆளுநரும் அவருடைய குழுவும் சேர்ந்து நீதி வழங்கும் அதிகாரம் கொண்ட உயர் நீதிமன்ற ஆட்சி குழுவாக மாறியது. ஆங்கிலம் நீதிமன்ற மொழியாக அறிவிக்கப்பட்டது. வணிகர்கள் கடலில் மேற்கொள்ளும் குற்றங்களை விசாரிக்க ஒரு கடற்படை நீதிமன்றம் நிறுவ 1683-ஆம் ஆண்டு சாசன சட்டம் வழிவகுத்தது. 1687 – ஆம் ஆண்டு சாசன சட்டம் மதராஸ் மாநகராட்சி அமைப்பதற்கு கிழக்கிந்திய கம்பெனிக்கு அதிகாரமளித்தது. அதோடு மேயர் நீதிமன்றம் இணைக்கப்பட்டது. இதுவே மதராஸ் நகரத்தின் நீதிமன்றமாக (வழக்கு மன்றம்) இயங்கியது.

பம்பாயின் நீதி நிர்வாகத்தைப் பொருத்தவரை, பாம்பே மீது கிழக்கிந்திய கம்பெனி நீதிதுறை அதிகாரம் செலுத்த 1668 ஆம் ஆண்டு சாசன சட்டம் அதிகாரம் அளித்தது. 1672-ஆம் ஆண்டு பிரகடனம். ஆங்கிலேயச் சட்டத்தை பம்பாயில் அறிமுகப்படுத்தியது. மேலும், பம்பாய் நீதிவழக்கும் அதிகாரம் கொண்ட நீதித்துறை புதிய மத்திய நீதிமன்றத்தை நிறுவியது. ஆங்கில சட்டத்தின் பயன்பாடு என்பது ஐரோப்பியர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் நலன்கள் சார்ந்த விவகாரங்களுக்கு பொருந்தக் கூடியதாகும். இந்த நீதிமன்றமானது குடிமையியல், குற்றவியல் மற்றும் நிருபிப்பு வழக்குகளில் அதிகாரவரம்பைச் செயற்படுத்தியது. மேலும் குற்றச் சட்டங்களை நிர்வகிக்க அமைதிக்கான நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டனர். அதன்பிறகு சாட்சியங்களை விசாரணை செய்யவும், தொடக்கநிலை விசாரணைகள் செய்யவும், வழக்ககுகள் நீதிமன்றத்தை நோக்கி கொண்டு செல்லப்பட்டன. எனினும் சித்தி யாக்கூப் எனும் முகலாய கடற்படை தளபதியின் படையெடுப்பு 1690-ஆம் ஆண்டு பம்பாயில் நீதிமன்றம் கலைக்கப்படக் காரணமாகிறது. 12 ஆண்டுகளுக்குப் பிறகு, 1718 ஆம் ஆண்டு மீண்டும் நீதிவழங்கும் அதிகாரம் கொண்ட நீதிமன்றம் புதுப்பிக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு விவகாரங்கள் மீதான விசாரணை நடத்த அதிகாரம் கொண்டதாகும். இந்த நீதிமன்றமானது வாரத்திற்கு ஒரு முறை கூடினாலும், துரிதமான விசாரனைக்கும் பாகுபாடற்ற தீர்ப்புகளுக்கும் புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது.

கல்கத்தா மாகாணத்தைப் பொருத்தவரை, ஆளுநருக்கும், அவருடைய ஆட்சிக் குழுவுக்கும் நீதித்துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. குடிமையியல் மற்றும் குற்றவியல் விவகாரங்களைப் பொருத்தவரை, கிழக்கிந்திய கம்பெனியானது ஏற்கனவே வழக்கத்திலிருந்த முகலாய நீதித்துறை நிர்வாக முறையையே பின்பற்றியது. ஆங்கிலேயே மாவட்ட ஆட்சியரால் மூன்றாம் நடுவர் தீர்ப்பாயத்திற்குப் பரிந்துரைக்கப்படும் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பாஜ்தாரி நீதிமன்றம் தலைமையேற்று நடத்தியது. கல்கத்தா நீதித்துறை நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சியர் மிக முக்கியப் பங்கு வகித்தார். மேலும், அவருடைய அலுவலகம் குடிமையியல், குற்றவியல் மற்றும் வருவாய் வழக்குகளை விசாரிக்கும் அலுவலகமாகவும் இருந்தது.

இதேபோல் சாசன சட்டம் 1687 மதராஸ் மாகாணத்தில் பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் 1726-ஆம் ஆண்டு சாசன சட்டம் மூன்று மாகாணங்களிலும் ஒவ்வொரு மேயர் நீதிமன்றங்களை அமைத்தது. 1753-ஆம் ஆண்டு சாசன சட்டம், 1726-ஆம் ஆண்டு சாசனத்தில் நீதி தொடர்பான பகுதிகளை மேலும் சீர்த்திருத்தம் செய்தது. மேலும் இந்த சாசனம் சட்டம் ஐந்து நீதிமன்றங்களை நிறுவியது. அவைகள், முறையே கோரிக்கைகள் நீதிமன்றம், மேயர் நீதிமன்றம், குடியரசுத்தலைவர் நீதிமன்றம். ஆட்சிக்குழு கொண்ட நீதிமன்றம் மற்றும் அரசர் தலைமையிலான நீதிமன்றம் ஆகியனவாகும். இந்திய நிதித்துறையின் மற்றொரு வரலாற்றுச் சிறப்புமிக்க பரிணாம வளர்ச்சி 1772-ஆம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்கின் திட்டமாகும். இது நீதித்துறை நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்துவதாக இருந்தது. 1780-ஆம் ஆண்டுகளில் அவர் மாகாண நீதிமன்றங்களைச் சீரமைத்தார்.

காலனி ஆட்சிக் காலத்தில் நீதித்துறையில் ஏற்பட்ட மிக முதன்மையான மேம்பாடு என்பது உள்ளூர் சட்டங்களை தொகுத்தது ஆகும். முதலாவது கவர்னர் ஜெனரல் பதவி வகித்த வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்து சட்டங்களைத் தொகுப்பதற்கு காரணமானவர் ஆவார். அடுத்து கார்ன் வாலிஸ் தொகுத்த சட்டத் தொகுப்பு மற்றொரு முதன்மையான பங்களிப்பாகும். அதைப்போலவே இஸ்லாமிய சட்டங்களும் தொகுக்கப்பட்டு நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கல்கத்தாவில் ஒழுங்குமுறைச் சட்டம் 1773-ஆம் ஆண்டு. ஒரு உச்ச நீதிமன்ற நீதி நிர்வாகம் அமைக்க மன்னருக்கு அதிகாரம் அளித்தது. சாசன சட்டம் 1774 உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்புகளை விரிவாக்கம் செய்தது. எனினும் மதராஸ், பம்பாய் உச்ச நீதிமன்றங்கள் உடனடியாக நிறுவப்படவில்லை. 1801 மற்றும் 1824 ஆம் ஆண்டுகளில் முறையே மதராஸ், பம்பாய் உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. 1793-ஆம் ஆண்டில் காரன்வாலிஸ் பிரபு “சட்ட விதிகள் தொகுப்பு“ ஒன்றினைத் தயாரித்தார். இதுவே, “காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பு“ எனப் புகழ்பெற்றது. அது குடிமை மற்றும் குற்றவியல் என இரு விசாரணை முறைகளையும் கையாளுவதாக இருந்தது. அவர் குடிமையியல் நீதிமன்றங்களை அங்கீகரித்தார். நீதிமன்றக் கட்டணங்களை ஒழித்தார். மேலும், குற்றவியல் நீதிமன்றங்களில் சீர்திருத்தம் செய்தார். வங்காளத்தின் கவர்னர் ஜெனரலாக 1807-ஆம் ஆண்டு பதவியேற்ற மின்டோ பிரபு பல்வேறு நீதிமன்றங்களின் அதிகாரங்களையும், அதிகார வரம்பினையும் அதிகரித்தார். 1813-ஆம் ஆண்டு ஹாஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் நாட்டின் குடிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நிர்வாகத்தில் மேலும் பல சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். நீதி நிர்வாகத்தில் நிலவும் சிவப்பு – நாடா முறையைத் தடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து பெண்டிங் பதவியேற்றார்.

இவர் இந்தியாவின் நீதித்துறை நிர்வாகத்தை மறுசீரமைப்பு மற்றும் தொகுக்கும் பணியை செய்தார். அவர் மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்களை மூடினார். அப்பணிகளை மாவட்ட நடுவர் நீதிமன்றங்களுக்கு மாற்றினார். 1834 – 1861 காலகட்டத்தில் இங்கிலாந்து மன்னர் நீதிமன்றமும், இந்தியாவில் கம்பெனி நீதிமன்றமும் தனித்தனி அதிகார வரம்புகளைக் கொண்ட இரட்டை நீதி அமைப்பை உருவாக்கி இருந்தது.

இந்திய உயர் நீதிமன்ற சட்டம் 1861, கல்கத்தா, மதராஸ், பாம்பாய் ஆகிய நகரங்களில் நீதி வழங்கும் அதிகாரம் கொண்ட உயர் நீதிமன்றங்களை அமைக்க மன்னருக்கு அதிகாரம் அளித்தது. இது உச்ச நீதிமன்ற முறை ஒழிப்புக்கு இட்டுச் சென்றது. இதுவே இந்தியாவில் உயர் நீதிமன்றங்கள் தோன்றுவதற்கான வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகக் கருதப்படுகிறது. பின்னர், இந்திய அரசாங்கச் சட்டம் 1935, இந்திய உயர் நீதிமன்றங்களின் தன்மை, அதிகார வரம்பில் குறிப்பிடத்தக்க மாறுதல்களைச் செய்தது. இந்தியா விடுதலை அடைந்து அரசமைப்பு ஏற்கப்பட்ட காலகட்டத்தில் பஞ்சாப், அசாம், ஒடிசா, ராஜஸ்தான், திருவாங்கூர், மைசூர் மற்றும் ஜம்மு காஷ்மீர் என ஏழு உயர் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டிருந்தன. பிற உயர் நீதிமன்றங்கள் பின்னர் உருவாயின. இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர், ஏற்கெனவே இயங்கிய உயர் நீதிமன்றங்கள் அங்கீகரிக்கப்பட்டன. மேலும், அனைத்து மாநிலங்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்டப் பகுதிகளும் உயர் நீதிமன்றம் பெறும் வகையில் ஒவ்வொரு மாநிலம் அல்லது இரண்டு, மூன்று பகுதிகள் இணைத்து உயர் நீதிமன்றங்களை நிறுவ நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. 1976-ஆம் அ்ணடு 42-வது அரசமைப்பு திருத்தச்சட்டம் உயர் நீதிமன்றங்களின் அதிகார வரம்பில் பெருமளவு மாற்றத்தினை கொண்டு வந்தது.

இவ்வாறாக, தொடக்கக் காலத்தில், கல்கத்தா, சென்னை, பம்பாய் என மூன்று உயர் நீதிமன்றங்களே அன்று இருந்தன. சுதந்திரத்திற்கு முன் இருந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் மட்டுமல்லாமல், உயர் நீதிமன்றங்கள் அமைப்பு மற்றும் அதிகாரவரம்பிலும் பெயரளவில் மாற்றங்களைக் கொண்டுவந்தன. இதன்மூலம் அவற்றின் சுதந்திரத் தன்மை பாகுபாடற்றத் தன்மை போன்றவை உறுதி செய்யப்பட்டன. அரசமைப்பை நடைமுறைக்கு கொண்டு வந்த பின்பே உயர் நீதிமன்றங்களின் நிலையானது வலிமையடைந்தது மேலும் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் அசல் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற என்ற நிலையைக் கடந்து, அரசமைப்பின்

பாதுகாவலனாகவும், அரசமைப்பு குறித்து விளக்கமளிக்கும் அதிகாரம் கொண்டதாகவும் வலுவடைந்தது.

இந்திய உச்ச நீதிமன்றத்தை பொருத்தவரை, இந்திய அரசாங்கச் சட்டம் 1935 ல் ஓர் மைல்கல் சட்டமாகும். இந்திய அரசாங்கத்தின் அமைப்பை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி இச்சட்டம், ஒற்றையாட்சி முறையில் இருந்து கூட்டாட்சி முறைக்கு மாறிக் கொண்டிருந்த அத்தருணத்தில் ஒரு கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றம் தேவை அதிகரித்தது. எனவே, இது தொடர்பாக, அச்சட்டத்தில் ஒரு வதி சேர்க்கப்பட்டது. அதன்படி 1937-ஆம் ஆண்டு கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் ஆறு நீதிபதிகளையும் கொண்டிருந்தது. 1950-ஆம் ஆண்டு இந்நீதிமன்றம் இந்தியாவின் உச்ச நீதிமன்றமாக ஆனது.

இடைப்பட்ட 12 ஆண்டுகள் எனும் குறுகிய காலத்தில் கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றம் இந்திய சட்ட வரலாற்றில் அழியாத விளைவுகளை விட்டுச் சென்றது. தேசிய அதிகார வரம்பு கொண்ட முதல் நீதிமன்றமும் இதுவே ஆகும். இந்த கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றத்தில் இருந்துதான் அதன் நீதிபதிகள் சுதந்திரம், நேர்மை, பாகுபாடற்ற விசாரணை என்ற மரபைப் பெற்றெடுத்தனர். மேலும், 1726 மற்றும் 1883-ஆம் ஆண்டுகளுக்கிடையே பிரபுக்களின் நீதிமன்ற மேலவை (Privy Council) ஆற்றிய பங்கு குறித்தும் இங்கு சிறப்பாக குறிப்பிட்ட வேண்டியது தேவையாகிறது. இது இந்திய நீதித்துறை முறைக்கு இன்றியமையாத அளவிற்கு பங்களித்தது. இன்றளவும் நீதிமன்றங்களில் ஒளிவிளக்காக உள்ள அடிப்படையான இந்திய சட்டக் கோட்பாடுகளை வகுத்துக் கொடுத்தது இதுவே ஆகும்.

**சர் ஹரி சிங் கோர்:**
இறுதிக்கட்ட மேல்முறையீட்டுக்காக பிரிந்து செல்லாமல் இந்தியாவிலேயே மேல்முறையீடு ஒரு அனைந்திந்திய தலைமை நீதிமன்றத்தின் தேவையை 1921 ல் உணர்ந்தவர்.

இந்திய சுதந்திரச் சட்டம், 1947-ஆம் ஆண்டு மூலம் அரசியல் அதிகாரம் மாற்றப்பட்டது. இந்தியாவில் தனித்த, சுதந்திரமான நீதித்துறை அமைப்பு நிறுவுவதன் தேவையை ஏற்படுத்தியது. இந்த நோக்கத்துடன் கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பு இது விரிவாக்கப்பட்டது. இதையொட்டி, பிரபுக்கள் நீதிமன்ற மேலவை ஒழிப்பு, கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்ற அதிகார விரிவாக்கம் சட்டம் 1949 இயற்றப்பட்டது. இதன்படி, இந்தியக் கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்றம் நாட்டின் உயர்ந்தபட்ச நீதி அதிகார வரம்பு கொண்டதாக வலுவடைந்தது. ஜனவரி 26. 1950 – ஆம் ஆண்டு அரசமைப்பு அமலாக்கத்துடன், அரசமைப்பு உறுப்பு 124 இந்திய உச்ச நீதி மன்றத்தை நிறுவ வழி செய்தது. இவ்வாறு, மெதுவாகவும், சீராகவும் படிப்படியாகவும் இந்திய நீதி அமைப்பு பரிணாமம் அடைந்தது. இது காலத்தோடு பொருந்தி சிறப்பாக வளர்ந்து தன்னை நிரூபித்துக் கொண்டுள்ளது.

**இந்திய உச்ச நீதிமன்றம்:**

தனித்தன்மை – சட்ட மூலவளங்கள் - அதிகார வரம்பு மற்றும் அதிகாரங்கள் - நிறுவனமயம்.

இந்திய அரசமைப்பு மூன்று அடுக்கு நீதித்துறை அமைப்பினை வழங்குகிறது. அவை வருமாறு:

1. இந்திய உச்ச நீதிமன்றம்

2. அரசமைப்புப்படி உருவாக்கப்பட்ட மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்கள்.
3. ஒவ்வொரு மாநிலத்திலும் நீதி மாவட்டங்களில் வாரியாக மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்

இந்திய அரசமைப்பு நீதித்துறைக்கு சுதந்திரம் வழங்கியுள்ளது. அதாவது, ஆட்சித்துறை சட்டமன்றங்களின் தலையீடுகளில் இருந்து நீதித்துறைக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா போன்ற கூட்டாட்சி மக்களாட்சியில், உச்ச நீதிமன்றமே அரசமைப்பின் காவலன் ஆகும். மத்திய, மாநில அரசுகளுக்கு இடையில் எழும் சிக்கலுக்கு, தீர்வு காண்பது, மாநிலங்களுக்கு இடையே எழும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பது, குற்றவியல், குடிமையியல் வழக்குகளில் உயர்ந்தபட்ச மேல்முறையீடு நீதிமன்றம் ஆகிய மிகப் பெரிய பொறுப்புகளை நிறைவேற்றுகிறது. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் அடிப்படை உரிமைகள் அமலாக்கம் மற்றும் அனைத்து இந்தியக் குடிமக்களின் சுதந்திரம் ஆகிய பெரும் பொறுப்புகளை உச்ச நீதிமன்றம் சுமக்கிறது. எனினும் அமெரிக்க, ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சி அமைப்பு போன்று (ஒன்று கூட்டாட்சிக்காக மற்றொன்று மாநிலங்களுக்காக) என இரண்டு தொகுப்பு நீதித்துறை அமைப்பினை இந்திய அரசமைப்பு வழங்கவில்லை. இந்தியா ஒரு ஒருங்கிணைந்த நீதித்துறை முறையினை மட்டுமே கொண்டிருக்கிறது. இதன்படி, உச்ச நீதிமன்றம் தலைமை நீதிமன்றமாக (Apex) இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்கள் மீதும் அதிகாரம் செலுத்துகிறது.

**சட்ட மூலவளங்கள்:**

இந்தியாவில் சட்ட ஆட்சியின் மூல ஊற்றாக அரசமைப்பு அமைந்திருக்கிறது. அரசமைப்பின் அடிப்படைகளுக்கு ஏற்ப நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்கள், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் சட்டமன்றங்கள் சட்டங்கள் இயற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது. தவிர, உறுப்புகள், ஒழுங்குமுறைகள், நிர்வாக அமைப்புச் சட்டங்கள் என துணைச் சட்டங்கள் இயற்றவும் அனுமதிக்கப்படுகிறது. அதே சமயம், இவை மூன்றாவது சட்ட மூலங்கள் எனக் கருதப்படும்.

**ஒருங்கிணைந்த நீதித்துறை:**
இந்தியக் கூட்டாட்சி, இரட்டை ஆட்சி அமைப்புமுறை கொண்டிருந்தாலும் இரட்டை நீதித்துறை அமைப்பைக் கொண்டிருக்கவில்லை.
உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும், அரசமைப்பின் கீழ் ஒருங்கிணைந்த நீதித்துறையாகச் செயல்பட்டு அனைத்து குடிமையியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கு தீர்வு காண்கிறது. தீர்வு வழங்கும் முறையில் வேறுபாடுகளைக் களைவதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

**உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பும் அதிகாரங்களும்:**

உச்ச நீதிமன்றமே அசல், மேல்முறையீட்டு மற்றும் ஆலோசனை வழங்குதல் என மூன்று அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது. அசல் நீதி அதிகாரவரம்பு என்பது உச்ச நீதிமன்றங்களில் அனைத்து வழக்குகளுக்கும் மூலதாரமாகிவிடுகிறது என்பதாகும். இவை மத்திய அரசாங்கங்களுக்கும் அல்லது இதர மாநில அரசுகளுக்கும் இடையே எழும் கருத்து வேறுபாடுகள் அல்லது மாநிலங்களுக்கு இடையே எழுகின்ற சிக்கல்களையும் உள்ளடக்கியது ஆகும். அடிப்படை உரிமைகள் தொடர்புடைய வழக்குகளில் உச்ச நீதிமன்றமானது அசல் நீதித்துறை, மேல்முறையீட்டு அதிகார வரம்பு என இரண்டு அதிகாரங்களையும் கொண்டிருக்கிறது. மேலும் நீதிப்பேராணைகள் முறையே, ஆட்கொணரவு, நெறியுறுத்தும் நீதிப்பேராணை, தகுதிமுறை வினவுதல், தடை, கீழமை

நீதிமன்றங்களுக்கு ஆணையிடுதல், விளக்கம் கோரி ஆணையிடுதல் போன்ற ஆணைகளை உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கிறது.

உச்ச நீதிமன்றம்தான் இந்தியாவில் உள்ள உச்சபட்ச மேல் முறையீட்டு நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றங்களுக்கு எதிரான மேல்முறையீடுகளை இங்கு தான் செய்ய முடியும் (குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் இரண்டிற்கும்). குறிப்பிட்ட விவகாரங்களில் வழிகாட்டுதல் வழங்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு உள்ளது.

**தாமதமாகும் நீதி, மறுக்கப்படும் நீதியே**

- ❖ கீழமை நீதிமன்றங்களில் 2.91 கோடி வழங்குகள் நிலுவையில் உள்ளது. நீதி பரிபாலனம் தாமதம்.
- ❖ 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக வழக்குகள் அதிகம் தேக்கம் அடைந்துள்ள மாநிலங்களில் மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களில் மட்டும் 8 கோடி வழக்குகளை நிலுவையாகக் கொண்டு உத்திரப்பிரதேச மாநிலம் முதலிடம் வகிக்கிறது.
- ❖ தேசிய நீதித்துறை தகவல் அமைப்பின்படி, நாடு முழுவதும் மாவட்ட மற்றும் துணை நிலை நீதிமன்றங்களில் 2.91 கோடி வழக்குகள் தேக்கமடைந்துள்ளன. இவற்றில் 21.9 லட்சம் வழக்குகள் 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக நிலுவையில் உள்ளன.
- ❖ வழக்குகள் அதிகமாக தேக்கமடைந்த மாநிலங்களில் உத்திரப்பிரதேச மாநிலத்திற்கு அடுத்தப்படியாக பீகார் மாநிலத்தில் மூன்று லட்சம் வழக்குகளும் மஹாராட்டிர மாநிலத்தில் இரண்டு லட்சம் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. சிக்கிம் மாநிலத்தில் இரண்டு வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளது. அந்தமான் நிக்கோபார் மாநிலத்தில் ஒரு வழக்கும் நிலுவையில் இல்லை.

தாமதமாகும் நீதி மறுக்கப்படும் நீதி என்ற தலைப்பில் மாணவர்களை இருப்பிரிவுகளாகப் பிரித்து உரையாடுவதற்கு ஆசிரியர் ஏற்பாடு செய்யலாம். ஒருக் குழுவினர் தலைப்பிற்கு ஆதரவாகவும் மற்றக் குழுவினர் தலைப்பிற்கு எதிராகவும் வாதிடும்படி குடியரசுத்தலைவர் உச்ச நீதிமன்றத்திடம் எந்த ஒரு சட்ட விவகாரம் குறித்தும் ஆலோசனை கேட்டு அணுக முடியும். ஆனால் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைகளை குடியரசுத்தலைவர் ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை.

உச்ச நீதிமன்றம் இந்திய அரசமைப்பின் பாதுகாவலனாக இயங்குகிறது அரசமைப்புக்கு விளக்கம் அளிப்பதில் உச்ச நீதிமன்றமே இறுதி அதிகாரம் கொண்டுள்ளது. நிர்வாக நடவடிக்கையோ, கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகளோ அரசமைப்பின் அடிப்படை நோக்கங்களுக்கு எதிராக உள்ளது என உச்ச நீதிமன்றம் கருதுமானால் அதனை ரத்து செய்யும் அதிகாரம் கொண்டுள்ளது.

**உச்ச நீதிமன்றம் அமைப்பு:**

உச்ச நீதிமன்றமானது இந்திய அரசமைப்புப் பகுதி 5 அத்தியாயம் 4 முதல் நிறுவப்பட்டுள்ளது. அரசமைப்பு உறுப்புகள் 124 முதல் 147 வரை இந்திய உச்ச நீதி மன்றத்தின் வடிவம் மற்றும் அதிகார வரம்புகள் குறித்து கூறுகின்றன. அரசமைப்பு ஆரம்பத்தில் ஒரு நீதிபதி, ஏழு கீழ்நிலை நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத்தினை அனுமதித்தது. இந்த எண்ணிக்கையை அதிகரிக்கவும் நாடாளுமன்றத்திற்கு அரசமைப்பு

அதிகாரம் கொடுத்திருந்தது. 2008-ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்தது.

உச்ச நீதிமன்ற நீதிபதியை நியமனம் செய்வதற்கு, தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத்தின் இதர நான்கு மூத்த நீதிபதிகள் கொண்ட “குழு” – வுடன் (Collegium) கலந்தாலோசிக்க வேண்டும். புதிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குறித்து குழு ஒருமித்த கருத்து அடிப்படையில் பரிந்துரைக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் ஒவ்வொரு நீதிபதியும் அமைச்சரவை மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுடன் கலந்தாலோசனை செய்த பின்னர் குடியரசுத்தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். அவ்வாறு நியமனம் செய்யும் உச்ச நீதிமன்ற நீதிபதி 65 வயது அடையும் வரை பதவியில் இருக்கலாம். எந்த ஒரு நீதிபதியாவது பதவி விலக நினைத்தால், தன்னால் கைப்பட எழுதிய பதவி விலகல் கடிதத்தில் கையொப்பமிட்டு குடியிரசுத்தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஒரு நீதிபதியை நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் பதவி நீக்கம் செய்ய முடியும்.

குடியரசுத்தலைவருக்க சமர்ப்பிக்க வேண்டும். ஒரு நீதிபதியை நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் பதவி நீக்கம் செய்ய முடியும்.

ஒருவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட அவர் இந்தியக் குடியுரிமை பெற்றிருத்தல், உயர் நீதிமன்ற நீதிபதியாக ஐந்து ஆண்டுகள், பணியாற்றிய அனுபவம் அல்லது குறைந்தது 10 ஆண்டுகள், தொடர்ந்து ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராகப் பணியாற்றிய அனுபவம் இவற்றுடன் நாடாளுமன்றம் விதித்துள்ள தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும் அல்லது அத்தகைய ஒரு நபர் கட்டாயம் குடியரசுத்தலைவர் கருத்தில் தலைசிறந்த சட்ட நிபுணராக இருக்க வேண்டும்.

**கண்டனத் தீர்மானம்:**

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதிக்கப்பட்டு ஒட்டு மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாமல் கலந்து கொண்டு, அதே அமர்வில் வாக்கெடுப்பில் ஆதரவு பெரும்பான்மை பெற்றால் உச்ச நீதிமன்ற நீதிபதியை விசாரிக்க குடியரசுத்தலைவர் ஆணையிடுவார்.

**நியமனங்கள் அனைத்தும் பொதுவாக பணிமூப்பு அடிப்படையில் செய்யப்படுகிறது.**

பட்டியலினத்தவர் சமுதாயத்தில் இருந்து ஒருவர் முதல் முறையாக 2000-இல் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார். அவர் நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் ஆவார். இவர் 2007-இல் பட்டியலினத்தைச் சார்ந்த முதல் தலைமை நீதிபதியாக உயர்ந்தார்.

தற்போதுள்ள அரசமைப்பின் கீழ் இந்திய உச்ச நீதிமன்றம் ஜனவரி 28, 1950-ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது. தொடக்கத்தில் நாடாளுமன்றத்தின் இளவரசர்கள் மாடத்தில் செயல்பட்டது. 1958-ஆம் ஆண்டு தற்போது உள்ள வளாகத்துக்கு மாற்றப்பட்டது.

நீதிபதி ஹரிலால் ஜெ.கனியா, உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி ஆவார். அவருடன் நீதிபதிகளாக பதவியேற்றவர்கள் முறையே, நீதிபதி சையத் பாசல் அலி, பதஞ்சலி சாஸ்திரி, நீதிபதி மெகர்சந் மகாஜன், நீதிபதி பிஜன் குமார், நீதிபதி முகர்ஜி மற்றும் நீதிபதி எஸ்.ஆர். தாஸ் ஆகியோர்கள் ஆவர்.

**உயர்நீதிமன்றங்கள்:**

உயர் நீதிமன்றங்கள் மாநிலங்களின் தலைமை நீதித்துறை நிர்வாக அமைப்பு ஆகும். அரசமைப்புப்படி ஒவ்வொரு மாநிலமும் ஒரு உயர் நீதிமன்றத்தை பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதும், தற்போது நான்கு மாநிலங்கள் ஒன்றுக்கு அதிகமான மாநிலங்களுடன் இணைந்த உயர் நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளன. ஆறு ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் அருகே அமைந்த மாநிலத்தின் உயர் நீதிமன்றத்தின் நீதி அதிகார வரம்பின் கீழ் வருகின்றன. ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் டில்லி மட்டுமே தனக்கான உயர் நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் ஒரு தலைமை நீதிபதியையும் இதர நீதிபதிகளையும் கொண்டிருக்கிறது.

குறித்த இடைவெளிகளில் குடியரசுத்தலைவர் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்கின்றார். உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியினை உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மாநிலத்தின் ஆளுநர் ஆகியோரை கலந்தாலோசித்து குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார். பிற நீதிபதிகள் நியமனத்தில் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் பிரிந்துரைகளும் ஆலோசனை கேட்கப்படும். உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் 62வயது நிரம்பும் வரை பதவியில் இருப்பார். பதவி நீக்கத்தை பொருத்தவரை உச்ச நீதிமன்ற நீதிபதியின் பதவி நீக்க நடைமுறை போலவே இருக்கும். உயர் நீதிமன்ற நீதிபதி நியமனத்திற்கு ஒருவர். இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும் 10 ஆண்டுகள் நீதித் துறையில் பணிபுரிந்திருக்க வேண்டும் அல்லது 10 ஆண்டுகள் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக பணியாற்றி இருக்க வேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் வழக்குகள் மாநில ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அசல் நீதித்துறை மற்றும் மேல்முறையீட்டு அதிகார வரம்பு ஆகியனவற்றை உள்ளடக்கியது. ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தனது கீழ் உள்ள கீழமை நீதிமன்றங்களின் மீது மேலாதிக்க அதிகாரம் கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றங்கள் தனித்த, ஒருங்கிணைந்த நீதித்துறை அதிகார அமைப்பாக இருந்தாலும் அவை இன்னும் முழுமையான சுதந்திரமான நீதித்துறை நிறுவனங்கள் எனக் கூறமுடியாது.

உச்ச நீதிமன்றம் அவைகளின் மீது நேரடியான நிர்வாக கட்டுப்பாடு எதுவும் கொண்டிருக்கவில்லை, அவை எந்த விதத்திலும் சட்டமன்றத்தாலோ அல்லது மாநில ஆட்சித்துயையாலோ கட்டுப்படுத்தப்படுவதில்லை. ஆனால் அவற்றின் நீதிபதிகள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உடனான ஆலோசனைக்கு பிறகு குடியரசுத்தலைவரால் ஒரு உயர் நீதிமன்றத்தில் இருந்து மற்றொரு உயர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட முடியும். உயர் நீதிமன்றங்களும் கூட அடிப்படை உரிமைகள் தொடர்புடைய வழக்குகளில் நீதிப் பேராணைகள் வழங்கும் அதிகாரங்கள் கொண்டவைகளாகும்.

**அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்ட வழித்தீர்வுகள்:**

உரிமைகள் மீறப்பட்ட நபர்களுக்கு விரைந்து நீதி வழங்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் பார்வையில் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் இரண்டும் நீதிப் பேராணைகள் இடைக்கால உத்தரவு வழங்கும் அதிகாரங்கள் கொண்டிருக்கின்றன. அவைகள் ஐந்து வகைப்படும்.

1. **ஆட்கொணர்வு நீதிப்பேராணை:**

இதன் பொருள் ஒரு நபரை உயிருடன் கொண்டு வந்து நிறுத்தும்படி கூறுவதாகும். இந்த நீதிப்பேராணை ஒரு நபர் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு வழக்கிற்கு பொருந்தக் கூடியதாகும். இந்த நீதிப்பேராணையானது ஒவ்வொரு தனிநபரின், தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது.

2. **நெறியுறுத்தும் நீதிப்பேராணை:**

இந்த பேராணையானது, சட்டப்படி இயங்கும் படியும், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் இடப்படும் ஆணையாகும். இதன் பொருள் எந்த ஒரு அதிகாரம் கொண்டோரையும் அவரின் சட்டபூர்வமான கடமையை செய்ய உத்தரவிடுவதை குறிக்கும். இந்த நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையானது, சட்டபூர்வ கடமையை வலியுறுத்துவதுடன், பொது மக்கள் நலன்காக்கும் கடமையை செய்ய மறுக்கும் அதிகாரி, அலுவலர்கள், அரசு என நீதிமன்ற அமைப்புகளுக்கு எதிராகக் கூட ஆணையிடக் கூடியதாகும்.

3. **தடை நீதிப்பேராணை:**

இந்த நீதிப் பேராணையானது உயர்மட்ட நீதிமன்றம், கீழ்நிலை நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்கள் தங்களின் அதிகார வரம்பை மீறி நடப்பதைத் தடுக்கும் விதமாக வழங்கப்படுவதாகும். இந்த தடை விதமாக வழங்கப்படுவதாகும். இந்த தடை ஆணை நீதித்துறை சார்ந்த அமைப்புகள் அல்லது பகுதி அளவு மட்டுமே நீதித்துறை அமைப்புகளுக்கு எதிராக மட்டும் வழங்கப்படும் தடை ஆணைகள் ஆகும்.

4. **தகுதி முறை வினவும் நீதிப் பேராணை:**

இதன் பொருள், எந்த அதிகாரத்தின் அடிப்படையில் அல்லது பணி சான்றிதழ் ஆணை அடிப்படையில் என வினா எழுப்புவதை குறிப்பிடுவதாகும். இதன் பொருள் ஒரு நபர், ஒரு அரசு அலுவலக பதவியில், எந்தத் தகுதியின் அடிப்படையில் அமர்ந்திருக்கிறார் என வினா எழுப்பும் படியான விவகாரத்தில் வழங்கப்படும் நீதிப்பேராணையாகும்.

5. **விளக்கம் கோரும் ஆணை:**

ஒரு பொது அலுவலில் சட்டபூர்வ நிலையை ஒருவர் எதன் அடிப்படையில் அல்லது எந்த அதிகார அமைப்பின் அடிப்படையில் அதில் அமர்த்தப்பட்டார் என்று கேள்விக்கேட்பது ஆகும்.

மேற்கண்ட நீதிப் பேராணைகளோடு, உயர் நீதிமன்றமானது சட்டஉறுப்பு 266-ன் கீழ் பொது மக்கள் நலன்கருதி வழிகாட்டுதல்கள், உத்தரவுகள் பிறப்பதாகும்.

**நீதித்துறைச் சீராய்வு பொது நல வழக்கு மற்றும் நீதித்துறை செயல்பாட்டு முறை**

**நீதித்துறைச் சீராய்வு:**

தனி நபர்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள நீதிமன்றச் சீராய்வு அதிகாரம் மிகவும் முக்கியமானது. இந்திய

உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு இருக்கும் இத்தகைய நீதித்துறைச் சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டம் இயற்றுவது மற்றும் அதனைச் செயல்படுத்துவது என இரண்டின் மீதும் அரசமைப்புப்படி மறு ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கும் வகையில் இந்த அதிகாரம் விரிவான வரம்புகளைக் கொண்டுள்ளது.

நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் அரசமைப்பிற்கு முரணாக இருக்குமானால் அச்சட்டம் செல்லாது என்று நீக்கப்படும். இவ்வாறு மிகவும் துணிச்சலான, முரண்பாடான ஒரு தீர்ப்பு, வங்கிகள் தேசியமயமாக்கும் சட்டம் செல்லாது என அறிவித்ததாகும். சிறுபான்மையினர் தங்களுக்கான கல்வி நிறுவனங்கள் நிறுவவும் நிர்வகிக்கவும் வழங்கப்பட்ட உரிமைகளைப் பறிக்கும் வகையில் இயற்றப்பட்ட சட்டங்கள் செல்லாதது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தலும் நீதித்துறைச் சீராய்வு முறையீடு மனு மீது வழங்கப்பட்ட முக்கிய தீர்ப்பாகும்.

இதே அடிப்படையில் ஒரு அரசமைப்புத் திருத்தச் சட்டம் மீதே சீராய்வு மனு தாக்கல் செய்யும் அளவுக்கு நீதத்துறைச் சீராய்வு அதிகார வரம்பு விரிவடைந்ததாகக் காணப்படுகிறது. இந்த வழக்குகள் அரசமைப்பு திருத்தச்சட்டம் ஒரு அரசமைப்பின் அடிப்படை கோடபாட்டுக்கு பாதிப்பிற்குள்ளாகிறதா என்று மறு ஆய்வு செய்வதாகும். உதாரணமாக மதச்சார்பற்றத்தன்மை, மக்களாட்சி, கூட்டாட்சி முறை போன்றவை மீதான திருத்தச்சட்டம், அரசமைப்பிற்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் கருதினால் அத்திருத்தச்சட்டம் அரசமைப்புக்கு விரோதமானது எனவே செல்லாது என்று அறிவிக்கப்படும்.

இந்தியாவில் சட்ட நிர்வாகத்தில் நீதித்துறைச் சீராய்வு அதிகாரம் முக்கியப் பங்காற்றுகிறது. இந்திய அரசமைப்பு உறுப்பு 13 (2)-வது, நாடு முழுவதும் ஒரே மாதிரியான விதிகளை அமல்படுத்துவது சரியல்ல என்று நம்புகிறது. குறிப்பாக, அத்தகைய நாடு தழுவிய விதிகள் அரசமைப்பு பாகம் 3இல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிப்பதாகும் எனக் கருதுகிறது. அரசமைப்பில் இந்தப் பிரிவுக்கு எதிராக விதிக்கப்படும் எந்த விதிமீறலாகக் கருதப்பட்டு, சீராய்வுக்கும் பின்னர் அந்த விதி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்படும்.

விதிகளை அமல்படுத்துவது சரியல்ல என்று நம்புகிறது. குறிப்பாக, அத்தகைய நாடு தழுவிய விதிகள் அரசமைப்பு பாகம் 3இல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிப்பதாகும் எனக்கருதுகிறது. அரசமைப்பில் இந்தப் பிரிவுக்கு எதிராக விதிக்கப்படும் எந்த விதிமீறலாகக் கருதப்பட்டு, சீராய்வுக்கும் பின்னர் அந்த விதி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்படும்.

எனினும், 24.04.1973 க்குப் பின்னர் அரசமைப்பின் ஒன்பதாவது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சட்டங்கள் தொடர்பாக மறுசீராய்வு கோர முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், தற்போது சீராய்வுக்கு உட்பட்டதாகத் தோன்றும் சட்டங்கள் ஒன்பதாவது பட்டியலில் சேர்க்கப்பட்டாலும் அவற்றின் மீது மறுசீராய்வு கோர முடியாது. நீதிமன்ற மறுசீராய்வு என்பது சட்டம் குறித்த வினாக்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடியது ஆகும். அரசியல் சம்பந்தமாக எழும் பிரச்சினைகளுக்கு சம்பந்தமாக எழும் பிரச்சினைகளுக்கு இதனை செயல்படுத்த முடியாது. உச்ச நீதிமன்றமும் தானாகவே எந்த ஒரு சட்டத்தையும் மறுசீராய்வுக்கு உட்படுத்த முடியாது. ஒரு குறிப்பிட்ட விதி அல்லது சட்டம் ஆகியவற்றை எதிர்த்து வரும் வழக்கில் மட்டுமே பயன்படுத்த முடியும்:

**பொது நல வழக்கு:**

பொது மக்கள் நலன் கருதி எந்த ஒரு தனிநபரும் நீதிமன்றத்தை நாடி மனு அளிக்க முடியும். இது பொதுநலன் மனு எனப்படுகிறது. இதன்படி, அரசமைப்பு உறுப்பு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்திலும், அரசமைப்பு உறுப்பு 226- இன் கீழ் உயர் நீதிமன்றங்களிலும், குற்றவியல் நடைமுறைச் சட்டம் 133-ன் படி நடுவர் நீதி மன்றங்களிலும் பொது நல வழக்கிற்கான மனுவைத் தாக்கல் செய்ய முடியும். மேலும், இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி கீழ்க்கண்ட வகைகளில் பொது நல வழக்குகள் தொடர முடியும்.

1. கொத்தடிமை தொழிலாளர்கள் முறை தொடர்பான விவகாரங்கள்
2. கைவிடப்பட்ட (ஆதவற்ற) குழந்தைகள்
3. குறைந்தபட்ச கூலி வழங்காமை
4. சிறைச்சாலையில் நிகழும் மரணம், வன்கொடுமைகள் தொடர்பான புகார்கள், விரைவான நீதி அடிப்படை உரிமை என்பதால் துரித விசாரணை கோருதல்.

5. வழக்குப் பதிவு செய்ய மறுக்கும் காவல் துறை அதிகாரிக்கு எதிராக வழக்கு மனுதாக்கல் செய்தல், வரதட்சனை கோரி பெண் வன்கொடுமை, மணப்பெண் தீவைப்பு, பாலியல் வன்கொடுமை, கடத்தல், கொலை, வதை போன்ற குற்றங்களுக்கு எதிரான புகார்கள்.

6. பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை புகார்.

7. சுற்றுச்சூழல் மாசுபாடு தொடர்புடைய புகார்கள் என வகைப்படுத்துகின்றன.

அரசமைப்பு உறுப்பு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் பொது நல மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் தமக்குள் இணைத்துக் கொண்டுள்ளது. பொது நல வழக்கு என்பது ஒரு பகைத் தன்மையில் வழக்கு தொடுக்கும் முறையல்ல. மாறாக, ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிப்புக்குள்ளாகும் சமூகப் பிரிவினர்களுக்கு மனித உரிமைகளை அர்த்தமுள்ளதாகவும், அவர்களுக்கு அரசமைப்பு வழங்கியுள்ள சமூக – பொருளாதார நீதியை உறுதிப்படுத்தவும் அரசு மற்றும் அரசு அதிகாரிகளுக்கு வாய்ப்பு வழங்குவதுடன் அவ்வாறு செயல்படாத அரசு மற்றும் அரசு அதிகாரிகளுக்கு எதிராகவும் விசாரிக்கிறது. மாநில அரசுகள், மத்திய அரசு, மாநகராட்சி ஆகியவற்றிக்கு எதிராக பொது நல வழக்கு தொடர முடியும். ஆனால், தனிநபருக்கு எதிராக பொது நல வழக்கு பதிவு செய்ய முடியாது.

அண்மையில் இந்தியாவில் ஏராளமான பொது நல மனுக்கள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படுவதைக் காணமுடிகிறது. உச்ச நீதிமன்றம் 2005-ஆம் அண்டு ஒரு வழக்கை பொது நல வழக்காகத் தீர்மானித்தது. பொது நலனுக்கான சமூகம் எதிர் இந்திய அரசு (Common Cause Society Vs Union of India), என அவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது. பெருகி வரும் சாலை விபத்துகளை கருத்திற்கொண்டு சாலை பாதுகாப்பு சட்டங்களை இயற்றும்படி அரசுக்கு உத்தரவிட வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அந்த மனுவே பொது நல வழக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதேபோல அங்கம்மாள் பாண்டே எதிர் உத்தரபிரதேச மாநில அரசு என்ற வழக்கில், உயர்நிதிமன்றத்தின் லக்னோ அமர்வு, கன்சிராம் நினைவு அரங்கம் அருகே நடைபெறும் கட்டுமானப் பணிகளைக் குறிப்பிட்ட காலத்துக்கு தடை செய்தது.

இதேபோல மக்களாட்சி உரிமைக்களுக்கான மக்கள் ஒன்றியம் எதிர் இந்திய அரசு (Peoples' Union for Democratic Rights vs. Union of India) என்ற வழக்கினையும்

உச்ச நீதிமன்றம் பொது நல வழக்காக எடுத்துக் கொண்டது. சமூக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள மக்கள் தமக்கான நிவாரணம் கோரி நீதிமன்றங்களை அணுக இயலாத நிலையில் இருப்பதால் இத்தகைய தனிநபர் அல்லது குழுவினருக்கு அரசமைப்பு ரீதியான தீர்வு கோரி “பொது ஆர்வம் கொண்ட குடிமக்கள்“ நீதிமன்றத்தை நாடும்போது அதனை பொது நல வழக்காகக் கருதலாம் என்று கூறிய உச்ச நீதிமன்றம் இதனை பொது நல வழக்காக அனுமதித்தது. பொது நல வழக்குகள் என்பவை ”பங்களிப்பு நீதி” எனும் செயல்முறையின் ஒரு பகுதியாகும் குடிமை வழக்குகளாக இவை நீதிமன்றங்களால் தாராளமாக வரவேற்கப்படுகிறது.

பரமானந் கட்டாரா எதிர் இந்திய அரசு என்ற வழக்கு (Parmanand Katara Vs. Union of India) பொதுமக்கள் நலனுக்காகப் பாடுபடும் மனித உரிமை செயற்பாட்டாளர் தொடுத்த பொது நல வழக்கு ஆகும். இதில் மருத்துவ தொழிலில் உள்ள ஒவ்வொரு நபரும், காயமடைந்த என்ற வழக்கு பொதுமக்கள் நலனுக்காகப் பாடுபடும் மனித உரிமை செயற்பாட்டாளர் தொடுத்த பொது நல வழக்கு ஆகும். இதில் மருத்துவ தொழிலில் உள்ள ஒவ்வொரு நபரும், காயமடைந்த எந்த ஒரு குடிமகனுக்கும் வழக்கமான நடைமுறைகளைக் காரணங்காட்டி (Procedural Formalities) காத்திருக்க வைக்காமல் மருத்துவ உதவியினை செய்ய வேண்டும் எனும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

**நீதித்துறை செயல்பாட்டு முறை:**
மாறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் நீதித்துறை மேற்கொள்ளும் வீரியமிக்க செயற்பாடுகள் நீதித்துறை செயல்பாட்டு முறை எனப்படுகிறது. அமெரிக்காவில் 1947 ஆம் ஆண்டு ஆர்தர் சன் சிங்கர் ஜூனியர் என்பவர் ”உச்ச நீதிமன்றம்” 1947 என்று தலைப்பிட்ட கட்டுரை ஒன்றில் "Judicial Activism" (நீதித்துறை செயல்பாட்டு முறை) என்ற சொல்லினை அறிமுகப்படுத்தினார். பிளாக்ஸின் சட்ட அகராதி (Black's Law Dictionary), "Judicial Activism" - என்பது ஒரு ”நீதித்துறை தத்துவம்” என்று கூறுகிறது. அது நீதிபதிகளை பழமைவாதத்திலிருந்து பிரித்து புதிய முற்போக்கான சமூக கொள்கைகளுக்கு ஆதரவாக ஊக்கப்படுத்துவதாகும்.

சட்ட ஆக்கமானது நீதித்துறை செயல்பாட்டு முறை மூலம் (Judicial Activism) புதிய பரிணாமத்தை பெற்றிருக்கின்றது. சமூகக் கண்ணோட்டத்தில் சட்டங்களுக்கு விளக்கமளிக்கும் ஆரோக்கியமான போக்கு நீதித்துறையில் காணப்படுகிறது. அமலில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் அல்லாமல் தனிநபர் அல்லது அரசியல் சக்திகளுக்கு சாதகமாக மேற்கொள்ளப்படும் நீதிமன்ற உத்தரவுகளை நீதித்துறை செயல்பாட்டு முறை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. நீதித்துறை செயல்பாட்டு முறை என்பது அரசமைப்பின் விளக்கம், சட்டப்பூர்வ அடித்தளங்கள் மற்றும் அதிகாரப் பிரிவினை ஆகியன தொடர்புடையதாகும்.

நீதித்துறையில் காணப்படுகிறது. அமலில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் அல்லாமல் தனிநபர் அல்லது அரசியல் சக்திகளுக்கு சாதகமாக மேற்கொள்ளப்படும் நீதிமன்ற உத்தரவுகளை நீதித்துறை செயல்பாட்டு முறை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. நீதித்துறை செயல்பாட்டு முறை என்பது அரசமைப்பின் விளக்கம், சட்டப்பூர்வ அடித்தளங்கள் மற்றும் அதிகாரப் பிரிவினை ஆகியன தொடர்புடையதாகும்.

இந்திய அரசமைப்பு 1950 –ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் பெரும்பான்மையான கோட்பாடுகள் மேற்கு உலக மாதிரிகளிலிருந்து நாடாளுமன்ற மக்களாட்சியும், தனித்துவ நீதித்துறையும் இங்கிலாந்திலிருந்து, அடிப்படை

உரிமைகள்,முன்வரைவு, கூட்டமைவு, கூட்டாட்சி அமெரிக்க அரசமைப்பிலிருந்து, மாநிலக் கொள்கைகள் நேரடி கோட்பாடுகள், அயர்லாந்து நாட்டிலிருந்தும் பெறப்பட்டதாகும். இருந்தபோதும், இந்தியாவில் அப்போது நிலவிய பகுதி அளவு நிலப்பிரபுத்துவ பிற்போக்கு நிலையில் இருந்து ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் காண்பதற்காகப் பெறப்பட்டதாகும்.

இந்திய நீதித்துறையானது. அரசின் ஒரு அங்கமாக இருக்கின்றபடியால், அதன் அமெரிக்க நீதித்துறைப் பிரிவைக் காட்டிலும் மிகுந்த செயலாக்க மிக்க பணியினை ஆற்றுகிறது. அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள கொள்கைகள், கோட்பாடுகளைக் கடைபிடிப்பதன் மூலம் இந்திய சமூகத்தை ஒரு நவீன சமூகமாக மாற்றும் தீர்ப்புகளை வழங்குகின்றன. இந்திய அரசமைப்பு உறுப்பு 21 அடிக்கடி உச்ச நீதிமன்றத்தில் எடுத்தாளப்படுகிறது. இந்த அரசமைப்பு உறுப்பின் மீதான தீர்ப்புகள் யாவும் நீதித்துறை செயல்பாட்டு முறைப் போக்கினை பிரதிபலிக்கின்றன.

ஏ.கே. கோபாலன் எதிர் மதராஸ் மாநில அரசு எனும் வழக்கில், ஒரு மனிதனின் வாழ்க்கை அல்லது சுதந்தரம் ஒடுக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள செயல்முறைகள் அடிப்படையில் மட்டுமல்லாமல் பகுத்தறிவு மற்றும் நீதியின் அடிப்படையிலும் உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. எனினும். அதனைத் தொடர்ந்து மேனகா காந்தி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில், மேற்கண்ட நியாய வாதத்தினை நீதிமன்ற விளக்கம் மூலம் அரசமைப்பு உறுப்பு 21-ல் துணைப்பிரிவாகச் சேர்க்கப்பட்டது.

இது, அரசமைப்பு உருவாக்கத்தின் போது தவிர்க்கப்பட்ட பிரிவாகும். எனினும், அடுத்தடுத்த வழக்குகளில் உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை உறுதி செய்தும் இருக்கிறது. உதாரணமாக, சாதிக்கு வெளியே திருமணம் செய்து கொண்ட காரணத்திற்காக, ஆண் - பெண் இருவரை கௌரவக் கொலை செய்த பகவான் தாஸ் வழக்கில், (பசவான்தாஸ் எதிர் தில்லி மாநில அரசு) அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

**அரசமைப்பும், நிர்வாகச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம்:**
**அரசமைப்பு:**

மக்கள், மனிதன் அனைவருக்கும் விதிகளால் ஆளப்படுகிறார்கள் என்பது நன்கு தெரிந்தது. உதாரணமாக, விளையாட்டு போட்டிகளுக்கும் சமூக மன்றங்களுக்கும் விதிகள் உள்ளதை கூறலாம். நமது அன்றாட வாழ்வைத் தீர்மானிப்பதில் ஒழுக்க விதிகளும், வழக்காறுகளும் முக்கிய பங்காற்றுகின்றன. நாட்டிற்காகச் சட்ட மன்றங்களில் இயற்றப்படும் விதிகள் யாவும் ”சட்டங்கள்” என்று அழைக்கப்படுகின்றன. சமூகம், அதன் பணிகளை முறையாக செய்வதற்குச் சட்டங்கள் மிகவும் அவசியமாகும். அவைகள் நமது சொத்துக்களை முறையாகப் பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்டவைகள் ஆகும், மற்றும் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் முறையாக நடந்து கொள்வதை உறுதிபடுத்துகிறது.

அடிப்படையில், அரசமைப்பு மேலான சட்டமாகும். மற்ற எல்லா சட்டங்களும் அரசமைப்பிற்கு பொருந்தி வர வேண்டும். அரசமைப்பானது அரசு தொடர்புடைய சட்டங்களையும், மக்கள் தொடர்புடைய சட்டங்களையும் உள்ளடக்கியதாகும். அரசமைப்பு விதிகள் என்பது அரசின் பல்வேறு நிறுவனங்களின் வரையறை, பணிகள், அதிகாரங்கள், மற்றும் அவற்றின் அமைப்புகள் குறித்த தொகுப்பு விதிகள் ஆகும். அதாவது சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதிதுறை போன்றவைகள் மற்றும் குடிமக்களின் அடிப்படை உரிமைகள், மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையிலான உறவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

அரசமைப்பு என்பது வழியுறுத்துவதும் வழிகாட்டுவதுமான விதிகளின், ஒரு தொகுப்பு ஆகும். இது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு விதிமுறைகளின் தொகுப்பை முன்மொழிவதன் மூலம் தேசத்தை ஒழுங்குபடுத்துகிறது. அவை நாட்டைச் சரியான திசை வழியில் வழி நடத்துகிறது. அவை பல்வேறு அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசு வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளிட்டவைகள் ஆகும். நாட்டில் நிலவும் அமைப்பு முறையை ஒழுங்குபடுத்துவதற்கு நமக்கு அரசமைப்பு விதிகள் தேவைப்படுகின்றன. நாட்டு மக்கள் அடிப்படை உரிமைகளைக் கடந்து போகாமல் இச்சட்ட விதிகளே நாடு முழுவதும் கண்காணிக்கின்றன.

அரசமைப்பு விதிகள் குடிமக்களுக்கிடையே சமத்துவ உணர்வினை உருவாக்குகின்றன. இவை குழந்தைகள் நலனுக்காக குழந்தைகள் மீது பெற்றோர்கள் செலுத்தும் கட்டுப்பாடுகளைப் போன்றவையே ஆகும். அதைப்போலவே அசரமைப்பு விதிகள் எல்லா குடிமக்கள் மீதும் செயலாற்றுகிறது. அதே வழியில் அரசமைப்பு வழங்கியுள்ள வழிகாட்டுதளின்படி சட்டங்கள் இயற்றுவதற்காக சிலரைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கவும் சிலரை நியமனம் செய்யவும் அரசமைப்பு விதிகள் வழிவகை செய்கின்றன. அரசமைப்பு விதியின்படிதான், பல்வேறு மொழிகள் பேசும் வேறுபட்ட பண்பாடுகள் கொண்ட மிகப் பரந்த இந்நாட்டை அதன் தலைவர் நிர்வாகம் செய்கிறார்.

**சட்டத்தின் ஆட்சி:**

இந்தியாவில் ”சட்டத்தின் ஆட்சி” என்ற ஆங்கிலக் கருத்தை காலனி ஆட்சி அறிமுகப்படுத்தியது. சட்டத்தின் ஆட்சியில் மூன்று முதன்மையான சிறப்புகள் உள்ளன. அவைகள்,

- ❖ சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- ❖ சட்டத்திற்கு மேல் யாரும் இல்லை
- ❖ சட்டம் அனைவருக்கும் பொருந்தக்கூடியது
- ❖ சட்டத்தின் ஆட்சியானது நீதிவழங்குவதில் குடிமக்களின் சமத்துவத்தை உறுதிபடுத்துகிறது. சொந்த உறவுகளுக்காகச் சாதகமாக நடப்பது, குறிப்பிட்ட நபருக்குச் சலுகை அளிப்பது நீதித்துறை முறைகேடுகள் ஆகியவற்றை குறைக்கின்றன. இத்துடன் அதிகார, நிர்வாக முறைகேடுகளையும் கட்டுப்படுத்துகின்றன. அரசு நிர்வாகத்தினை ஆளுகை செய்வதுடன் செயல்முறை சட்டங்களும், அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளும் சட்டத்தின் ஆட்சி உறுதிபடுத்துவதை வலியுறுத்துகின்றன.

**நிர்வாகச் சட்டம்:**

நிர்வாகச் சட்டம் என்பது நிர்வாகச் செயல்முறைகளை ஆளுகை செய்வதற்கான சட்டமாகும். நிர்வாகச் சட்டங்கள் என்பவை, நிர்வாகத்துடன் தொடர்புடையவை என ஐவோர் ஜென்னிங்ஸ் விளக்கம் அளிக்கிறார். ஒரு நிர்வாக அமைப்பு, அதன் அதிகாரம் மற்றும் அதன் அதிகாரிகளின் கடமைகளை அது தீர்மானிக்கிறது. நிர்வாக அமைப்புகளின் சட்டம் இயற்றும் அதிகாரம், பாதியளவு நீதித்துறை அதிகாரம் கொண்ட நிர்வாக முகமைகள் அரசு அதிகாரிகளின் சட்ட வரம்பு, நிர்வாக அதிகாரிகளைக் கண்காணிக்கும் சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரம் என அனைத்தையும் கட்டுப்படுத்துகின்றன. மக்களிடம் நியாயமாக நடந்து கொள்வதை உறுதிப்படுத்துகின்றன.

நிர்வாகச் சட்டம் என்பது பொதுசட்டத்தில் ஒரு பிரிவு ஆகும். அது அரசாங்கத்திற்கும் தனிமனிதனுக்கும் உள்ள உறவு குறித்தும் பேசுகிறது. அது சட்டத்தை அமலாக்கம் செய்யும் அமைப்பைத் தீர்மானிக்கும் உயர்மட்டத்தினர் மற்றும் பகுதியளவு நீதித்துறை

அதிகாரம் கொண்டோரை வரையறை செய்கிறது. நிர்வாகச் சட்டமானது முதலாவதாக அதிகாரிகளின் செயல்கள் மற்றும் செயல்முறை ஆகியவற்றையும், நிர்வாக தன்மைக் கொண்ட அமைப்புகளையும் அதற்குரிய கட்டுப்பாடு எந்திரத்திகுள்ளாகவே வைக்கப்படும்படியாக செய்வதாகும். இந்தியாவில் நிர்வாகச் சட்டங்கள் வளர்ச்சிப் பெறுவதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன.

முதலில், இந்தியா ஒரு "மக்கள் நல அரசு" ஆகும். அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிக அதிகரித்த வண்ணம் இருக்கிறது. எனவே அவற்றினை ஒழுங்குப்படுத்தும் தேவை உருவாகிறது. எனவே, நிர்வாகச் சட்டப் பிரிவு தோன்றியது. இரண்டாவதாக, சட்டங்கள் இயற்றுவதில் (Legislation) போதாமை நிலவுகிறது. அன்றாடம் மாறிக் கொண்டிருக்கின்ற சமூகத்திற்கு ஏற்ப சட்டங்களை இயற்ற சட்டமன்றங்களுக்கு கொண்டிருக்கின்ற சமூகத்திற்கு ஏற்ப சட்டங்களை இயற்ற சட்டமன்றங்களுக்கு போதிய நேரம் இருப்பதில்லை. அவ்வாறு அது செய்யப்பட்டாலும், சட்டம் இயற்றுவதற்கான நடைமுறை நீண்டதாகவும், அதிக காலம் எடுத்துக் கொள்ளும்படியாக இருப்பதாலும், அவ்வாறு உருவாக்கப்பட்ட விதிகள் யாவும் தேவைக்கு பயன்படுத்தும் போது, மாறிவிடுகின்றன.

மூன்றாவதாக, இந்தியாவில் நீதிமன்ற காலதாமதம் நிலவுகிறது. மந்தமான வேகம், அதிக செலவு மற்றும் சிக்கலான நடைமுறைகள் போன்றவை இதன் காரணங்களாகும். இதனால் நீதி பெறுவதற்கான செயல்முறைகள் தாமதமடைகின்றன. ஏற்கனவே வழக்குகள் தேங்கிக்கிடப்பதால் விரைவான விசாரணை சாத்தியமற்றதாக உள்ளது. இதனால்தான் நிர்வாகத் தீர்பாயங்கள் உருவாகின்றன. நான்காவதாக, நிர்வாகச் சட்டங்கள் என்பவை தொகுக்கப்பட்டவைகள் (Codified) அல்ல. எனவே, அரசு இயந்திரத்தின் தேவைக்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்துக் கொள்ளும் செயற்பரப்பைக் கொண்டுள்ளன. எனவே, இது மிகவும் நெகிழ்வுத் தன்மைக்கொண்டதாகும். நெகிழ்வற்ற திடமான சட்ட நடைமுறைகளை மீண்டும் மீண்டும் பின்பற்றத் தேவை இல்லை. நிர்வாகச் சட்டத்திற்கும், அரசமைப்பிற்கும் இடையே வேறுபாடு இருக்கின்றது. அரசமைப்பு என்பது இந்த மண்ணின் மேம்பட்ட உயர்வான சட்டமாகும். எந்த ஒரு சட்டமும் அரசமைப்பிற்கு மேலானது இல்லை. எனவே இதர சட்டங்கள் அதன் உறுப்புக்களை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும். அதனை மீறும்படியாக இருக்கக்கூடாது.

எனவே நிர்வாகச் சட்டங்களும் அரசமைப்பிற்குக் கீழான சட்டமே ஆகும். அரசமைப்பானது அரசின் அமைப்பு (Structure) மற்றும் அதன் பல்வேறு உறுப்புகளைப் பற்றிப் பேசுகிறது. நிர்வாகச் சட்டங்கள் என்பவை நிர்வாகத்தைப் பற்றி மட்டுமே செயலாற்றுகிறது (Deals). நிர்வாக அதிகாரிகள் முதலில் அரசமைப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் தொடர்ந்து நிர்வாகச் சட்டங்களின்படி பணியாற்ற வேண்டும்.

**இந்திய தண்டனைச் சட்டம்:**

இந்திய தண்டனைச் சட்டம் என்பது இந்தியாவின் குற்றவியல் சட்டமாகும். அது குற்றவியல் சட்டத்தின் உள்ளார்ந்த அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சட்டமாகும். 1834-ஆம் ஆண்டு இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் கீழ் 1860 – ஆம் ஆண்டு இச்சட்டம் தயாரிக்கப்பட்டது. இது தொடக்ககால பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் கீழ் 1862-ல் அமலுக்கு வந்தது. இதன் நோக்கம் இந்தியாவிற்கு ஒரு பொதுத் தண்டனைச் சட்டத் தொகுப்பை அளிப்பதாகும். இந்திய தண்டனைச் சட்டம் ஒரு அடிப்படையான வடிவத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு நபர் மேற்கொள்ளும் அனைத்து குற்றங்களுக்கான வழக்குகள், அவற்றுக்கான தண்டனைகள் ஆகியனவற்றின் பட்டியல் கொண்ட ஆவணமாகும். இது அனைத்து குடிமக்களையும் உள்ளடக்கியது. இராணுவத்தினரும் இதர படைகளின் வீரர்களும்

விலக்களிக்கப்பட்டுள்ளனர். அவர்களை இந்தியக் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்க முடியாது. அவர்களுக்கு பல்வேறு தனி விதிகள் உள்ளன. பல ஆண்டுகள் சோதனைகளுக்கு பின்னர் பரிசோதிக்கப்பட்டு பரிணாமம் பெற்ற நியாயமான, திடமானக் குற்றத்தடுப்பு அமைப்பைக் கொண்டுள்ள ஒரு நீதித்துறை அமைப்பு என்ற சிறப்பினை இந்திய நீதித்துறை பெறுகிறது.

இந்திய தண்டனைச் சட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பியல்பானது, அந்த ஆவணம் வளர்த்தெடுக்க நினைத்த பாரபட்சமற்ற தன்மை கொண்ட தீர்ப்புமுறை ஆகும். இந்திய தண்டனைச் சட்டம் ஒவ்வொரு அரசு ஊழியர், ஒவ்வொரு பொதுமக்கள் ஏன் நீதிபதியைக்கூட உள்ளடக்குவதாக இருக்கிறது. நாட்டின் சட்டம் இயற்றும், சட்டத்தை அமலாக்கம் செய்யும் அமைப்புகள் பொதுமக்களின் நம்பிக்கையைத் தட்டி எழுப்புகிறது மேலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதையும் தடுக்கிறது.

இந்திய தண்டனைச் சட்டமானது, அரசுக்கு எதிரான குற்றங்கள், பொது இடங்களில் நடைபெறும் குற்றங்கள், ஆயுதப்படைகளின் குற்றங்கள், கற்பழிப்பு மற்றும் கொலை, ஆட்கடத்தல் போன்ற குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து குற்றங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் மதம் தொடர்புடைய குற்றங்கள், சொத்துடைமை குற்றங்கள், திருமண குற்றங்கள், கணவர்கள் மற்றும் உறவினர்களால் செய்யப்படும் கொடுமைகள் மற்றும் அவதூறுகள் போன்றவற்றையும் கையாளுகின்றது. இந்திய தண்டனைக் குறியீட்டுக் கீழ் பிரிவு 34, ஒரு குழச் செயல்பாட்டில் கலந்து கொண்ட ஒரு நபர் ஆற்றிய பங்களிப்பு எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அக்குழுவினர் மேற்கொண்ட செயல்களின் பொது நோக்கிற்கும் முழுமையான பொறுப்பானவராகவே கருதப்படுவார். சாட்சிகளின் அடிப்படையில் இவர்கள் சமமான குற்றவாளிகள் கருதப்படுவர்.

இதே சட்டம் பிரிவு 149-ன் கீழ், சட்ட விரோதமாகக்கூடிய ஒரு குழுவைச் சேர்ந்த நபர்கள் அனைவரும் அந்த சட்ட விரோத குழுச் செயலின் உள்நோக்கம் அல்லது சட்டவிரோதக் கூடுதலில் ஏற்படக் கூடிய கெடு விளைவு அடிப்படையில் தண்டனைக்குரியவர்கள் ஆவர். மேலும், குற்றச் சதி தயாரிப்பில் பங்கேற்றல், உடந்தையாக இருந்ததல் போன்ற செயல்களும் தண்டனைக்குரியவையாகும்.

இந்திய தண்டனைக் சட்டமானது, பல முறை தேவையின் அடிப்படையில் திருத்தப்பட்டிருக்கிறது. தேசத் துரோகம் போன்ற தண்டனைச் சட்டத்திற்கு வெளியே இருந்து கருத்தாக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குடிமகன்களின் எதிர்பார்ப்புகளில் மாறுதல்கள் ஏற்படுவதாலும், அது சமூக மாற்றங்களில் முடிவதாலும், குற்றவியல் நீதி அமைப்பு முறைகளை அடிக்கடி மாற்றி அமைக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. சில நேரங்களில் இதுவே மிகுந்த மன உளைச்சல்கள், மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றன. குற்றவியல் புலன்விசாரணை செயல்முறைகள், குற்றங்களை முறையாக நீதிமன்றத்தில் வைத்து குற்றம் சாட்டுதல் மற்றும் தீர்ப்பு வழக்குதல் போன்றவையெல்லாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் ஏற்படும் மாறுதல்கள் மற்றும் உருமாற்றங்களுக்கு இசைவானதாக மாற வேண்டியதன் அவசியத்திற்கு சாட்சியாக இருக்கிறது.

**தகவல் தொடர்பு:**

தொழில்நுட்ப வளர்ச்சிக்காலமான தற்போது, குற்ற நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள நவீனமுறைச் செயல்கள், நவீன புலனாய்வு முறை மற்றும் குற்றம் நிரூபிக்கும் புலனாய்வு முறை மற்றும் குற்றம் நிரூபிக்கும் முறைகளை உருவாக்கக் கோரியது. இதற்காக புதிய

குற்றவியல் சட்டம் தேவைப்பட்டது. இதையொட்டி, இந்திய அரசு 2000-ஆம் ஆண்டு ஒரு குழு அமைத்தது. இந்த குழு தனது அறிக்கையை 2003-ஆம் ஆண்டு அளித்தது. குற்ற நீதிமுறை அமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தக் கோரி பல பரிந்துரைகளை இக்குழு அறிக்கையில் வலியுறுத்தியது. இவற்றில், சில பரிந்துரைகளை அரசு ஏற்றுக் குற்றவியல் சட்டத்தோடு நடைமுறைப்படுத்தி வருகிறது.

# அலகு– 6

# இந்தியாவில் நிர்வாக அமைப்பு

**சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்திய நிர்வாக அமைப்பின் பரிணாமம்:**

நவீன இந்தியாவின் நிர்வாக அமைப்பின் தொடக்கம் காலனிய காலத்திலேயே தொடங்குகிறது. இந்தியாவில் காலனி ஆட்சியிலும் 1773-ஆம் ஆண்டு வரை முறையான நிர்வாகம் இருந்தது இல்லை. முகலாயப் பேரரசரின் அல்லது நவாப்களின் முகவர்களாகவே கிழக்கு இந்திய கம்பெனி செயல்பட்டு வந்தது. வருவாய் விவகாரங்களை நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் உள்ளூர் துணைப் பணியாளர்களை கொண்டு நிர்வகித்தார்கள். இராணுவ மற்றும் காவல் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து வந்தனர். பெரும்பான்மையான அதிகாரிகள் வந்தனர். பெரும்பான்மையான அதிகாரிகள் கல்வியறிவு அற்றவர்களாகவும், போதிய அனுபவம் மற்றும் பயிற்சி பெறாதவர்களாகவும் இருந்தனர்.

அவர்கள் வெளிநாட்டு அதிகாரிகள் என்பதால் உள்ளூர் மக்கள் மீது மரியாதையின்றியும், இரக்கமற்ற முறையிலும் நடந்த கொண்டனர் அவர்கள் எந்த சட்டமன்றத்திற்கும் பதிலளிக்க வேண்டியதில்லை என்பதால், ஊழல் மற்றும் முறைகேடுகள் அன்றாட நடவடிக்கைகள் ஆயின. ஆங்கில நாடாளுமன்ற உறுப்பினர் எட்மண்ட் பர்க், நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு இப்பிரச்சனையைக் கொண்டு சென்றார். பெரும் விமர்ச்சனங்களுக்குப் பிறகு, 1773 ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் தொடர் சாசனங்கள் மூலம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் கிழக்கிந்திய கம்பெனியின் இந்திய நிர்வாகம் கொண்டுவரப்பட்டது. இயக்குநர்கள் குழு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியன நாடாளுமன்றம் மற்றும் பிரிட்டிஷ் அமைச்சரவையின் கீழ் கொண்டுவரப்பட்டன. எனவே, இந்தியாவில் உள்ள கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகங்கள், ஒழுங்குபடுத்தப்பட்டு நாடாளுமன்றத்திற்குப் பதில் சொல்லும் நிலை உருவாக்கப்பட்டது.

அதன் பின்னரே இந்தியாவிற்கான ஆங்கில அதிகாரிகளுக்கு ஹெய்லிபிரி கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டது. உயர் அதிகாரி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒப்பந்தப் பணி உறுப்பினர்களாக அறியப்பட்டனர். அவர்கள் கவர்னர் ஜெனரல் மற்றும் ஆளுநர்களுக்கு நிர்வாக ரீதியிலும் உதவினார்கள். இந்தியர்கள் நடுநிலை பணியாளர்களாகவும் தொலைதூரப் பணிகளுக்கும் நியமிக்கப்பட்டனர். உள்நாட்டுப் பழக்க வழக்கங்களில் கம்பெனி தலையிட விரும்பவில்லை. இதன் மூலம் மக்கள் ஆதரவைப் பெற விரும்பியது. நடுநிலைப் பணிகளுக்கும் தொலை தூரப்பணிகளுக்கும் அப்பகுதிகளின் நடுநிலை, கீழ்நிலை சாதியினர் நியமிக்கப்பட்டனர்.

1840-ஆம் ஆண்டு வரை பாரசீக மொழியே அலுவல் மொழியாக இருந்து வந்தது. ஆங்கில மக்கள் எல்லா உயர் பதவிகளிலும் ஏகபோக உரிமையாளர்களாக தங்களை வைத்துக்கொண்டு இங்கு உள்ள மேன்மக்களை கீழ்மட்ட அலுவலகத்தில் அமர்த்திக் கொண்டனர்.

இந்தியர்களையும் உயர் பதவிகளில் அமர்த்துவதற்கான தேவைகளும் மெதுவாக எழுந்தன. ஐரோப்பிய மாதிரி கல்வி மற்றும் ஆங்கில மொழிவழிக் கல்வி அறிமுகம் மெக்காலே முறையில் இந்தியர்கள் கல்வி கற்க தூண்டியது. ஆங்கிலக் கல்வி கற்பதன் மூலம் உயர் பதவிகளில் பணியாற்ற விரும்பினர். 1858-ஆம் ஆண்டில் இந்திய நிர்வாகத்தை முடியாட்சி ஏற்ற பின்பு, இந்திய ஆட்சி முறை மாற்றியமைக்கப்பட்டு இந்திய உயர்மட்ட நிர்வாகிகள் நீதித்துறை பணியாளர்கள் இந்தியக் குடிமைப் பணி போட்டித்

தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டனர். மிகச் சிறந்த பிறப்புரிமையுள்ள உயர்ச் சாதி இந்தியர்கள் தங்களுக்கும் இந்திய குடிமைப்பணி தேர்வில் கலந்து கொள்ள வயது வரம்பை தளர்த்த வேண்டும் என்றும் குடிமைப் பணி தேர்வுகள் இந்தியாவிலேயே நடத்தப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். இவையெல்லாம் இந்திய தேசிய இயக்கத்தின் தொடக்க காலக் கோரிக்கைகள்.

இந்திய அரசாங்கச் சட்டம் 1919- நிறைவேற்றப்படும்வரை, இந்தியர்களால் உயர்ந்த ஆட்சித்துறை பதவிகளை அடைய முடிவில்லை. இரட்டை ஆட்சிச் சட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாற்றப்பட்ட துறைகள் வழங்கப்பட்டன. ஆனால் ஆட்சித்துறை அதிகாரிகள் தொடர்ந்து ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். இந்த காலகட்டத்தில், சிறு பணிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதைத் தொடர்ந்து அரசுப் பணிக்கு பொதுப் பணி தேர்வு ஆணையம் அமைப்பது குறித்துச் சிந்திக்கத் தொடங்கினர். இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு, பணிகள் சீர்திருத்தப்பட்டன. இந்தியக் குடிமைப் பணிக்கு (ICS) பதிலாக இந்திய ஆட்சிப் பணி (IAS இ.ஆ.ப) கொண்டுவரப்பட்டது. இதன் மூலம், நிர்வாகப் பணிகள் அரசுப் பணிகள் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கும் முறை அடிப்படையானது.

**சுதந்திரத்திற்கு பிந்தைய இந்தியாவில் நிர்வாக அமைப்பு:**

இந்திய நிர்வாகத்தின் பணிகள் மற்றும் பொறுப்புகளில் சுதந்திர இந்தியாவில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சட்டம் இயற்றும் அமைப்புகளுக்கும், அமலாக்கம் செய்யும் அமைப்புகளுக்கும் பதில் சொல்லவும், பொறுப்பேற்கும்படியும் செய்தது. இந்திய அரசாங்கம் ஒரு மக்கள் நல அரசை விரும்பியதனால் அதனுடைய நிர்வாக பொறுப்புகள் பன்மடங்கு அதிகரித்தது.

ஜவஹர்லால் நேருவின் தலைமையின் கீழ் உருவான புதிய அரசு, மக்களாட்சி சமதர்மம் அமைப்பைத் தேர்ந்தெடுத்து, சமத்துவம், நவீனமயமாக்கல் போன்றவற்றை அடைய "கலப்பு பொருளாதாரத்தை" அறிமுகப்படுத்தியது. மக்களாட்சி முறை மற்றும் சமதர்மம் முறை இரண்டினையும் உறுதிப்படுத்த "கலப்பு பொருளாதாரத்தை" தேர்வு செய்தது. அடிப்படை தொழில்துறைகள் (எ.்.கு மற்றும் இரும்பு போன்றவை) அரசுத் துறை மூலமாக வளர்ச்சியடைந்தது. நடுத்தர தொழில்கள், போக்குவரத்து, விமான போக்குவரத்து ஆகியவற்றில் தனியார் துறை ஈடுபட அனுமதிக்கப்பட்டது. ஒவ்வொரு திட்டத்திலும் இலக்குகளை அடைய நிர்வாக அமைப்பு மேன்மேலும் அதிகரிக்க வேண்டியிருந்தது. முதல் மூன்று "ஐந்தாண்டு திட்டம்" மிகப்பெரிய பலன்களை அளித்தன. ஆனால், அதன் பிறகு முதலாளித்துவம் குழுமங்களாக மாறிப் பெரும் வெற்றி பெற்றன.

சோவியத் மற்றும் இதர சோசியலிச நாடுகள் பின்னடைவு அடைந்தன. 1990-களில் ஏற்பட்ட புதிய சவால்களை எதிர்கொள்ள இந்தியா உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கையைப் பின்பற்றியது. இந்திய நிர்வாக அமைப்புத் தன்மை மாற்றிக்கொண்டுள்ளது ஊழல் பெரும் பிரச்சனையாக இருந்தது. உயர்மட்டங்களில் ஊழலும், ஊழல்வாதிகளும் அதிகமாகக் காணப்பட்டாலும், நமது பொருளாதார முறையில் தவறேதும் கிடையாது. நேரு காலத்துக்கு முன்பும் இது போன்ற ஊழல்கள் காணப்பட்டன. தற்போதைய பொருளாதார முறையிலும் காணப்படுகிறது. ஒவ்வொரு நிலையிலும் ஊழல் அதிகாரிகளும் காணப்பட்டாலும், நமது மக்களாட்சி முறையை அதற்கு காரணமாக்க முடியாது.

கணக்கெடுப்பு, கருத்துக்கணிப்பு, குறிப்பிட்ட பிரச்சனைகளுக்காக என காலனி ஆட்சியில் நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதையொட்டி சில துறைகள் உருவாக்கப்பட்டன ஆனாலும், தற்போது விடுதலைக்கு பிந்தைய இந்தியாவில் நிர்வாக அமைப்பில் இருந்தது.

நீதித்துறை வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதேபோல் கல்வி, விரிவான நீர்ப்பாசனம், தொற்றுநோய்த் தடுப்பு, மின்மயமாக்கம், பொதுச் சுகாதாரம், சாலை – ரயில்வே போக்குவரத்து வசதிகள் என ஏராளமான மக்கள் நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இந்திய நிர்வாக அமைப்புகள் மூலம் அமலாக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற நிர்வாகத்தின் ஒவ்வொரு திட்டத்திலும் நமது நிர்வாக அமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், ஒரு பயிற்சிபெற்ற, அனுபவமிக்க, நிர்வாகச் செயல்திறன் மிக்க ஒரு அமைப்பை உருவாக்குவதில் பின்னடைவு இருந்தது. இதற்கான மேம்பாட்டுத்திட்டங்கள் வெற்றி பெறவில்லை. இந்திய நிர்வாக அமைப்பை மனிதநேயமிக்க, நவீன, மக்களாட்சி மையப்படுத்தப்பட்ட அமைப்பாக மாற்றும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் கால மாற்றத்துக்கு ஏற்ற நிர்வாக அமைப்பை உருவாக்க முடியும். மக்களாட்சி முறையில் நிர்வாக அமைப்பானது விமர்சனத்திற்கும் நீதித்துறையின் கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டதல்ல. அதே நேரத்தில் தேவையற்ற அரசியல் தலையீட்டையும் தவிர்த்தல் வேண்டும். கட்டுப்பாடுகள், சமநிலைப்படுத்தல் மூலம் மேலான நிர்வாகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதே சமயம் நாட்டுக்கு வெளியே இருந்துவரும் அச்சுறுத்தல்கள், நாடுதாண்டிய அழுத்தங்களில் இருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் அரசமைப்பானது மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பையே வழங்குகிறது. அரசு வகைமைகளில் பணியாளர் இரண்டு உயர்நிலை நிர்வாகங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஒன்று மத்திய அரசு நிர்வாகம், இரண்டு மாநில நிர்வாகம் நிர்வாகப் பணிகள் அனைத்தும் மத்திய அரசின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்டவைகள். தாராளமயமாக்கல் என்பதன் பொருள், அதிகாரவர்க்கம் அதிக வேலைப்பளுவில் இருந்து விடுபடும் என்பதல்ல. மாறாக, தனியார் துறை மீதான அரசுக் கட்டுப்பாடுகளைக் குறைப்பதாகும். அதேநேரத்தில் கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை அமலாக்கம் ஆகியவற்றில் அண்மைக்காலத்தில் அதிகம் மையப்படுத்தும் போக்கினை நாம் காண்கிறோம். மக்களாட்சி சமதர்மம் மற்றும் கலப்புப் பொருளாதார அமைப்புக்காக பணியாற்றிய இந்திய நிர்வாக அமைப்பின் கரங்களில் தற்போது அதிக தனியார்மயமாக்கத்துக்காகவும் மேலும் அதிக மையப்படுத்தப்பட்ட வரி அமைப்புக்காகவும் பணியாற்றும் பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. இப்புதிய ஏற்பாடே தற்போது புதிய அரசு மேலாண்மை (என்.பி.எம்) என அழைக்கப்படுகிறது.

இந்தியாவில் நிர்வாக அமைப்பு மாறிவரும் பொருளாதார கட்டமைப்பிற்கு ஏற்றவாறு தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். இந்தியப் பொருளாதாரம் புதிய தனது உள்நாட்டு சந்தையை உள்ளூர் தனியார் நிர்வனங்களுக்கும் பன்னாட்டு நிர்வனங்களுக்கும் திறந்துவிட வேண்டும். வணிகம் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், அரசு முதலீடுகளை திரும்பப் பெறுதல், வரிவிதிப்பை மையப்படுத்துதல், மானியங்கள் நீக்க நடவடிக்கை போன்றவற்றில் இந்திய நிர்வாக அமைப்பு ஈடுபட வேண்டும். தனியார்மயமாக்கலின் எதிரொளியாக சுரங்கம், துறைமுகம், பெட்ரோலியம், விமான போக்குவரத்து போன்றவை அமைப்பு ரீதியாக குழுமமையமாக்கப்பட்டுள்ளன. அன்னிய முதலீட்டுக்காக பன்னாட்டு நிர்வனங்களையும், உள்நாட்டு தனியார் முதலீடுகளையும் எல்லாம் சேர்த்துள்ளது. மேலும் இந்திய அதிகாரவர்க்கம் சர்வதேச

முதலீட்டுக்காக பன்னாட்டு நிர்வனங்களையும், உள்நாட்டு தனியார் முதலீடுகளையும் எல்லாம் சேர்த்துள்ளது. மேலும் இந்திய அதிகாரவர்க்கம் சர்வதேச அமைப்புகளான உலக வங்கி, உலக வர்த்தக அமைப்பு மற்றும் சர்வதேச நிதி ஆணையம் போன்றவற்றின் வழிகாட்டுதலையும் பின்பற்ற வேண்டியுள்ளது.

**இந்த வழிகாட்டுதலின்படியே கீழ்க்கண்ட ஒழுங்குமுறை ஆணையங்கள் இந்தியாவில் உருவாக்கப்பட்டன. அவை**

1. இந்தியக் காப்பீடு மற்றும் ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை (IRDA)
2. இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI)
3. இந்தியப் போட்டிகள் ஆணையம் (CCI)
4. ஓயவூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA)
5. இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

மேலும் புதிய ஒழுங்குமுறை ஆணையங்களை உள்கட்டமைப்பு, சுரங்கம் ஆகிய துறைகளில் தொடங்கவும் ஆலோசனைகள் நடந்து வருகின்றன. இவ்வகையான சீர்த்திருத்தங்கள் வரி நிர்வாகத்திலும் தொடர்கின்றன. உதாரணமாக, மதிப்புக் கூட்டுவரி (VAT) மற்றும் பொருள்கள் மற்றும் சேவை வரியை (GST) குறிப்பிடலாம். இந்த நடவடிக்கைகளுக்கு தொழில் துறை மற்றும் சந்தையில் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு வளர்ச்சியின் அறிகுறிகளைக் காட்டின. இதிலிருந்து பொருளாதார சீர்திருத்தம் மாற்றத்தின் அறிகுறி என நம்பப்பட்டது. இம்முயற்சிகளின் பலனாக தொழில்துறை வளர்ந்தது. சந்தை மேம்பட்டது. பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்தது. பொருளாதார சீர்திருத்தம் நல்ல விளைவுகள் அளிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. மேற்கூறிய முயற்சிகளால் இந்தியாவில் கடந்த 20 வருடங்களில் 300 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். தற்போதைய காலகட்டத்தில் உயர்மட்ட அதிகாரிகள் அதிக அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். இதற்கு அவர்களின் அதிகார மோகம் காரணமல்ல. நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அவை தேவைப்பட்டன. தொழில்நுட்ப முன்னேற்றம், பெரும் அளவில் அதிகாரப்பரவலாக்கம், சமூக செயல்பாட்டு முறை ஆகியவற்றால் இவை நிறைவேற்றப்பட்டன. இவற்றின் விளைவுகளை மேலும் சிறந்த சேவைகள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, சட்டத்தின் ஆட்சி ஆகியனவற்றை மக்கள் எதிர்பார்ப்பதில் இருந்து அரசு உணர்ந்தது. இருந்தாலும், குடிமைப் பணி அதிகாரிகளை நிர்வாகத்திறன் அற்ற கூடுதல் சுமையாகவே மக்கள் கருதினர். தகவல் உரிமைச்சட்டம், குடிமக்கள் சாசனம், சமூகத்தணிக்கை போன்றவற்றால் கூடுதல் பொறுப்புகளும், கடமைகளும் உருவாக்கப்பட்டு குடிமைப் பணி அலுவலர்கள் மக்களுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாகியுள்ளனர்.

**அமைச்சகம், துறைகள், வாரியங்கள் மற்றும் ஆணையங்கள்**

**ஒன்றிய அரசு அமைச்சகம் / துறைகள்**

ஒன்றிய தலைமை செயலகம் என்பது இந்தியாவிற்கான கொள்கைகள் உருவாக்கும் முக்கிய அமைப்பாகும். மத்திய தலைமை செயலகம் என்பது பல அமைச்சகங்களையும் துறைகளையும் உள்ளடக்கியது ஆகும். இவையனைத்தும் அவற்றின் செயல்பாடுகள் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

**அமைச்சகத்தின் கட்டமைப்பு:**

மத்திய அரசாங்கத்தின் அமைச்சகம் மூன்று அடுக்குகளை கொண்டது.

1. **அரசியல் தலைமை:**
   அமைச்சகத்தின் அரசியல் தலைமை என்பவர் கேபினட் அமைச்சராகவோ, துணை அமைச்சராகவோ இருக்கலாம். சில நேரங்களில் தனிப் பொறுப்பு கொண்ட துணை அமைச்சராகவும் இருப்பர்.

2. **செயலகம் (Secretariat):**
   இதன் தலைவர் செயலாளராக இருப்பார் இவர் குடிமைப் பணி சார்ந்த அதிகாரியாவார். செயலாளருக்கு உதவி புரிய இணைச் செயலர், கீழ் நிலைச் செயலர், துணைச் செயலர் போன்றோர் இருப்பர்.

3. **நிர்வாக அமைப்பு (Directorate):**
   இதன் தலைவர் இயக்குநர், தலைமை இயக்குநர், தலைமை ஆய்வாளர் (ஐ.ஜி) ஆணையர் மற்றும் தலைமை கட்டுப்பாட்டாளர் போன்ற பெயர்களால் அழைக்கப்படுவர்.

ஒவ்வொரு அமைச்சகமும் பல துறைகளாக பிரிக்கப்படும். ஒவ்வொரு துறையும் பல தொகுதியாக பிரிக்கப்படும். தொகுதி பகுதிகளாக பிரிக்கப்படும் பகுதிகள் கிளைகளாக பிரிக்கப்படும், கிளைகள் பிரிவுகளாக பிரிக்கப்படும்.

| |
|---|
| துறை (செயலாளர்) |
| தொகுதி (இணைச் செயலாளர்) |
| பகுதி (துணைச் செயலாளர்) |
| கிளை (கீழ்நிலைச் செயலாளர்) |
| பிரிவு (பிரிவு அலுவலர்) |

இந்திய அரசு அலுவல் விதிகள் 1961-இன்படி, அமைச்சகமும் துறைகளும் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

**மத்திய தலைமைச் செயலகம்:**

மத்திய ஆட்சியின் அனைத்து அமைச்சகம் மற்றும் துறைகளின் ஒட்டுமொத்த தொகுப்பே மத்திய தலைமைச் செயலகம் என்று அழைக்கப்படுகிறது. அரசமைப்பின் உறுப்பு 7 இன் படி குடியரசுத்தலைவர் பல்வேறு அமைச்சகத்திற்கு பணியை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

1. அமைச்சர்களின் கொள்கையாக்கம் மற்றும் நாடாளுமன்றச் செயல்பாடுகளில் உதவி புரிதல்
2. சட்டங்கள் வரைதல், விதிகள் மற்றும் கொள்கைகளின் செயல் முறைகள்
3. திட்டமிடல், திட்ட உருவாக்கம்
4. அமைச்சகத்தின் செலவினங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை சார்ந்த பணிகள்
5. கொள்கைகள் மற்றும் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடுதல் கட்டுப்படுத்துதல்.
6. அமைச்சகம் மற்றும் துறை பணியாளரின் பணிகளை மேமம்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.
7. அமைச்சகத்தின் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து மேற்பார்வையிடல் மற்றும் மாநில நிர்வாகத்துடன் தொடர்பில் இருத்தல்.

**மத்திய அரசு அமைச்சகங்கள் / துறை:**

1. **விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்:**
   - ❖ விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வி துறை
   - ❖ விவசாயம், ஒத்துழைப்பு மற்றும் விவசாயிகளின் நலத்துறை
   - ❖ கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை
2. **ஆயுஷ் அமைச்சகம், இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகம்**
   - ❖ இரசாயனம் மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ் துறை
   - ❖ உரத்துறை
   - ❖ மருந்துகள் துறை
3. **உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம், நிலக்கரி அமைச்சகம், வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம்**
   - ❖ வர்த்தகத் துறை
   - ❖ தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்பு துறை
4. **தொடர்பு அமைச்சகம்**
   - ❖ தபால் துறை
   - ❖ தொலைத்தொடர்பு துறை
5. **நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்:**
   - ❖ நுகர்வோர் விவாகரத் துறை
   - ❖ உணவு மற்றும் பொது விநியோகத் துறை
6. **பொதுநிறுவன விவகார அமைச்சகம், கலாச்சார அமைச்சகம் பாதுகாப்பு அமைச்சகம்:**
   - ❖ பாதுகாப்புத் துறை
   - ❖ பாதுகாப்பு தயாரிப்புத் துறை
   - ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறை
   - ❖ முன்னாள் ராணுவத்தினர் நலத்துறை
7. **வட கிழக்கு மண்டல மேம்பாட்டு அமைச்சகம், குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம், புவியியல் அமைச்சகம்:**
   - ❖ இந்திய வானியல் துறை
8. **உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகம், சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்:**
   - ❖ சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை
   - ❖ சுகாதார ஆராய்ச்சி துறை, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை
9. **மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், வெளிவிவகார அமைச்சகம், நிதி அமைச்சகம்:**
   - ❖ பொருளாதாரம் துறை
   - ❖ செலவுத் துறை
   - ❖ நிதி சேவைகள் துறை

❖ முதலீட்டு மற்றும் பொது சொத்து மேலாண்மைத் துறை

**10. கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை அமைச்சகம்:**
- ❖ கனரகத் தொழிற்துறை
- ❖ பொது நிறுவனங்கள் துறை வருவாய்த் துறை

**11. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம், சுரங்கங்கள் அமைச்சகம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சகம், பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஒய்வூதியங்கள் அமைச்சகம்**
- ❖ நிர்வாக சீர்திருத்த மற்றும் பொது குறைபாடுகள் துறை (DARPG)
- ❖ ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் நலத்துறை
- ❖ பணியாளர் மற்றும் பயிற்சித் துறை

**12. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், மின்வலு அமைச்சகம், ரயில்வே அமைச்சகம், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம்**

- ❖ கனிம வளங்கள் துறை
- ❖ கிராம மேம்பாட்டுத் துறை

**13. அணு சக்தி துறை விண்வெளித்துறை**

**14. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்**
- ❖ பயோடெக்னாலஜி துறை (DBT), இந்திய அரசு
- ❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST)
- ❖ அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறை (DSIR)

**15. உள்நாட்டு விவகார அமைச்சகம் நிறுவனக் கட்டமைப்பு:**
- ❖ மத்திய ஆயுதப்படை
- ❖ மத்திய போலீஸ் அமைப்பு
- ❖ எல்லை மேலாண்மைத் துறை
- ❖ வீட்டுவசதித் துறை
- ❖ உள்நாட்டு பாதுகாப்புத் துறை
- ❖ ஜம்மு மற்றும் காஷ்மீர் விவகாரத் துறை (ஜம்மு மற்றும் காஷ்மீர்)
- ❖ அதிகாரபூர்வ மொழித் துறை
- ❖ மாநிலங்கள் துறை

**16. தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்ச சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்.**

**17. நுகர்வோர் விவகாரங்கள். உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்**

**18. கப்பல் அமைச்சகம் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முயற்சி அமைச்சகம் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்**

❖ குறைபாடுகள் கொண்ட நபர்களின் அதிகாரமளித்தல் துறை
❖ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை

19. **புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இரும்பு அமைச்சகம் ஜவுளி அமைச்சகம் சுற்றுலா அமைச்சகம் பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம் நீர்வள ஆதார, நதி அபிவிருத்தி மற்றும் கங்கா புத்துணர்வு அமைச்சகம் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்கம்**

❖ விளையாட்டு துறை
❖ இளைஞர் விவகாரங்கள் துறை

20. **வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் மனித வள மேம்பாட்டு அமைச்சகம்**
❖ உயர் கல்வித் துறை
❖ பள்ளி கல்வி மற்றும் எழுத்தறிவு துறை

**உள்துறை அமைச்சகம் நிர்வாகக் கூட்டமைப்பு**

**இணை அமைச்சர் துணை அமைச்சர் இணை அமைச்சர்**

**உள்துறை செயலாளர்**

1. உள்துறை
2. உள்நாட்டு பாதுகாப்புத் துறை
3. மாநிலங்கள் துறை
4. செயலாளர் அலுவல் மொழி
5. அலுவல் மொழித் துறை
6. ஜம்மு மற்றும் காஷ்மீர் வெளியுறவுத் துறை

சிறப்புச் செயலாளர்கள்
↓
இணைச் செயலாளர்கள்
↓
இயக்குநர்கள்
↓
துணைச் செயலாளர்கள்
↓
கீழ்நிலைச் செயலாளர்கள்
↓
வகுப்பு III மற்றும் IV பணியாளர்கள்

| ஒன்றியப் பட்டியல் | மாநிலப் பட்டியல் | பொதுப் பட்டியல் |
|---|---|---|
| தேசிய முக்கியத்துவம் கொண்டவை | உள்ளூர் மற்றும் மாநில முக்கியத்துவம் பெற்றவை | மத்திய மற்றும் மாநிலம் ஆகிய இருவருக்கும் பொதுவானப் பட்டியல் உள்ளது. |
| மத்திய அரசு மட்டும் சட்டங்களை உருவாக்க முடியும் | மாநில அரசு மட்டும் சட்டங்களை இயற்ற முடியும் | மத்திய மற்றும் மாநில அரசு சட்டங்களை சட்டப்பூர்வமாக்கலாம் |

| | | |
|---|---|---|
| பாதுகாப்பு, வங்கி, பொதுவாக, வெளியுறவு மற்றும் தொடர்பு | காவல், வர்த்தகம், வணிகவியல், விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் | கல்வி, முதலீடு தொழிற்சங்கம் திருமணம், தத்தெடுப்பு மற்றும் வாரிசு |

**அமைச்சரவைச் செயலகம் (Cabinet Secretariat):**
**பணிகள்:**

அமைச்சரவைச் செயலகம் பிரதமரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இதன் நிர்வாகத் தலைவர் அமைச்சரவை செயலாளர் (Cabinet Secretary)ஆவார். அவரே இந்தியக் குடிமைப் பணி அலுவலர்களின் தலைவராக கருதப்படுகிறார். இந்திய அரசு (அலுவலகள் ஒதுக்கீடு) 1961 சட்டப் படி அமைச்சரவைச் செயலகத்தின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

**அமைச்சரவை செயலகத்தின் அமைப்பு முறை:**

**அமைச்சரவை செயலகத்தின் மூன்று முக்கிய பிரிவுகள்:**

1. குடிமைப் பிரிவு 2. இராணுவப் பிரிவு 3. நுண்ணறிவுப் பிரிவு

**குடிமைப் பிரிவு:**

இப்பிரிவே மத்திய அமைச்சரவைக்கு ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்குகின்றன.

**இராணுவப் பிரிவு:**

இப்பிரிவு அமைச்சரவையின் இராணுவக் குழு செயலக உதவிகளை வழங்குகின்றது.

**நுண்ணறிவுப் பிரிவு:**

இப்பிரிவு அமைச்சரவையின் கூட்டுப் புலனாய்வுக் குழு சார்ந்த செயல்பாடுகளை கையாளுகின்றது.

**பிற அமைப்புகள்:**

ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு (RAW), பாதுகாப்பு இயக்குநர், சிறப்பு பாதுகாப்புக் குழு (SPG), கூட்டு நுண்ணறிவுக் குழு இயக்குநர், பொதுமக்கள் குறைகள் டி.ஜி.பி. (1998), தேசிய ஆணையம், இராசயன ஆயுத ஒப்பந்தங்கள்.

**பள்ளிக் கல்வித்துறை – நிர்வாக பொதுப் பட்டியல்**
↓
**மனிதவள மேம்பாட்டு துறை**

தேசிய அளவில்

**மனிதவள மேம்பாட்டு துறை (MHRD): கொள்கைகள்**
↓
தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (ஊேநுசுவு):
பாடத்திட்டம், பாடநூல்கள் மற்றும் பணியில் உள்ள – ஆசிரியர் பயிற்சிகள்

↓

தேசிய சான்றிதழ் இடைநிலைக் கல்வி (CSE)

↓

மத்திய இடைநிலை கல்வி வாரியம் (CBSE)

**மாநில அளவில் - பள்ளிக் கல்வித்துறை**
**பள்ளிக்கல்வித்துறை**

→ ஆசிரியர் தேர்வு வாரியம்

→ பதின்மப் பள்ளிகளின் இயக்குநகரம்

→ தொடக்க கல்வி இயக்குநரகம்

→ அரசு தேர்வு இயக்குநகரம்

→ பள்ளிக் கல்வி இயக்குநகரம்

← தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

← முறைசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

← பொது நூலகங்கள்

↓ மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

↓ சமக்கிரா சிக்க்ஷா மாநிலத் திட்ட அலுவலகம் (SPD)

**மாவட்ட அளவில்**

↓

முதன்மைக் கல்வி அலுவலகம் (CEO)

↓

மாவட்ட கல்வி அலுவலகம் (DEO) (APO)

↓

வட்டாரக் கல்வி அலுவலகம் (BEO)

↓

தலைமை ஆசிரியர் (HM) பள்ளி

↓

மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (DIET)

↓

ஒருங்கிணைந்த கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

↓

அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (GTTI)

↓

மாவட்டத் திட்ட அலுவலகம் (DPO)

↓

உதவித் திட்ட அலுவலகம்

↓

வட்டார வள மையம் (BRC)

↓

குறு வள மையம் (CRC)

தலைமைச் செயலகமானது இந்திய அரசாங்கச் சட்டம் (அலுவல் பரிமாற்றம்) 1961 விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்புடையது. இச்செயலகம் அரசு கொள்கை முடிவு எடுப்பதில் அமைச்சகத்திற்கிடையேயான ஒருங்கிணைப்பு ஏற்படுத்துதல், அமைச்சகங்கள் / துறைகள் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் களைதல், செயலக நிலைக் குழுக்கள் / தற்காலிகக் குழுக்கள் மூலம் ஒருமித்த கருத்து உருவாக்குதல் ஆகிய வழிகளில் அமைச்சரவைச் செயலகம் அரசுக்கு உதவுகிறது. நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் காலங்களில் மேலாண்மை செய்தல், அத்தகைய காலங்களில் பல்வேறு அமைச்சரகங்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியனவும் அமைச்சரவைச் செயலகப் பணிகள் தாம்.

**அமைச்சரவைக் குழுக்களுக்கு ஆதரவு:**

அமைச்சரவைச் செயலகம், அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்களுக்கு கீழ்காணும் உதவிகளை நல்கிறது.

- ❖ பிரதமரின் ஆணைப்படி, அமைச்சரவை மற்றும் அரச்சரவைக் குழுக்களின் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- ❖ கூட்ட நிரல்களை முடிவு செய்து சுற்றுக்கு அனுப்புதல்
- ❖ கூட்டப்பொருள் தொடர்பு கோப்புகளை தயார் செய்து சுற்றுக்கு அனுப்புதல்.
- ❖ பிரதமரின் ஒப்புதலுக்குப் பின் கூட்ட விவாதங்களைத் தொகுத்தல் சுற்றறிக்கையாக அனுப்புதல்.
- ❖ அமைச்சரவை மற்றும் அதன் குழுக்கள் எடுத்த முடிவுகள் நடைமுறைப் படுத்துவதை மேற்பார்வையிடுதல்.
- ❖ அமைச்சரவைக் கூட்ட ஆவணங்களை அமைச்சரவைச் செயலகப் பாதுகாப்பில் பராமரித்தல்

**அமைச்சரவைச் செயலாளர்:**

இந்தியாவில் அமைச்சரவைச் செயலாளர் அலுவலகம் பதவியானது 1950-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தியாவின் முதல் அமைச்சரவை செயலாளர் என்.ஆர். பிள்ளை ஆவார். அமைச்சரவை செயலரே அமைச்சரவை செயலகத்தின் தலைவர் ஆவார். இந்திய குடிமைப் பணிகளில் அமைச்சரவை செயலர் பதவியே உயரியது. இதனால் குடிமைப் பணி அலுவலர்கள் மத்தியில் இவரே முதன்மையானவர்.

**மத்திய அரசு – உயர்மட்ட நிர்வாகம்:**

- ❖ குடியரசுத்தலைவர்
- ❖ துணைக் குடியரசுத்தலைவர்
- ❖ அமைச்சரவைச் செயலகம்
- ❖ இந்தியத் தேர்தல் ஆணையம்
- ❖ ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம்
- ❖ தேசிய மனித உரிமைகள் ஆணையம்
- ❖ இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி)
- ❖ இந்தியக் கணக்கு தணிக்கை துறை
- ❖ இந்தியக் கணக்கு தணிக்கை துறை
- ❖ நிதி ஆயோக்
- ❖ தேசிய மகளிர் ஆணையம்
- ❖ தேசிய பழங்குடி மக்கள் ஆணையம்
- ❖ பதினைந்தாவது நிதி ஆணையம்
- ❖ சிறுபான்மையோர் தேசிய ஆணையம்
- ❖ காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்
- ❖ முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆணையம்

## பிரதமர் அலுவலகம் (PMO):

பல்வேறு வகை ஆதார அலுவலர்கள் பிரதமருக்கு அறிக்கைகள் அளிக்க வேண்டியுள்ளதால், பிரதமர் அலுவலகம் என்பது அவரின் கீழ் பணிபுரியும் அத்தகைய பல்வேறு அலுவலர்களை உள்ளடக்கியது. பிரதமர் அலுவலகம் முதன்மைச் செயலரின் கீழ் செயல்படுகிறது. 1977 ஆம் ஆண்டு வரை பிரதமர் அலுவலகம் பிரதமரின் செயலகம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் மொரார்ஜி தேசாய் காலத்தில் பிரதமர் அலுவலகம் என்று மாற்றப்பட்டது.

## தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம்:

தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நவம்பர் 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவற்றின் பணிகள்:

- படைப்பாக்க செயல்பாடுகள் மற்றும் பன்முனைச் செயல்பாடுகளுக்கான ஆதார அமைப்புகளை உருவாக்கும் வகையில் அறிவியல்சார் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் உத்திகளை உருவாக்குவது.

- அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழில் அமைப்புகளுடன் இணைந்து உள்கட்டமைப்பு பொருளாதார மற்றும் சமூகம் போன்ற முக்கியத் துறைகளில் அறிவியல் தொழில்நுட்ப இலக்குகளை நிர்ணயித்தல்.

- பிரதமரின் அறிவியல் தொழில்நுட்ப ஆலோசனை குழுவிற்கும் தனது பங்களிப்பை வழங்குதல்.
- தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நிர்வாக ரீதியாக ஆகஸ்ட் 2018 முதல் அமைச்சகச் செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பிரதமர் அலுவலகம் பிரதமருக்கு செயலக ரீதியான உதவிகளை வழங்குகின்றது. இதன் தலைவர் பிரதமரின் முதன்மைச் செயலர் ஆவார். பிரதமர் அலுவலகம் ஊழல் எதிர்ப்பு பிரிவு மற்றும் பொதுமக்கள் குறை கேட்டல் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியது. செயலர் ஆவார். பிரதமர் அலுவலகம் ஊழல் எதிர்ப்பு பிரிவு மற்றும் பொதுமக்கள் குறை கேட்டல் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியது. இவ்வலுவலகம் பிரதமர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில குடிமைப் பணி அலுவலர்கள் துணையுடன் அரசை ஒருங்கிணைக்கின்றது. மேலும், பிரதமர் பிரதம அலுவலக உதவியுடன் தான் அனைத்து அமைச்சகங்கள், ஆளுநர்கள் மற்றும் மாநிலங்களுடன் ஆலுவல்பூர்வ தொடர்பில் இருக்கிறார்.

## பணியாளர் நிர்வாகம்

## பணியாளர் நிர்வாகம் - கருத்துரு:

அரசின் செயல்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகளின் அதிகரிப்பால் நிர்வாகக் கட்டமைப்பு பெருகிக்கொண்டே இருக்கிறது. இக்காரணிகளினால் ஒவ்வொரு நிலைகளிலும் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாளர்களின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பணியாளர் நிர்வாகத்தின் முக்கியப் பணி என்பது தொடர்ந்து ஒரு நிறுவனத்திற்குத் தேவையான தொடர்ந்து ஒரு நிறுவனத்திற்குத் தேவையான மற்றும் தகுதி வாய்ந்த பணியாளர்களை வழங்குவதே ஆகும். பணியாளர் நிர்வாகத்தை புரிந்து கொள்வதற்கு அதன் பொருள் மற்றும் தன்மையை அறிந்து கொள்வது மிக அவசியம்.

**பணியாளர் நிர்வாகத்தின் நோக்கங்கள்:**

- ❖ மனித வளத்தை திறம்பட பயன்படுத்துதல்.
- ❖ நிறுவனத்தின் அனைத்து பணியாளர்கள் இடையே ஆக்கபூர்வமான உறவுகளை உறுதி செய்தல்.
- ❖ நிறுவனத்தின் சமூக மற்றும் சட்ட ரீதியான கடமைகளை நிவர்த்தி செய்தல்.

**பணியாளர் நிர்வாகத்தின் பரப்பு மற்றும் எல்லை:**

பணியாளர் நிர்வாகம் என்பது ஓர் அமைப்பில் உள்ள அனைத்து விதமான பணியாளர் மேலாண்மைகளை உள்ளடக்கியது. இதன் அடிப்படை நோக்கம் மனித வளத்தினை திறம்பட பயன்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களைத் திட்டமிட்டபடி அடைவதாகும். பணியாளர் நிர்வாகத்துறை ஓர் அமைப்பில் உறுப்பினர்களுக்கிடையே சரியான வகையில் உறவுகள் மேம்பட கட்டமைப்பை ஏற்படுத்துதல் வேண்டும். மேலும் பணியாளர்களிடையே வேலை செய்வதற்கான உந்துதல் அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் விசுவாசம் போன்ற பண்புகளை வளர்த்தல் வேண்டும். பணியாளர்களின் சுய லாபம், பேராசை தேவையற்ற பகை உணர்வு ஆகியவற்றை அறவே நீக்குதல் வேண்டும். பணியாளர் நிர்வாகம், பணியாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்களிடம் சாதகமாக நடந்து கொள்ளுதல் அவர்களிடம் பரிகாரம் பெறுதல் போன்றவற்றை அறவே ஒழித்தல் வேண்டும்.

**பணியாளர் நிர்வாகத்தின் பணிகள்:**
பணியாளர் நிர்வாகத்தின் முக்கிய பணிகள்.

1. மனித வளத்தை திட்டமிடுதல்
2. பணியமர்த்தல்
3. பயிற்சி அளித்தல்
4. பதவி உயர்வு
5. ஊதிய கட்டமைப்பு
6. பணியாளர் நலம்

**குடிமைப் பணிகள் - பொருள் மற்றும் சிறப்பியல்புகள்:**

சுதந்திரமான, நிலையான பாகுபாடற்ற குடிமைப் பணியின் நல் அம்சங்கள் வருமாறு.

1. நம்பகமான பணியாளர் நியமனத்தில் ஊழல் பேர்வழிகள் மற்றும் சொந்த பந்தங்களை நியமிப்பதை தவிர்க்கின்றது. அழுகிய நிர்வாகத்தில் பாகுபாடுகள், முறைகேடுகள், ஊழல்கள் மலிந்துள்ளன.

2. தற்காலத்தில் கொள்கை உருவாக்கம் என்பது ஆழமான அறிவும், பொது விவகாரத்தில் நிபுணத்துவமும் கோருவதாக உள்ளது. நிரந்தரமான குடிமைப் பணி மூலம் கொள்கை உருவாக்கத்தில் தொடர் நினைவாற்றலும், திறன் கட்டுதலும்ட நிறுவனமயப்படுத்துகிறது.

3. நிரந்தரமான பாகுபாடற்ற குடிமைப் பணியால் மட்டுமே நீண்ட கால சமூக நலன் இலக்குகளை திட்டமிட்டு அடைய முடியும். அரசியல்வாதிகள் பெரும்பாலும் அரசியல் லாபம் கருதி குறுகிய கால சமூக நலன் திட்டத்திற்கே முன்னுரிமை அளிப்பர்.

4. நிலையான குடிமைப் பணி பெரிய நாடுகள் மற்றும் பல்வேறு கலாச்சாரங்கள் உடைய நாடுகளின் ஒருங்கிணைப்பில் முக்கிய பங்களிக்கின்றது. மேலும் நாடு முழுவதும் சீரான பொது நிர்வாகத்தை வழங்க இயலும்.

5. நிலையான குடிமைப் பணி இதர நம்பகத்தன்மை கொண்ட தொழில்கள் போன்றே நாளடைவில் தனது செயல்பாடுகளுக்கு அற ரீதியான நெறிகளை உருவாக்கிக் கொள்ளும்.

**குடிமக்கள் மற்றும் அதிகாரவர்க்கம்:**

மக்களாட்சியின் அடிப்படை முடிமக்களே ஆவர். பண்டையக் காலத்தில் ஒரு நாட்டின் முக்கியப் பணி எதிரிகளிடம் இருந்து எல்லையைப் பாதுகாத்தல், உள்ளாட்சி அமைதி மற்றும் தயார்நிலை என மூன்றடுக்கு கொண்டதாக மட்டுமே இருக்கும். அக்காலக்கட்டத்தில் அதிகாரவர்க்கத்தின் பணிகள் கட்டுக்குள்ளாகவும், வாளின் வலிமை அதிகாரமிக்கதாகவும் இருக்கும். நில உறவுகள் சிக்கலடைந்து ராணுவத்துடன் பெரிய அதிகாரவர்க்கமும் தேவைப்பட்டது. தற்போதைய நவீன காலக்கட்டத்தின் அதிகாரவர்க்கத்தின் பணிகள் மேலும்
பன்மடங்கு அதிகரித்துள்ளன. 20 ஆம் நூற்றாண்டில் பொதுமக்களின் திறன்களுக்கு வாய்ப்பளித்தல், துன்பங்களை நீக்குதல் போன்றவை நாகரிக அரசின் முத்திரைகளாக ஆகின. சுயமரியாதை, சமவாய்ப்புகள், நீதி ஆகியன அதிகாரவர்க்கத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது.

இந்தியா மக்களாட்சி என்ற போதிலும் அதிகமாக மையப்படுத்தப்பட்ட ஒரு அரசு ஆகும். நூறு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டில் மிகக் குறைவான நபர்களே முக்கியமான முடிவுகளை எடுக்கும் நிலையில் உள்ளனர். இவ்வாறான கட்டமைப்பில் பி.எம்., சி.எம்., டி.எம். அறிகுறிகள் இன்னமும் நமது அமைப்பையும் மக்களின் உளவியலையும் ஆட்டிப்படைப்பதாக உள்ளது.

வாக்குக்கும் பொது நலனுக்கும் தொடர்பு இல்லாத நிலை முழுமையாக உருவாகியுள்ளது. தொலைதூர மையப்படுத்தப்பட்ட அரசால் மக்களுக்கு இன்றியமையாத தேவைகளான குடிநீர், சுகாதாரம். கல்வி, உடல் நலம், மின்சாரம், சாலைகள், போக்குவரத்து, வேளாண்மை உற்பத்தி, சந்தை இணைப்பு, கூடுதல் மதிப்பு, திறன் மேம்பாடு உள்ளிட்ட முக்கிய தேவைகளை நிறைவேற்றித் தரும் மன உறுதியோ தகுதியோ இல்லாமல் இருக்கிறது.

மாவட்ட ஆட்சியரே ஆட்சி அதிகாரத்தின் உருவகமாக இருக்கிறார். இதனால் அவ்வப்போது அரசுகள் மாறினாலும் அரசு சேவைகளின் தரத்தில் எவ்வித மாறுதலும் காணப்படவில்லை. அரசியல் என்பது ஆட்சி அதிகார விளையாட்டாகவும் அதிகாரம் என்பது தனிப்பட்ட நலன்களுக்கானதாகவும்
மாறியுள்ளது. வாக்கு என்பது விலை கொடுத்து வாங்கத்தக்க நுகர்பொருளாகவோ அல்லது எந்த விளைவுகளும் அற்ற பண்டமாற்றாகவோ மாறிவிட்டது. மக்களாட்சி என்பது அதிகாரத்துக்கான தேர்தல் போட்டி என்பதாகவும், தேர்தல் என்பது மக்கள் நலனுக்கானதாக அல்லாமல் போட்டியிடுவோரின் சுயநலனுக்கானதாகவும் சுருங்கி விட்டது. வரி செலுத்தும் சாமானியர் மூல வளங்களைப் பயன்படுத்தும் வழி வகைகளோ, அதற்கான உரிமைக் குரலோ அற்றவர்களாக உள்ளனர். தொலைவில் அற்றவர்களாக உள்ளனர். தொலைவில் இருந்து இயக்கப்படும் அதிகாரவர்க்கம் தாம் யாருக்காகப் பணியாற்றுகிறதோ அந்த மக்களுக்குக் கடமைப்பட்டதாக இல்லை.

**குடிமைப் பணியினை குடிமக்கள் மையப் பணியாக மாற்றுவதற்கான முக்கிய கொள்கை நெறிகள்:**

1. சட்டத்தின் ஆட்சி
2. நிறுவனங்களை பொறுப்புணர்வும் கடமைப்பாடும் உள்ளவையாக மாற்றுதல்.
3. குடிமக்களின் ஆக்கப்பூர்வ பங்களிப்பு – அதிகாரபரவலாக்குதல் மற்றும் பிரதிநிதித்துவம்
4. வெளிப்படைத்தன்மை
5. குடிமைப் பணிச் சீர்த்திருத்தம்
6. ஆளுகையில் அறநெறி
7. தொடர்ச் சீர்திருத்தம்

**அனைத்து இந்தியப் பணிகள், மத்தியப் பணிகள் மற்றும் மாநிலப் பணிகள்:**

இந்திய நிர்வாக அமைப்பின் தனிச்சிறப்பு என்னவெனில், இப்பணிகள் மத்திய – மாநில அரசுப் பணிகளுக்கும் பொதுவான இந்திய ஆட்சிப் பணி உருவாக்கப்பட்டதாகும். மத்திய, மாநில அரசுகள் இரண்டிலும் இல்லாத நிர்வாகப் பணியாளர்களைக் கொண்டது. இது, இவர்கள் எந்த நேரத்திலும் எந்த அரசுப் பணிக்கும் மாற்றப்படலாம். இந்த அலுவலர்கள் அனைத்து இந்திய அளவில் நியமிக்கப்படுகின்றார்கள். ஆனால், பொது தகுதியும் ஒரே ஊதிய விகிதமும் கொண்டவை. இவர்கள் ஊதியம் மாநிலத்துக்கு மாநிலம் மாறுவதில்லை. ஒரு சீரான உரிமைகள், சன்மானங்கள் என ஒரு சீரான தகுதியுடன் ஒரு சீரான பணி வடிவவத்தினைப் பெற்றுள்ளது.

இதர கூட்டாட்சிகள் போன்றே இந்திய அரசமைப்பில் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் எனும் அடிப்படையில் பிரிக்கப்பட்டு தமக்கான அரசுப் பணிகளை நிர்வகித்து வருகின்றன. பாதுகாப்பு, வருமான வரி, அஞ்சல் மற்றும் இரயில் போக்குவரத்து ஆகியத் துறைகள் மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் வரும். இதற்கான பணியாளர்கள் மத்திய அரசின் கட்டுபாட்டில் வருவர். இதே போன்று, மாநில அரசு தனக்கென தனியான துறைகளைக் கொண்டுள்ளது.

**அனைத்து இந்தியப் பணிகள்:**

அனைத்து இந்தியப் பணிகள் மத்திய மாநில அரசுகளுக்குப் பொதுவாக உருவாக்க வேண்டும் என அரசமைப்பு விதிகள் கூறுகிறது. அனைத்து இந்தியப் பணிகள் சட்டம் 1951 மூலம் அனைத்து இந்தியப் பணிகளுக்கான நியமன விதிமுறைகள் மற்றும் பணி நிலைமை குறித்து மத்திய அரசு விதிமுறைகளை உருவாக்கலாம். தற்போது இந்தியாவில் மூன்று அனைத்து இந்திய பணிகள் உள்ளன. அவைகள் முறையே இந்திய ஆட்சிப் பணி (IAS), இந்தியக் காவல் பணி (IPS) மற்றும் இந்திய வனப் பணி (IFS). இ.ஆ.ப/இ.கா.ப/இ.வ.ப பதவி உயர்வு விதிகளின் படியே அனைத்து இந்தியப் பணிகள் கிளை கடைப்பிடிக்கிறது.

**அனைத்து இந்தியப் பணி விதிமுறைகள் அடிப்படையில் இருவழிகளில் நியமிக்கப்படுகின்றனா்.**

இரண்டு வழிமுறைகளில் அகில இந்தியப் பணிக்கு பணியமர்த்தப்படுகின்றன.

1. நேரடி நியமனம்: ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்தும் குடிமைப் பணிகள் தேர்வுகள் மூலம் செய்யப்படுகின்றது.

2. பணி உயர்வு: அரசுத் துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளை பதவி உயர்வு அடிப்படையில் அனைத்து இந்தியப் பணிக்கு தேர்வு செய்தல்.

**இந்திய ஆட்சிப் பணி (IAS):**

இந்திய ஆட்சிப் பணி என்பது இந்திய குடிமைப் பணியிலிருந்து தோன்றியதாகும். அனைத்து இந்தியப் பணி எனும் அளவில் இறுதியில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வந்தாலும் உடனடியாக அவர்களின் எஜமான் மாநில அரசுதான். இந்த அலுவலர்களுக்கான ஊதியம், ஒய்வூதியம் மாநில அரசால் வழங்கப்படும். ஆனால் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம், அபராதம் விதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடமே உள்ளது. இது, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணைய ஆலோசனையின்படி வழிநடத்தப்படுகிறது. மாநிலப் பிரிவின் எண்ணிக்கை முடிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் பணி நியமனத்தின் போதே மாநிலப் பிரிவுகளாக நியமிக்கப்படுகிறார்கள். இருப்பினும், ஒன்று அல்லது இரண்டு பணிக்காலங்கள் மூன்று முதல் ஐந்து பணிக்காலங்கள் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த மாநிலப் பிரிவு அலுவலர்கள் மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்பட முடியும். பெரும்பாலான அனைத்து இந்தியப் பணியாளர்கள் பணிக்காலத்தில் ஒரு முறையாவது மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்படும் வாய்ப்பு உள்ளது. பலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளும் இவ்வாய்ப்பு கிடைக்கின்றன. மூத்த அதிகாரிகளை செயலகத்துக்கு உள்ளும் வெளியிலும் மாற்றும் நடைமுறை அதிகாரப்பூர்வ நிறுத்தம் என்று அழைக்கப்படுகிறது.

இது மத்திய மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பணியைச் சார்ந்த அதிகாரியின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் மாநில அரசால் வழங்கப்படும். ஆனால், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசணையின் பெயரில் மத்திய அரசால் மட்டுமே எடுக்க முடியும். இவ்வதிகாரிகள் நியமனம் செய்யப்படும் போது, மாநில அடிப்படையில் அவர்களுக்கு பணி ஒதுக்கப்படுகின்றது. மாநிலங்களில் பணிபுரியும் இவ்வதிகாரங்களில் மத்திய அரசியலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதவி (Tenure) காலத்திற்கு பணிபுரியலாம். ஒரு பதவிக்காலம் என்பது மூன்று அல்லது நான்கு அல்லது ஐந்து ஆண்டாக இருக்கலாம்.

இந்திய ஆட்சிப் பணி பன்முகத் தன்மைக் கொண்டது. இப்பணியில் அமர்த்தப்படும் அதிகாரிகள் பல்வேறுபட்ட பணிகளை மேற்கொள்வார்கள். உதாரணமாக, சட்டம் ஒழுங்கு, வரிவசூல், வியாபாரங்களை ஒழுங்குமுறை செய்தல், வாணிபம் மற்றும் தொழில், மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சி பணிகள், காலனி ஆதிக்கக்கால குடிமைப் பணியை ஒப்பிடுகையில் நீதித்துறை சார்ந்த பணிகளை தவிர அனைத்து பணிகளையும் கையாளுகின்றனர். எனவே, இப்பணி பொதுமைப்பட்ட பணி என்றழைக்கப்படுகிறது. இப்பணியை சார்ந்த அதிகாரிகள் எந்த துறையிலும் பணியமர்த்தப்படலாம்.

**இந்தியக் காவல் பணி (IPS):**

இந்தியக் காவல் பணியானது, சுதந்திர காலக்கட்டத்திற்கு முன்பே தோன்றியது. இப்பணி இந்திய ஆட்சிப்பணியிலிருந்து இரண்டு வழிகளில் வேறுபடுகிறது.

1. பெரும்பான்மையான அதிகாரிகள் மாநிலத்திலேயே பணிபுரிகின்றனர். ஏனெனில், மத்தியில் காவல் துறை சார்ந்த மிகச் சில பணிகளே உள்ளன.

2. இவர்களின் ஊதியம் மற்றும் நிலை இந்திய ஆட்சிப் பணியைவிடக் குறைவானது.

இவர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இ.ஆ.ப.(IAS). இ.கா.ப.(IPS), இ.வ.ப(IFS) ஆகிய பதவிகளுக்கு பொதுவான ஒரு தேர்வின் மூலம் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கின்றனர். இந்தியக காவல் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் ஐந்து மாத அடிப்படைப் பயிற்சி பெற்ற பின்னர், சர்தார் பட்டேல் தேசிய காவல் பயிற்சி நிலையத்தில் (ஹைதராபாத்) சிறப்புப் பயிற்சி பெறுகின்றனர். குற்ற உளவியல், குற்றங்களை கண்டுணர்தல், ஊழல் தடுப்பு மற்றும் பேரிடர் கால செயல்பாடுகள் ஆகியவற்றில் பயிற்சி பெறுகின்றனர். அவர்களுக்கான பாடத்திட்டம் குற்ற உளவியல், குற்றங்களைத் தடுப்பதற்கான அறிவியல் உபகரணங்களைக் கையாள்வது, ஊழலைத் தடுப்பதற்கான முறைகள், நெருக்கடிகால நிவாரணங்களைக் கற்றல் ஆகியன உள்ளடக்கியதாக இருக்கும். ஓராண்டு பயிற்சியை நிறைவுசெய்த பின்னர் தகுதிகாண் நிலையினர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். பின்னர் அந்த நபர் காவல்துறை உதவி கண்காணிப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஆனால், இதற்கு முன் அவர் ஓராண்டு பயிற்சி நிரலை நிறைவு செய்தாக வேண்டும். இக்கால கட்டத்தில் ஓர் இளநிலை அதிகாரி மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சி நிறைவுற்ற பின் உதவிக் காவல் கண்காணிப்பாளராக (ASP) பணியில் அமர்த்தப்படுகின்றனர்.

இந்தியக் காவல் பணி ஓர் அனைத்து இந்தியப் பணி என்பதால் அவர்கள் மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றனர். அதே நேரம் மாநில பதவி நிலைகளில் அமர்த்தப்படுகின்றனர். இந்தியக் காவல் பணியானது, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் மேற்பார்வையிடப்படுகிறது. இருப்பினும், பணியாளர் கொள்கைகள் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தங்களின் மூலமே வரையறை செய்யப்படுகிறது.

**இந்திய வனப் பணி:**

விடுதலைக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஒரே அனைத்து இந்ததியப் பணி இந்திய வனப் பணி ஆகும். நாடாளுமன்ற சட்டம் 1963 இன் கீழ் இது நடைமுறைக்கு வந்தது. இதன் ஊதியம் மற்றும் பணி தகுதி மற்ற இரு பணிகளுக்கும் (இ.ஆ.ப., இ.கா.ப) கீழானவை ஆகும். இதற்கான தேர்வுகள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தனியாக நடத்தப்படும் அவை, எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு என இரு நிலைகளைக் கொண்டவை. இது அனைத்து இந்தியப் பணி என்றபோதிலும் அதன் தன்மை பொதுவான குடிமைப் பணி போன்றதே. ஆனாலும், தனிச்சிறப்பு ஆக்கப்பட்டதும், அதிகாரம் கொண்டதுமாக இருக்கிறது. இப்பணிகள் பணியாளர் மற்றும் சீர்திருத்தத்துறை மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. அனைத்து இந்தியப் பணிகளுக்கான நியமனம், ஒழுங்குமுறைகள், பணி நிலைகள் ஆகியனவற்றை இத்துறையே உருவாக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நியமனம் பெற்ற நபர்கள் இதர அனைத்து இந்திய மத்தியப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட நபர்களுடன் மூன்று மாத அடிப்படைப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அடிப்படை பயிற்சிகளை நிறைவு செய்த பின்னர் தகுதிகாண் நிலை பயிற்சிகளை டேராடூனில் உள்ள இந்திய வனத் துறை பயிற்சி மையத்தில் இரண்டு ஆண்டுகள் மேற்கொள்ள வேண்டும். அங்கு கடுமையான பயிற்சிகள் அளிக்கப்படும். பயிற்சியைத் தொடர்ந்து அதற்கான தேர்விலும் தேர்ச்சி பெற்ற பின்னரே பணி ஒதுக்கப்படும். அனைத்து இந்தியப் பணிகள் போன்றே இந்திய வனப் பணிகளும் பிரிவு அடிப்படையிலான பணி ஆகும். மத்திய பணிகளில் ஓராண்டு மாற்றுப்பணியாளராக பணி செய்த பின்னர் அவரவர் பிரிவு மாநிலங்களுக்கு அனுப்பப்படுவர்.

பிற அனைத்து இந்தியப் பணிகள் போல் இல்லாமல் மத்திய குடிமைப் பணிகள் மத்திய அரசின் தனிக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. இதன் உறுப்பினர்கள் மத்திய அரசில் இருந்தே நியமிக்கப்படுகின்றனர். மத்திய அரசின் குடிமைப் பணிகள் நிறுவப்பட்ட பணிகளான மத்திய குடிமைப் பணிகளும் நிறுவப்பட்ட குடிமைப் பணிகளுக்கு வெளியில் உருவாக்கப்படும் குடிமைப் பணிகளையும் உள்ளடக்கியது ஆகும். இவை பொது மத்தியப் பணிகளாகத் தொகுக்கப்பெறுகின்றன. இவை இரண்டுமே பிரிவுகள் 1,2,3 மற்றும் 4 என கீழிறக்க நிலை பணிநிலையிடங்களைக் கொண்டுள்ளன.

இரண்டு குடிமைப் பணிகளுக்கும் நியமன அதிகார அமைப்பு ஒன்றுதான் என்பதால் அனைத்து இந்திய பணிகள், மத்திய குடிமைப் பணிகள் என இரு பிரிவுகள் வகைப்படுத்தல் ஏன் எனக் கேட்கலாம். ஆனால், ஒரே ஒரு முக்கிய வேறுபாடு காணப்படுகிறது. அது என்னவென்றால், அனைத்து இந்திய பணிகளின் கீழ் மத்திய அரசு, மாநில அரசுகள் இரண்டின் கீழும் பணியாற்ற நேரிடும். மேலும், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் எந்த பணிக்கும் நியமிக்கப்படலாம். ஆனால், மத்திய அரசு பொதுப் பணிகள் குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே நியமிக்கப்படுகின்றன. இதன் மூலம் வேறுபாடு நியாயப்படுத்தப்படுகிறது.

**பணி அமர்த்தல்:**

மத்திய அனைத்து இந்தியக் குடிமைப் பணித் தேர்வுகளால் வகுப்பு I மற்றும் II சார்ந்த அதிகாரிகள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்படுகின்றனர்.

**இந்திய வெளியுறவுப் பணிகள்:**

மத்திய குடிமைப் பணிகள் வகுப்பு 1 – பிரிவின் கீழ் வரும் இந்திய வெளியுறவுப் பணிகள் நாட்டு விடுதலைக்குப் பின்னர் உருவாக்கப்பட்டவை ஆகும். இப்பணிகள் முழுமையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வருபவை. அனைத்து இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுகளில் மேல் நிலைத் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மத்தியக் குடிமைப் பணிகளிலேயே மிக உயர்ந்த கவுரவமும், தகுதிநிலையும்,ஊதியமும், ஆதாயமும் கொண்டவை இந்திய வெளியுறவுப் பணிகள் ஆகும். இப்பணிகளில் நியமிக்கப்படுபவர்கள் உள்நாட்டிலும் அயல் நாடுகளின் தூதரகங்களிலும் பணியாற்றக் கடமைப்பட்டவர்கள். இத்துறை இந்திய வெளியுறவு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்திய வெளியுறவுப் பணியாளர்கள் நிர்வாகத்தில் மத்தியப் பணியாளர் துறையும் பங்கெடுக்கிறது. மத்திய நிதி அமைச்சத்தின் பணியாளர்களையும் நிர்வகிக்கும் இத்துறை வெளியுறவுப் பணியாளர்களின் பணி வரைகளையும் ஊதிய அலகுகளையும் இதர நிதி அம்சங்களையும் வரையறை செய்கிறது. சலுகைகள், படிகளைப் பொறுத்தவரையில் இதர துறைப் பணியாளர்களைவிட வெளியுறவுப் பணியாளர்கள் மிகவும் அதிர்ஷடசாலிகள் ஆவர்.

அன்னிய நாட்டுப் படிகள் பெற இவர் தகுதியானவர்கள். இது கீழ்க்காணும் நிலைகளில் வழங்கப்படுகின்றன. 1. உள்ளூர் வாழ்க்கைச் செலவு 2. இதர தேவையான செலவுகளுக்கான படிகள் அவர்கள் உள்நாட்டில் பணியாற்றினாலும் அயல் நாட்டில் பணியாற்றினாலும் உள்நாட்டில் அவருக்கு நிகரான பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்க்களுக்கு அனுமதிக்கப்பட்ட விதத்திலேயே அனுமதிக்கப்படும்; கூடுதல் செலவினங்களைப் பணியாளர்களே ஏற்க வேண்டும். அயல்நாடுகளின் பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்களின் பிரதிநிதித்துவ செலவினங்கள் அயல் நாடுகளில் ஒரு தனியாக எதிர்கொள்ளும் வீதத்திலேயே அவரது அலுவலக நிலைத் தகுதியினால் வழங்கப்படும்.

இந்திய வெளியுறவுப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மூன்று ஆண்டுகள் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்கு அவர் ஒரு மாவட்டத்தோடு இணைக்கப்பட்டு நடைமுறைப்பணிகளில் பயிற்சி மேற்கொள்வார். மேலும், செயலகப் பயிற்சியும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பெற வேண்டும்.

**ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் - அமைப்பு, அதிகாரங்கள், பணிகள் மற்றும் விதிகள்**

**வரலாற்றுப் பார்வை:**

இந்தியாவில் அரசு பணியாளர் தேர்வாணையம் உருவாவதற்கான வித்து எப்போது நடப்பட்டது என்றால் 1919 மார்ச் 5 அன்று இந்திய அரசமைப்பு சீர்திருத்தப்பட்ட நாளை குறிப்பிடலாம். அப்போது அரசு அறிவித்த முதல் சீர்திருத்தங்களில் சில நிரந்தரமான அரசு பணிகளுக்கு ஒழுங்குமுறைகளுடன் கூடிய நியமன முறையின் தேவை உணரப்பட்டு, இதற்கான நிரந்தர பணி ஆணைய அமைப்பினை உருவாக்கப் பரிந்துரைக்கப்பட்டது. இதன்படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்க இந்திய அரசாங்கச் சட்டம், 1919 உறுப்பு 96 (சி) வழிவகுத்தது. இதன்படி ஆளுநர்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு செயலர் உருவாக்கும் விதிகளின்படி இந்திய அரசு பணியாளர்கள் நியமனங்களும் கட்டுப்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அச்சட்டம் தெளிவுபடுத்தியது.

சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தேர்வாணையம் அமைப்பு, செயல்பாடுகள். குறித்து பல மட்டங்களில் தொடர் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. தொடர்ந்து தீர்வுகாண லீ ஆணையம் என அழைக்கப்படும் ராயல் ஆணையம் உருவாக்கப்பட்டது. லீ ஆணையம் தமது அறிக்கையை 1924 இல் வழங்கியது. ஒரு சட்டப்பூர்வ அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசாங்கச் சட்டம், 1919-இன் படி தாமதமின்றி உருவாக்கப்பட வேண்டும் என ஆணையம் ஆணையிட்டது.

இந்திய அரசாங்கச் சட்டம் 1919 உறுப்பு 96(சி) படியும், உடனடியாக தேர்வாணையம் அமைக்க லீ ஆணையம் ஆணையிட்டதன் படியும் இந்தியாவில் முதல் முறையாக அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் 01.10.1926 ல் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் ஒரு தலைவரும் நான்கு உறுப்பினர்களும் கொண்டிருந்தது. ஐக்கிய ராஜ்ஜியத்தின் உள்துறை குடிமைப் பணிகள் உறுப்பினர் சர்ராஸ் பார்க்கர் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்திய அரசாங்கச் சட்டம், 1919, உறுப்பு 96(சி) துணைப்பிரிவு (2) ன் கீழ் வழங்கப்பட்டுள்ள விதிகளின் படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் (பணிகள்) விதிகள், 1926 உருவாக்கப்பட்டது. இந்திய அரசாங்கச் சட்டம், 1935 மேலும் விரிவு படுத்தப்பட்ட கூட்டாட்சி (மத்திய) மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் உருவாக வழிவகுத்தது. இதன்படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் கூட்டாட்சி (மத்திய) பணியாளர் தேர்வாணையமாக 01.04.1937 ல் மாறியது.

இந்திய அரசமைப்பு செயல்முறைக்கு வந்த ஜனவரி 26, 1950 அன்று கூட்டாட்சி பணியாளர் தேர்வாணையம் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் என பெயர் மாற்றப்பட்டது. அரசமைப்பு உறுப்பு 378 (1) ன் கீழ் கூட்டாட்சி பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்களாக ஆனார்கள்.

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசமைப்பு உறுப்பு 315 இன்படி உருவாக்கப்பட்ட அரசமைப்பு நிறுவனம் ஆகும். தேர்வாணையம் ஒரு தலைவர், 10 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு ஆகும். போட்டித்தேர்வுகள், நேர்முகத் தேர்வுகள் மூலம் பணியாளர்கள் நியமனம், பதவி உயர்வு மற்றும் அயல்நாட்டுப் பணி மாறுதல்களுக்கான பொருத்தமான அறிவுரைகள் வழங்குவது, பல்வேறு அரசு பணிகள் நியமனங்கள் குறித்து அரசு கோரும் ஆலோசனைகள் வழங்குவது, நியமன விதிகள் உருவாக்கம், திருத்தம் மேற்கொள்வது, பல்வேறு குடிமைப் பணிகளுக்கான நடத்தை விதிகள் உருவாக்குவது, கூடுதல் சிறப்பு நிலை ஓய்வூதியம், வழக்குச் செலவுகள் அளித்தல் போன்ற விவகாரங்களில் ஆலோசனை வழங்குவது, விளக்கம் கோரி குடியரசு தலைவராலும் மாநில அரசுகளின் ஆளுநர்களும் அனுப்பப்படும் விவரங்களுக்கு ஆலோசனைகள் வழங்குவது, தவிர பணி நியமனம் தொடர்பாக அரசு கோரும் அனைத்து விவரங்களையும் வழங்குவது ஆகிய பணிகளை தேர்வாணையங்களுக்கு அரசமைப்பு பொறுப்பளித்துள்ளது.

அரசமைப்பு பொறுப்பளித்துள்ள அனைத்துக் கடமைகளையும் ஆற்ற ஒரு செயலர் தலைமையில் எண்ணற்ற அலுவலர்கள் / ஊழியர்களைக் கொண்ட ஒரு செயலகம் மூலம் தேர்வாணையங்கள் இயங்குகின்றன. ஆணைய செயலகத்தின் நிர்வாகச் செயல்பாடுகளுடன் ஆணையத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஆணைய ஆலுவர்கள் / ஊழியர்கள் தொடர்பான அனையத்துப் பணியாளர் விவகாரங்களையும் ஆணைய நிர்வாகப் பிரிவு மேற்கொள்ள வேண்டும்.

**ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டப்பூர்வ கடமைகள்:**

இந்திய அரசமைப்பு உறுப்புகள் 320, 321 இன் படி வழங்கப்பட்டுள்ள ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டப்பூர்வ கடமைகள் வருமாறு

1. போட்டித் தேர்வுகள் மூலம் நியமனங்கள்
2. நேர்காணல்கள் மூல நியமனங்கள்
3. பதவி உயர்வு மற்றும் அயல்நாட்டுப் பணி மாறுதல்களுக்கான பொருத்தமான அறிவுரைகள் வழங்குதல்
4. பல்வேறு அரசு பணிகள் நியமனங்கள் குறித்து அரசு கோரும் ஆலோசனைகள் வழங்குவது, நியமன விதிகள் உருவாக்கம், திருத்தம் மேற்கொள்வது, பல்வேறு குடிமைப் பணிகளுக்கான நடத்தை விதிகள் உருவாக்குவது
5. பல்வேறு குடிமைப் பணிகள் தொடர்பான ஒழுங்கு நடவடிக்கைகள்
6. கூடுதல் சிறப்பு நிலை ஓய்வூதியம், வழக்குச் செலவுகள் அளித்தல்
7. குடியரசுத்தலைவரால் தேர்வாணையத்துக்கு அனுப்பப்படும் அனைத்து விவகாரங்கள் குறித்தும் ஆலோசனைகள் வழங்குவது
8. பணி நியமனம் தொடர்பாக அரசு மற்றும் மாநில ஆளுநர்கள் கோரும் அனைத்து விவரங்களையும் வழங்குவது

**நியமனங்கள் கீழ்க்காணும் நான்கு வழிகளில் ஒன்றில் மேற்கொள்ள வேண்டும்.**

1. நேரடி நியமனம்
2. பதவி உயர்வு
3. இந்திய வெளியுறவுப் பணி / இணைப்பு
4. இரண்டும் இணைந்த முறை (வெளியுறவுப் பணி + இணைப்பு)

**நேரடி நியமனம்:**

நேரடி நியமனங்கள் பெரும்பாலும் கீழ்க்காணும் இரு வழிகளில் நடைபெறுகின்றன.

1. போட்டித் தேர்வுகள் மூலம்
2. தேர்வு மூலம் பல்வேறு குடிமைப் பாதுகாப்புப் பணிகளுக்கு நாட்டின் பல இடங்களில் அமைந்துள்ள தேர்வு மையங்களில் கீழ்க்காணும் தேர்வுகளை ஆணையம் நடத்துகிறது.

1. குடிமைப் பணிகள் (அடிப்படை நிலை) தேர்வு
2. குடிமைப் பணிகள் (முதன்மை நிலை) தேர்வு
3. பொறியியல் பணிகள் தேர்வு
4. ஒருங்கிணைந்த மருத்துவப் பணிகள் தேர்வு
5. இந்திய வனப் பணிகள் தேர்வு
6. நிலவியலாளர் தேர்வு
7. இந்திய பொருளியல் பணிகள் / இந்திய புள்ளியியல் பணிகள் தேர்வு
8. சிறப்பு நிலை ரயில்வே பயிற்சியாளர் தேர்வு (ஒரு ஆண்டு விட்டு ஒரு ஆண்டு)
9. ஒருங்கிணைந்த பாதுகாப்புப்படைகள் தேர்வு (ஆண்டு தோறும்)
10. தேசியப் பாதுகாப்பு அகாதமி, நேவல் (கடல் படை) அகாதமி தேர்வு (இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை)
11. மத்தியக் காவல் படைகள் (உதவி கமாண்டென்ட்) தேர்வு
12. பிரிவு அலுவலர் / சுருக்கெழுத்தர் (கிரேட் பி / கிரேட் 1)
13. துறை வாரி போட்டித் தேர்வுகள்
    போட்டித் தேர்வுகள் கால அட்டவணை எப்பிளாய்மெண்ட் நியூஸ், ரோஜ்கர் சமாச்சார் இதழ்களில் வெளியாகிறது. எதிர்வரும் தேர்வுகளின் பெயர்கள், அறிவிப்பானை வெளியாகும் தேதி, விண்ணப்பிக்கும் கடைசி நாள், தேர்வு நாள் ஆகிய தகவல்களை வெகு முன்பாக பெரும்பாலும் முந்தைய ஆண்டு அக்டோபர் மாதமே அறிவிக்கப்படுகிறது.

**பெண் விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக் கட்டணத்தில் இருந்து விலக்கு**

15.07.2009 வெளியான டி.ஓ.பி.டி கடிதம் எண் 36020/03/2009 படி ஆணைய தேர்வுகளுக்கான கட்டணத்தில் இருந்து பெண் விண்ணப்பதாரர்களுக்கு கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**அரசமைப்பு உறுப்புகள்:**

| | |
|---|---|
| உறுப்பு 315 | ஒன்றிய, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் |
| உறுப்பு 316 | உறுப்பினர் நியமனம், பதவிக் கால வரம்பு |
| உறுப்பு 317 | தேர்வாணையம் உறுப்பினர் நீக்கம் மற்றும் இடை நீக்கம் |
| உறுப்பு 318 | தேர்வாணையம் உறுப்பினர்கள், ஊழியர்களுக்கான ஒழுங்குமுறைகளை உருவாக்குதல் |
| உறுப்பு 319 | நடவடிக்கைக்குள்ளாகும் உறுப்பினர்கள் பணியில் தொடர்வதைத் தடுத்தல் |
| உறுப்பு 320 | தேர்வாணையம் பணிகள் |
| உறுப்பு 321 | தேர்வாணையம் பணிகளை விரிவாக்கம் செய்யும் அதிகாரம் |
| உறுப்பு 322 | தேர்வாணையம் செலவினங்கள் |
| உறுப்பு 323 | தேர்வாணையம் அறிக்கைகள் |

**மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்:**

மத்தியில் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருப்பதுபோல் ஒரு மாநிலத்தில் அரசுப் பணியாளர் தேர்வாணையமும் இயங்குகிறது. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைய வழிவகுத்த அரசமைப்பு உறுப்புகளே (315 முதல் 323 வரை) இதற்கும் வழி வகுக்கிறது. அமைப்பு, உறுப்பினர்கள் நியமனம், நீக்கம், அதிகாரம், பணிகள் மற்றும் சுதந்திரத்தன்மை அனைத்தும் அரசமைப்பு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களுக்கும் வழங்குகிறது.

**அமைப்பு:**

ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆளுநரால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். ஆணையத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை அந்தந்த அரசுகளே நிர்ணயம் செய்துகொள்ள அசரமைப்பு அனுமதிக்கிறது. ஆனால், அது ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டது. மேலும், ஆணைய உறுப்பினர்களில் பாதி பேர் மத்திய மாநில அரசுகளின் நிர்வாகத்தில் 10 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என்ற நிபந்தனை தவிர உறுப்பினர்கள் தகுதி குறித்து அரசமைப்பு எதுவும் கூறவில்லை.

மேலும் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிலைகள் குறித்து ஆளுநரே வரையறை செய்து கொள்ள அனுமதி வழங்குகிறது.

மாநில அரசுப்பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் அல்லது 62 வயது இதில் எது முந்தியதோ அது ஆகும். ஆனால் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் இந்த வயது வரப்பு 65 ஆகும். அதேநேரம் ஆளுநருக்கு முறைப்படி பதவி விலகல் கடிதம் அளிப்பதன் மூலம் பதவி விலக முடியும்.

கீழ்க்காணும் இரண்டு சூழ்நிலைகளில் தேர்வாணைய உறுப்பினர்களில் ஒருவரை தற்காலிக உறுப்பினராக ஆளுநர் நியமனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

1. தலைவர் பதவி காலியாக இருக்கும் போது
2. ஏற்கனவே தலைவர் பதவியில் இருப்பவரால் மாநில அரசுப் பணியாளர் நிறைவு செய்ய இயலாத சூழ்நிலை உருவாகும்போது, புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை அல்லது ஏற்கனவே பதவியில் இருக்கும் தலைவர் தனது அலுவல்களை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும் வரை தற்காலிக தலைவர் தலைவர் அலுவல்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்.

**நீக்கம்:**

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையதின் தலைவர், உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்ட போதும் குடியரசுத்தலைவரால் மட்டுமே ஒருவரை நீக்க முடியும் (ஆளுநரால் அல்ல) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், உறுப்பினர்களை நீக்கும் முறையிலேயே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்.

உறுப்பினர்களை நீக்கும் முறையிலேயே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்களையும் குடியரசுத்தலைவர் நீக்கலாம். அவை வருமாறு:

1. நொடித்துப்போதல் அல்லது கடனில் மோசடி

2. தனது அலுவலகப் பணிகளுக்கு வெளியே ஊதியம் பெறும் ஊழியராகப் பணியாற்றும் போது

3. உடல் நலம் குறைவு காரணமாக ஒருவரால் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை என குடியரசுத்தலைவர் கருதும் போது,

இவைதவிர முறைகேடு குற்றத்தின் கீழும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அல்லது உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நீக்க முடியும். இருந்தபோதும் இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் கருத்துரை கேட்டும் குடியரசுத்தலைவர் செயல்படலாம். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் நீக்கத்துக்கான காரணத்தை உறுதி செய்தால் அதனடிப்படையிலும் குடியரசுத்தலைவர் நீக்கம் செய்வார். அரசமைப்பு வழங்கியுள்ள உறுப்புகளின் படி உச்ச நீதிமன்றம் இந்த விவகாரத்தில் வழங்கும் ஆலோசனை குடியரசுத்தலைவரின் முடிவைக் கட்டுப்படுத்தும். இருந்தபோதும், உச்ச நீதிமன்ற விசாரணை நடைபெறும் காலத்தில் மாநில ஆளுநர் குடியரசுத்தலைவரின் நீக்கத்தை நிறுத்தி வைத்து பணி இடை நீக்கம் மட்டும் செய்யலாம்.

மேலும், இப்பொறுத்தப்பாட்டில் அரசமைப்பு "தவறான நடத்தை" எனும் சொல்லாடலைப் பயன்படுத்துகிறது. ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது ஏதேனும் உறுப்பினர்கள் தவறான நடத்தையில் ஈடுபடும் குற்றத்தில் ஈடுபடுவார்களானால் என கூறுகிறது. அவர் 1. மத்திய அல்லது மாநில அரசின் ஏதேனும் குறிப்பிட்ட ஒப்பந்தம், உடன்படிக்கையில் ஆர்வம் காட்டுபவரானால், 2. இத்தகைய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் பங்கேற்பதன் மூலம் உறுப்பினர் வருவாய் அல்லாமல் கூடுதல் வருவாய் அல்லது இதர உறுப்பினர்களுடன் இணைந்து ஆதாயம் கிடைக்கும் என்று கூறுகிறது.

**சுதந்திரத் தன்மை:**

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களும் சுதந்திரமாகச் செயல்படுவதை உறுதி செய்யவும் பாகுபாடான செயல்பாடுகளில் இருந்து பாதுகாக்கவும் அரசமைப்பு உறுப்புகளில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. அரசமைப்பில் கூறப்பட்டுள்ள முறைகளில் அல்லது வழிகளில் நடந்துகொண்டால் மட்டுமே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அல்லது உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நீக்க முடியும். இதனால் அவர்கள் பதவிக்காலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

2. மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பணி நிலைகள் ஆளுநரால் முடிவு செய்யப்படுகின்றன எனினும் பதவி நியமனத்துக்குப் பின்னர் அவரது சாதகமற்ற நிலைமைக்கு ஏற்ப மாறுதல் செய்ய இயலாது.

3. மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஊதியம், சலுகைகள், ஓய்வூதியம் என அனைத்தும் அரசின் தொகுப்பு நிதியில் இருந்து வழங்கப்பட வேண்டும். இதனால் சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட வேண்டியதில்லை.

4. ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் (நீக்கப்படும்போது) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அல்லது ஏதேனும் ஒரு மாநிலத்தின் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது உறுப்பினராக நியமனம் பெறும் தகுதியுடையவராகிறார். ஆனால், அரசின் வேறு பதவிகளுக்கு நியமிக்கப்பட முடியாது.

5. மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வாணையத்தில் ஒரு முறை பதவி வகித்தபின்னர் மீண்டும் அதே பதவியில் மறு நியமனம்செய்யப்பட முடியாது. அதாவது இரண்டாவது முறை அப்பதவியில் நியமிக்கப்பட முடியாது.

**பணிகள்:**

மத்திய அரசுப் பணியிடங்கள் தொடர்பில் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேற்கொள்ளும் பணிகள் போன்றே மாநில அரசுப் பணியிடங்கள் தொடர்பில் அனைத்து பணிகளையும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழங்குகிறது. அவை பின்வருமாறு:

அரசுப் பணியிடங்கள் தொடர்பில் அனைத்து பணிகளையும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழங்குகிறது. அவை பின்வருமாறு:

1. மாநில அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகள் நடத்துவது
2. பணியாளர் மேலாண்மை தொடர்பாக கீழ்க்காணும் ஆலோசனைகள் வழங்குகிறது.

1. குடிமைப் பதவிகள், குடிமைப் பணிகள் தொடர்பான அனைத்து பணிகளுக்கான நியமன முறைகள்.

2. குடிமைப் பணிகள் மற்றும் பதவிகளுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகள், இதர துறைகளுக்கு பணியிட மாறுதல்கள் போன்றவற்றில் கோட்பாடுகள் கடுமையாகப் பின்பற்றப்படுதல்

3. குடிமைப் பணிகள் / பதவிகளுக்குப் பொறுத்தமான நபர்கள் நியமனம். மாறுதலிலும் இதே நிலை. அயல்நாட்டுப் பணிகள் மாறுதல்களிலும் பொறுத்தமான நபர்கள். பதவி உயர்வுக்கான பரிந்துரைகளை தொடர்புடைய துறைகள் தேர்வாணையத்துக்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டும்.

4. ஒரு மாநில அரசில் பணியாற்றும் பணியாளர்களின் பணியினைப் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள்

- ❖ எச்சரிக்கை விடுத்தல்
- ❖ ஊதிய உயர்வு பிடித்தம்
- ❖ பதவி உயர்வு நிறுத்தம்
- ❖ இழப்பை ஈடு செய்தல்
- ❖ கீழ்நிலைப் பணிக்கு இறக்குதல்
- ❖ கட்டாய ஓய்வு
- ❖ பணியில் இருந்து விலக்குதல்
- ❖ பணியில் இருந்து நீக்குதல்

5. ஒரு குடிமை ஊழியர் தமது கடமைகளில் இருந்து தவறியதற்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள அந்த ஊழியர் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கான செலவுகள்.

6. பணியின் போது ஏற்படும் காயங்கள் காரணமாக ஓய்வூதியம் வழங்கக்கோரும் எவ்விதமான கோரிக்கைகள், அல்லது தொடர்பில் கோரப்படும் ஏதேனும் தொகை.

7. பணியாளர் மேலாண்மை தொடர்பான இதர அனைத்து விவகாரங்கள்.

இந்த விவகாரங்களில் ஒரு மாநில அரசு தமது மாநில பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கவில்லை எனில் பாதிக்கப்பட்ட அரசு பணியாளருக்கு நீதிமன்றமும் தீர்வு வழங்க இயலாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதாவது, தேர்வாணையத்துடன் கலந்தாலோசிப்பது அல்லது தேர்வாணைய ஆலோசனை இல்லாமல் செயல்படுவது ஆகிய தருணங்களில் மாநில அரசின் நடவடிக்கைகளை நீதிமன்றங்களால் ரத்து செய்ய இயலாது என்பது இதன் பொருளாகும். இதனால், மேற்கூறியவை வழிகாட்டுதல்களாகக் கொள்ளப்பட வேண்டுமேயொழிய சட்டப்பூர்வக் கடமையாகக் கொள்ளப்படக் கூடாது. அதாவது மேலே குறிப்பிட்ட விவகாரங்களில் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசிக்க வேண்டும் என்பது வழிகாட்டு நெறிகள் தாம் சட்டப்பூர்வ கடமைகள் அல்ல. இதேபோல, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்வு செய்துள்ளது என்பதாலேயே அந்த நபருக்கு பணி வழங்குவது உரிமை என்று கோர முடியாது என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருந்தபோதும் அரசு நியாயமாகவும் பாகுபாடற்றும் நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசிக்க வேண்டும் என்பது வழிகாட்டு நெறிகள் தாம். சட்டப்பூர்வ கடமைகள் அல்ல.

அரசுப் பணிகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு ஒதுக்கப்படும் கூடுதல் பொறுப்புகளை மாநிலச் சட்டமன்றங்கள் முடிவு செய்கின்றன. மாநிலச் சட்டமன்றங்கள் மூலம் உள்ளாட்சி பணியாளர் நியமனம், பெருநிறுவன அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்வது தொடர்பான கூடுதல் பொறுப்புகளையும் ஒரு மாநில அரசு தமது தேர்வாணையத்துக்கு அளிக்க முடியும். மாநிலச் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றுவதன் மூலம் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகார வரம்புகள் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

தமது செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையை ஆண்டுதோறும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் மாநில ஆளுநரிடம் அளிக்கிறது. இந்த அறிக்கையைப் பரிசீலித்து தேர்வாணையத்தின் ஆலோசனைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதற்கான காரண – காரிய விளக்கங்களுடன் கூடிய தமது விளக்கத்துடன் மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் ஆளுநர் முன் வைப்பார்.

**வரம்புகள்:**
மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நிர்வாக வரம்புக்கு வெளியிலும் சில விவகாரங்கள் நிறுத்தப்படுகின்றன. அதாவது இவ்விவகாரங்களில் மாநில அரசு தமது தேர்வாணையத்தின் ஆலோசனைகளைப் பெற வேண்டியதில்லை. அவை வருமாறு

1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பதவிகள் நியமனங்கள் இட ஒதுக்கீடு செய்யப்படும்போது

2. பதவிகள், நியமனங்கள் ஒதுக்கீட்டில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் கோரிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது.

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்புக்குள் வராத பதவிகள், பணியிடங்கள், இதர விவகாரங்களை ஆளுநர் நீக்குகிறார். மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கத் தேவையில்லை எனக் கருதும் அரசு பணியிடங்கள், பதவிகள் தொடர்பாக ஆளுநரே ஒழுங்குமுறைகளை உருவாக்கிக்கொள்ள அரசமைப்பு அனுமதிக்கிறது. ஆனால், குறைந்தது 14 நாட்களுக்கு முன் மாநிலச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அவையின் ஒப்புதல் பெற்றே அறிவிக்கப்பட வேண்டும். இதில் சட்டமன்றம் எந்த திருத்தமும் மேற்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். அதாவது, இறுதி முடிவை சட்டமன்றமே மேற்கொள்ளும்.

**பங்களிப்பு:**

ஒரு மாநில அரசுப் பணியிடங்கள் தகுதி அடிப்படையில் நிரப்பப்படுவதைக் கண்காணிக்கும் அமைப்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைய வேண்டும் என அரசமைப்பு கருதியது. அரசு பணியிடங்களுக்கான நியமனம், மற்றும் பதவி உயர்வு, ஒழுங்குநடவடிக்கை விவகாரங்களில் ஆலோசனை கோரும்போது ஆலோசனை வழங்குவது ஆகியன தேர்வாணையத்தின் பணிகளாகக் கருதப்பட்டன. பணியிடங்களை வகைமைப்படுத்துதல், ஊதிய விகிதம், பணி நிலைகளை வகுத்தல், பதவி நிலை மேலாண்மை பயிற்சி போன்றவை தேர்வாணையத்தின் பொறுப்பல்ல. இந்த விவகாரங்களை மாநில அரசின் பொது நிர்வாகத் துறை அல்லது பணியாளர் (தனி) துறை மேலாண்மை செய்கிறது. எனவே, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் என்பது மையப்படுத்தப்பட்ட நியமன முகமை மட்டுமே. மாநிலத்தின் பணியாளர்கள் மேலாண்மை என்பது மாநில அரசின் பணியாளர் (தனி) துறை அல்லது பொது நிர்வாகத் துறையின் பணிகள் ஆகும்.

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையப் பணிகள் வரம்புக்கு உட்பட்டவை மட்டுமல்லாமல் அவை அளிக்கும் ஆலோசனைகளும் அரசைக் கட்டுப்படுத்தாது. ஆணைய ஆலோசனைகளை ஏற்பதும் நிராகரிப்பதும் திருத்துவதும் அரசின் முடிவு ஆகும். ஆனால், இவ்வாறு நிராகரிப்பது அல்லது திருத்துவதும் ஏன் என்பதற்கு அரசு சட்டமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டும். என்பது ஆணைய ஆலோசனைகளுக்கு உள்ள ஓர் பாதுகாப்பு அம்சம் ஆகும். மேலும் ஒரு சட்டம் இயற்றுவதன் மூலமும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனை செயல்பாடுகளுக்கான விதிகளை உருவாக்க முடியும்.

1964 இல் மாநில கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட்ட பின்னர் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பங்களிப்பு பாதிப்புக்குள்ளானது. ஏனெனில் ஒரு குடிமைப் நடவடிக்கைகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பங்களிப்பு பாதிப்புக்குள்ளானது. ஏனெனில் ஒரு குடிமைப் பணியாளருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதில் இரண்டு அமைப்புகளும் ஆலோசிக்கப்படுகின்றன. அப்போது இரண்டு அமைப்புகளும் முரண்பாடான முடிவை மேற்கொள்ளும்போது பிரச்சனை எழுகிறது. இருந்தபோதும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒரு சுயாட்சியான அமைப்பு என்பதால் அதன் முடிவுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இறுதியாக, நீதித்துறையில், மாவட்ட நீதிபதிகள் அல்லாத பிற நீதித்துறை பணியிடங்களுக்கான நியமன விதிமுறைகளை வகுக்க மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆலோசிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் மாநில உயர் நீதிமன்றமும் ஆலோசிக்கப்பட்டது.

**பணியாளர் தேர்வாணையத்தின் பணிகள்:**

1. i. மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான பதவிகளில் அதிகபட்சம் 10,500 அல்லது அதற்குக்கீழுள்ள குரூப் "பி" பிரிவு பணியிடங்களுக்கான நியமனங்கள்

   ii. மேற்கூறிய பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான பதவிகளில் பணியாளர் தேர்வாணைய (ஸ்டாப் செலக்சன் கமிஷன்) வரம்பிலிருந்து விலக்கப்பட்ட பதவிகள் நீங்கலாக தொழில்நுட்பம் சாராத குரூப் "சி" பிரிவு பணியிடங்களுக்கான நியமனங்கள் மேற்கொள்ளுதல்.

2. தனது வரம்புக்குட்பட்ட பதவிகள் / பணியிடங்கள் நியமனங்களுக்கான தேர்வுகள், நேர்காணல்கள் மேற்கொள்ளல் வேண்டும். இத்தேர்வுகள் கூடுமானவரை நாட்டில் பல இடங்களில் நடத்தப்பட வேண்டும். அதேபோல, நியமனங்களும் தொடர்புடைய தேர்ச்சிபெற்ற நபர்களின் சொந்த மாநிலம் / பகுதிகளுக்கு அருகமைந்த பணியிடங்களில் அமர்த்தப்படுதல் வேண்டும்.
3. குறிப்பாக, கீழ்க்காணும் பணியிடங்களுக்கான நியமனம் திறந்த நிலை போட்டித் தேர்வுகள் மூலம் நியமிக்கப்பட வேண்டும்.
   i. கீழ்நிலை பிரிவு எழுத்தர் (எல்.டி.சி. லோயர் டிவிசன் கிளார்க்) பணியிடங்கள் - மத்திய அமைச்சரவைச் செயலக எழுத்தர் ∴ இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலக பணியிடங்கள், ஆயுதப்படைகள் தலைமையகங்களின் எழுத்தர் பணியிடங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான எழுத்தர் பணியிடங்கள்.

   ii. கிரேட் மற்றும் டி சுருக்கெழுத்தர் பணியிடங்கள் - மத்திய அமைச்சரவைச் செயலகம் / இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலகம், அயுதப்படைகள் தலைமையகங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சங்கள்,துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் கீழ்நிலை கிளைகளுக்கான சுருக்கெழுத்தர் பணியிடங்கள், மேலும், முன்னர் குறிப்பிட்ட அலுவலகங்கள், துறைகள் அல்லாத பிற துறைகளிலும் மேற்குறிப்பிட்ட பணியிடங்கள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கியது இப்பட்டியல்.

   iii. உதவியாளர்கள் - மத்திய அமைச்சரவைச் செயலகம் ∴ இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலகம், ஆயுதுப்படைகள் தலைமையகங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான உதவியாளர் பணியிடங்கள்.

   iv. ஆய்வாளர்கள் - நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மத்திய கலால் வரி (எக்ஸைஸ்) துறை மாவட்ட அலுவலகங்கள், வருமான வரித்துறை மாவட்ட அலுவலகங்களின் ஆய்வாளர் பணியிடங்கள் மற்றும் பல்வேறு கலால் துறை அலுவலகங்களின் தடுப்பு அலுவலர்கள், சோதனையாளர்கள் (பிரிவெண்டிங் அலுவலர்கள் மற்றும் எக்ஸாமினர்கள்), அமலாக்கத் (என்போர்ஸ்மெண்ட்) துறையின் உதவி அமலாக்க அலுவலர்கள்.

எ. துணை ஆய்வாளர்கள் - மத்திய புலனாய்வுத் துறை மற்றும் மத்தியக் காவல்துறை அமைப்புகள்.

ஏ. பிரிவு கணக்காளர்கள், தணிக்கையாளர்கள், கணக்காளர்கள் - இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம், மற்றும் பிற கணக்காளர் துறைகள் ஆகியவற்றின் பிரிவு கணக்காளர்கள், தணிக்கையாளர்கள், கணக்காளர்கள், மத்திய அரசின் கீழ்நிலை அலுவலகங்கள், கிளைகளின் உயர் பிரிவு எழுத்தர் (அப்பர் டிவிசன் கிளார்க்) பணியிடங்கள்.

ஐ. துணை நிலை பொறியாளர் (சிவில், மின்னியல்) – பொதுப் பணித்துறை பணியிடங்கள், குரூப் "சி" பிரிவு (தொழில்நுட்பம்) நான் கெஜட்டட், அமைச்சுத் துறை சாராத, பொது மத்திய பணிகள் சார்ந்த பணியிடம்

ஐஐ. புள்ளியியல் ஆய்வாளர் (ஸ்டேட்டிஸ்டிக்கல் இன்வெஸ்டிகேட்டர்) – புள்ளியியல் மற்றும் நிரல் (புரோக்கிராம்) அமலாக்கத் துறையின் குரூப் - "4" துணை நிலை புள்ளியியல் பணியிடங்கள் (எஸ்.எஸ்.சி) பணியிடம்.

ஐஐஐ. வரி உதவியாளர் - நேரடி வரிகள் வாரியம் மற்றும் கலால், சுங்க வாரியத்தின் கீழுள்ள பல்வேறு ஆணையகங்களின் பணியிடங்கள், நான் கெஜட்டட், அமைச்சுத் துறை சார்ந்த பணியிடம்

ஒ. பிரிவு அலுவலர் (வணிக தணிக்கை) - இந்தியத் தணிக்கை மற்றும் தணிக்கைத் துறை நான் - கெஜட்டட் குரூப் "பி" பணியிடம்

ஒஐ. பிரிவு அலுவலர் (தணிக்கை) – தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் துறை நான் - கெஜட்டட் குரூப் "பி" பணியிடம்.

4. பதவி உயர்வுக்கான துறை சார் தேர்வுகளையும் ஆணையம் மேற்கொள்கிறது.

   ஐ. மத்திய அமைச்சரவை செயலக குரூப் டி பிரிவு பணிகள் மற்றும் இந்திய வெளியுறவு பணிகள், ரயில்வே வாரிய செயலக எழுத்தர் பணிகள் / ஆயுதப்படைகள் எழுத்தர் பணிகளிருந்து எல்.டி.சி. ஆக பதவி உயர்வு பெற இத்தேர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

   ஐஐ. குரூப் "சி" சுருக்கெழுத்தர்கள் - மத்திய அமைச்சரவைச் செயலக குரூப் "டி" பிரிவு சுருக்கெழுத்தர்கள் பணிகள் மற்றும் இந்திய வெளியுறவு பணிகள், ரயில்வே வாரிய செயலக எழுத்தர் பணிகள் / ஆயுதப்படைகள் சுருக்கெழுத்தர்கள் பணிகளில் இருந்து குரூப் "டி" பிரிவு சுருக்கெழுத்தர்கள் ஆக பதவி உயர்வு பெற இத்தேர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5. ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளுக்கான தட்டச்சுத் தேர்வுகள் கால இடைவெளியில் நடத்தப்படுகின்றன.

6. ₹ 9,300 முதல் 34,800 வரை ஊதிய அலகு கொண்ட 42,000 வரை கிரேட் ஊதியம் பெறும் அனைத்து குரூப் "பி" பணியிடங்களுக்கும் பல்வேறு மத்திய அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த கிளை அலுவலகங்களுக்கான குரூப் "சி" பிரிவு தொழில்நுட்பம் சாராத பணியிடங்கள் நியமனங்களுக்கான திட்டங்களையும் உருவாக்குகிறது.

7. 10,500 அதிகபட்ச ஊதிய அலகு கொண்ட குரூப் “பி“ பணியிடங்களுக்கும் அமைச்சகங்கள் / துறைகள் வாரியான தொழில்நுட்பம் சாராத குரூப் “சி“ பணியிடங்களுக்கும் அவ்வப்போது தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

8. அவ்வப்போது மத்திய அரசால் பணிக்கப்படும் இதர பணிகளையும் ஆணையம் மேற்கொள்கிறது.

**தேர்தல் ஆணையம்:**

நாட்டில் நியாயமான, நேர்மையான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்திட அரசமைப்பால் நேரடியாக உருவாக்கப்பட்ட நிரந்தரமான, சுயாட்சியான அமைப்பு தேர்தல் ஆணையம். அரசமைப்பு உறுப்பு 324. நாடாளுமன்ற இரு அவைகள், மாநிலச் சட்டமன்றங்கள், குடியரசுத்தலைவர், துணைக் குடியரசுத்தலைவர் தேர்தல்களைக் கண்காணித்தல், வழிகாட்டுதல், கட்டுப்படுத்துதல் ஆகிய அதிகாரங்களை தேர்தல் ஆணையத்துக்கு முழுமையாக வழங்குகிறது. இவ்வாறு, இந்திய தேர்தல் ஆணையம் மத்திய – மாநில அரசுகள் இரண்டுக்குமான பொது அமைப்பாக இயங்குகிறது.

மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளான பஞ்சாயத்துகள், நகராட்சிகளுக்கான தேர்தல்களை இந்திய தேர்தல் ஆணையம் நடத்துவதில்லை. என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இதையொட்டி மாநிலத் தேர்தல் ஆணையங்கள் அமைத்துக்கொள்ள அரசமைப்பு வழி வகுத்துள்ளது.

**இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம்:**

இந்திய அரசமைப்பு உறுப்பு 148, ஒரு சுயாட்சி அதிகாரம் கொண்ட இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம் (சி.ஏ.ஜி) அமைக்க வழிவகை வழங்கியுள்ளது. தலைமைக் கணக்குத் தணிக்கையாளரே இந்திய கணக்குக் மற்றும் தணிக்கைத் துறையின் தலைவர் ஆவார்.

அவரே அரசுக் கருவூலத்தின் பாதுகாவலர் எனலாம். மத்திய, மாநில அரசுகள் அனைத்தின் கீழ் இயங்கும் மொத்த நிதி அமைப்பினையும் கட்டுப்படுத்துகிறார்.

நிதி நிர்வாகம் தொடர்பில் இந்திய அரசமைப்பு வகுத்தளித்துள்ள விதிகள், இதனை அமலாக்கம் செய்ய நாடாளுமன்றம் இயற்றியுள்ள சட்டங்கள் ஆகியனவற்றின் படி கண்காணிப்பது இவர் கடமையாகும். இதனால் தான் அரசமைப்புப்படி ”முக முக்கியத்துவம் கொண்ட அலுவலர் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்” என டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் கூறினார். இந்திய அரசின் மக்களாட்சி அமைப்பின் அரண்களில் அவர் ஒருவர். இதர அரண்கள்: உச்ச நீதிமன்றம், தேர்தல் ஆணையம், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகும்.

**நிதி நிர்வாகம்:**
**நிதி நிர்வாகத்தின் நோக்கங்கள்:**

வளர்ந்த நாடுகளின் கட்டுப்படுத்த இயலாத சந்தை வளர்ச்சி நிதி நிர்வாகத்துக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தியுள்ளது. இச்சந்தைகள் நிதி பற்றாக்குறைகள், பெரும் கடன்சுமை, மூலதன நிதி பற்றாக்குறை இவையே இதன் பண்புகளாகும். அதேநேரம், நிலைத்த பொருளாதாரம், வளர்ச்சி, சுய – சார்பு, வருவாய் - செல்வப் பகிர்வு வீதத்தில் சமநிலை அனைத்துப் பகுதிகளில் வளர்ச்சி போன்றவற்றை இலக்காக கொண்டு நிதி

கொள்கைகள், நிர்வாகம் ஆகிய துறைகளில் ஊக்கங்களை ஏற்படுத்தும் முனைப்பில் வளரும் நாடுகள் உள்ளன. அரசு விவகாரங்கள் மேலாண்மையில் அரசியல் கொள்கைகள், பொருளாதார வல்லமை முக்கியம் என்ற போதிலும் நிதி நிர்வாகமும் முக்கியத்துவம் வாய்ந்த பங்கினைக் கொண்டுள்ளது.

1. பொதுத்துறை நிறுவனங்கள் நிதி மேலாண்மை
2. திட்டங்கள், நிரல்கள் அமலாக்கம்
3. பொது நலன் மற்றும் சமூக பணிகளுக்கான வழிகள்
4. வளர்ச்சி, வேலை வாய்ப்பு, விலைவாசி கட்டுப்பாடு
5. மூலதன உருவாக்கம்
6. தேசிய நிதியை படைப்பாக்கத்துடன் முதலீடு செய்தல்
7. நாடாளுமன்ற செயல்முறைகளை சீராக்குதல்
8. சமத்துவமும் சம பங்கும்

**நிதி நிர்வாகக் கோட்பாடுகள்:**

நிதி நிர்வாகத்தில் முக்கியக் கோட்பாடுகளாகக் கீழ்க்கண்டவற்றைப் பட்டியலிடலாம்.

1. பொது நலன், மக்கள் தேர்வு, மக்கள் கொள்கை ஆகியனவற்றை முதன்மையாகக் கொண்ட கொள்கை
2. அரசியல் வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டுக் கோட்பாடு
3. தொடர்புக் கோட்பாடு
4. நிறுவனத்தினையும் மேலாண்மையையும் ஒருங்கிணைக்கும் கோட்பாடு
5. நீடித்த தன்மை, சமநிலை கோட்பாடு
6. எளிமை, நெகிழ்வுத்தன்மை கோட்பாடு
7. நடத்தை, ஒழுக்கம், சீர்மை கோட்பாடு
8. மக்கள் நம்பிக்கை, கடமைப்பாடு கோட்பாடு

**இந்திய நிதி நிர்வாக வரலாற்றின் நான்கு முக்கியக் கால கட்டங்கள்:**

**கால கட்டம் 1 (1765 – 1858) –**அமைப்பு உருவாக்கம் மற்றும் ஸ்திரப்படுத்துதல்

**கால கட்டம் 2 (1860 – 1919)** – முறைமைகள், செயல்பாடுகள் மேம்பாடு.

**கால கட்டம் 3 (1919 – 1947) –**மக்களாட்சிப் படுத்துதல், அதிகாரப்பரவலாக்கல்

**காலகட்டம் 4 (1950 முதல் இன்று வரை)** - மக்கள் மயப்படுத்துதல்.

**புதிய வளரும் போக்குகள் - இந்திய நிதி நிர்வாகம்:**

1. நீதிப்பாற்றாக்குறையை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல்.
2. வளர்ச்சிசாரா செலவினங்களைக் குறைத்தல்

3. பற்றாக்குறை இல்லாத (ஜீரோபேஸ்) நிதிநிலை கண்ணோட்டம் உருவாதல்
4. பொதுத் துறை மீதான அழுத்தம் குறைத்தல்.
5. மக்கள் நலன்கள், பணிகளில் அதிகாரவர்க்க மனோநிலை நீக்கம்
6. நிதி மேலாண்மை திட்டங்களில் மைய நீக்க பொறுப்புணர்வில் கவனப்படுத்துதல்.
7. தாராளமயம், கட்டுப்பாடுகளை அகற்றுதல்

**நிதிநிலை அறிக்கை தாக்கலும் அமலாக்கமும்**

**நிதிநிலை அறிக்கை சுற்று:**

ஒரு நிதிநிலை அறிக்கையின் செயலாக்கம் அதற்கான சட்டம் இயற்றும் நடைமுறைகளைக் கணக்கில் கொண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் ஒரு காலச்சுற்று முறையைக் கணக்கில் கொள்கிறது. நிதிநிலை அறிக்கை நாடாளுமன்ற ஒப்புதல் பெறுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

காலச்சுற்று கீழ்க்காணும் கட்டங்களைக் கொண்டுள்ளது.

- தயாரிப்பு மற்றும் தாக்கல்
- ஒப்புதல்
- நிர்வாகம், தணிக்கை

ஒரு குறிப்பிட்ட காலத்தில் பல சுற்றுகள் நடைபெறலாம். மீறப்படலாம். பல சுற்றுப்பிரிவுகள் வெவ்வேறு காலகட்டங்களைக் கொண்டுள்ளன.

**நிதிநிலை அறிக்கை தாக்கல்:**

நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் செயல்முறைகள், நிதிநிலை அறிக்கை தாக்கல் காலத்திலிருந்து ஆறு மாதங்கள் முன்பாக, பொதுவாக செப்டம்பர் ∴ அக்டோபர் மாதங்களில், நிதி அமைச்சகத்திடமிருந்து சுற்றறிக்கை பெறப்பட்டதும் தொடங்குகிறது. அந்த சுற்றறிக்கை நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் திட்டம் சார் அம்சங்கள், திட்டம் சாரா அம்சங்கள், வழிகாட்டுதல்கள் என ஒவ்வொன்று குறித்தும் இறுதி மதிப்பீடுகள் சமர்பிக்க தொடர்புடைய துறைகளுக்கு ஒரு கால அளவை நிர்ணயம் செய்து அறிவிக்கும். பொதுவான விதி என்னவென்றால் யார் நிதியை செலவளிக்கப்போகிறார்களோ அவர்களே நிதிநிலை மதிப்பீடுகளையும் உருவாக்க வேண்டும் என்பது ஆகும். நிதி அறிக்கை முன்மொழிவுகள் கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டிருக்கும்.

1. கணக்குகள் வகைமைப்படுத்துதல்
2. நடப்பு ஆண்டின் நிதிநிலை மதிப்பீடுகள்
3. நடப்பு ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகள்
4. கடந்த ஆண்டின் அசல் செலவினங்கள்
5. அடுத்த நிதி ஆண்டுக்கான முன்மொழிவுகள் மதிப்பீடுகள்

**நிதி ஆண்டு**

1860 இல் முதல் நவீன நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட போது நிதி ஆண்டு என்பது மே 1 முதல் ஏப்ரல் 30 வரை என்பதாக இருந்தது. இது 1866-இல் இங்கிலாந்து அரசின் நடைமுறையை ஒட்டி ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை என மாற்றிக் கொள்ளப்பட்டது.

**அமர்த்தியா சென் - ஜெகதீஷ் பகவதி இரு மேதைகளின் விவாதம்:**

பொருளாதார கொள்கை குறித்த விவாதங்கள் இன்று நடப்பதுபோல் என்றும் நடந்ததில்லை. உலக, பொருளியல் கல்விப் புலத்தில் இரு பெரும் வல்லுனர்கள் எனக் கருதப்படும் அமர்த்தியா சென் - ஜெகதீஷ் பகவதி இருவரும் இந்திய ஆளும் அமைப்பு எதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என கடும் விவாதங்களில் ஈடுபட்டனர். ஹார்வர்டு பல்கலைக்கழக பொருளாதார, தத்துவ துறை பேராசிரியர் சென் பொருளாதாரத்துக்கான நோபல் விருது பெற்றவர். கொலம்பியா பல்கலைக்கழக பொருளாதார பேராசிரியர் பகவதி உயர் விருதுகளுக்காகப் பல முறை பரிந்துரைக்கப்பட்டவர். இருவருடன் அவினேஷ் தீட்சித் என மூவரும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களாகக் கருதப்படுகிறார்கள்.

**சென் :** பகவதி விவாதங்கள் இந்திய அரசியல் தலைவர்கள் மத்தியில் பெரும் கேள்விகளை எழுப்பின.

மக்களின் உற்பத்தித் திறனும் வளர்ச்சியும் அதிகரிக்க வேண்டுமானால் இந்தியா தனது சமூக கட்டமைப்பில் அதிக முதலீடு செய்யவேண்டும் என சென் வலியுறுத்தினார். பொருளாதார வளர்ச்சி அதிகரித்தால் மட்டுமே போதும், அதன்மூலம் சமூகத் திட்டங்கள் தொடங்கத் தேவையான மூலதனம் கிடைத்துவிடும் என பகவதி வாதிட்டார். மனித செயலாற்றலை அதிகரிக்க சுகாதாரம் மற்றும் கல்வியில் அதிக முதலீடு தேவை என்பது சென் சிந்தனையின் மையமாக இருக்கிறது. இத்தகைய முதலீடுகள் இல்லாமல் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முடியாது என சென் நம்புகிறார். ஆனால் வளர்ச்சியால் தொடக்கத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கலாம், தொடக்கத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கலாம். அனால், தொடர் வளர்ச்சி மூலம் அரசுக்கு தேவையான வளங்கள் பெருகும். மறு பகிர்வு மூலம் தொடக்க ஏற்றத்தாழ்வினைக் கட்டுப்படுத்த முடியும் என பகவதி கூறுகிறார்.

| **வரி வகைகள்** | |
|---|---|
| **அரசுக்கு நேரடியாக வரி செலுத்துவோர்** | **உற்பத்தி மற்றும் பொருள்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட் வரிகள்** |
| **நேரடி வரிகள்** | **மறைமுக வரிகள்** |
| வருமான வரி | சேவை வரி |
| செல்வ வரி | பொழுதுபோக்குவரி |
| நிறுவன வரி | சுங்க வரி |
| மூலதன ஆதாயங்கள் வரி | பொருள்கள் மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) |
| பங்கு பரிவர்த்தனை வரி | முத்திரை வரி |
| | கலால் வரி |
| | விற்பனை வரி |
| | ஆடம்பர வரி |
| | குறிப்பு: சரக்கு மற்றும் சேவை வரி |

**ஜி.எஸ்.டி. அளவு:**

**ஜி.எஸ்.டி வரி அளவு 5%** - ஸ்கீம்மர், பால் பவுடர், மீன் உரங்கள், தேயிலை உள்ளிட்டவை.

**ஜி.எஸ்.டி. வரி அளவு 12%** - வெண்ணெய், பாலாடைக்கட்டி, ஊறுகாய், பழச்சாறுகள், பற்பசை, மருத்துவம்.


**ஜி.எஸ்.டி. வரி அளவு 18%** - பனிக்கூழ், கைப்பெட்டி, குடிநீர், கைகடிகாரம், கதவு

**ஜி.எஸ்.டி. வரி அளவு 28%** - பான் மசாலா, சலவை இயந்திரம், வெற்றிட சுத்தப்படுத்திகள், இயந்திர வாகனங்கள், இயந்திர மிதிவண்டி.

**ஜி.எஸ்டி. – க்குள் வராத பொருள்கள்:**

சமையல் எரிவாயு, பெட்ரோல்,டீசல், வான் எரிபொருள், இயற்கை எரிவாயு. மது ஆகியவை

**பொருள்கள் விநியோகம் அல்லது சேவைகள் வழங்குதல்**
**(பொருள்கள் மற்றும் சேவை வரி – G.S.T)**



APPOLO STUDY CENTRE CHENNAI